# ஸெய்யிதினா கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டகை ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் திருக் காரண சரிதம்.

முஹம்மது காஸீம் இப்னு ஷெய்கு முஹம்மது அவர்கள் எழுதிய அரபுத் தமிழ் நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. ஆகவே இந்த காரணசரிதம் அக்கால பேச்சுவழக்குப்படியே எழுதப்பட்டது. ஆகவே இதை இதிலுள்ளபடி ஓதுவதே சாலச் சிறந்தது.

**பதம்**

பொன்னகரனைத்தும் சேர் புவி மானிடர்கள் போற்றும் மண்ணகர்

குருதி மேவும் பாதுஷா முஹிய்யதீன் மேல் மன்னவர் தீனோர்

வாழ்த்தும் வளர் மணி மாலை கூற கத்தவன் மொழிய

இதை கத்தவனே காப்பு தானே

**தொங்கல்**

ஆதி அஹது உஹது ஆனவனே...

அல்லா ஒருவனே ஜபில்லானே

நீதி சுபுஹானே யாரஹீமே ...

நித்தம் ரஹீம் துய்ய வல்லவனே

ஜோதி ஒளிவான முஹம்மதுர்ரசூல்...

துய்ய நபி யாரஸூலுல்லாவே

மோதிரி ஒரு நெஞ்சகத்தில்...

முஹிய்யதீன் வளமை மொழிய கூறுவோமே

சித்தர் விளங்கிய அபூபக்கரும்...

தீனில் விளங்கிய உமறு ஹத்தா

அருள் கொண்டு நின்ற உதுமானாரும்...

கனக அலிபுலி ஹஸன் ஹுஸைன்

நித்தே விளங்கிய பொன்னகத்தை...

மீண்டவராய் தெண்டனிட்டு

முத்தாகவே முத்தாய் அபுசாலிஹ் ஈன்றெடுத்த...

முஹிய்யதீன் வளமை மொழிய கூறுவோமே

ஆதி நபி ஹிஜ்ரதாயிரத்து நூற்றிஐம்பத்தாரில்...

நீதி நெறியான ரபியுல் ஆஹிர் நிகழ்த்துறேன்

முஹிய்யத்தீன் புகழை

வருஷம் நாளை சாதியம் உரைக்க...

சரியதான வருஷம் விசாரித்ததில்

ஓதினேன் கார்த்திகை எட்டாம்தேதி...

உரைத்தேன் திங்கள் நாள்தனிலே

**தொங்கல்**

கடலே கரையாக தரித்த புவி...

கண்கள் அதில் நின்ற கதிரு மணி

வடிவுக் கிரணமும் வண்டுவிழி...

வள்ளமை கூறும் வழமை போலும்

புவி மானிடர்கள் போற்றும் புகழ்;...

கவி நகர் முன்புள்ளோரும்

முடியும் கடல் நடு எழுநதோதிடும்...

முஹிய்யத்தீன் கதம் வாழ்த்தி மொழியலுற்றேன்

தவமாம் முஹம்மது காசீமும்...

உரைதானும் சொன்னேன் கவிபாடலிலே

புவியேர் மகிழ்புற மலைசபதி...

பூவும் மலர்சோலை பெரு நகரில்

சிறியோர் இரு நான்கும் மனமகிழ்ந்து...

செய்கு முஹம்மது செல்வனானோர்

தவன நெறிபேர் முஹம்மது எனும்...

தலைவன் இதை முற்றும் சாற்றலுற்றேன்

வண்டு மலர்தேன் உண்டு கதம்...

வாசம் செய்யும் வாழை பலா

உண்டு வானரம் குதி பாய்ந்திட...

உளிரும் மயில் தோகை விசிறி நிற்க

கண்டு குயில் கூவ புள்ளியினங்கள்...

குலைந்தோகையாட கண்ணல் பச்சிகளும்

மணி கொண்டனைத்தையும் அண்டகிடக்க...

குளிக்கும் மணி ஜெய்லானி நாட்டில்

மேகம் குமுறியே இடிஇடித்து...

விருவி குமுறியே மழை பொழிய

நாக தரு விழ முக்கனிகள்...

கலங்கி நடு பேரும் கண்ணீரோடும்

ஏக சென்னல் மினி குளிக்க...

இனிய கனி வர்க்கம் மிக விளைய

வாக்குக்கினிய நல் தவங்கள் சூழ...

வளரும் ஜெய்லானி நாட்டினிலே

கொண்டகலை ஈமானை குறித்து வளர...

குணமும் நேர்மையும் சீர் ஒழுங்கும்

இன்னும் தவறாத வணக்கமுள்ளோர்...

இறையோன் பங்கிலே இறக்கமுள்ளோர்

சென்று மலை மின்னார் பந்தடிக்கும்...

செம்பொன் மணி மேடைகளும் சிறக்கும்

கண்டு வெகுவேந்தர்கள் குளிக்கும்...

கனகமணி ஜெய்லானி நாடு

சித்திர மணிவாசல் சிகர அழகும்...

தீனின் உகந்திடும் சிறப்பழகும்

முத்துமணி வாசல் முகப்பழகும்...

முஃமீன் முஸ்லிம்கள் இருப்பழகும்

நித்தம் கல்யாண மங்களமும்...

நீதி நெறியுள்ள பட்டணமாம்

உத்தலன் கோண உடையோர் சூழ...

உயர்ந்த ஜெய்லானி நகரம் தானே

வெற்றி புயல்பல வீரர்களை...

வெற்றி ஜெயம்கொண்ட வீரரிலே

அலிபெற்ற மணி இரு ஹஸன் ஹுஸைனார்...

பின்னும் குலத்தில் உற்றதற்கும்

தத்துவம் இதுவந்து நித்தவள்ளல்...

செய்யது அபுசாலிஹ் முஃமினாரே

சுத்தம் உடனேதான் சிறுவர் மேவும்...

துலக்கமிகவாகி இருக்கும் நாளில்

இருந்தபதி விட்டு எழுந்த வரும்...

மறந்து நபுசையும் மஸ்து கொண்டு

வல்லோன் நாட்டம் தேட்டம் கொண்டு...

விரைந்து மேல்திசை நோக்கி செல்ல

வெள்ளம் மிகுந்து கரை புரள...

கரையோரம் மாதுளையின் கனியும்

மிதந்து அதுவும் எதிரே வர...

முன்னே வந்தோர் கனி யதனை

முகிலார் எடுத்துமே கண்ணில் வைத்து...

நிர்ணயம் கொண்டே என்னவென்றால்

நீதமில்லை நாம் புசிக் குண்ணாது...

இன்னார் கனி என்னு விசாரித்துதாம்

இப்போ கனியுமே அருந்தவேணும்...

திண்ண மிகவாகி அபுசாலிஹாரும்

தீனோர் கஃபாவை நோக்கியதே...

நினைத்து அவர்ஃமேல் திசையை நோக்கி

நீதர் அபுசாலிஹ் நடந்து செல்ல...

பணிந்து மலர் வாசமுள்ள

பூஞ்சோலைக்குள்ளே புசிய...

பெரிய சாகையும் கண்டவரும்

அனைத்தையும் படைத்தவன் கிருபை கொண்டு...

அகமும் மகிழ்ந்தர் கதவு தட்ட

ஜன்னத்தில் வந்தொரு முஃமினாரும்...

தலைவாசல் திறந்து பார்க்கும்போது

என்ற முஃமினும் நின்றிடவும்...

அப்துல்லா முஃமின் அவரும் கண்டு

ஏகி சலாமும் எடுத்துரைக்க...

நின்ற அபுசாலிஹ் பிரத்தி சொல்ல

நீதர் தம்மையும் அழைத்துச் சென்று...

அன்று பிச்சுண்ணாத கனியை வைத்து

அருளும் ஒரு சொல்லும் என்னவென்று...

என்று உரைத்தனர் அபுசாலிஹார்

மேவும் என்பதி சிறு ஊராமே...

அருசு புலிஅலி தன் குலத்தில்

ஹுஸைனார் கிளையினில் உள்ளவர்நான்...

இறையோன் பங்கிலேதான் மஸ்தாகமே

எழுந்து வந்து நான் ஆற்றங்கரை...

கரையும் புரண்டதோர் வெள்ளமதில்

கனியும் மிதந்து தான் வந்ததிப்போ...

பிரிதி கொண்டதை எடுத்தேன் நானும்

பிரிவும் நினைவினில் வந்ததிப்போ

வந்து நாமும் புசிக்குண்ணாது

வல்லோன் நீதிக்கு சிரியல்லவே...

இந்த கனியார் கனியது என்று

இப்போது விசரித்து புசிப்போமென்று...

முன்னோன் கிபுலாவை நோக்கியானும்

முடுகி நடந்திட சாகை கண்டே...

சந்தோஷமாக கதவுதட்ட

தாமும் திறந்தீர்கள் நானும் வந்தேன்...

வந்தேன் என சொல்ல அவர் மொழிவது

மாதுளம் கனி என்னுடையதாகும்...

முன்னோன் கொடுத்தான் உங்களுக்கு

உகந்து புசியும் என்று அவர் உரைத்தார்...

அந்த மொழி கேட்டு அகமகிழ்ந்து

அருந்தி இருக்கவும் அப்துல்லா முஃமீன்...

உகந்து மகிழவே அவர்க்கமுதம்

கனகம் இரைவைத்து அருந்துமென்று...

அருந்தி அபுசாலிஹு மகிழ்ந்திருக்க

அப்துல்லா முஃமின் உகந்து சொல்வார்...

ஒருவன் அருள் பெற்ற ஹஸன் குலமே

உரைக்கேளுமே என் கருத்தை...

துறவுபொய வள்ளல் ஹுஸைனார் கிளையில்

தொடுத்து வந்தவன் நானேயாகும்...

கிருபை உள்ளவன் கூட்டி வைத்தான்

கிருபை கடலான கண்மணியே...

என்னில் அதிகமும் மஃரிபெங்கும்

எங்கும் கிடையாத தங்கமென...

கண்ணின் மணியான காரணரே

கருதமொழி ஒன்று கபூல் செய்யுமென...

முன்னோன் அமைத்தனன் எந்தனக்கு

மொய்குழல் ஒன்று சொல்லக் கேளீர்...

வரிதை தனக்குமே கண் குருடு

வாய் ஊமையது காலும் முடம்...

தனது காதுமே மந்தமது

தானோன் அமைத்தான் எந்தனக்கு...

பொன்னார்தனை மணம் சூட்டிக் கொள்

புகழ அவருமே அகமகிழ்ந்து...

இனமும் தெரியாத நம்மன் தலை

இறையோன் விதித்திட்டான்...

கபூல் கொண்டோ மென்றார்

அல்லா ஒருவனை மனதிருத்தி...

அபுசாலிஹ் மன்னர் மகிழ்ந்திருக்க

நல்ல மயிலாரை மணமும் சூட்டி...

நங்கை உடன் மாதர் மகிழ்ந்திருக்க

வள்ளிதனை கண்டு கண் மரண்டு...

வல்லோன் தன்னையும் புகழ்ந்து போற்றி

சொல்லில் அடங்காத தூயவனே...

ஜோதி உந்தன் ஒளிவெடுத்து

வள்ளி எனக்கென்று வைத்தாய் நீயோ...

வல்லவா எந்தன் ரஹ்மானே நீ

இந்த உலகில் இவ்வணங்குயிலெவர்க்கு...

இவருக்கும் ஒப்பு நாம் எங்கும் காணோம்

சந்திரன் ஒளிவினில் அதிகம் மின்னும்...

தையல் தன்னையும் வண்ணம் சொன்னான்

வந்து நமக்குமே பொய்யுரைத்தார்...

மனது அறியவே சொன்னார் இப்போ

அந்த மொழியையும் அறிய வேணும்...

அவர்தம் மனதினில் உகந்திருந்தே

உகந்து வந்தவர் சலாமுரைத்து...

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

உகந்து இருந்தவர் கேட்பாரெப்போ...

பகர மொழியுமே பொய்யதாக

பகர்ந்தீர் எனக் கேட்க அவர் மொழிவார்...

பகரும் சொல்வது பொய்யல்லவே

பைங்கொடி நடப்பு சொல்லக் கேளும்...

ஹராமும் விழிரண்டும் உகவாதாலே

கண்ணும் குருடென்று சொன்னேன் நானும்...

தீரா கோபமும் பொய்யுரையார்

நாவு தீனில் உகப்பதுவும்...

ஊமை என்றே நானுரைத்தேன்

பராசியம் கேளா செவியினாலே...

பெண்ணும் செவிடென்று நானுரைத்தேன்

ஹராம் நடப்புக்கு ஏறாதாலே...

கால்முடம் என்று சொன்னேன் நானும்

குற்றம் தனக்குமே ஏற்பாடில்லை...

கோவென்று அழைத்தாலும் பேசுவதில்லை

உற்று உணர்ந்து குர்ஆன் முப்பதையும்...

ஊரார் முகந்தன்னை பார்ப்பதில்லை

கத்தன் பங்கிலே கிருபை வைத்து...

கல்பு மகிழ்ந்து இருப்பதினால்

புத்தி அறிந்து சொன்னதல்லால்...

பகர்ந்தது பொய்யில்லை பாக்கியரே

கேட்டு அவளுமே மனமகிழ்ந்து...

மெல்லிடம் வந்து உடல் பூரித்து

தத்துவம் கொண்டு இருபேருமே...

தலத்தில் பத்து நாள் அங்கிருந்து

பெற்ற தாய் தந்தையிடத்தில் வந்து...

பெருதி கொடு வார்த்தை பயணம் சொல்லி

உத்திரவு அவர்கள் உகந்து பெற்று...

உகந்து ஜெய்லானி பட்டணத்தில்

வந்து அபுசாலிஹ் குடியிருந்து...

வந்து வர்த்தகர் அரண்மனையும்

சுத்த விஸ்தாரமாகவேதான்...

தூண்கள் நிறுத்தியே மணிமாடமும்

பத்திபத்தியாய் மாளிகையும்...

பொன்னின் மதி போலே மேடைகளும்

தத்துவமாகவே ஒரு நொடியில்...

ஜனத்திற் கட்டினார் அரண்மனையும்

சித்திரை கூடம் மணிவிளக்கும்...

தெருவில் வைர கதவுகளும்

கத்திபிடி மின்னார் பாத்திமாதான்...

கத்தன் பங்கிலே முயற்சியாகி

வெற்றிபெற்றவர் மகிழ்ந்திருக்க...

வேந்தர் ஜெய்லானியில் உள்ளவர்கள்

தத்துவம் கொண்டு அபுசாலிஹை...

தாழ்ந்து போற்றியே இருப்பவரே

இருந்து பணிந்து மகிழ்ந்தவரும்...

ஏகன் ரகசியம் கேளப்பவரும்

முரீது வாங்கியே நடப்பவரும்...

முத்து மணிவாசல் உகப்பவரும்

பெருதி கொடு வந்து காப்பவரும்...

பிருச கடலாக நடப்பவரும்

கிருபைபுகழாகி அபுசாலிஹை...

சிறந்து போற்றி இருக்கும் நாளில்

வணக்கம் ஒழுக்கமும் நெறி ஒழுங்கும்...

மன்னர் அறிவும் நெறி நீதமும்

இணக்கம் கொருத்தமும் மரியாதையும்...

இல்மில் தெளிந்து ஹாபிழாகி

பிணக்கம் அணுகாமல் வாழ்வு வந்து...

பெரியோன் தனை நாடி தப்ஸ்ஸில் முங்கி

குணக்கமில்லாமல் வாழ்ந்திருக்கில்...

கிழவி வாட்டத்தால் மெலிந்து வாடி

அருமை பாத்திமா அபுசாலிஹும்...

அறுபது வயது மகவில்லாமல்

ஒருவனிடத்திலே நாட்டம் கொண்டு...

உகந்து துஆ செய்து இருக்கும் நாளில்

இறையோன் கர்ப்பனை வந்தடுத்து...

ஏழு வருஷமாய் மழையில்லாமல்

பெருத்த ஜெய்லானி பட்டணத்தில்...

பெரு ஆடுமாடுகளும்

கருகி மெலிந்து மெய்யுருவதாகி...

கடும்பஞ்சமாக இருக்கும் நாளில்

கருத்து கலங்கிய சுல்தான் சொல்வார்...

கனத்த மந்திரிதனை பார்த்து

பெருப்பமானதோர் ஆடுமாடும்…

புலியும் கரடியும் யானை முதல்

பெருப்பமுள்ளதோர் பட்சிகளும்…

வெந்து மடியுது நீரில்லாமல்

திருசை புகழான முஷாக்கு ஒலி…

இடம் கேட்கும்போது சொல்வார்

முன்னோன் தனை தேடி கேட்டவரும்…

மொழிந்தார் மழையில்லை வருஷமதில்

நொந்து தடுமாறி மந்திரியும்…

நொடியில் ஓடியே சுல்தானிடம்

வந்து நமது தேசமதில்…

மழையில்லாததால் என மொழிந்தார்

இயம்ப சுல்தானும் மனதேங்கியே…

இறந்து போகவும் நாளாச்சுது

கை சேதப்பட்டு உருகி சொல்வான்…

கத்தன் அருள் பெற்றவர் எவராகிலும்

ஐயமகற்றிய பேர்களுமே…

யாராகிலும் இங்கே உண்டோவென்றார்

மெய்யாய் ஒருவர் இங்கிருக்கிறார்கள்…

வேந்தே நாங்களும் விளம்புகிறோமே

அப்போ தெரிந்ததில் ஒருவர் சொல்வார்…

அரசருக்கரசரே சிகாமணியே

இப்போ நம்முடைய பட்டணத்தில்…

இலங்கும் அபுசாலிஹு தேவியாரும்

ஒப்பும் உவமையும் இல்லா நாயன்...

உடையோன் அருள்பெற்ற பாத்திமா தான்

கற்புள்ள மங்கை இவரே அல்லாள்...

காசினியில் இவருக்கொப்பு யாருமில்லை

அறுவடையுடன் சொன்னார் பொய்யும் மெய்யும்...

அறியலாமிப்போ என மொழிய

கருதும் மொழி கேட்டு சுல்தானுமே...

காரிளை பார்த்து அழைத்து வந்து

அருமை புகழாகதங்கம் நூறு...

உகந்து பாதமும் வைத்தவரும்

திருவாய் தமக்குமே தங்கம் வெள்ளி...

சிறந்த மலர்சிர் பாதம் வைத்து

கற்கண்டு சீனி ஒரு தட்டிலே...

கிராம்பதோடு ஏலம் ஒரு தட்டிலே

துலுக்கமானதோர் சந்தனமும்...

துலங்கும்கெந்த வாடாமல்லி முல்லை

இலங்கமுடன் அவர்மனையில் வந்து...

இறையோன் சலாமும் எடுத்துரைத்து

உலகமாதாவின் முன்னே வைத்து...

உத்திரவு கேட்டு வாருங்களென்றார்

தாதிமாரையும் அனுப்பி வைக்க...

தலைவாசல் புக்கி கதவுதட்ட

நேரிலே கேட்டு தாதிமாரை...

நேமமுடன் கூவி பாருமெனில்

தாதி அவளுமே விரைந்து வந்து...

தாழை திறந்துதான் கேட்கும்போது

ஓதி மங்கையும் அவருக்குரைக்க...

உகந்து அவள் சென்று உரைத்தனரே

வருசை புகழான பாத்திமாதான்...

பகரும் மொழி கேட்டு அகமகிழ்ந்து

திருவை தனையுமே அழைத்து வாவென...

சீக்கிரம் சென்றுமே அழைத்துவாரும்

ஒருவன் சலாமும் எடுத்துரைத்து...

உகந்து கருதுவார் தாதிமாரும்

கத்தன் அருள்பெற்ற கண்மணியே...

உகந்து போற்றியே சரிதை கூற

பொண்ணின் குடியாரும் மனமகிழ்ந்து...

அஹதோனிடத்திலே துஆ செய்யவும்

ஆறுமாதம் மழை அன்னேரமே...

சகல பீடையும் தொலைந்து ஓடவே

ஜனத்துக்காகவே கரைபுரள...

ஜெகமம் துலங்கியே சுல்தானுமே

சிந்தை மகிழ்ந்து ஜகாத்தும் ஈய...

வாரி அளித்தனன் அன்னேரமே

வல்லோன் பேரிலே கணக்கில்லாமல்...

கூறினார் அப்போ சுல்தானுமே

குடியும் நிலைக்கவே வைத்தாரிப்போ...

பூரித்தவருமே அகமகிழ்ந்து

புவியில் அவ்லியா இவரேயாகும்...

தாரிபு செய்யவேணும் இப்போ

தங்கை தனையுமே அழையுமென்றார்...

அறிவாய் நமதுடன் செவிகையேந்து

அபுசாலிஹ் நங்கை தேவியாரும்...

அவர்களிருவரை அழையுமென்று

இயம்ப சுல்தானும் இவர்கள் புக்கி...

அருமை புகழாரை அழைத்து வந்து

அவர்களிரு பேருக்கும் அழகமுர்தம்...

சரியதாகவே கொடுக்க சொல்லி

சாற்ற சுல்தானும் அவர்கள் கேட்டு...

வாசமாகவே பாலும் பழமும்

மகிழ்ந்து அழைத்துதான் இருவருக்கும்...

தங்க காசுடன் நூறு ஆபரணும்

ஆடை உடுப்புகள் மிகுந்து அளித்து...

பசும் பொன்னும் பாஹ அங்கினி சாரம்

பாக்கு வெற்றிலை சந்தனம் அவர்க்களித்து...

உயர்ந்த சால்வை அவருக்கு ஈந்து

உகப்பாய் செவிகை வைத்து அனுப்பினீரே...

மறையின் நெறியாக மனையில் புக்கி

வல்லோன் தன்னையும் புகழ்ந்து போற்றி...

இறையோன் தனக்காக இறை மேலன்பு

புகழந்திருவரும் கல்பில் ஹக்காய்...

கரைந்துருகியே மனவாட்டம் கொண்டு

கல்பு உருகியே நீர் சொரிய...

நாயன் மலக்கைதான் விரைந்து கூவி

எந்தன் பாத்திமா நாச்சியாரும்...

ஏங்கி மடிகிறார் மகவில்லாமல்

வந்து என்னையும் வருந்துகிறார்...

மங்கை துஆவையும் கபூலாக்கினேன்

எந்தன் குர்சினில் துயிலும் கோவே...

இலங்கும் ஒளிவையும் எடுத்து சென்று

அங்கம் பெருகிட மாது கெர்ப்பம்...

அங்கு வைத்துமே அவர் குறையும்

அவர்தம் பேர் அபுமுஹம்மது என்றும்...

மங்கை தனக்குமே உரைத்த வாரும்

இறையோன் உரைத்திட ஜிப்ராயிலும்...

ஒளிவை எடுத்துமே ஒரு நொடியில்

இறையோன் குர்ஸை விட்டும் அவரெழும்ப...

விரையும் வானோரும் அவ்லியாக்களும்

விரைந்து வந்துமே அவர்கள் கேட்க...

இறையோன் ஒளிவதை நீருமிப்போ

எங்கே கொண்டு போறீரென்று கேட்க...

உரைத்தார் ஜிப்ராயில் அவர்தமக்கு

உடையோன் உரைத்தனன் மொழிய கேளும்...

பெரியோன் முஹிய்யதீன் ஆண்டவரை

பிந்தி துன்யாவில் தீன் துலங்க...

கருத்தில் மகிழ்றதவன் இருந்ததினால்

கணக்கு சரியாச்சு இப்பவுமே…

ஒருவன் அனுப்பினான் கொண்டு போறேன்

உத்த பாத்திமா நாச்சியாருக்கே…

கோதை வயிற்றினில் வைக்க போறேன்

குறித்து உரைக்கவும் அவர் மகிழ்ந்து…

ஆதி உரைப்படி ஜிப்ராயிலும்

அபுசாலிஹு மனைசென்று புக்கி…

ஜோதி துலங்கிய ஒளிவுதனை

தோகை பாத்திமா தானும் கெர்ப்பம்…

நாயன் ஒளிவையும் வைத்தவரும்

மங்கை தமக்குமே உரைக்கலானார்…

எங்கள் மாதாவே இனியவரே

இறையோன் கபூல் செய்தான் உங்கள் துஆ…

துய்யோன் அனுப்பினான் என்னையுமே

துய்யோன் ஒளிவதைக் கொண்டு வைத்தேன்…

உங்கள் கெர்ப்பத்தில் வைத்து போறேன்

உரைப்பது பேர் அபூமுஹம்மது என்றும்…

அங்கே அவர் உரைத்த கன்றிடவும்

மன்னர் அபுசாலிஹை எழுப்பி சொல்வார்…

வருசை புகழாரை சொல்ல கேளும்

வந்தார் தலைமாட்டில் பெரியவர் போல்…

பெரிய புகழாக அவர் மொழிந்தார்

பெரியோன் கொடுத்தான் ஓர் குழவியொன்றும்…

கருதி அவருமே பின் மொழிந்தார்

மழலை பேர் அபுமுஹம்மது என்றும்...

உறுதி பண்ணியே அவர் நடந்தார்

உரைத்த மொழிகேட்டு அபுசாலிஹார்...

உள்ளம் குளிர்ந்து உடல் பூரித்து

ஒருவன் பேரிலே துஆ விரைந்து...

உகந்து மகிழ்ந்தங்கே இருவருமே

குறையொன்றனுகாமல் இறை மேலன்பு...

புகழ்ந்திருந்திட மாத மூன்று

கருவும் தரித்திட பிரியம் கொண்டு...

கத்தன்தனை தொழுது இருந்தனரே

நாட்டம் மறைநபி ஹிஜ்ரத்தாண்டில்...

நானூற்றழுபத்திரண்டா மாண்டில்

கூடுமணி அபூமுஹம்மதாரும்...

கோதை அவர் கெர்ப்பம் குவலறையில்

ஏகன் குதரத்தால் அவர் தரிக்க...

திங்களின் மூன்றாம் ஆனதுவே

திங்கள் மூன்றினில் வேந்தன் குப்பா...

திருவாய் அபுசாலிஹ் முன்பு சென்று

துங்க சலாம்மென்றே எடுத்துக் கூறி...

சொல்லும் குணம் கொண்டு மங்கையவர்

கெர்ப்பக் குழவியம் சொல்லும் மாதே...

தேடுகிறது மாடு ஒன்று

உங்களுடைய தோப்பில் வடபுறத்தில்...

ஒன்று நிற்கிறது ஓடிப்பாரும்

உரைக்கும் மொழிகேட்டு மாதா பிதா...

உள்ளம் குளிர்ந்துமே உடல்பூரித்து

இறையோன் அருளென்று மனதிலெண்ணி...

எங்கள் தோப்பிலே பார்த்து வாடி

விரைந்து வெள்ளாட்டி பார்க்கும்போது...

மேய்ந்து நிற்கவே ஓடிவந்து

மறையின் நெறியுள்ள என் குருவே...

மதளை சொன்னது பொய்யல்லவே

அரசன் வெள்ளாட்டி மகிழ்ந்து சொல்ல...

அபுசாலிஹ் மனமகிழ்ந்திருக்க

இறையோன் கிருபை இது அல்லாமல்...

இயம்பக் கூடாது நாமொன்றும்

நீதியுள்ளவன் தனை புகழ்ந்து...

நீதர் அபுசாலிஹ் மகிழ்ந்திருக்க

திருவாய் பாத்திமாதானவரும்...

தவமாயிருந்துமே மனமகிழ

இலங்கும் அபுசாலிஹ் எழுந்தருளி...

ஒருவன் இஷாவுமே தொழுகவென்று

உகந்து அபசாலிஹ் மனையில் புக்கி...

கருத்தில் மகிழ்ந்தவர் தொழுதிருக்க

கள்ளன் அவனுமே களவெடுக்க...

விருப்பமுற்றவன் விடுதி விட்டே

வெளிப்பட்டான் அவன் சூரணமே...

மாரி மழை பொங்கி வாழ்வும் போது

வாழ்வும் கான்கவும் வழக்கமாக...

சூரன் ஒருதனும் கொண்டாதன் முதல்

சூரை செய்யவும் நினைத்துக் கொண்டு...

வந்து பார்ப்பையில் அபுசாலிஹார்

அப்போ இஷா தொழுகை தொழுகையில்...

புகுந்து மனைபுக்கி ஒளித்திருந்து

ஏதும் உடன் தொங்கர் வந்தமாது...

எடுத்து துயில் செய்து இருக்கும் நேரம்

உத்த நடுசாமம் உறக்கம் பார்த்து...

உள்ள முதலெல்லாம் கொள்ளை செய்து

கதிர் மணிகளை கொள்ளை கொண்டு...

கனகமணிமாலை ஆபரணமும்

கொத்தவடமெல்லாம் திறந்தெடுத்து...

உடனே குழவியும் தாய்தனை எழுப்ப

சித்தம் மயங்கியே நித்திரையோ...

திருடன் பவிகொண்டு போராணெங்கார்

போரான் என சொல்ல குழவியுமே...

பூவை திடுக்கிட்டு எழுந்திருந்து

வாரும் மன்னரே திருடன் நம்மள்...

மனையில் இருப்பென சொல்லுது பாரும்

பாரும் என சொல்லி அபுசாலிஹார்...

பதறி மனை தோறும் பார்க்கும் போது

சீராய் திருடனும் வெளியில் புக்க...

செல்வர் அவர்தானும் பின்மொழிவார்

எந்தன் மாதாவே திருடன்தானும்...

இதோ வெளி பொரான் எழுந்துடனே

உந்தன் தலைவாசல் மூடென்றது...

உடனே மயிலோடி அடைப்பதாக

முடுகிவர கள்ளன் மயிலை தள்ளி...

வருக நினைக்கவும் குளவியுமே

உந்திதனம் விட்டு வெளியில் வந்து...

உரத்து அடித்திட திருடன் மாண்டான்

திருடன் துஞ்சிட குழவியுமே...

செல்வி வயிர் கெர்ப்பம் சென்றிடவே

அபுசாலிஹ் தானும் செல்வியரும்...

சூரன் மாண்டதால் துக்கமுற்று

வருமம் மிகவாகி மனது வள்ளல்...

ஹக்கன் என்செய்வேன் என்றே நினைத்தர்

பொழுது உதிக்கவே அடுத்த வீட்டார்...

அடுத்த கள்ளனை அடித்தீரென்றார்

கூடும் களரியில் கூறென சூரன்...

கொடிய தாய்தந்தை சுற்றத்தாரும்

வாட்டம் மிகவாகி இவரைப் பார்த்து...

மகன் பலிவிடேன் என மொழிந்தார்

சாற்றி அவருமே மகனை தூக்கி...

சலித்து முகம்வாடி நடந்தவரும்

தாட்டிகமான சுல்தான் கோட்டை...

தாண்டி அவருமே குழு வருக

குழுவில் சென்றிட ராஜதளம்...

கொங்கன் கலங்கிய கவர்னருடன்

கலங்கர் மராட்டியர் வணிகருடன்...

காரணிகமார்களுடன் பிறதாணியும்

வல்லிதோர் மன்னர் செட்டியாரும்...

ராவுத்தர்மாரும் சோனகரும்

பிள்ளை சூனிய தொட்டியரும்...

பிசாகாதிடையிடா சேனைகளும்

கெஞ்ச முகத்திரை திரைகடல் போல்...

சிம்மாசனங்களும் சூழ்ந்திருக்க

வாழ்நாள் இழந்தவன் திருடனையும்...

வள்ளி தரிசனை சமூகமதில்

கோணமனதுள்ள கள்ளனையும்...

குழுவின் சுல்தானின் முன்னே வைத்து

சேனாதிபதியானா சிகாமணியே...

சீசன் தலைகண்டார் அபுசாலிஹார்

வாட்டமாகியே இவர் மொழிய...

வழிய சுல்தானும் கேட்டுக் கொண்டு

தாட்டிகமான மந்திரிக்கே...

சரிதை கூறியே விடையருள

கேட்டு மந்திரி மனதுகந்து...

கிருட அபுசாலிஹ்தனையுமே

காட்டும் அவரை நீர் என கூறியே...

கனக விடை கொடுத்து அனுப்பினானே

அனுப்பும் சேவகன் தன்னை கூட்டி...

அவனும் விரைந்தோடி மனையில் புக்கி

சினந்து இவனுமே காட்டிடவும்...

கூட்டி சுல்தானும் முன்பில்விட்டு

அனைத்தையும் படைத்தோர் பெரிய நாயன்...

ஹஸனார் அலிபுலி தன்குலமே

கனத்த மனிதனை அடித்து கொன்று...

வதை செய்து என்ன சொல்லுமென்றார்

உண்டு உறங்கிய நடுசாமத்தில்...

உறங்கும் வேளையில் அவனும்வந்து

பாரிபுகுந்தவன் திரவியத்தை...

பாங்கி பூனாரம் தலை சுழற்றி

திருடன் கட்டியே எழும்பும்போது...

செல்வி வயிர் கெர்ப்பம் குழவியுமே

வீறுடன் கூவி மொழிந்ததுவே...

மெல்ல என்னை தட்டி எழுப்பினார்கள்

விரைந்து நானுமே எழுந்திருக்க...

ஏகி நடந்தனன் மனையை விட்டு

வழுவி அவனுமே வெளியேறயில்...

தாயே சூரணம் வெளி போகிறான்

தாயே கதவையும் பூட்டென்றது...

தழவி மணி மின்னார் ஓடிச்சென்று

தலைவாசல் கதவை அடைக்கும் போது...

கழும்பில்லா மனம் நடுநடுங்க

கத்தவா உந்தன் காவல் என்றார்...

கள்ளன் மாண்டதை கவலுவேனே

பின்னே இவனின்று ஓடிவந்து...

பிறத்தி முடுகிட குழந்தையுமே

கண்ணம் விட்டவன் முடுகிடவும்...

கடுக குழவியும் வெளிபிறந்து

முன்னோன் அருளால் ஓர் அடியடிக்க...

முறிந்து விழுந்தவன் மௌத்தாகினான்

அண்ணலே எங்கள் ராஜகோவே...

ஆண்டோன் அறியவே சொன்னேன் உண்மை

திருடன் தன்னைத்தான் நானாவது...

செல்வியாவது கை நீட்டவில்லை

விருண்ட பெருNவுந்தன் அதனை கேட்டு...

விரண்டு சீரியே பற்கடித்து

இருவிழி இரண்டும் நெருப்பு எரிய...

அபுசாலிஹைப் பார்த்து உரைப்பானப்போ

கருதும் மெரியது நிசமல்லவோ...

காரிழை கெர்ப்ப குழவியுமே

திருடன் வெளிவந்தான் என்று சொன்ன...

சொல்லும் பொருளது மெய்யோ பொய்யோ

அழிவு செய்வது உலகிலுண்டோ...

அவனை ஒருத்தரும் கொல்லவில்லை

பலியும் சுமந்து உமது பேரில்...

பாரில்லாத பொய் மொழிந்தீர்

பழிக்கு பழியாக சொன்னார் போமோ...

வல்லோன் தனக்கொப்பாகுமோ கான்

களவு செய்திடும் கள்ளனையும்...

கடுகி கொண்டது நீயே யாகும்

பொய்யுமது சொன்னாய் புவியிலிப்போ...

பொருந்த சொல்லவும் வேணும் கண்டாய்

வையகத்திலில்லா பொய்யுரைத்தாய்...

மாட்டோமே நாங்கள் என மொழிந்தார்

மெய்யும் பொய்யும் உமது வாக்கால்...

வந்து சுமந்தது உந்தனக்கு

துய்யவன் கிஸ்ஸா அறியாமலே...

சொல்லுவானப்போ சபையுள்ளோருக்கு

எந்தன் சபையிலே உள்ள பேரே...

ஏகன் கர்ப்பினை தனைப் பிரித்து

வந்து நீங்களும் உங்கள் பேரில்...

வழிய பாவமும் சுமராமலே

இந்த நியாயத்தை பிரித்தொல்லோரும்...

இயம்புமென கேட்க அவர் மொழிவார்

கந்த மகிழ்கின்ற கண்மணியே...

காரிழை கெர்ப்பம் மூன்று மாதம்

குழவி கொல்வது உலகிலுண்டோ...

கோமானே எங்கள் ராஜ கோவே

களவு செய்ததோர் கள்ளனையும்...

கடுக கொன்றது இவரேயாகும்

பழிக்குப் பழியுமே கொடுக்க வேணும்...

பக்கம் பாசத்தில் கொல்லவில்லை

வழுத்து மொழி கேட்டு சுல்தானுமே...

வள்ளல் முஹம்மது சரகுள்ளோரே

அறிவில் உகந்தோர் அபுசாலிஹ்...

அல்லாஹ் தனக்காக இருவரைக்கும்

நிறுத்தி வைத்தனன் இந்நேரமே...

நீயும் பயமில்லா பொய் மொழிந்தாய்

நிஜமதாகவே மொழிகிறேன் நான்...

ஒருவன் அறியவே சொன்னேன் உண்மை

ஒரு விண்ணப்பம் கேள் ராஜகோவே...

கருதும் மொழியுமே பொய்யதானால்

காரிழை தன்னை அழைத்து வந்தே...

அவர்கள் மொழியையும் கேட்டபின்பும்

அடியேன் என்னையும் மனதின்படி...

தவறாமல் என்னை ஆக்கினையும்

தானே செய்வீர்கள் பிசகில்லாமல்...

அவர் மொழிந்ததைசுல்தான் கேட்டு

இதுவும் அறிவோம் என்றே நினைத்து...

கவருவானப்போ மந்திரிக்கு

காரிழை பார்த்து அனுப்புமெனில்...

நேரிலே தன்னை செவிகை வைத்து

நிமிசம் அவர்களை அனுப்புமென்றான்...

காரிழை பார்த்து செவிகை ஏந்து

கடுக கொடுவாரும் என உரைக்க…

தாரிபு செய்ய அவன் நடந்து

தங்கைதனில் செவிகைதனில் வைத்து…

வீரியமுடன் தூக்கியே தான்

வேந்தன் சமூகத்தில் தூக்கியேதான்…

வேந்தன் திருமுன்னே இறக்கிவைத்தான்

வைத்த உடனேதான் திரை வளைத்து…

மன்னர் சுல்தானும் மொழிவதானான்

எத்திசை புகழும் நபி குலமே…

எந்தன் உடப் பிறப்பானவரே

உத்த மொழியது நீங்களுமே…

உரைத்தால் உங்களின் தலைபிழைக்கும்

கத்தன் தனக்கு உகப்பானவரே…

கருதுமென கேட்க அவர் மொழிவார்

அண்ணலே எந்தன் ராஜ கோவே…

அல்லாஹ் அறியவே சொல்ல கேளீர்

மன்னர் மணவாளர் தொழுது வந்து…

வயிறு பசியாறி துயுpலும் போது

கன்னமிட்டவன் எங்கள் முதல்…

கழுத்துமணி மாலை ஆபரணமும்

தின்னமுடனேதான் மூட்டை கட்டி…

திருடன் எழும்பவும் குழவியுமே

அந்த நேரத்தில் குழவியது…

அதட்டி ஒரு சப்தம் போட்டதுவும்

வந்து நம்முட முதலுதனை...

மணிமாலை கள்ளன் கொண்டு போனான்

அதட்டி உரைத்திட நான் விழித்து...

மணவாளரை எழுப்ப அவரெழுந்து

சிந்தை தடுமாறி மனைகள் தோறும்...

திருடனைப் பார்க்க வெளியேறினான்

வெளியில் போகையில் குழவி பின்னும்...

வெளி கதவையும் மூடென்றது

எழுந்து நானோடி அடைப்பதா னேன்...

திருடன் பின்னின்று முடுகும் போது

முன்னோன் அருளாளே மூன்று மாதம்...

முடுகும் அபுமுஹம்மதாரும்

கண்ணமிட்டதோர் கள்ளனையும்...

உருள அடித்திட திருடன் மாண்டான்

திருடன் மடியவும் குழவியது...

வல்லோன் உதவியால் வயிறு நுழைய

சடுதி வந்தனர் மணவாளரும்...

கருத்தால் அவனுமேதான் இறந்தார்

அடித்து கொன்றது குழவியல்லாள்...

அவனே நாங்களும் கை நீட்டவில்லை

உடையோன் அறியவே சொன்னேன் உண்மை...

ஒழித்து மறைத்து நான் சொல்லவில்லை

பகரும் மொழியது சரியல்லவே...

பாரில் ஒப்புமோ இது மொழியும்

உகந்து இருவுரும் பேசிக்கொண்டு...

ஒத்துக் கூடியே வந்தீர்களோ

முஹம்மது நபி சரகுள்ளோரும்...

வஞ்ச பாதக செய்தி சொல்ல

அகத்தில் பயமில்லா சரி சபையில்...

அருள மனமும்தான் துணிந்தீர்களோ

திருடன் பலியுமே சும்மா போகுமோ...

திருடனுக்கொத்த திருடியவள்

கருங்காளி தன்னை செதுக்கியேதான்...

கழுவில் போடு மெனயுரைக்க

அருமை பாத்திமா நாச்சியாரும்...

அருளும் மொழிகேட்டு தலைகுனிய

பருதி துலங்கிழய குழவியது...

பைங்குடி வயிற்றில் இருந்து கொண்டு

அதட்டி ஒரு சப்தமும் போட்டதுவும்...

யாரடா கழுவில் வைக்க சொன்னா

மதமோ பேர்கேடா அட சுல்தானே...

மாதா பிதா சொல்லை பொய்யென்றா நீ

பதுங்கி வந்ததோர் கள்ளனையும்...

பதர கொன்றது நான்தானடா

கிருமமாகவே உந்தன சீமை...

கிருபை செய்தது அறியாமலே

என்னடா சொன்னா அடபயலே...

இகழ்ச்சி பேசினால் என் மாதாவே

உன்னாலாகுமோ கழுவில்வைக்க...

உடையோன் ஒருவனால் ஆகுமல்லான்

விதனபடுத்தவும் முடியுமடா...

வீணில் வெறிவினா நெறி மூடனே

அன்னை மனம் கூச நீ பேசினாய்...

அழிவு வந்தது உந்தனக்கு

முன்னோன் அறிய சொன்ன மொழி...

முழுதும் பொய் என்றா அட சுல்தானே

உந்தன் சிங்காசனம் இழந்து...

உடையோன் கிருபையால் நீ உருண்டு

எந்தன் வயதுமே ஏழுலேதான்...

என்பிதா சீமை ஆள் வாரடா

சந்தாபமில்லை அறிய சொன்னேன்...

பிடித்துதே சனியன் உந்தனக்கு

முன்னோன் ல்ஃனத்து நீ பெறுவாய்...

மூதேவியாக நரகம் சேருவாய்

சினந்து உரைத்திட குழவியது...

சிங்காசனம் விட்டு கீழ் விழுந்து

மனது தடுமாறி கிறுகிறுத்து...

மயங்கி கிடந்திட படைமன்னரும்

கனகம் பொருந்திய மந்திரியும்...

கைசேதப்பட்டு ஓடி வந்து

கனது பொருந்தி தோகை வந்து...

சாற்றுவாளப்போ எல்லோருமே

ஒருவனறியாமல் செய்த பிழை...

உடையோன் பொறுப்பான் சலியாதிரு

கருமம் அகலவே நீங்கள் தானும்...

காரிழை ஆயாசம் தீர்த்துமேதான்

தாங்கி தருவீர்கள் தங்கமேரே...

தங்கள் அடிமைகள் நாங்களாவோம்

அவர்களுக்கீந்த தோர் வெகுமதியும்...

போத கொடுத்துமே குர்ஸு பண்ண

உனது வினையகலும் வாழ்முண்டு...

விம்மி பிடித்ததோர் வினையகலும்

சந்தாபமில்லை என்றுரைத்தார்...

நாடு நகருள்ளோர் நியாயம் சொன்னார்

நாயன் குதரத்து அறியாமலே...

கேடுவரும்போது மதிகெட்டோரும்

சீரிய சர்ப்பம் பாய்ந்த தென்று...

சூடுபட்டது ஆராதிப்போ

விலகுமோ மந்திரி என உரைக்க...

வாடி மனம் ஏங்கி முகம் சூம்பியே

மன்னன் திரையுள்ளே மறைந்து நின்று...

எந்தன் உடப்பிறப்பானவரே

ஏது கெட்டதோர் நெறி மூடன்தான்...

மனமும் கூசாது பேசிவிட்டேன்

வல்லோன் தனக்காக மனம் பொறுத்து...

சிந்தை மகிழ்ந்துமே துஆ விரைந்து

செப்பும் பிழையது அகற்றி என்னை...

உகந்து காக்கவும் கடனுமக்கே

வருசை அலிபுலி தன் குலமே...

பெற்ற பிள்ளை போல் என்னை காத்து

பெரியோன் இடத்திலே துஆவிரைந்து...

உத்திரவு சொல்லும் என் மாதாவே

உகந்து அவன் கேட்க இவர் மொழிவார்...

கத்தன் அறியாமல் செய்த பிழை

காப்பான் இறைவன் கலங்காதே நீ...

உத்திரவு செய்ய அவன் மகிழ்ந்து

உகந்து அவனுமே மனை புக்கியே...

மன்னர் சுல்தானும் மாளிகை புக்கி

வர்ண பட்டாடை ஆபரணமும்...

அண்ணல் அபுசாலிஹ் அவர் தமக்கு

ஐம்பொன் சாலுவை சாதுராவும்...

வர்ண ஜுப்பாவும் ஜர்கை சால்வும்

வைர பதைக்கனும் மணி மாலையும்...

முன்னூறு பொன்னு ஹசரபியும்

முஹிலார் கொண்டு வந்து முன்னே வைத்தே...

கதமும் தோய்ந்தவர் தஸ்லீம் செய்து

கண்ணீர் தழும்பியே தஸ்லீம் செய்து...

விம்மி பொருமியே மொழிவானப்போ

சதர சேனையும் அடி எனுமே...

தங்கள் அடிமையாய் நாங்களாவோம்

பதியும் மதியுமே நீங்களாகும்...

பாலர் மொழியுமே தப்பில்லையே

அதிக செல்வமும் சிங்காசனமும்...

ஆளுவீர் தப்பில்லை இறையருளால்

இந்த மொழிகேட்டு அவன் மொழிவான்...

எந்தன் உயிருமே குறைந்து போச்சு

இனிமேல் பிழைப்பில்லை என் மாதாவே...

முன்னோன் அளவிலே துஆ விரைந்து

மூதேவியானேன் மோசமானேன்...

மோசம் வராமல் காக்க கடன்

அந்த மொழி கேட்டு பாத்திமா தான்...

ஆண்டோன் இடத்திலே துஆ இருந்து

சந்தாபம் வேண்டாம் சலிப்பும் வேண்டாம்...

தானோன் பொறுப்பான் அன்னையரே

விந்தையாய் சொல்லி மன்றாடியே...

சந்தோஷமாகி மீண்டும் சொல்வார்

தொங்கரே மனம் சலிக்க வேண்டாம்...

துய்யோன் கொடுப்பான் சுவர்க்கப் பதி

அங்கமதில் பயம் வேண்டாம் கண்டீர்...

ஆல நபி சபாஅத்தும் பெறுவீர்

பங்கம் வராது இனி உந்தனக்கு...

படைத்தவன் காப்பான் நடவுமெனில்

சங்கை அழகு உள்ள பாத்திமாதான்...

தையல் உரைத்திட அவர் மகிழ்ந்து

விருப்பமுற்றவன் இருவரையும்...

விரைந்து செவிகை தனில் வைத்து

கருதி மெலிந்தவன் கதம் பணிந்து...

கடுகி வழியேகி அனுப்பி வைத்து

சிரகு பிடித்தவன் மனம் கருகி...

செம்மல் அவனுமே மாளிகை புக்கி

வருத்தம் மிகவாகி மனம் சடைந்து...

மன்னன் பித்தாபம் கொண்ட எண்ணம்

இருந்து இடைந்தவனன் மனமுருகி...

தினமும் வாட்டமாய் இருக்கையிலே

மன்னர் அபுசாலிஹ் மனைவியரும்...

இவர்கள் மனை புக்கி மகிழ்ந்திருக்க

திரவாய் பாத்திமா hநச்சியாரும்...

திங்கள் ஐந்தாக இருக்கும் நாளில்

அருமை அபுசாலிஹ் அவர்தமக்கு...

உகப்பாய் அனுதினம் பால் காச்சியே

வருசை தாதியார் கொடுத்து வாரான்...

வல்லோன் கிருபையால் ஒரு பொழுது

அருமை தாதியும் பாலு தன்னை...

அடுப்பில் வைத்துமே காச்சுகையில்

ஒருவன் கிருபையால் கலையமது...

உடைந்து சிதறிட தாதியாரும்

பெருதி கலங்கியே ஓடி வந்து...

பெண்ணின் குடி தனக்கு உரைப்பதனால்

கரும தாகிய மனம் கலங்க...

குழவி அது உம்மா எனக் கூவியே

எந்தன் மாதாவே சலிக்க வேண்டாம்...

இப்போ கலையமும் அடுப்பில் வைத்து

வந்து நெருப்பையும் மூட்டச் சொல்லும்...

வல்லோன் கொடுப்பானே பாலதையும்

சந்தோஷமாகி கலையமுமே...

தாதிதனை பார்த்து வைய்யு மெனில்

அந்த மொழி கேட்டு தாதி அவள்...

அடுப்பில் கலையமும் வைத்தனளே

பெரியோன் தன்னையும் புகழ்ந்து போற்றி...

பெரியோன் குதரத்தால் பால் காய்ச்சவே

கலயமும் பால்மாய் நிரம்பி இருக்க...

பிரியமுற்றவள் இருக்கும் நாளில்

அருமை பாத்திமா நாச்சியாருக்கும்...

உகப்பாய் மாதமும் பத்ததாகி

அருமை தமக்குமே மாதம் சங்கை...

அறிகுறி ஒன்றும் காணாமலே

பரவும் பரிவில்லாதிருக்கும் போது...

படைத்தோன் பரிமானம் பாக்கியதை

இன்னும் போலவே வயிறு இருக்க...

ஏகன் கிருபை என்றே நினைத்து

மன்னர் அபுசாலிஹார் தமக்கு...

என்றும் உரைத்த அமுதருந்தி

பொங்கி மயிலாரும் துயில்வதாகி...

புரண்டு எழுந்தவர் சொல் கபூலாய்

இன்னும்பொல் வெளி செல்வது போல்...

எதிரே ஜின் வந்து மறைத்து கொண்டு

சினந்து பல்காட்டி சடைவிரித்து...

சீரி வளர்ந்தோங்கி பனைமரம் போல்

கண்ணும் நெருப்பு போல் மடைபோல் நாச்சி...

காலும் தூணை போல் நின்று கொண்டு

வனிதை உனை நானும் விட்டிடனோ...

மழலை வெளி வந்து வாள் உருவி

ஜின்னை வதைத்துமே போட்டுவிட்டு...

செல்வி வயிறு புக்கி இருந்தனரே

அந்த நேரமே விழிப்பு வந்து...

மகிழ்ந்து உரைத்திட சலுகையுமே

சிந்தை மகிழ்ந்தவர் அபுசாலிஹும்...

செப்பும் மொழி கேட்டு அவர் மொழிவார்

முன்னோன் கிருபையால் இது வேறில்லை...

மொய்குழலை எந்தன் பெண்மயிலே

சந்தோஷமாகி இருவருமே...

சாய்ந்து துயில் கொள்ள அந்நேரமே

வயிறு மிகுந்துதான் வலி எடுக்க...

வல்லோன் ஜிப்ராயிலுக்கு உரைக்கலானான்

தைய்யல் தனக்குமே வயிறு நொந்து...

விதமாய் இருக்கிறாள் நீரும்போய்

தனது ஜனம் எல்லாம் வரக் கூடாது…

பதமாய் நீர் சென்று அவருக்கு உரையும்

பக்க மனிதர்கள் வரக் கூடாது…

சஹீதரை அனுப்பி வாருமென்றான்

தானோன் மொழி கூறியே நடந்தார்…

நடந்து சென்றிட இறை வநின்றான்

நலம் சீர் ஜிப்ராயில் தனக்குமப்போ…

மடவார் பாத்திமா நீர் அழைத்து

மாதா தமக்கு ஏற்ற கடை சரக்கும்…

திடமாய் பன்னீரும் பெருங்காயமும்

சீராய் எடுத்து நீர் நடந்து சென்று…

சடங்குதனை தீர்த்து மாதாவுக்கே

தங்கைதனை தூக்கி உலாத்துமென்றான்…

தனியோன் உரைத்தி;ட மாதாவையும்

வாகனத்தையும் நோக்கிவிட்டு…

இனியமுடனே தாம் மருத்துவங்கள்

இச்சைமுடனே தாம் பார்க்கவேதான்…

கனியுடன் பூவும் பன்னீருமே

காயமும் வெகு கடை சரக்கும்…

பணிகளும் பூவும் பட்டுளிர

**தொங்கல்**

பாவையர் மனையிர் புக்கார்…

புக்கிட சுவர்க்க பன்னீர்

பொன்மணி அசட்டி மீதில்...

தக்கவே ஏந்தி போனது

தைய்யலாருமே மயக்கமானார்...

இக்கனீர் மானே தேனே

மாதுயர் அகத்தும் என்னை...

ஒக்கவே இருக்கும் காலை

உரைத்தது குழவி தானே...

அறிவுள்ள அன்னையே நீயும் தான்

என்னை அஹ்மது மார்க்கத்துக்கு...

பிறப்பது சரியானல்லவே

விழைவரும் யானும்தான் நீருமிப்போ...

ஒரு முழ புடவை ஈந்தினானால்

உடுத்து நானுமே பிறப்பேன் என்று...

அருகில் இருப்பவருக்கு உரைப்பார் பீவி

தன்னையருக்குமே தைய்யல் சொல்வார்...

உடுத்துயில் வெள்ளை என கேட்டது

உங்கி துளிப்பது நானே இதால்...

இதுவே வேறில்லை தாருமென

உடுத்து கொண்டு நான் பசு வெண்ணையில்...

இளகிய விளங்கிறதால்

தடை அற பிறப்பே...

தைய்யலாருமே விளங்க சொல்லி

உடுத்து கொண்டே அபுமுஹம்மதரும்...

செல்வர் உதித்தனர் ரமலான் மாதம்

உயர் திங்கள் கிழமை இரவில்

கதிர் மதிகிரதம் சூழ்வது போல்

கதங்கனாம் மிகவும் பலதும் போல...

அபுசாலிஹ் வயதும் அறுபதாக

அதிணி சஹ்ரு நேரமதில்...

அபுமுஹம்மதும் உதித்தார் அன்றே

**விருத்தம்**

வித்தனம் பொருளுக்கெல்லாம். விளங்கியவித்தார் காஞ்சு, சுற்றினை கண்குலேட்டும் சுடர்மணி கிரணவியோன். மதியிலெழுந்த வண்ணம் வளர் ஜெய்லானிதனில் துதிமிக செய்து அப்துல்காதிரும் உதித்தாரன்றே, தானவன் மகிழ, சராசர மகிழ. திக்கெட்டு திசையெல்லாம மகிழ, கோனவர் மகிழ, அர்ஸுடன் குர்ஸுமே மகிழ, குத்பொலி நபிமார்களும் மகிழ, ஏனன் இப்லீஸவன் கிடுகலங்க, எழில் அப்துல் காதிர் உதித்தாரன் கூறிய விருளிலிருந்து முச்சுடர்தாவி கொள்ளும். சுடர் முதலோன் நபியே ராவிய கௌதுல் அஃலம் ஒன்றாய் அருபொருளால் அஸ்மாவாகிய வீரியமுடைய ஒலிகளுக்கெல்லாம் அரசராய் வந்துதித்த விண்ணோடு மண்ணுலகோருக்கு. காரிய கருத்துமாகிய எங்கள் கௌது முஹிய்யதீன் பிறந்தார். பிறந்தனர் உலகரெல்லாம் நீதி முச்சுடர் மெஞ்ஞானம். திருந்திய வாழ்வு கொண்டு திங்கள் குறைஷ‪ p குலத்தில், அருந்தவம் அலிய இயம்ப. அன்னமுதல் அபுசாலிஹார் சிறந்தவர் யாரனெ;றே சேகு அப்துல் காதிர் பிறந்தாரென்றே. திக்கெல்லாம் தீனோர் வாழ்த்த. தீன் பயிர் செழித்தும் வாழ்க. ஹக்கன் நேர்வழி முஹம்மது காரண அருளென்னாலும் சித்தினும் அதிக சித்தாய், ஜெகமெல்லாம் கீர்த்தி மேவும், சீக்கிரம் மார்க்கம் ஓங்க ஷெய்கு அப்துல்லா பிறந்தாரென்றே. திடவாய் பெருமணியின் மாலை சிந்தையில். மகிழ்ந்தென்னாலும். படிப்பவர் கேட்பவருக்கும், பிறந்ததை கேட்பார்க்கெல்லாம். படிப்பதுடனே சொர்க்க வாழ்வுடன் பரக்கத்தோங்க அடித்திடும் ஜன்னத்தில் அபுமுஹம்மது உதித்தாரன்றே.

**தொங்கல்**

உதித்தார் உலகுக்கு அதிபதியாய்...

உத்தமனை தோறு பிறவை தோறும்

பதித்த கண்ணாடி மணிமுத்துமாலை...

பதினாலாம் பக்கத்து நிலவுபோல

பெரியோன் அருள்பெற்ற அபுமுஹம்மதரே...

பூவையே எடுத்து பன்னீராட்டி

மதிசூழ் முகத்தார் வெளி கஞ்சனம்…

விதம்விதமாக வேதம் சொல்லி

மடவர் தீட்டியே தாலாட்டுவார்…

ஆராரோ ஒருவன் தருனா முத்தே

என்பாலரே ஒருவனுக்கு உத்தவரே…

ஆலம் அதிபதியானோன் என்பார்

அவரையும் புகழ்ந்துரைப்பார் என்பாலரே…

வள்ளல் தனையும் முத்திடுவார்

சீராய் புகழந்துமே உறரோ நீயும்…

சொல்லி புகழ்வார் தொங்கர்தன்னையும்

எடுத்து தொட்டிலாட்டியே புகழ்வார்

**விருத்தம்**

முத்தி பெற்ற முஹம்மதை முதல்வன் நோக்கியே மொழிவான் அர்சில் நின்றே

அதரிட ஓர் குழரை தன்வடிதீனோர் உள்ள சின்போ அவ்லியா புயத்திலே

திருவடி பதிந்தே நின்றும் இறையவன் உரைத்தானப்போ அறிந்தவர்

அறுபத்திரண்டாம் அவ்லியாமார் எல்லோரும் சிரமதை தாழ்பணிந்தோர்

அறிவுதனிலே அறிவாய் அல்லா எங்குமே நிறைந்தவனே அவ்லியா

பொற வருட சிரமது படிரேடே இருத்திட இரண்டாய்

செல்வர் வேந்தை விளக்காம்

**தொங்கல்**

குர்சில் தோங்கிச்சே விலாயத்தையும்…

கோமான் அருளாளே பங்கு செய்தோர்

ஒருவன் குர்ஆனை உள்ளங்கையில்…

உகந்து வந்த உத்தபேரே

பரிதி துலங்கிய பார்த்திபராய்...

பயகம்பர் நபி திருபேரனாரே

அர்சுபுலி அலி தன் குலத்தில்...

ஹஸனார் குலத்துக்கு அதிபதியே

முத்தே மாணிக்க நவரத்தினமே...

முஹம்மது தீன் துலங்க வந்தவரே

ஹாத்திமே எங்கள் காரணரே...

கண்ணுக் கடங்காத தவப் பொருளே

சிந்தை விளங்கிய சிகாமணியே...

தீனில் தெளிவான தௌ;ளமுதே

எத்திசை புகழும் இளவரசே...

ஏந்தி புகழ்ந்துமே அகமகிழ்ந்து

வானம் மடவாகும் புகழ்ந்து போற்றி...

மங்கை கையில் கொடுத்தவரேசினார்

அவரேக பாத்திமா மஞ்சனத்தில்...

மடியின் மேல்வைத்து தாலாட்டுவார்

தேனார் குரலோசை குயிலோசையாய்...

செம்பொன் மணி தொட்டிலாட்டுவாரே

தானோன் குர்சினில் துயிலும் கோவே...

தாகம்தனை தீர்த்த தவப் பொருளே

துய்யோன் ஹீரானி வந்திரங்கி...

தொட்டி லாட்டவும் தவம் பெற்றோரே

மெய்யரே சஹ்ரு சாமத்திலே...

விட்டு துலங்கிச்சே மெய் பொருளே

தையல் தனக்குமே என்றுரைத்து…

தவப் பொருளே எங்கள் நவமணியே

கையில் குர்ஆனுக்கு உகந்தவரே…

காரிலே முகவாட்டம் தீர்த்தவரே

சங்கு சத்திரமானவரே…

சமுத்திரம்தனில் ஆணிமுத்தவரே

எங்கும் பிரசங்கமாகவே தான்…

இப்புவியினில் வந்த இளவரசே

தங்கம் பொன்மணி தவத்துயர்ந்த…

தங்கள் குலம் ஈடேற வந்தவரே

தொங்கரே எங்கள் மணி விளக்கே…

துய்யோன் அருள் பெற்ற முத்தரசே

ஜோதி துலங்கிய மணிவிளக்கே…

துய்யோன் குர்சினில் துயிலும் கோவே

ஆதி அருளே தவப் பொருளே…

அறிய நபியுல்லா கோத்தரமே

பாதிமதி சூலும் பாக்கியரே…

பாரில் தீன் விளங்க வந்தவரே

நீதி நெறியுள்ள நித்திலமே…

நெறியோன் விலாயத்தும் உகந்தவரே

மகுடம் முடிவேந்தர் மதிகுள்ளோரே…

மறைந்த ஜின் வதைத்தவர் அலிபுலியே

தருமதானதோர் தாபரமே…

தரனில் தீன் விளங்க வந்தவரே

வெகுமானம் பெற்ற வேந்தரிடம்...

வீருடைதரித்த மெய்ப் பொருளே

பகுமதாகிய புத்திமதி...

பாரில் சூழ்ந்திட வந்தவரே

வருசை புகழாக தாலாட்டியே...

வானம் பூமியும் பறவைகளும்

மிருகஜாதியும் ஊர் வனமும்...

மிக்க கடலலை போடாமலே

பெருத்த காற்றுமே அசைந்திடாமல்...

பேசாதிருந்தே என்றெழும்ப

அருமை புகழான மாதாவுமே...

உகப்பாய் எடுத்தவர் அமிர்தமூட்ட

உகந்து அருந்தாமல் முகம் சாய்க்கவும்...

உடையோன் ரமலான் பிறை தோண்டிடவும்

சகல ஜனங்களும் பிறை காணாமல்...

சம்சியம் பட்டுமனையில் புக்கி

புகழ்ந்து எல்லோரும் பாத்திமாவே...

பிறையுமே காணோம் என்றுரைக்க

அகமும் மகிழ்ந்துமே அவர் உரைக்க...

ஆனால் நமது குழந்தையுமே

பொழுது உதிக்குமுன் இதுவரையும்...

ஏதும் இதுவரை அருந்தவில்லை

பிறந்தது இப்போ பிறையும் தானே...

பிசகு இல்லை நோன்பு வைக்கலாமே

அந்த மொழி கேட்டு ஜெய்லானிலுள்ளோர்...

அனைவரும் நோன்பு வைக்கலானார்

சிந்தை மகிழ்ந்துமே பாத்திமாதான்...

செல்வர்தமக்குமே அமுதமூட்ட

சொந்த மனிதரே அழையுமெனில்...

துலங்கும் அபுசாலிஹ் நடந்து சென்று

வந்த ஜனங்களும் கூட்டி வந்து...

மல்லிகை  சர்க்கரை சந்தனமும்

வைத்தேன் மு∴மீன்கள் அனைவரும் நிற்க...

மூன்றாம் நாளினில் பாங்கும் சூடி

காமில் முஸ்தபா தன்பேரரும்...

கத்தன் பேரிNலு பாத்திஹாவும்

ஆமீன் கூறியே எல்லோர்களும்...

அகமும் மகிழவே பாக்கியமும்

மு∴மீன் தனக்குமே அபுசாலிஹ்...

சந்தனம் பூவும் மிகுந்தளிக்க

அளித்து விருந்தாக்கி வெற்றி பெற...

விருந்துமே கொடுத்து மிகுந்மளித்து

வெகுசாய் பணம் காசும் பொன்புடவை...

மேலோன் பேரிலே மிகுந்தளித்து

அகமும் மகிழ்ந்துமே அபுசாலிஹும்...

அருமை பாத்திமா தாதியாரும்

ஜைகமு; துலங்கிய பாலகருக்கு...

சேகு அப்துல்காதிர் என்றுரைத்தனரே

உரைத்த பேருமே மகிழ்ந்தவரும்...

உகந்து பாலுமே செலுத்திடவும்

இறையோன் அருளாலெ வந்துருவாய்...

உருண்டு புரண்டு தாம் தவண்டதுவும்

தரைவிட்டு எழுந்து தாம் நடந்தோடியே...

செய்யது அப்துல் காதிருமே

வேந்தர் தமக்குமே வயது ஐந்தே...

விரைந்தோடியே விளையாடிடவும்

மகிழந்து வாழ்கவே சாதிலகை...

மாலையும் செலம்பு மறை மகிழ்ந்து

**விருத்தம்**

கூவிட கலந்துமே மழையும் புகழவே, சந்திரதிங்கள் தோத்தவும் மாணிக்கம் திரள மணிமுத்து மாலைகள் சுற்றிலும் மின்னலிடவும். உங்கள் இரத்தின புர்சையின் வீதியில் மாதுளைகளுடன் இடித்துமே நடனமிடலும், வாரதும் சங்கீத மகுடமு; பத்தினர் இறைஞ்சியே தொங்கர் அப்துல்காதிர் பேரது துலுங்கவே வயதுமே ஐந்தினில் பிரபலம் குறையில்லாமல் ஓர்மை விளங்கிய உலகமும் விளங்கவே அர்சது குர்சும் விளங்க. உற்றனல் சுவர்க்கமும் மற்றும் விளங்கவே பேராவது மீறாமாலை கனக கண் செல்வமும் செனை தலம் சூழும் ஜெய்லானி மீதில் நின்றே. மறையின் வழக்கம்போல் நெறியின் படியதை அபுசாலிஹ் மைந்தர் தமக்கே கத்னாவும் செய்தே உரையும் வருத்தம் மஞ்சிளாமலே சௌக்கியமுடன் ஒரு உத்தரனமுத்து மாணிக்கமே நிறை நிரம்ப பரப்பி பவளக் காலிட்டு வச்சிரவளை நின்றிட மணிமாலைகள் சூட்டிட அறையும் முரசதிர, அங்குள்ளோர் பதறவே நவ்பத்துடன் அலிகிளையாருடன் புவி திடுக்கிட்;டு அதிரவே. அதிரவே மன்னர் மண்ணியர்கள் நடமாமணி மாதர் சூழவே. மாதர் சங்கீத ராகம் பாடவே பொன்னின் மாமணி பொருந்திய அழகு பறவரவும் கண்டேபுற மீதில்.

**தொங்கல்**

மண்டலம் புகழ் அபுசாலிஹ்...

மைந்தரும் அப்துல் காதிருவும்

சென்று மஜ்லிஸில் தீனோர் சுழு

சிங்கி குடியுமே நின்றிலங்க

கொண்டல் குடைஇட சாந்தி வீச

கோமான் பேரிலே பாத்திஹாவும்

விண்டார் ஆலிமும் நின்றோரெல்லாம்...

விளங்க ஆமினும் கூறினரே

ஆமீன் கூறியே அகமகிழ்;ந்து...

அப்துல்காதிருக்கு புருசை தோறும்

முஃமீன் அனைவரும் சூழ்ந்துவர...

முத்து மணிகுடை நின்றிலங்க

பூமிதனிலுள்ள பெண்கள் எல்லாம்...

நீலர் ஆழாத்தி ஏந்தி நிற்க

பூமி திடுக்கிட முரசதிர...

பூபந் தெரிவார்கள் பூவைரே

கவிகள் பாடியே நடனம் புரிய...

கலஞ்சி ஏந்த கம்பூரி இட

பவனி வந்தனர் புருசை தோறும்...

பட்டாபகல் போல மத்தாபுடன்

ராவுத்தர் துடியுமே விண்ணெதிர...

சங்கீதம் பாட நளினம் செய்ய

நவ்பத் கிடுகிடு கிடென்ன...

நாலுதிசையுமே நின்றிலங்க

வருசை தோறுமே பவனிவந்து...

பொன்னின் மணிமாடம் புகுந்துவர

சரிதை தவறாத முஃமீன்களும்...

செய்யதுமார்களும் ஓதி ஜமாத்தோடும்

பெருதி கொடு வந்துபூ பந்தலில்...

பொன்னின் வஸ்தீரம் தனிலிருக்க

வருசை புகழான அபுசாலிஹ்...

விளம்பினார் விருந்து கணக்கில்லையே

கணக்கிலடங்காது பாக்கிலையும்...

காசு பணமுமே சந்தனமும்

மணக்கும் மல்லிகை பூமலரும்...

வந்த ஜனத்துக்கு மிகுந்தளித்து

குணக்கமில்லாமல் அபசாலிஹார்...

குறித்து பனிரண்டு நாள் விருந்தளித்து

இணக்கமாகவே அமுதளித்து...

இலங்கும் மணிமாடம் வைத்திருந்தா

அன்று பொழுது போய் மற்ற நாளில்...

அழகான் வெள்ளிக் கிழமைதனில்

சேனை மஜ்லிஸில் ஆலிமிடம்...

செல்வர்தனையே குர்ஆன் ஓத

கொண்டு பயமுள்ள ஹுசு தலைவரிடம்...

கோமான் அலிபது பலகை தன்னை

என்றும் உள்ளவன் தன்னருளால்...

எழுதி கொடுக்கவும் படித்தனரே

குர்ஆன் முப்பதும் மாதம் மூன்றில்...

கோமான் கிருபையால் அவர் ஓதியே

வருசை புகழாரும் வயது ஏழில்...

வந்து அடித்திட சுல்தானுக்கு

அருதி மௌத்துமே முடுகிடவும்...

மந்திரிதனைப் பார்த்து மொழிவானப்போ

ஒருவன் அருள்பெற்ற அப்துல்காதிர்...

உரைத்த மொழியுமே சரியதாச்சு

வருசை புகழாருக்கு வயது ஏழு...

வந்து அடுத்தது மந்திரியே

இருப்பு நமக்கில்லை இனிமேலாக...

இப்போ அபுசாலிஹார் தமக்கு

விருப்பமுடன் விடையும் அருளினவே...

அருள மந்திரியும் கருத்தில் மகிழ்ந்து

அவன் எழுபது நகரையும் அலங்கரித்தான்...

அவன் எழுந்துமே அந்நேரமே

தந்தை தன்னையும் அலங்கரித்து...

தொங்கர் அப்துல்காதிரை சோடித்துதான்

மந்திரி சேனை விருதுடனே...

மன்னர் அபுசாலிஹ் மாளிகை புக்கி

தந்திரமாகவே அபுசாலிஹை...

தந்தைதனை ஏற்றி புருசை தோறும்

முன்னோன் அருளாலே முரசதிர...

முழங்கினார் பீரங்கி வெடியதுவே

திண்ணமுடனேதான் இருப்பதொன்று...

ஏற்றி அவருமே பவனிவர

மன்னர் மனிதரும் திரை சூழவே...

மகுட கொடியுமே நின்றிலங்க

அந்நகர் சுற்றி கட்டியம் கூற...

ஆளாத்தி ஏந்தி  கவரிப்போட

பொன்னின் மடவாரும் நடனம் செய்ய...

வருசை சுற்றிய குழுவில் புக்கார்

பொன்னின் குருசினில் அபுசாலிஹார்...

பெரியோன் அருளாலே வீற்றிருக்க

மின்னல் இடியுமே மிக உளிர...

வேந்தர் மனிதர்கள் சூழ்ந்திருக்க

பன்னாயிரம் சேனைதளம்...

படை மன்னர் சூழ பட்டமுமே

கண்ணின் மணியான அப்துல் காதிர்...

பொருட்டினால் கிரீடம் சூட்டினார்கள்

அண்ணல் அபுசாலிஹ் தாமிருந்து...

அரசு செலுத்தியே செங்கோலோங்க

மன்னர் மந்திரி பதம் பணிந்து...

அருதி தப்பாமல் நடந்துவர

கண்ணம் களவுகளும் இல்லாமல்...

கண்டிப்பு செய்து திட்டமாக

வன்னம் மடவாரும் வடிவுக் கொண்டு...

வளைவில் கொடுமூடி வாழ்வதுமே

எளியோர் வலியேர் ஆகியேதான்...

இறையோன் அருளாலே நிதி வளர்ந்து

தொழுகை வணக்கமும் முசாகதாவும்...

துய்யோன் பங்கிலே கிருபை வைத்து

பழுது பகராத நபி சரஹை...

பண்பாய் கொண்டு வந்தார் எல்லோருமே

வாழ்த்துமுறைகளும் சர்த்துகளும்...

மன்னர் நெறிநீ தம் தவறாமலே

பொங்கும் குடியெல்லாம் பணிந்து மிக

புகழ்ந்து போற்றவும் அபுசாலிஹை

மங்கை குமர்எல்லாம் முடித்து வைத்து...

மன்னர் அரசான்று இருக்கும்நாளில்

சிங்கம் பசுமே ஓர் துறையில்...

சேர்ந்து நீருண்டு வரும் நீதியே

நீதி நெறியாக செங்கோலோங்க...

நேசமுடன் உருவாகி நின்று

பருந்து கிளியுமே ஓர் மரத்தில்...

ஆதி கிருபையால் ஓர் பஞ்சனத்தில்

அடையும் கிடந்துமே குஞ்சும் கூட்டும்...

போதை விளையாட்டு பாம்பும் கீரி

பெருமை புகழாக ணூர் இடத்தில்...

குஞ்சும் பொரித்து களித்திடுமாம்

சாமரையோர்கள் மனைகள் தோறும்...

தனித்து விளையாடும் பூனை எலி

இந்தபடியாக நெறி நீதமும்...

இறையோன் அருளாலே செங்கோலோங்க

வந்து மரு மன்னர் திரயலகை...

மகிழ்ந்து அபசாலிஹ் கொலுவிருக்க

சிந்தா திரயாக மணியொழிகி...

தீனும் துலங்கியே மழை பொழிய

கொந்தாளமான நபியிரசூல்...

கொடியும் துலங்கிட கந்தூரியின்

ஐய்யாயிரம் கல அரிசியுடன்...

ஐந்நூறு ஆடு முன்னூறு ஒட்டகமும்

கணக்கிலடங்காத காய்கறிகள்...

நூறு வகையான விருந்தாக்கியே

மெய்யோன் தனக்காக கொடுத்தவரும்...

மேலோன் ஆசனத்தில் இருக்கும் நாளில்

முன்னே அரசாண்ட சுல்தானுமே...

முன்னோன் மவ்த்து வந்து அடுத்திடவும்

மன்னர் சுல்தானும் மௌத்தாகினார்...

மண்ணிலடங்கிய சடங்கதுவும்

தின்னமுடனே தான் முடித்து வைத்து...

செங்கோலோங்கிய அபுசாலிஹார்

முன்னோன் அருளாலே ஜெய்லானியில்...

முகிலார் அரசால தீன துலங்க

வருசை புகழான செய்யிதகமது என்றும்...

வள்ளல் எனும் காதிர் ஒலிகள் பின்பு

பிருசை புகழாக தான் பிறந்து...

பெருதி கொடுவாரை வளர்ந்துருவாய்

அர்சை படைத்தவன் தன்னருளால்...

ஐந்து வயதாக நிறைந்த பின்பு

வருசை புகழாக நசூஹா பீவி...

மங்கை தனக்கு பின் சாலிஹாவும்

இறையோன் கொடுத்ததை வளர்ந்துருவாய்...

புகழும் அபுசாலிஹ் மங்கையருக்கும்

மறையும் நெறியுமே ஒழுங்குகளும்...

வல்லோன் பங்கிலே கிருபை உற்று

பிறையை பழிக்கிண்ட எழிலழகர்...

பொன்னார் இரண்டையும் மணமுடித்து

குறையொன்று அனுகாமல் குழந்தைகளும்...

ஹுதாயன் கொடுத்திட வளர்ந்தோங்கியே

பெருப்பமாகிய செய்யிது அஹ்மதுக்கு...

பெண்ணார் தனையும் மணமுடித்து

கருத்தில் மகிழ்ந்தவர் வாழ்ந்திருக்க...

காதிரு ஒலிக்கு வயது எட்டாகவே

பெருதி துலங்கியே பதினாறுலேயே...

படைத்தோன் விலாயத்து மீறி செல்ல

திருசை வணக்கமும் முயற்சியாகி...

தீனும் துலங்கிஙயு இருக்கும் நாளில்

ஜித்தா எனும் ஒரு பட்டணத்தில்...

சேர்ந்து கூடி வாழும் அரபியர்களே

மெத்த வாழ்வும் உயாந்த கூடி...

விளக்கமானதேர் ஷெயு உடைய

உத்த மனைவியார் சாரா பீவி...

உகப்பாய் குழவியுமில்லாததால்

புத்தி தழும்பியே இருக்கும் நாளில்...

பெரியோன் கிருபையால் அப்துல் காதிறு

பிறந்த ஜெய்லானி பட்டணத்தில்...

பெரியோன் அருளாலே காரணமும்

அரசு பதியுமே அபுசாலிஹ்...

ஆளும் பதியுமே நெறி நீதமும்

குருநோய் குஷ்ட நோய் பல பிணியும்...

கோமான் அருளோங்கி தீர்ப்பதுவும்

கரைந்து மெலிகின்ற மங்கையரும்...

காதில் அவர்கேட்டு பிரியமுற்றே

சிந்தை மகிழ்ந்துமே மணவாளருக்கு...

செப்பவலுத்தவே காரணத்தை

உகந்து அவனுமே கேட்டு உரைப்பான்...

மங்கை உன்னாலே வெகுமுதலும்

முன்னோன் பேரிலும் நபிபேரிலும்...

முதலும் அளித்தேனே கணக்கில்லாமல்

உகந்து நமக்குமே வல்லவனும்...

மகவு கொடுக்கவுமில்லை பொன்மயிலே

நமக்குமே வயது அறுபதாச்சி...

இனிமேல் குழந்தைக்கு ஆசையில்லை

செய்ப அவனுமே அவள் உரைப்பாள்...

செல்வன் பெறுவதற்கு வயதில்லையே

தப்பிதமில்லை மணவாளரே...

ஜெய்லானி சென்று வருவோமெனில்

நைபாடுரைத்தவள் நீர் மென்றாள்...

நானும் வரமாட்டேன் நீமேவென்றான்

போவென்று என சொல்ல அவள் எழுந்து...

போஜனம் அருந்தி துயில் உடுத்து

வாக்கு பெற மனதிலேயும்...

வாகாய் அவள்போன்று துணையும் கூட்டி

ஷெய்கு அவர்களுக்கு பயணம் சொல்லி...

செவிகை தனில் ஏறி புறப்பட்டாளே

ஏறிப் புறப்பட்டாள் வழியில் தங்கி...

பொன்னின் மடவாகும் ஜெய்லானில் வந்து

சிறந்த மணிமாடம் சென்று புக்கி...

செல்வி அவளுமே இடுப்பு கட்டி

இறையோன் அருள் பெற்ற அப்துல்காதிர்...

இலங்கும் மணிபாலர் முன்பு சென்று

திருவடி போற்றி தஸலீம் செய்து...

திருவாய் அவளுமே புகழ்ந்து போற்றி

ஒருவன் அருள் பெற்ற சிகாமணியே...

உங்களிடம் வந்தேன் நான் அடியாள்

வந்தேன் சீர்பாதம் தனைதேடியே...

வல்லோன் கிருபையால் மதளை ஒன்று

தந்து அனுப்புவீர் என் குருவே...

தையல் உரைத்திட அவள் எழுந்து

முன்னோன் ஜில்லாவில் முடுகி சென்று...

முன்னோனிடம் கேட்க அவன் மொழிவான்

எந்தன் பாலரே இனியவரே...

எந்தன் அர்சினில் துயிலும் கோவே

எந்தன் தாகத்தையும் பாருமென்றான்...

பாருமென சொல்ல இவர் மகிழ்ந்து

பாலர் தகத்தையும் பார்க்கும்போது...

கூறும் மடவாருக்கு குழந்தையுமே

ஹுதாயன் தஹ்த்தினில் இல்லாததாலே...

நேர்பட வைத்தான் வந்திருந்து

நெடியோன் தஹ்த்தினில் குழந்தையுமே...

சீருள்ள மங்கை உமக்கிமிப்பே

சீமான் அமைக்கவும் இல்லையென்றார்...

இல்லையென சொல்ல அவள் மொழிவாள்

இப்போ ஜோசியம் நான் கேட்கவில்லை...

அல்லாஹ் அருளாலே எந்தனக்கு

ஆண்பிள்ளை ஒன்று கொடுத்தனுப்ப வேணும்...

சொல்ல அவருமே மனமகிழந்து

துய்யோன் கொடுத்தனர் குழந்தை ஒன்று...

புகழ்ந்து போற்றியே போனாள் அவள்

பெரியோன் கிருபையால் நடந்து வந்து

பெரியோன் கிருபையால் மகிழ்ந்து அவள்

மணவாளன் முன் எடுத்துரைத்தாள்...

வள்ள புயத்தாரும் மகிழ்ந்திடவே

மகிழ்ந்து மனம் போற்றி எழுந்தனளே...

நடந்து அவள் செல்ல வல்லவனும்

பலத்த சௌதமும் உண்டாச்சுது...

மடவாள் தனக்குமே வாக்கு மீந்தீர்

மதலை உண்டாமோ என மொழிய...

அவளை பின்னுமே வரவழைக்க

செப்புவாளப்போ அவரைப் பார்த்து...

உடையோன் கொடுத்தனன் இரண்டுபிள்ளை

உந்தன் தனக்கும் இரண்டுபிள்ளை...

பதமும் தோய்ந்தவள் அக மகிழ்ந்து

பாதத்தில் எழுநூறு பொன்னு வைத்து...

புகழ்ந்து போற்றியே போனாள் அவள்

நடந்து அவள் வந்து மணவாளர்முன் எடுத்துரைக்க...

வாழ்த்தும் மொழிகேட்டு அவள் மகிழ்ந்து

தனியோன் கிருபை என்றே நினைத்து...

தைய்யல் உடன் கூடி மகிழ்ந்திருக்க

மனைவி அவளுமே கர்ப்பமுற்று...

கத்தன் கிருபையால் மூன்று பிள்ளை

வனிதை அவளுமே வருஷம் மூன்றில்...

மழலை பிறந்தது உருவதாகி

பிணக்கம் இல்லாமல் வளர்ந்திடவும்...

பீர்தஸ்தகீர் பரக்கத்தாலே

இறையோன் அருளாலே விலாயத்தோங்கி...

இவர் வயது பதினாறதுஆகி

மறையின் நெறியாக மகிழ்ந்திருக்க...

வளரும் ஜெய்லானி பட்டணமும்

குறையொன்று அணுக மூஸா செய்குக்கு...

ஹுதாயின் அருளால் முஸ்லீம்களுக்கு

நெறியும் உலகத்தில் முரீதும் ஈந்து...

நீடுழியாக இருக்கும் நாளில்

முரீதில் உள்ளவர் ஒருவன் அவன்...

முஃமீன் தனக்குமே மகவில்லாமல்

கருகி மெலிந்துமே முகவாடியே...

கத்தன் பேரிலும் துஆவிரைந்து

உருகி அவனுமே இருக்கும் நாளில்...

உஸ்தாதிடம் வந்து புக்கி

திருவடி போற்றி மொழிவதானான்...

சேயுமில்லாமல் இங்கே வந்தேன்

வந்தேன் என சொல்ல அவர் மகிழ்ந்து...

வல்லோன் சில்லாவில் சென்று புக்கி

முன்னோன் இடம் கேட்க அவள் மொழிவாள்...

மூஸா தக்தீரை பாருமென்றான்

உகந்து தக்தீரை பார்க்கும் போது...

மலடி என்று சொல்லி இருக்க கண்டார்

சிந்தை தளண்டுமே திரும்பியே வந்து...

செப்புவாரப்போ இவனிடத்தில்

முன்னோன் தக்தீரில் குழந்தையுமே...

உனக்கு பிள்ளையுமில்லை யென்றார்

சிந்தை கலங்கிய அமுதவண்ணம்...

தெருவில் வருகவும் பள்ளி கூடம்

வந்து ஒருவனும் சிநேகிதனும்...

வெளியில் கண்டவன் உபசரித்து

உந்தன் சலிப்பேது அழுகையேது...

உரையும் எனக் கேட்க அவன் மொழிவான்

எந்தன் துணைவரே தம்பியரே...

எனது சலிப்பையும் கூற கேளீர்

வந்து வெகுகாலம் மகவில்லாமல்...

வந்தேன் உனது உஸ்தாதிடம்

சிந்தை மகிழ்ந்து நான் உகந்து கேட்க...

சீமான் தக்தீரை பார்த்தவரும்

உந்தன் தமக்குமே மகவில்லை என்று...

உரைக்கவே மனம் பொங்கியேதான்

கருத்து கலங்கியே அழுது வந்தேன்...

கவலை இது அல்லால் வேறொன்றில்லை

உரைக்க இவன் கேட்டு மொழிவானப்போ...

உடையோன் அருள் பெற்ற அப்துல்காதிர்

திருப்பாதம் கண்டு மொழிந்ததுண்N;டா...

செப்பு என கேட்க இல்லையென்றார்

விருப்பமுற்றவன் சலிப்பு அகற்றி...

வேந்தரிடம் வந்து தஸ்லீம் செய்தே

புகழ்ந்து போற்றியே சலுகை கூற...

பெரியோன் முஹிய்யதின் மகிழ்ந்தெழுந்து

அஹ்றோன் இடத்திலே கேட்கும்போது...

அல்லா உரைத்திட்டான் இவர் தமக்கு

ஜெஹமும் துலங்கிய சிறு பாலரே…

செய்கு மஷாயிகு சொன்ன மொழி

உகந்து நீ இங்கு வந்தனரே…

உடையோன் தஹ்த்ததை நீர் பாருமென்றார்

பாரும் என சொல்ல இவர் மகிழ்ந்து…

பலகைதனை பார்க்க மகவில்லாததாலே

தாரும் புய வள்ளல் மனம் சடைந்து…

தஹ்தில் அமைத்தது யாரோ வென்னில்

கூறுவானப்போ இறையவனும்…

குழந்தை சிறுபிள்ளை என்ன புத்தி

ஏற்பாடாக கேட்கலாமோ…

வகுத்தோன் தகுதீருதானே என்றான்

உந்தன் தக்தீரில் இல்லாததும்…

உண்டு மிக ஒண்ணாயில்லாத்ததான்

எந்தன் இடத்துக்கே சிறுபாலரே…

இப்போ விரோதமும் செய்யாதே நீ

இந்த விதத்தையும் நான் அறிவேன்…

எழுதமுடியாவிட்டால் சும்மா இரு

உந்தன் கிருபையால் நானுமிப்போ…

உந்தன் தஹ்தீனில் எழுதி வாரேன்

வாரேன் என சொல்ல அப்துல்காதிர்

வல்லோன் தஹ்தீனில் சென்றுவாரும்

ஓதும் ஒருவன் கலம் எடுத்து…

உகந்துமையுமே துவைத்து வாரும்

சீராய் குழவியும் பதினொன்றுதான்...

சிறக்க எழுதியே கீழிறங்கி

நேரே வந்தவர் இருந்து கொண்டு...

நின்ற முஃமீனை பார்த்துரைப்பார்

உந்தன் தனக்கு பதினொரு ஆண்...

உகந்து கொடுத்தனன் இறையவனும்

சிந்தை கலங்காமல் நடவுமெனில்...

சீர்பாதம் போற்றி நடந்து சென்று

சொந்த மனைவிக்கு எடுத்துரைத்து...

துய்யோன்தனை புகழ்ந்து மகிழ்ந்திருக்க

முன்னோன் உரைத்தனன் சிறுபாலருக்கு...

மொழியும் தப்பியே முஃமீனுக்கே

வாக்கு அருளினால் நீயும் இப்போ...

மழலை பதினொன்று உருவாகுமோ

யாருக்கும் பெரியோனே யாரஹீமே...

அல்லா உனையன்றி வேறுமுண்டோ

ஏற்கை செய்யவும் என்னாலாகுமோ...

எழுதினேன் உனை நாடி தப்பில்லையே

பாலர் உரைத்திட இறை மகிழ்ந்து...

பைங்கொடி கெர்ப்பம் பதினொரு ஆண்

சீலமுடனேதான் அமைத்திடவும்...

செல்வி மாதமும் பத்து சென்று

பாலன் பதினொன்று விளக்கினம் போல்...

படைத்தோன் அருளாலே பிறந்திடவும்

கோலம்தனை கண்டு மாதாவுமே...

குழந்தையில்லாமல் இருந்த பலன்

பெரியோன் வகுத்தனன் இந்த வகை...

பெருதி கலங்கியே மணவாளருக்கு

கருத அவன்கேட்டு மனம் சடைந்து...

கலங்கி மயங்கியே இருக்கும் நேரம்

அருமையாகிய சினேகன் தானும்...

உகந்து வந்தனன் கண்டனனே

கண்டு அவனுமே மனதை றே;றி...

கடுகி அழைத்தவன் மாளிகை புக்கி

நின்று இருவரும் தஸ்லீம் செய்து...

நீதர் தமக்குமே எடுத்துரைக்க

ஒன்றும் பயப்பட வேண்டாம் உடையோனருள்

உகந்து தாதியும் பதினென்று வைத்து

தெண்டிப் பாவது கொடுத்தாயானால்

ஏகன் அருளாலே உருவாகுமோ

உருவதாகும் நீ பயப்படாதே

உகந்து தாதியும் வையுமெனில்

கருதும் மொழிகேட்டு தஸ்லீம் செய்து

கடுகி நடந்தவன் தீதாறும் வைத்து

சிறுவர் தமக்குமே அமுதம் ஊட்ட...

சீமான் கிருபையால் உருவதாகும்

பாருமென உரைத்து அழகதாகி...

பதினொரு ஆணையும் வளர்த்திடவே

இந்த விஷயம் மூஸா கேட்டு…

ஏங்கி திடுக்கிட்டு தனைமறந்து

சிந்தை கலங்கியே நினைக்கலானார்…

சிறுபிள்ளை என்று நாமிருந்தோம்

முன்னோன் விலாயத்தை அறிந்தோமில்லை…

மோசம் வந்தது இன்றென விழுந்து

வந்து மூஸாவும் செய்து அப்துல் காதிர்…

மலர் பாதம் தனில் தஸ்லீம் செய்து

இறையோன் அருள் பெற்ற கண்மணியே…

ஏது கெட்டதோர் நிர்மூடன்

பிறையை பழிக்கின்ற பெரியவரே…

புகழும் மாயம் தெரியாமலே

இதுவரையும் அறியோம் கீர்த்தியும் பலமும்…

யானுமுடையோன் முடுகுதல் ஆனதுவும்

சலுகை அறியாமல் கேட்டேன் நானும்…

தானவன் தனக்காக மனம் பொறுத்து

தனது பிள்ளைபோல் எனக்காகும்…

தயவு செய்வீர்கள் என உரைத்து

மனது பொங்கியே நீர் சொரிந்து…

வள்ளல் கதம் பிடித்து உருகிருக்க

உனதுமனம் சற்று சலியாததையும்…

உடையோன் விலாயத்து உமக்கேயாகும்

கனகம் பொருந்தி செய்து அப்துல்காதிர்…

மொழிகேட்டு அவர் மொழிவார்

தஸ்லீம் தஸ்லீம் என்றென உரைத்து...

தங்கள் பாதமும் சிரசில் கொண்டேன்

ரகசியமாகவே எந்தன் கல்பில்...

குடியாய் நிறுத்தியே நூறு பங்கு

கசபு கராமத்து நீங்களல்லால்...

கத்தன் ஒருத்தருக்கும் கொடுக்கவில்லை

மூஸா இடம் போய் புகழ்ந்து போற்றி...

முடுகி நடந்தனர் அவர் மாளிகை

அவரும் நடந்து மாளிகை புக்க...

அப்துல்காதிரும் மகிழ்ந்திருக்க

தவறா நெறியுள்ள சிறுபாலருக்கு...

தளத்தில் இருந்தவர் எடுத்தோதுவார்

அப்துல் பிஸ்தாமி என்று ஒருவர்...

அவ்லியா தனம் பெற்று ஜெய்லானியில்

தவத்தில் இருந்தோர் அவ்லியாவெனும்...

சாற்ற கூடாது காரணமே

காரணம் காட்சி மிகுதியுண்டும்...

காசினியில் உள்ளோருக்கு முரீது மீந்த

ஓராயிரம் வருஷம் அவர் இருந்து...

உலகில் அடைந்தனர் என உரைக்க

கூற இவர் கேட்டு மனது உகந்து...

கொண்டுபோய் கபூரையும் காட்டுமென்றே

கருணை புகழாரும் காட்டுமென்னில்...

கபூர்தனை காட்ட தலைமாட்டிலே

வருசை புகழாரும் நின்று கொண்டு...

வாழ்த்து வாரப்போ என்னமானால்

அறிவில் உயர்ந்தோர் அப்துல் பிஸ்தாமி...

அதட்டி ஒரு சப்தம் கூப்பிடவும்

கருதும் மொழிகேட்டு திடுக்கமிட்டு...

கடுக எழும்பவும் கபூர் வெடித்தே

இரு பிளப்பாகிட அவர் எழுந்து...

இலங்கும் பாலருக்கும் சலாமுரைத்து

பிறத்தி சொல்லியே இவர் மொழிவார்...

பெரியோன் முடுகுதலானவரே

ஒருவன் அருள்பெற்ற அவ்லியா எல்லாம்...

உகந்து என்கதம் சேர்த்தமுவார்

சரீதை தவறாமல் நீரும் இப்போ...

ஏகன் தனக்கு முடுகுதன்றோ

முன்னோன் தனக்குதான் முடுகினதும்...

முடுகலாகாதோர் கேட்டு கொள்ளும்

என்னும் மொழிகேட்டு பிஸ்தாமியும்...

நாயன் இடத்திலே கேட்கும்போது

விண்ணம் அனுகாதான் இறை மொழிவான்...

மேதினில் என்னை காப்பதற்கு

உனது சுகமும் விட்டு அகற்றி...

உணர்ந்து நெடுநாள் தவசிருந்து

நினைவும் அறிவும் ஒன்றதாகி...

முடுகி என்பாலன் இல்லாவிட்டால்

எல்லா சம்பத்தும் தாய்தந்தையும்...

தர்த்தீபாகவெ வைத்துக் கொண்டு

தம்மில் அணுவளவு இடைவிடாமல்...

சரிஅத்திலிருந்து இடைவிடாமல்

சரீஅத்தில் வணங்கி முடுகி கொண்டார்...

சங்கை நங்கையும் நெறி ஒழுங்கும்

தவண வணக்கமும் நெறி மோட்சமும்...

வாழ்வும் செய்யது கிறை பேரில்தான்

அறிய வணக்கமும் அவரே அல்லால்...

உலகிலொருவரும் ஏற்று கொள்ளார்

அறிய பெரியோராம் எடுத்து...

அவர்க்கு ஹிம்மத் செய்யுமென்றார்

ஆண்டோன் உரைத்திட அவர் பயந்து...

அவ்லியா இடம் வந்து தாழ்பணிந்து

காண்டாமணி ரூபம் கண்மணியே...

கத்தவன் அருள் பெற்ற கண்மணியே

தூண்டாமணி விளக்கானவரே...

என்னை காப்பீரென்று அப்துல் பிஸ்தாமி

உங்கள் கதம் தன்னை அவ்லியாமாரெல்லாம்...

உகந்து சிரம்தோல் மேல் வைத்துரைத்தார்

தங்கள் கதம் தன்னை நானுமிப்போ...

தாங்கி கொண்டேன் கல்புக்குள்ளே

ஏகன் அருள் பெற்ற ஆண்டவரே...

ஏற்றுக் கொண்டேன் நான் எழுநூறு பங்கு

நங்கை விடை கூறி அடிபணிந்து…

அப்துல் பிஸ்தாமி இருமென்றார்

வந்து மணிமாடம் சென்று புக்கி…

வல்லோன் முஹிய்யதீன் மகிழ்ந்திருக்க

முன்னோன் அருளாலே அபுசாலிஹ்…

முகிலாய் ஜெய்லானி செங்கோலுமே

பந்தோபஸ்தாக அரசு ஆழ்கையில்…

வண்டதிருடர்கள் இல்லாமலும்

அந்த நகரில் குமர் இல்லாமல்…

அபுசாலிஹ் மன்னர் மணமுடித்தே

மங்களமாக இருக்கும் நாளில்…

மனையில் வட்டியும் கொடு மூடியே

அங்கம் போலவே நிதி வளர்ந்து…

ஆண்டோன் பங்கிலே கிருபையுற்று

சங்கைநங்கையும் நெறியொழுங்கும்…

தவன வணக்கமும் மோட்ச வாழ்வும்

எங்கள் ஜெய்லானி பட்டணத்தில்…

புலியும் மானும் ஒரு துறையிலே

மருவி நீர் உண்டு மகிழ்ந்திருக்க…

வருட வல்லினம் கூடி வாழ்கும்

தெருவுகள் தோறும் பருந்துகிளி…

தனித்து விளையாடி அடைகிடக்கும்

ஒற்று கூடியே பாம்பு கீரி…

உகந்து பொதும்பினில் வாழ்ந்திருக்கும்

தெருவுகள் தோறும் மல்லி முல்லை

சிறந்த பணர் ஓங்கி மலர் சொரியும்

மாதம் மூன்று மழை பொழியும்...

மன்னர் அபுசாலிஹ் நெறி நீதியாய்

காத வழிக்கொரு தண்ணீர்பந்தல்...

கொடிபசிக்குமே அமுதமளித்து

பேராதரவாக காசு பணம்

புடவை எளியோருக்கு மிகுந்தளித்து

வேதநெறியுமே தவறாமல்...

வேந்தர் அரசாண்டு இருக்கும் நாளில்

மன்னர் அபுசாலிஹர் தமக்கு...

வயது எழுபத்தெட்டாக

திண்ணமுடனேதான் வயது ஒன்பதும்...

தீனோர் ஜெய்லானியில் செங்கோலோங்கி

முன்னோன் மவ்த்து வந்திடவும்...

முகிலார் மௌத்தாகி அடக்கிடவும்

கண்ணில் மொழி மின்னார் பாத்திமா தான்...

காரணர் முஹ்யித்தீன் செய்யிதஹ்மதவும்

வருசை புகழான நசுஹா பீவி...

வஞ்சி கிளையதேர் அபுசாலிஹாவும்

ஒருவன் அருளாலே மகிழ்ந்திருந்து...

உடையோன் பேரிலே மகிழ்ச்சியாகி

தாரும் புகழாரும் விருந்தளித்து...

செய்யிது முஹ்யித்தீன் ஆண்டவரும்

வருசை புகழாக இருக்குமு;நாளில் ...

வயது பதினொன்று வளர்ந்தோங்கியே

செய்யிது அப்துல் காதிருமே...

தௌஸில் முங்கியே விலாயத்தோங்கி

ஐயம் அகற்றியே இருக்கும் நாளில் ...

அப்துல் காதிரும் ஒரு நாளையில்

துய்யோன் குர்ஆனும் பழைய பாடம் ஓத...

தொங்கர் எழுந்து பூந்தோப்பில் வர

மேலோன் ஜிப்ராயில் நிசபமாக...

மேய்ந்து நிற்கவும் கண்டவரே

அகத்தில் கோபமும் எழும்பிடவும்...

அதட்டி ஒரு அடி அடித்திடவும்

திகைத்து ரிசபமும் திரும்பி கொண்டு...

செல்வரே என்னை ஏன் அடித்தீர்

உகந்து எனை அடிக்க வகுக்கவில்லை...

உலகில் தீன் துலங்க வகுத்தானும்மை

அகத்தில் கோபம் உமக்கு ஏது...

அருள கேளுமென சிறுபாலரே

குர்ஆன் பயனும் அறியாத்ததாலே...

கூசாமல் என்னை அடித்தீர் நீரும்

ஒருவன் நஹ்வுமே ஓதிருந்தால்...

உகந்து என்னையும் அடிக்கமாட்டீர்

சிறுவரே நீங்கள் பகுதாதில் சென்று...

செல்வர் நஹ்வோதிவாருமென்று

பெருதி கொடு உரைத்த கன்றிடவும்…

பீர்தஸ்தகீர் மனம் கூசியே

மிருக ஜாதிக்கு கொடுத்த அறிவு…

மேலோன் நமக்கு கொடுத்தானில்லை

வருமம் மிகவாகி மனது நொந்து…

மணிமாடம் மேடை ஏறியேதான்

ஒருவன் கிப்லாவை நோக்கி பார்க்க

உகந்து ஹஜ்ஜது செய்ய கண்டே

வந்து மாதாவுக்கு எடுத்துரைக்க…

மகிழ்ந்து மாதாவும் மொழிவதானார்

எந்தன் மகவே நஹ்வு ஓதினால்…

ஏகன் குர்ஆனும் பயன் தெரியும்

சிந்தை கலங்காதே இளவரசே…

சிலது நாளுமே செல்ல வேணும்

வந்து நீருமே பகுதாதுக்கு…

வல்லோன் நஹ்வது ஓதலாமே

அன்னை உரைத்திட அப்துல் காதிர்…

அருளுவாரப்போ அவரைப் பார்த்து

என்னை இச்சனம் நிறுத்துன்னாது…

இங்கு இருக்கேன் நான் என் மாதாவே

உங்கள் மனம் சற்று சலிக்க வேண்டாம்…

உடையோன் நமக்கொண்டும் விடையருளுவீர்

எங்கள் குலத்துக்கு அதிபதியே…

இப்போ வனம் காடுகள்ளர் பயம்

சங்கை அழகுள்ள தம் மகனார்...

செய்யிதஹ்மது தனை அழைத்து

அங்கம் பதறியே உரைக்கலானார்...

அப்துல்காதிர் பகுதாதுக்கே

போறோம் என சொல்லி இருப்பதாலே...

புருஷை தோறும் நீரும் சென்று

யாராகிலும் இப்போ பகுதாதுக்கு...

வியாபாரம் செய்ய போகும் பேரை

தீர்க்க விசாரித்து பாருமென்னில்...

செல்வர் ஏகியே விசாரித்து தான்

நேரே மாதாவிடமும் வந்து...

நிச்சயம் போறார் நாளையென்றார்

வந்து அவர் சொல்ல இவர் மகிழ்ந்து...

வயிறு பசியாறி விசாரம் தொட்டு

சந்திரன் ஒளிபோல் பாகணிந்து...

தங்க சாதுரா சாமான் பூட்டி

கந்த மகிழ்கின்ற காரணரும்...

கத்தி ஜம்ஜாடு இடையில் பூட்டி

முன்னோன் அருளாலே பயணம் சொல்லி...

முகிலார் தமக்குமே மாதாவுமே

நங்கை பாத்திமா தானவரும்...

நாற்பது தங்க காசும் ஈய

வாங்கி உடன் செய்யிது அப்துல் காதிர்...

தங்கள் சாமானை ஜேப்பிலிட்டு

அங்கம் பூரித்து தஸ்லீம் செய்ய…

அன்னை அவருக்குமே புத்திமதி

தொங்கர் தனக்குமே புத்திமதி…

எடுத்துரைத்துதான் சொல்வார் மாதாவுமே

தன் உயிர் போகிலும் பொய் சொல்லாதே….

தர்மம் தலைகாக்கும் என் மகனே

பொன்னின் கொடியாரும் எடுத்துரைத்து…

போறவர் தம்மை கூட்டி கொண்டு

மன்னர் தம்மையும் வரத்தாரிடம்…

வழிகூட்டி அனுப்பி விடுதி வந்து

முன்னோன் அளவிலே துஆ விரைந்து…

முனாஜாத்து செய்து இருந்திடவே

விரைந்து பகுதாது நடந்து சென்று…

மேலோன் கிருபையால் வழியும் தங்கி

மறையின் நெறியான வணக்கத்துடன்…

வள்ளல் தனை கூட்டி நாலுமாதம்

குறையொன்றணுகாமல் வழியும் தாண்டி….

குத்துக்கல் பெருவனம் வந்தடுக்க

கரைந்து அருகிலே நின்று கொண்டு…

கலந்து பேசியே நடக்கும் போது

கலக்கம் கண்டவர் செய்யிது அப்துல்காதிர்…

கலக்கம் அதுவே சொல்லுமெனில்

துலக்கமாகிய ஆண்டவரே…

சூற கள்ளர்கள் மிகுதியுண்டும்

பெருத்த வஸ்துகள் இருக்கும் தலம்...

பெருத்தவனம் ஏழுகாத வழி

விலக இடம்பாடு இல்லாது இடம்...

வேதரே இது தாண்டி போனால் நலம்

அங்கு அதுமொழி யெடுத்து கூற...

வள்ளல் அதுகேட்டு மொழிவாரப்போ

தனியோன் நமக்கொன்றும் பயம் வேண்டாம்

தங்கள் ஆயாசம் வேண்டாம் கண்டீர்

காட்டில் இறையோனும் காப்பாற்றுவான்

கடுக ஒட்டகத்தை ஓட்டுமென்னில்

அணிகள் அதுகேட்டு துருசு பண்ண

வந்து வளைந்தனர் கள்ளர்களே

வந்து வளைத்தனர் அடித்தவரும்

பணிகள் முதலெல்லாம் கொள்ளை கொண்டு

சந்தோசமாகவே அவன் திரும்புகையில்

செய்யிது அப்துல்காதிர் தம்மை கொண்டு

கொத்து கொத்தாக வந்துள்ளோரும்

குத்பு தம்மையும் வளைந்து கொண்டு

எந்த ஊர் நீங்கள் எங்கே போறீர்

இலங்கு பாலரே சொல்லுமென்றான்

எந்த ஊரையும் சொல்ல கேளீர்

இருக்கும் பதி ஜெய்லானியாகும்

தந்தை பேரது அபுசாலிஹ்

மன்னர் தாயார் பெயர் பாத்திமாதான்

எந்தன் பேரது அப்துல்காதிர்

இப்போ நஹ்வு ஓத அனுப்பி வைத்தார்

வந்து நானுமே பகுதாதுக்கு

வர்த்தகருடன் கூடி போறேனென்றார்

கருது மொழி கேட்டு கள்ளரும் தான்

கல்பு மகிழ்ந்து தாம் நின்று கொண்ட

திருட்டு கள்ளனும் சொல்வானப்போ

வில்லும் மொழியையும் பல்லொளிவும்

பருதி அவருக்குமே ஒப்பல்லவே

பாரில் இவரைப் போல் கண்டதில்லை

ஒருவன் அருள் பெற்றோர் இவரேயாகும்

சொல்வது இன்னும் அறிவோமென

ஓர்மையாக இவர் நினைத்து

உங்கள் கையிருப்பு சொல்லுமெனில்

இருப்பது நாற்பது தங்க காசு

இதோ பிடி என்று எடுத்து ஈய

கறுப்பு அகலாத நெறி மூடனும்

கையில் வாங்கியே வைத்துக் கொண்டு

அருள் முன்னமே எடுத்து ஈந்தார்

அவ்லியா இவரல்லால் வேறல்லவே

அறிவு இல்லா மூடர் இவர் கள்ளனும்

அதபு நெறியுள்ளார் என நினைத்து

பெரிய புகழாகி இவர் நினைத்தார்

பெரிய தலைவனின் முன்புவிட்டு

கருதுவாரப்போ அவனிடத்தில்

கருதும் வகையெல்லாம் எடுத்துரைக்கில்

சரிதை அவன்கேட்டு மன மகிழ்ந்து

தலைவன் இவரைப் பார்த்து உரைக்கலானார்

எங்கிருந்து நீர் எங்கே வந்தீரென்னில்

எந்தன் பதியும் ஜெய்லானி ஆகும்

சங்கை அழகுள்ள அபுசாலிஹார்

தந்தை தானுமே அவரேயாகும்

என்பெயர் செய்யது அப்துல்காதிர்

தொங்கர் ஹஸனார் வங்கீசம் நான்

துய்யோன் ந்ஃப் ஓத பக்தாதுக்கு

ஏகன் அருளாலே போறேன் நானும்

இவரும் மறைந்துகொண்டு என்னை கேட்டார்

இருப்பது உமதிடம் என்னவென்றார்

எடுத்து கொடுத்தனர் தங்க காசு

விருப்பமுடன் வாங்கி வைத்துக் கொண்டு

வேந்தனிடம் வாவென்று கூட்டி வந்தான்

கருப்பத்தாமுடன் கிட்ட வந்து

காரணரே இவரென்று மனதிலுற்று

நிறப்பமுள்ளவன் தூதர் என்று

நெஞ்சம் உருகியே பஞ்சனத்தே

கருத்தில் மகிழ்ந்தவன் எழுந்து வந்து

அகமும் தோய்ந்தவன் அழைத்துவந்து

பெருத்த பளிங்கு கட்டிலிலேதான்

பீர்தஸ்தகீர் கொடுபோய் வைத்து

விரித்தான் அபிமான் தலைவரையும்

செய்யது அருந்து என உரைத்தார்

உரைத்த மொழிகேட்டு செய்யது அப்துல்

காதிர் பசியாறி மகிழ்ந்திருக்க

கரைந்த மனதாகி மனதிலுற்றான்

காமில் இவரைப்போல் எங்கு காணோம்

பெருத்த நபியுல்லா வங்கிசத்தில்

பெருதிகொடு ஈந்தார் கேட்க முன்னும்

மற்ற ஒருவர்தான் கொடுக்க மாட்டார்

மனதில் குறித்தவன் பிரியமுற்றே

தன்னுள் மகிழ்ந்துமே மொழிவதானான்

தரணியில் கொலைசெய்து மாடானோம்

முன்னோன் அருள் பெற்ற ஆண்டவரே

முரீது தந்துமே எங்கிளின்பால்

பொன்னின் திருமேனி ஹபீபே எங்கள்

புதியோன் அருளென்று மனதிலுன்னி

வண்ணிதமான பாவியானோன்

வர்த்தகர் தம்மையும் அழையுமென்றார்

அருளும் மொழிகேட்டு அவனோடியே

அழைத்து வந்தவன் விருந்துமாக்கி

பொருளுமிக உள்ள தலைவனுமே

பொறித்து இக்கறி ரசவர்க்கமும்

தரளமணி தட்டில் வைத்து

தஸ்லீம் செய்தவன் அமுதளிக்க

பருகமென சொல்லி மனமகிழ்ந்து

பாலர் அருந்தியே மகிழ்ந்திருந்தார்

மகிழ்ந்திருந்தார் செய்ய தொலி

மன்னர் முன்னமே பாலும் பழமும்

புகழ்ந்து போற்றியே சீனி வைத்து

பெரியோன் பாதத்தில் காசு ஆயிரம்

உகந்து வைத்தவன் உருகி கேட்க

உள்ளம் மகிழ்ந்து முரீது பெற்று

அகமும் மகிழ்ந்தவன் தலைவனுமே

அச்சம் கொண்டவன் அருளுவானப்போ

இறையோன் அருள் பெற்ற என் குருவே

இன்று விட்டனன் கொலை களவும்

மறையின் நெறியுமே நாங்களானோம்

வள்ளல் மொழி தப்பி நடக்கமாட்டோம்

கரையும் கண்டது இன்றுமுதல்

காரணர் கிருபையால் சுகமும் பெற்றோம்

துரை அறியா மூடரரை துலங்க வைத்தீர்

தொலைந்தது பாவம் என உரைத்தே

வர்த்தகர் முதலையும் இவர் முதலும்

வாங்கி கொடுத்தவன் துணையனுப்பி

பிறத்தி கொண்டு இவர்நடக்க

பெரியோன் அருளாலே பக்தாதுக்கு

கடுகி மெலிந்துதான் நபி சரகு

கசடு மிகவாகி படுத்திருக்க

பருத்த ஒட்டகம் பின்னே வர

பாலர் முன்னமே முடுகிடவே

சரகு எழுந்து உரைக்குமப்போ

தானவன் முஹிய்யதீன் சலாமுமக்கே

பிறத்தி சொல்லியே நீரா ரெனில்

பிரட்டான் நடந்துமே இவ்வேசமானேன்

முறையும் தவறி என் முஹம்மதுக்கு பின்

முன்னோன் ஏவலை மறந்தெல்லோரும்

கரிய குப்ராகி நசல் பிடித்து

கடுகி மெலிந்துமே இவ்வேசமானேன்

மன்னர் நபியுல்லா தீன் துலங்க

வல்லோன் அமைத்தனன் இப்புவியில்

அண்ணலே விசாரம் தீர்ந்தது போல்

அடிமைதனை தொட்டு தூக்கிடுவீர்

விண்ணம் அகலும் தீன் துலங்கும்

மேலோன் தனக்காக என்னை தூக்குவீர்

சொன்ன மொழி கேட்டு இவர் மகிழ்ந்து

துய்யோன்தனை போற்றி தூக்கி விட்டார்

தூக்கி விட்டிட நசல் அகன்று

துலுங்கும் பதினாறு வயதுமாகி

பாக்கியம் பெற்றேன் ஆண்டவரே

பரில் இஸ்லாம் தீன் துலங்க

யாருக்கும் பெரியோன் தன்னருளால்

ஆலம் அடங்கலும் தீன்துலங்க

வளரும் இயற்கையும் ஒன்றாச்சுது

இஸ்லாம்தான் நின்று உரைத்தனின்பின்

தீனோர் மகிழ்ந்திட திசை நோக்கிட

வர்த்தகர் மானம் காத்து வள்ளல்

என்று மகிழ்ந்து எல்லோரும்தான்

கொண்டாடியேதான் புகழ்ந்திருக்கில்

இனிய கற்கண்டே நீருமிப்போ

தெவிட்டா கனியே தௌ;ளமுதே

தாயிம் காயிமாய் என்றன்றைக்கும்

நாயகம் நீரல்லால் வேறொன்றில்லை

நாயன் அருள் பெற்ற நல் குருவே

நாவால் புகழ்ந்து நடந்து சென்று

நேயம் உருவாகி கடலோரமே

நீதர் இறங்கியே கந்தூரி செய்தார்

கந்தூரி செய்து மகிழ்ந்தெழுந்து

கடலோரம் செல்ல பகுதாதுக்கு

சிந்தை மகிழ்ந்து விரைந்தேகியே

சென்று தாவல்லம் சுமையிறக்கி

வந்து பகுதாது சீமை புக்கி

மஜ்லிஸில் இருந்தோர் முஹிய்யதீனென்றே

சிந்தை மகிழ்ந்து அவர் தழுவி

கட்டி இருந்திட ஷெய்கு ஹம்மாத்

வந்தார் மஜ்லிஸில் மஃரிபுக்கு

வள்ளல் தனை கொண்டு முஹிய்யதீனென்று

சிந்தை மகிழ்ந்து தழுவி கட்டி

சிறந்த மஃரிபு தொழுதவரும்

முன்னோன் அருளாலே முஹிய்யதீனும்

புகழ்ந்து கொடு போய் அமுதளித்து

வந்து இஷாவும் தொழுதவரும்

மகிழ்ந்திருந்தனர் முஹிய்யதீனும்

அகத்தில் மனம் கூசாமல் ஆகியேதான்

ஆண்டோன் இடத்திலே கருணை பொங்கி

புகழ்ந்து போற்றியே கேட்பதானால்

பெரியோனே எனக்கு அரபு பேச

உகப்பாய் எனக்குமே பேச வரும்

உடையோன் கிருபையும் செய்வானென்று

அகத்தில் உதித்திட கிருபை செய்வாய்

அல்லாஹ்வே எந்தன் ரஹ்மானே நீ

முன்னோன் அளவிலே துஆ இரக்க

முதலோன் முஹம்மதை அழைத்து கூறுவான்

உந்தன் பேரர் முஹிய்யதீனும்

உகந்து இருக்கிறார் பகுதாது பள்ளி

வந்து அவருமே அரபு பேச

மனது கூசியே இருக்கிறார் காண்

சிந்தை கலங்குகிறார் நீருமிப்போ

சென்று அரபுமே வருத்திவாரும்

இறையோன் உரைத்திட அவரெழுந்து

இரசூல் மஜ்லிஸில் வந்து புக்கி

மறையின் நெறியாளரை மார்தழுவி

வல்லோன் அருள் பெற்ற சிறுபாலரே

அரபு எதனால் தெரியவில்லை

ஆலம்நபி கேட்க அவர் மொழிவார்

இறையோன் அமைத்தனன் ஹிந்துஸ்தானே

எனக்கு எவ்விதம் தெரியுமென்றார்

தெரியாது என சொல்ல இவர் மகிழ்ந்து

செல்வர் வாயினில் பத்து தரம்

பெரியோன் நபியுல்லா அமுதமீந்து

போனார்கள் பொன்னுலகம் தனில்

பிரியமாகியே இவர் இருக்க

பேச அரபு அரை பேச்சாக

அரிய பெரியோனும் அலியுல்லாவே

அழைத்து கூறினான் அந்நேரமே

பகுதாது எனும் ஊரிலேதான்

பள்ளிதனிலும் வந்திருக்கிறார்கள்

முஹிய்யதீனும் நஹ்வு ஓத

உகந்து இருக்கிறார் அரபு பேச

உகந்து இருக்கிறார் பஹ்மதாகினார்

அரபு பேச்சு முழு பேச்சாக

தகுமதாகவே வருத்திவைத்து

தானிங்குவாரும் என உரைத்தார்

இறையோன் உரைத்திட அலியுல்லாவுமே

எழுந்து வந்தவர் மஜ்லிஸில் புக்கி

சிந்தை பாலரே மார் தழுவி

செவிகை புலிஅலி வாய் உமிழ்நீர்

முழு பேச்சுமே அரபு மொழி பேசி வந்திடவும்

அலியுல்லா விண்ணுலகம் விரைந்து ஏக

பிரியமுற்றவர் அகமகிழ்ந்து

பேசினார் அரபு அவர்களுடன்

இறையோன் அருளாலே முஹிய்யதீனும்

இருந்து பகுதாது பள்ளிதனில்

விருகமுடனேதான் ஷெய்கு ஹம்மாத்

மேலோன் மஜ்லிஸில் வந்து புக்க

வந்து பஜ்ருமே தொழுவித்தே தான்

மகிழ்ந்திருக்க முஹிய்யத்தீனும்

சிந்தை மகிழ்ந்து அலிபும் இட

சுருக்க நஹ்வு ஓத தொடங்கியேதான்

முன்னோன் அருளாலே முஹிய்யதீனும்

மூன்று மாதத்தில் பாடமாக

படித்து சிறுவரும் மனதிலே தர்த்தீபாக

பாலர் சிறுவரும் தோழமையாக

தடுத்து மொழியது கூறாமலும்

செய்யது முஹிய்யத்தீன் தாழ் பணிந்து

அடுக்க இருந்தவர் அனுதினமும்

அவர்கள் பணிவிடை செய்திடவும்



www.sufimanzil.org

பிடித்தமாகியே முஹிய்யதீனும்

பிரியாவிடையாய் இருந்தினரே

இருக்கும் நாளையில் ஒரு மு.ஃமீனும்

ஏற்றி சரக்குமே ஷெய்கு ஹம்மாதிடம்

விருப்பமுடன் வந்து சலாமுரைத்து

வேதர் தம்மையும் கேட்கலானார்

திரைகடல் மீது போகுவதற்கு

திருவினம் பத்து என கேட்கவும்

மறையின் nநிறியாரும் மனமகிழ்ந்து

வல்லோன் பலகையை பார்க்கும்போது

அஹதான ஹயாத்து நாற்பது நாள்

மறைந்திருக்கவும் கண்டவரும்

கருதுவாரப்போ இவரைப் பார்த்து

ஹயாத்து நாற்பது நாள் ஏகிடவும்

குறுகி இருக்கிறது பலகைதனில்

குறிப்பை அறிந்து நாம் போக வேணும்

ஒருவன் கட்டளை நாம் அறியோம்

ஓடும் கப்பலை நிறுத்தி வையேன்

உரையும் துஆ கேட்டு வர்த்தகரும்

உள்ளம் தளர்ந்து மெய் மறந்து

விரைந்து அவரேக தெருவீதியில்

மீரான் முஹிய்யத்தீன் தோழருடன்

மறையின் நெறியாளரும் கூடநின்று

மாணிக்க பந்து அடித்து நிற்க

விரைந்து வர்த்தகர் அவ்விடம் சென்று

துலங்கும் பாலரை தஸ்லீம் செய்து

தஸ்லீம் செய்வதன் அருகே நிற்க

செய்யிது முஹிய்யதீன் முகத்தைப் பார்க்க

பழுத்த பழம் போல இருந்த முகம்

பஞ்சனைத்தா போல் சூம்பியிருக்க

முசிப்ப உமக்குமேவந்த வாரும்

மொழியும் என அவன் கேட்க அவன் மொழிவான்

கசபு கராமத்து மிகவுண்டாம்

காமில் உடன் சென்று கேட்டேன் நானும்

தீவு தனக்குமே போவதற்கு

திருவளம் பத்தும் என கேட்கவும்

மேலோன் பலகையும் பார்த்தவரும்

வென்றனர் உங்கள் ஆலிமானோர்

சாவு நாற்பது நாளதாக

தஹ்த்தினில் இப்போ இருக்குதென்றும்

தீவு தனக்கு நீ ஏருன்னாது

செப்பினார் ஆலிம் இங்கு வந்தேன்

வந்தேன் என வாட்டம் வேறொன்றில்லை

வாழ்த்த அவருமே இவர் உரைப்பார்

உந்தன் தனக்குமே மௌத்தில்லை

உந்தன் மௌத்துமே கனவதாகும்

சந்தாபமில்லை நடவுமெனில்

தஸ்லீம் செய்தவர் புகழந்து போற்றி

சிந்தை மகிழ்ந்து படகேறியே

சென்றான் வர்த்தகன் தீவதுக்கே

சொல்ல வர்தகர் முஹிய்யதீனும்

சீமான் இடத்திலே துஆவிரைந்து

வல்லவா எந்தன் ரஹ்மானே நீ

வர்தகன் தனக்கு வயது நூறு

எல்லா நினைவையும் அறிபவனே

எந்தன் துஆவை கபூலாக்கியே

அல்லா சுப்ஹான ஹுவதஆலா

அழிந்த எழுத்தையும் கபூலாக்கினான்

உருக்கி அவர்களும் சப்தமிட

உடையோன் பலகையை மேவி பார்க்க

அறிய பெரியோன் பலகைதனில்

அழிந்த எழுத்துமே வயது நூறாய்

பெருகி இருப்பதை கண்டவரும்

பெரியோன் அளவிலே துஆவிரைந்து

அருமையாகிய முஹிய்யதீனும்

உகந்து மணிமாடம் புக்கினரே

இறையோன் முஹிய்யதீன் மாளிகை புக்கி

ஏகி வர்தகன் சரக்கு விற்று

திரைகடலோடி திரும்புகையில்

செய்கு ஹம்மாத் சொன்ன நாள் அடுக்க

கரைந்த மனதாகி வர்தகனும்

குத்பு தன்னையும் மனது இறுத்தி

கரைந்த மனதாகி நங்கூரம் விட்டு

கலக்கம் மனதாகி துயில்வதானால்

படுத்து துயில் கொள்ள மௌத்தாகியே

பாரில் ஜனங்களும் வந்து கூடி

எடுத்து குளிப்பாட்டி கபனும் செய்து

எடுத்து ஜனாஸாவும் தொழுவித்தேதான்

படுக்கைதனில் குழிதோண்டியேதான்

பாங்காய் அடக்கியே அகன்றிடவும்

திடுக்கிட்டு எழுந்து அவன் விழித்தெழுந்தார்

தீனோர் முஹிய்யதீனை புகழந்தனனே

புகழ்ந்து போற்றியே காசாயிரம்

பொறுப்பாய் முடிந்தவன் கொடியில் கட்டி

மகிழ்ந்து அவனுமே பாய் தூக்கிட

வல்லோன் அருளாலே கரை கண்டிட

உகந்து அவனுமே பொன் மறவாய்

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனுக்கு

சீனி சர்க்கரை கற்கண்டுமே

வருசை புகழாருக்கு வகை வகையாய்

வைத்தான் தட்டினில் கனிவர்க்கமே

பிருசை புகழாருக்கு பொன்முடிப்பு

வைத்தான் பளிங்கி பீங்கான் தட்டிலே

அருமை புகழாருக்கு கிராம்பு ஏலம்

உயர்ந்த சால்வை ஜாதிக்காவும்

கருணை புகழாருக்கு எடுத்து வைத்து

கதத்தில் வைத்தவன் மகிழ்ந்தனனே

புகழந்து அவனுமே தஸ்லீம் செய்து

பூரித்து அவனுமே நிற்கும்போது

மகிழ்ந்து முஹிய்யதீன் ஆண்டவரும்

வல்லோன் அளவிலே துஆ இருந்து

உகந்து எல்லோருக்கும் பிரியமுற்று

உகப்பாய் இருக்கவும் வர்தகனும்

மகிழ்ந்து போற்றியே விடுதி சென்று

மனைவி தனக்குமே எடுத்துரைத்தான்

உரைத்து அவனுமே மனமகிழ்ந்து

உத்த பசியாறி எழுந்தவனும்

விரைந்து அவனுமே செய்கு ஹம்மாதிடம்

மேலோன் சலாமும்; எடுத்துரைக்க

உரைத்த சலாத்துக்கு பிரத்தி சொல்லி

உகந்து பார்த்தனர் பலகை தன்னை

மறைந்த எழுத்துமே உருவதாகி

வயது நூறாக கண்டவரே

சந்தோஷமாகி அவரை பார்த்து

சரிதை கேட்டுமே ஏகும்போது

வந்து எதிர்த்தாரோ பெரியோர் தானும்

வாழ்த்தும் என கேட்க அவர் மொழிவார்

சிந்தை மெலிந்துமே நான் நடந்தேன்

சீமான் முஹிய்யதீன் தெருவு தனில்

வந்து அவர்களும் தோழருடன்

மாணிக்க பந்து அடித்து நின்றார்

வெந்து தனலாகி முகம் சூம்பியே

வேந்தரிடம் சென்று தஸ்லீம் செய்து

வந்து அவர்களும் முகத்தைப் பார்த்து

வாட்டமது ஏது சொல்லுமென்றார்

அந்த மொழிகேட்டு நானுமப்போ

அருளும் மொழியதை எடுத்துரைத்தேன்

உந்தன் மௌத்துமே கனவதாம்

சலிப்பும் அது வேண்டாம் நடவுமென்றார்

நடந்தே அவர் துஆ சிரசில் வைத்து

நாயன் கிருபையால் நானும் சென்று

படகு நானுமே பாய் தூக்கியே

பாசி கடல் தாண்டி தீவில் சென்று

படகு இறக்கியே சரக்கு விற்று

பாலர் கிருபையால் திரும்புகையில்

நடுகடல்தனில் வரும்போது

நாளும் சரியாக நங்கூரம் விட்டேன்

நங்கூரம் விட்டு படுத்திருந்தேன்

நாதர் மொழிப்படி தவறாமலே

அங்கு மௌத்தாகி அடக்கிவர

அகல அவர்களும் நான் விழித்து

தொங்கர் முஹிய்யதீன் பரக்கத்தாலே

துய்யோன் கிருபையால் வந்து சேர்ந்தேன்

அங்கு அவர் கூற ஷெய்கு ஹம்மாத்

ஆண்டோன் ஏவலை தட்டலாச்சோ

இந்த சிறுபிள்ளை இவ்வழுமையாச்சோ

இனிமேல் நம்பேச்சு பொய்யதாச்சு

வந்து இதுவரை நாம் வைக்குன்னது

மனதில் கசடுமே வைத்தவரும்

சிந்தைதனில் உன்னி இருந்திடவும்

சிறிது நார் சென்று முஹிய்யதீனும்

வந்தார் பகல் ஜும்ஆ தொழுகை தொழ

அவர்; வருகவும் சேகு ஹம்மாதொலி

எதிர்பட்டாரே எதிர் முஹிய்யதீனும்

இவரை அழைத்து வெகுதூரம் சென்று

சதுரான் கேனி கரையில் சென்று

சதியும் செய்திட நினைத்தவரும்

பதிவாய் இருவரும் ஒளுக் கொள்ளவும்

பாலர் தம்மையும் தள்ளிவிட்டு

பெரியோன் விலாயத்தை அறியாமலே

பொன்னின் மணிமாடம் புகுந்தனரே

புகழ்ந்து அவருமே அமுதருந்தி

பூரித்திருக்கவும் முஹிய்யதீனும்

உகந்து கேணியில் விழுந்திடவும்

மேலோன் கிருபையால் முழங்கால் தண்ணீர்

வகுப்பதாகிட முஹிய்யதீனும்

வள்ளல் ஜும்ஆ தலைமுழுகி

பகுமதாகியே வெளியேறியே

பள்ளிதனில் வந்து உலாவினரே

சிறுவர் உலாவியே நிற்கும்போது

சேகு ஹம்மாத் மஜ்லிஸ் புக்க

பருதி துலங்கியே முஹிய்யதீனை

பார்த்த உடனே மனம் கலங்கி

கருத்து கலங்கியே சேகு ஹம்மாத்

கண்ணீர் ஆறோட அழுதவரும்

உருண்டு பயந்து மனதிழந்து

ஆவி தடுமாறி புலம்பினரே

புலம்பி நின்றிட ஜமாஅத்தோறும்

புதுமை இதென்ன புதுமை என்று

கலக்கம் அதுவேது அழுகையேது

கருதும் என கேட்க அவர் மொழிவார்

இலங்கும் பாலரை நான் தானுமே

இப்போ கிணற்றினில் தள்ளி விட்டேன்

வல்லோன் தனக்குமே பாவியானேன்

மறந்து மதி கெட்டேன் உம்மத்தோரே

உம்மத் அனைவரும் என்ன சொல்வார்

உமக்கு அவர் என்ன பாவம் செய்தார்

ஜும்ஆ தொழ வந்த முஹிய்யதீனே

துரோகம் செய்யவும் மனம் வந்ததோ

செம்மல் தனையும் செவிப்பாருண்டோ

சேகு செய்யதை செவிப்பாருண்டோ

உம்மால் முடியுமோ கொலைகள் செய்ய

காயன் தனக்குமே இயற்கையாகுமோ

ஓதிமதி கெட்டோர் உலகிலுள்ளோர்

உடையோன் பொறுப்பானோ இது பிழையும்

ஆதி தொழுகைக்கு இனிமேலாக

யாரும் இமாமத் செய்யக் கூடாததென்றே

நீதர் முஹிய்யதீன் இமாமத் கல்லாது வேறில்லை

சாதி முறையோர்கள் கூடி பேசி

ஷெய்கு முஹிய்யதீன் செய்கு ஹம்மாதை

கண்ணீரை துடைத்தே தேற்றியேதான்

கத்தம் செய்தனர் இந்த வேளை

தன்மேல் வருத்தமும் இல்லை இப்போ

சதி செய்ய உம்மாள் முடியுமோதான்

மன்னர் முஹிய்யதீன் சலிபகற்றி

மகிழ்ந்திருக்கவும் இறையவனும்

அந்த நேரமே கை சூகையாக

ஆண்டோன் ஆக்கிட அவர் பயந்து

விம்மி முகம் சூம்பி இருந்திடவே

இறையோன் அருள் பெற்ற முஹிய்யதீனே

எல்லோரும் வந்து தஸ்லீம் செய்து

குறையொன்று அணுகாத ஆண்டவரே

குத்பே எங்கள் சிகாமணியே

மறையின் நெறியுமே தவறா எங்கள்

வள்ளலே குத்பாவும் ஓதுமென்றார்

இறையோன் அருளென்று மனதிலெண்ணி

இலங்கும் பாலரும் மெம்பர் ஏறி

குத்பு முஹிய்யதீன் குரலோசையும்

குயிலும் ஓசையும் ராகத்துடன்

குத்பா ஓதி கீழே இறங்கி

கோமான் அருளாலே இமாமாய் நின்று

உத்த ஜமாஅத்தும் தொழுவித்தே தான்

உடையோன் பேரிலே துஆ விரைந்து

புத்தி மிகுந்தோர் முஹிய்யதீனும்

புகழ்ந்து தொழுதேதான் இருந்தார் பார்

பருதி துலங்கிய முஹிய்யதீனை

பல்லாக்கில் வைத்து பவனிவர

விருது படசூழ முரசதிர

வேதியர் சூழ புருஷை தோறும்

வருஷை புகழான முஹிய்யதீனை

பகுதாது நகர் சுற்றி பவனி வர

வருசை புகழாக மணிமாடம் புக்கி

பீர்தஸ்தகீர் மகிழ்ந்திருந்தார்

மகிழ்ந்திருக்கவும் பெண் மடவாள்

வள்ளல் தனக்குமே விருந்து சொல்லி

புகழ்ந்து போற்றியே அவள் நடந்து

புருசைகள் தோறும் அவளும் சென்று

உகந்து தேடியேதிருந்து அழைத்து

ஒன்றும் கிடையாமல் தவித்துவாடி

அகமும் சடைந்து விடுதிவந்து

அசந்து இருக்கவும் நினைவுவந்து

மகனும் வளைத்ததோர் சேவலையும்

மடவாள் பிடித்து அவள் கறி சமைத்து

ஜெகமும் துலங்கியே முஹிய்யதீனை

செல்வி அழைத்துமெ வந்தவளும்

உகந்து மறவையில் அமுதமிட்டு

உகப்பாய் பழம்கறி பழவகையும்

அகமும் மகிழவே கனிவகையும்

அன்பாய் வைத்தவள் சலாம் உரைக்க

வருசை புகழாரும் அமுதம் உண்ண

மடவாள் மகன் வந்து சேவல் தேடி

கருணைபொங்கியே பார்க்கும்போது

காணாதனாலே மனம் சடைந்து

அருமைபுகழாக தாய் இடத்தில்

உகந்து கேட்கவும் கண்மிரட்ட

அருமை புகழாரும் கிடந்துருண்டு

அபயம் விட்டவன் அமுதனனே

பழு பகராத நபிபேரும்

பைங்குடி தன்னை கேட்பாரப்போ

அழுகும் வகையேது சொல்லுமெனில்

அவளும் செய்தியும் கூறுகையில்

பழுது படுத்தினாய் அவன் சேவலை

பாவம் இது மெத்த பாவமென

விழுந்து அழுகின்ற சிறுவனையும்

வேதர் அழைத்துமே சிட்ட வைத்தே

ஆறுதல் சொல்லி மனதை தேற்றி

அவர்கள் பசியாறி மகிழ்ந்த பின்பு

அவர்கள் எலும்பையும் கூட்டி வைத்து

வள்ளல் துஆ கேட்க உருவதாகி

கோர்த்து சேவலும் கூவி நிற்க

குழந்தை அவனுமே சேவலை தூக்கி

சீர்பாதம் தன்னை தஸ்லீம்செய்து

செல்ல மடவாளும் பிரியமுள்ளோர்

வந்து அவளுமே கதம் பணிந்து

வள்ளல் தன்னையும் புகுழந்து போற்றி

சிந்தை மகிழ்ந்தவள் வழியனுப்பி

சொல்லவே எங்கள் முஹிய்யதீனும்

வந்து மணிமாடம் சென்று புக்கி

மணி மெத்தைதனில் துயின்றெழுந்து

முன்னோன் மஜ்லீஸ் வந்து புக்க

முகிலார் பஜ்ருமே தொழுதனரே

தொழுது முஹ்யித்தீன் மகிழ்ந்திருந்து

தொண்டல் தமக்குமே ஹதீது சொல்ல

முழுதும் உடையவன் கிருபையினால்

உகந்து அவர்களும் கேட்டிருக்க

விளையாடும் பிள்ளை சிறுவர்தானும்

வைத்து கப்பலும் பார்ப்போமென்று

எழுந்து கைவல்லம் தண்ணீரிலேறி

எதிரே நடந்திட சிறுவன் அவன்

தவறி விழுகச்சே முஹிய்யதீன்

நாமம் தானுமே நினைத்திடவும்

சிறாவும் முழுங்கிட அந்நேரமே

சொல்லும் பேரது செவியில் தாள

காதிர் முஹிய்யதீன் கையை நீட்டி

அப்துல் காதிரு சிரா அழகை

தொட்டு சிறுவனை வெளியில் வைத்து

தவத்தில் முங்கிய முஹி;ய்யதீனும்

தானும் கையவர் மடக்கினரே.

வருசை புகழாரும் கைமடக்கி

வணங்கி தோழரும் கேட்பதானார்

கருணைக்குடையதோர் தவ்சில் வேந்தர்

கைமது நீட்டி மடக்கினது

பிருசை புகழாரும் சொல்லுமெனில்

பீர்தஸ்தகீர் சொல்வாரப்போ

அருமை புகழான பிள்ளைபத்து

ஒட்டக மீதில் ஏறி படகு பார்க்க

விரைந்து நடந்திட தவறி ஒரு

உருண்டு பிள்ளையும் கடலில் விழ

சிறுவன் நினைத்தனன் எந்தன் நாமம்

சிறாவும் அவ்வேளை விழுங்கிவிட்டதே

அதுவும் விழுங்கிட கைநீட்டி நான்

கொடிய சிராவின் அலகு தன்னை

அறுத்து நானுமே சிறுவன் தன்னை

அலவகரை வைத்து மடக்கினே

ஓடிவந்து தான் தாய் தந்தைக்கு

நடந்த செய்தியும் உரைக்கலானார்

அந்த மொழிகேட்டு அகமகிழ்ந்து

வைத்தார் சீனியும் சர்க்கரையும்

மகனையும் கூட்டியே வள்ளலிடம்

கந்த மலர்பாதம் தஸ்லீம் செய்து

கருத்தில் மகிழ்ந்தனர் கல்பு உகந்தே

மகிழ்ந்து முஹிய்யதீன் எல்லோருக்கும்

விளம்பினார் சர்க்கரை சீனியுமே

புகழ்ந்து போற்றியே அவன் நடந்தான்

பெரியோன் முஹ்யித்தீன் மகிழ்ந்தெழுந்து

உகந்து மணிமாடம் சென்று புக்கி

உகப்பாய் பசியாறி துயின்றெழுந்து

அகதோன் மஜ்லீஸ் வந்து புக்கி

இறையோன் இஷாவும் தொழுதனரே

ஒழுங்கு நெறியுள்ள முஹிய்யதீனும்

ஒருவன் தஹஜ்ஜத்து தொழுதிருந்து

பழுதுபகராத நபிபேரரும்

படைத்தவன் அளவிலே பகுமிருக்க

முழுதும் உடையவன் சப்தமுமே

முகிலார் செவியினில் விழுந்திடவும்

வாழ்த்தும் மொழிகேட்டு திடுக்கமுட்டு

மனதில் பயமுற்று எங்கே நின்றார்

ஏனென்று கேட்கவும் இறைமொழிவான்

எந்தன் பாலரே கண்மணியே

தேனின் அமுதம் தௌ;ளமிர்தம்

தெவிட்டா கனியே முஹல்லதீவை

மாதே இஸ்லாம் ஆக்கிடவும்

வல்லோன் உரைத்திட இவர் பயந்து

தானவன எந்தன் ஆண்டவனே

அகத்தில் பயம் மெத்த சிறுபிள்ளை நான்

சிறியோன் பதினொன்று வயதல்லவோ

தெற்கு வடக்குமே நான் அறியேன்

எந்தன் ரஹ்மானே முஹல்லதீவில்

உத்த காபிர்கள் நெறி மூடர்கள்

அருமை அறியார்கள் பேரும் கெட்டார்கள்

அவனும் இடஞ்சல் செய்வான் வஞ்சகரே

வஞ்சகர் என்றான் சிறுபாலரே

மனதில் பயம் வேண்டாம் சொல்ல கேளும்

அஞ்சாதேயும் நீங்கள் தீவு சென்று

அறுபத்தினான்கு தேசமே

பஞ்ச மாநகர் வேதியர்கள்

பயகாம்பர் தீனில் அழைத்து வாரும்

நெஞ்சம் பதறுது வழியறியேன்

நீசம் நிலையும் நானறியேன்

அருளும் மொழிகேட்டு அவன் மொழிவான்

ஆனால் உன்கூட நான் வருவேன்

சிறிய பாலரே பயமும் வேண்டாம்

சோலிகாக்குள்ளே நான் வருவேன்

பிரியமுடன் நீரும் நடவும் என

பெரியோன் உரைத்திட இவர் மொழிவார்

பிரியும் சேனையும் தத்துவமும்

பயகாம்பர் கொண்டும் அவர் நாளையில்

முஹல்ல தீவினில் செல்லவில்லை

முரட்டு சீமையில் என்னை ஏவுகிறாய்

அகத்தில் பயம் வேண்டாம் சிறுபாலரே

ஆனால் நீர் கேட்ட வரங்களெல்லாம்

உகப்பாய் தருவேன் நான் நடவுமென

உடையோன் உரைத்திட இவர் மொழிவார்

உகப்பாய் தருவது நிஜமதுதான்

உத்த தாயாரும் அனுப்புவாளோ

அனுப்பும் மனதையும் திருப்பி வைப்பேன்

அதற்கு பயம் வேண்டாம் நானோ நீயோ

வனிதை மனதிலே புகழ்ந்திட நானும்

வழியனுப்பவும் செய்து வைப்பேன்

உனது மனம் சற்று சலியாதையும்

உனக்கு விலாயத்து மிகுந்தளிப்பேன்

தனது பேரிலே கிருபை வைப்பேன்

தக வலது வேண்டாம் சிறுபாலரே

தருவது நிஜம் ஆண்டவனே

தடங்கல் அது சொல்ல இல்லை நானும்

பெருதிகொடு நானும் போறேன் உண்மை

பெரியோனே ஊர்விட்டு ஆறுமாதம்

ஒருவன் தனிவழி போகலாமோ

உத்த துணை கூட்டி போகவேணும்

கருதும் மொழியது சரியதுதான்

கடினமுடனேதான் நான் வருவேன்

திறமும் சொல்லியே இறையவனும்

சிறுவரே வெளியில் வாருமெனில்

கடுக எழுந்துமே வெளியில் வர

கத்தன் உரைத்திட்டான் அவர் தமக்கு

விடிய முன்னமே நீரும் சுருக்காய்

விழியும் மூடியே சலவாத்தோது

மடவார் வாசலில் செல்ல சேவல் கூவ

வழுத்த சப்தமும் செவியில் விழ

விழித்து நீர் பாருமனையதாகும்

வேந்தரே கதவை தட்டும் நீரே

வழுத்த கதவும் திறக்கும் பாரும்

வாசல்தனில் சென்று சப்தம் போடும்

விழித்து மாதாவும் வருவார் கண்டார்

மேவி உன்னையும் நோக்கி சொல்வார்

வாழ்த்தும் மொழியது செப்பாதே நீர்

மகிழ்ந்திருக்கையில் நீர் மொழியும்

இறையோன் உரைப்படி முஹிய்யதீனும்

இருவழி மூடி சலவாத்தோத

தரையில் பாதமும் படாமலேதான்

ஜெய்லானியில் வந்து மடினில் புக்கி

விரைந்து சேவலும் கூவிடவும்

விழித்து பார்த்தவர் கதவுதட்ட

கதவு திறக்கவும் வாசல் சென்று

தீனோர் ஒரு சப்தம் போட்டு நின்றார்

திருசை புகழாரும் சப்தமிட

திடுக்கிட்டு எழுந்து மாதாவுமே

வருசை மடவாரும் ஓடி வந்து

மார்பு தழுவியே கூட்டிச் சென்று

ஒருவன் கிஸ்ஸாவும் எடுத்துரைக்க

உள்ளம் மகிழ்ந்து அமுதளித்தார்

அன்னம் உண்டுமே கைகழுவி

அப்துல் காதிரும் மகிழ்ந்திருக்க

கண்ணின் மணியான தம்பியாரும்

கத்தன் அருள் பெற்ற நஸீஹா பீவி

பின்னும் சாலிஹா மூவருமே

பீர் தஸ்தகீர் வரவும் கண்டு

அந்த நேரமே ஓடிவந்து

அன்பாய் தஸ்லீமும் செய்தனரே

தஸ்லீம் செய்தவர் உகந்து கேட்க

செய்திகள் தன்னையும் எடுத்துகூற

புசியதாகவே அவர்கள் கேட்டு

ஹுதாயே புகழ்ந்து போற்றி

நஸூஹா பீவியும் சாலிஹாவும்

நல்ல தம்பியர் மாதாவுமே

உகந்து துஆ செய்து மகிழ்ந்திருக்க

என்னையும் வாகாய் முஹல்லதீவை

இஸ்லாம் ஆக்கியே வரவும் சொன்னான்;

வாகாய் தாயாரே இறை உரைத்தான்

மொழியும் இது செய்தி அவர் தமக்கு

அகமும் மகிழ்ந்து விடையருள்வீர்

அவர்கள் அதுகேட்டு திடுக்கமுற்று

நஹ்ப் இதுக்;கோதான் ஓதப் போனீர்

நாயன் உரைத்தான்

என்றே மொழிந்தீர்

**விருத்தம்**

மகில்லாமலே அநேக நாளாய் அடியேன் வருந்தி நாயன் மிக மனமிரக்கமாகி விடுத்தனன் பாவா உன்னை அகமிய பொருளே எண்ணி அன்னையாய் நானிருக்க இப்போ போன கால் உரை முஹல்லதீவுக்கு ஏகுவாய் என்றே. வென்றது சரிதான். பாவா மேலோன் விடை செய்தானோ கண்டதேர் கனவுமிப்போ கைமேல் கபுலாச்சு. நின்றதோர் நிலையும் மாறி நேசமும் உருகி வாடி வண்டுரை கூந்தல் மின்னார் வாய் விரிவி புலம்பி சொல்வார். வந்தனையோ மகனே நான் உந்தனையோ மறந்து இந்த உலகில் நான் இருப்பது எந்த விதம் சொல்லுவார் சொல்வது என்னம்மா ஆதி வல்லோன் சொன்னமொழி இல்லைதென இருக்கேயேதான். இப்போது சொல்வது என்னம்மா ஆதி வல்லவன் சொன்ன மொழி அல்லதென வருகேன் இப்போ சொல்லுவது உண்மை அம்மா உண்மைபென உரைத்தாய் மகனே என்ன நன்மை மடந்தேக தீமையேது வந்ததோ மகனே. என்ன தீமை செய்தேனோ தீமை என்று உரைப்பது சும்மா அதி சொன்னது உண்மையம்மா. நல்லவிடையருளும் நானும் இப்போது சொல்வது உண்மையம்மா. அம்மா எனNவு மகனே சும்மா உரைத்தாய். எண்ணாமலும் உண்ணாமலும் இறையவன் தம்மாலும் உம்மாலும் அல்லவோ பாவி படுதுயுரம் அகற்றியே ஆவிவிடும் தர்ணம் ஏகனும் பார்ப்பான். முஹல்லதீவுதனை உகப்பாய் ஆதி பெரியவனே மன்னவன் நீ தருவானே ஏது பிழைகள் செய்தேனோ என் மகன் சொல் மொழி

சொல்லுனேன். மெத்த மலடு இருந்து அடியாள் பெற்ற கொடுவினையோ பதினொன்று வயதினிலேதான் உத்தரவானதோ இந்தப்படி புலம்ப முஹிய்யதீனை அந்தப்படி விளம்ப சிந்தைக்குரியவன் ஏக வந்து கிருபை செய்ய தயவு செய்தருள். ஆதி தையலார் மனது பூண்டு ஜெயம் இரு மகவார் உந்தன் திருபதி செஞ்சம் பாவா தயம் பெற இருந்தாக்கில் நமக்குமே கிளேசமில்லை துயரமு; வைத்து நீரும் தூரமம் போவதுண்டோ போவது நம்மை விட்டு போவது நலமோ. பாவா நான் சாவதண்டோ நாளை சதிக்கு அறியேன் நானும் நாவது உலர்ந்;து பீவி நல்கிய தங்கை தம்பி போவது கதிரோன் கண்டு புவின் வாடினரே. வாடியே முகமும் சூம்பி வயிறது கொதித்து மின்னாதேடியே எடுத்தேன் உண்மை செல்வரே கண்பதிப்பே நாடியும் விழுந்து மாதர் நயணமும் விழி நீரோட சுற்றியே பூவது போல் சூழ்ந்தவர் உரைப்பதானார்.

**தொங்கல்**

எந்தன் மகனே கண்மணியே

ஏகன் தலைவிதி வசமோ

முன்னோன் அமைத்தனன் என் மகனே

முஹல்லதீவு என்றெழுந்தனையோ

இந்த விதிக்கோ என் வயிற்றில்

ஏகன் விதித்திட்டான் என் மகவே

கந்த மகிழ்கின்ற காரணரே

காடு செடிமலை வழியுமிப்போ

பாதை உமக்குமே தெரியுமோதான்

பாலரே இப்போ தனி வழியே

ஆதிபெரியவன் அனுப்பினானோ..

யாராகிலும் துணை வாரார்களோ

ஏதும் அறியாத சிறுபாலரே

ஏகனும் இப்போ அனுப்பினானோ

காத காலமும் தொலையா தீவு

காபிர் இருக்கும் பதியாகுமே

அந்த பதியுள்ளோர் கொடிய காபிர்

அருமை அறியாத பெரு மூடர்கள்

முந்த நபி இரசூல் நபியும்

முஹல்லதீவுக்கு செல்லவில்லை

வந்து பெருவுனம் கரடி புலி

மதயானை சிங்கை மெத்த முண்டும்

எந்த விதம் நீரும் செவிக்க போறீர்

இரக்கமுல்லாதார் முஹல்லதீவார்

தாகம் தனக்குமே தண்ணீர் கேட்டால்

தடகம் அதில் என்பார் தாகீத்தாக்கால்

பூதம் போலிருப்பர் குணமதற்கு

கொலைக்கு அஞ்சார்கள் குடி கெடுப்பார்

பாதம் மொழிபேசி தரமளிப்பார்

படுகுழி வெட்டி சவட்டி மிதிப்பார்

மோகமது கொள்வார் சூது செய்வார்

மூடர்கள் மோசம் செய்வார்களே

வண்டர் கொடியோர் அற கொடியோர்

வஞ்சனை சூனியம் கபடம் மெத்த

கண்டபடி கெட்டோர் சொல்லுன்னாது

கரும சண்டாளர் என் மகவே

சண்டாளர் பொல்லா சூது வாது

தனித்த இடத்திலே இருக்கொன்னாது

சென்று கவர்ந்து இவ்விதமாய்

செவிப்பார்களே என் மகவே

முன்னோன் உரையுமே தப்பாமலே

உங்கள் வயதுமே இருபதுலே

அங்கு நீர் சென்று செவிக்குன்னாது

அருமை காலரே சொல்லுமெனில்

என்னால் முடியாது ஏவல் தட்ட

ஏகன் குர்ஆனில் சொல்லுக்கிது

முன்னோன் ஏவலை தட்டினவர்

மூதேவி இபுலீஸ் ஆவாரென்றே

ஆனால் என்னையும் இபுலீஸுக்கோ

இறைவன் வகுத்தனன் இவ்வுலகில்

தோன்றாமல் சொன்னீர் என் மாதாவே

துய்யோன் ஏவலை தடுக்கொன்னாது

வேதாதி வேதருக்கு ஏற்ற மொழி

மேலோன் நீதிக்கு ஒப்பாகுமோ

தானாய் சமைத்த தானவனும்

தந்தான் விலாயத்து பெருவெள்ளமாய்

எந்தன் மாதாவே சளியாதையும்

ஏகன் வல்லையும் என் வல்லையும்

வந்து என்னுடன் சோலிஹாக்குள்

வந்திருக்கவும் பயம் எனக்கேன்

முன்னோன் வழிகூட்டி போவானம்மா

மொழிக்கு மறுமொழி விடையருள்வான்

சந்தாபமில்லை என் மாதாவே

சலிப்புமது வேண்டாம் விடையருள்வீர்

இந்த வகையெல்லாம் முஹிய்யதீனும்

இயம்ப அவர் கேட்டு மனதிளகி

முன்னோன் அளவிலே துஆ இருந்து

முந்தானை ஏந்தி பாத்திமாவும்

வந்து அவர்களும் துஆ கேட்டு

மகனார் தனக்குமே விடையருளும்

சிந்தை மகிழ்ந்து முஹிய்யதீனும்

சிறந்த மணிமாடம் தனித்திருந்தே

இறையோன்தனை கேட்க அவன் மொழிவான்

எந்தன் பாலரே சிகாமணியே

நெறியும் தவறாத நித்திலமே

நீதரே உங்கள் தாயாரையும்

பந்தாபஸ்தாக வைத்து நீரும்

பகுதாது வந்து நீங்களுமே

அருளும் மொழி கேட்டு அகமகிழ்ந்து

அன்னை சுற்றத்தார் அடங்களையும்

சென்றார் அடங்களும் பகுதாதுக்கு

சிறந்த மணிமாடம் சென்று புக்கி

வண்டாடும் சோலை பூங்குழலால்

மாதா தனை வைத்து பந்தாபஸ்தாய்

அந்த நகரிலுள்ள தோழமாருக்கும்

ஆண்டோன் மொழியையும் எடுத்து கூற

மண்டலம் புகழும் மதியே கேளும்

முஹல்ல தீவுக்கு தனிவழியே

சின்னஞ்சிறு பிள்ளை செல்ல தகுமோ

செல்வரே நாங்கள் கூட வாரோம்

முன்னும் பின்னும் அறியா தேசம்

முழுமூடர் நசுரா அர கொடியோர்

சொன்ன மொழி கேட்டு இவர் மொழிவார்

துய்யோன் நமக்கொண்டு பயமும் வேண்டாம்

அன்னை தம்பியும் தங்கைமாரும்

அவ்விடம் தீனாக்கி வரும் அளவும்

வந்து அடிக்கடி விசாரித்துதான்

வருமளவும் நீங்கள் ஒத்தாசையாய்

சிந்தை திரையாக இருங்களென்றும்

தீனோர் முஹிய்யதீன் பாத்திஹா ஓதினாரே

திருசை புகழாரும் துஆவிரைந்து

தீனோர் அனைவரும் ஆமீன் கூற

வருசை புகழாரும் நடந்து செல்ல

பகுதாது நகர் தோண்டி தோழமாரும்

பிருசை புகழாக வழியனுப்பி

பிரியத்துடன் அவர் தோழமாரும்

கருணைக் கொடையதேர் முஹிய்யதீனும்

கடுக வழியேகி நடந்தினரே

நடந்தார் பெரும்வழி முஹிய்யதீனும்

ஆறுகாத வழி தாண்டிடவும்

கடுங்கால் அசைந்து தொடை இடுப்பும்

கடுப்பு எடுத்திட முஹிய்யதீனும்

சடவு வந்திட கருணை பொங்கி

தனியோன் உரைத்திட்டான் சோலிஹ்க்கு

சடவுமதுயேது சலிப்புமேது

செய்யிது நபி பேரில் சலவாத்தோது

ஓதும் வழிக்கு ஐங்காத வழி

உமக்கோ தொலையும் மிசுருமிப்போ

பனிரண்டு மாதம் பனிரண்டு நாள்

சுருக்கினேன் வருத்தம் உமக்கில்லைகாண்

வழியும் தொலையும் உந்தனக்கே

வனமும் அடுத்திடவும் நடவுமெனில்

உடையோன் அருளென்று மனதில் உண்ணி

உள்ளங்கால் பூமி படாமலேதான்

அடக்கி ஐங்காத வழி தொலை

அகமும் மகிழ விரைந்தேகவும்

அடக்கி விரைந்தோட முஹிய்யதீனும்

கருமாமுகில் வந்து கவிகை விட

முகில் நடந்திட அரபாத்துமே

முன்னே தோண்டிட இவர் மகிழ்ந்து

திடவான் உரைத்திட்டான் இவர்தமக்கு

ஷெய்கு முஹிய்யதீன் அரபா பெற

ஏறுமென சொல்ல இவர் மகிழ்ந்து

இலங்கும் முஹிய்யதீன் ஏறி செல்ல

நூறு துலுங்கிய அவ்லியாமாரும்

நொடியில் எழுந்தவர் மார்தழுவி

வாரும் முஹிய்யதீன் ஆண்டவரே

வல்லோன் அருள்பெற்ற தவப்பொருளே

கார்குடையிடும் காரணரே

கண்ணின் மணியே தவப் பொருளே

அவ்லியாமார்களும் புகழ்ந்து போற்றி

ஆண்டவரே எங்கே போறீரென்னி

கவழுவார் அப்போ முஹிய்யதீனும்

கத்தன் உரைத்தான் முஹல்லதீவை

நபியுல்லாதீனில் அழைக்க சொன்னான்

நஸ்ராதனையும் இஸ்லாம் ஆக்க

அவ்லியாமர்களும் மகிழ்வதாகி

ஆயுதம் பதினெட்ட ஈந்தனரே

மாணிக்சோட்டா கோடாளியும்

வைரமணி கூண்ட தண்டாயுதம்

ஆணிபொன் சோலிஹாவும்

ஐம்பொன் ஆசாவில் அம்புடனே

தானிக்கும் சூரி கருதுடனே

தரமணி கூசா கோதடியும்

பூனிக்கும் கம்புளி கையிறுடனே

புலித்N;தால் முஸல்லாபாய் அதுவே

நல்கினார் பின்னும் இரட்டின குல்லா

நாதர் தமக்கேற்ற குப்பாயமும்

இலங்கும் சுலைமான் தஸ்பீஹ் ஒன்றும்

ஈந்தார் பாதகுரடு இரண்டும்

துலக்கமானதோர் மயில் விசிறி

சொல்வார் வாக்கு வகைவகையே

இறையோன் அருள்பெற்ற ஆண்டவரே

இயம்ப கேளுமே இது வழுமை

விரையும் சன்னாசை மடியவைக்கும்

வேந்தர் தம்மையும் பணியவைக்கும்

கரடிபுலி யானை வணங்க வைக்கும்

கணபோத ஜின்னை துரத்தி வைக்கும்

திரைகடல் தன்னை தொலைய வைக்கும்

தீனோர் மனதினில் பயமும் வேண்டாம்

முன்னோன் அருள்பெற்ற முஹிய்யதீனே

முஹல்லதீவினில் சென்றீர் ஆனால்

உந்தன் மனகோபம் அடங்காதுகாண்

வழுத்த காபிர் நெறிமூடர்கள்

நித்தினை செய்வார் நெறி அறியார்

நீதரே மனப் பாகம் அறிந்து நடவும்

கந்தம் மகிழ்கின்ற காரணரே

கத்தன் வல்லையுமத் இதுவேயாகும்

அல்லாஹ் சோலிஹாக்குள் இருப்பதாலே

அவிடம் சென்றாக்கால் வெற்றியாகும்

ஸல்லல்லாஹு நபி தன் பேரரே

சலிப்புமதும் வேண்டாம் சந்தோஷம் வேண்டும்

தங்கள் கோபத்தை அகற்றிவிடும்

துய்யோன் அருளாலே இஸ்லாமாவார்

வல்லோன் கிருபையால் போய் வருவீரென்றார்

வல்லோன் சலாம் உமக்கெனவே

ஸலாம் உரைத்திட பிறத்தி சொல்லி

செய்யிது முஹிய்யதீன் ஆயுதமும்

வலமும் இடமாக வரைந்திருக்க

வைரமணி கோடாலி கூசாவுமே

கல்பால் மகிழ்ந்து தோளில்போட்டு

காரணர் புலிதோலை இடையில் சுற்றி

வலது தோளில் முசல்லா பாயயும்

மாணிக்க கோதடி வரைந்தவரும்

பலபல ஆயுதம் எடுத்தணிந்து

வல்ல பாத குரடேறி நடந்தனரே

நடந்து செல்லவும் மான்மிருகம்

நாயன் கிருபையால் ஓடிவந்து

பாதமும் தோய்ந்து தஸ்லீம் செய்து

பாதை வழிகூட்ட இவர் மகிழ்ந்து

கடுக நடந்திட கானகமும்

கரடு கேடு மேல் நடுநடுங்க

படுவுமது தாண்டி நடந்து செல்ல

புளிய விருட்சம் வந்தடுத்ததுவே

**விருத்தம்**

புளிய விருட்சமதில் புரலோகர் தொழுகும் போது வண்ண ஆந்தை சுகமும் ஆண்டவரே வருக பின் நத்தை கூறும் அந்நகர் முஹிய்யதீன் தான் அவிடத்தில் தொழுகிறார். நாம் திண்ணமாய் எதிரே சென்றால் சிரமது வெடிக்கும் தானே. திடீரென உரைக்க பின்னும் குராவுல அணிந்த ஆந்தை திடீரென எதிரில்தானே தடையற பறக்கும்போது படீரென சிரமும் ரெண்டாய்

பக்கத்தில் விழும்போது திடீரென பின்னும் தன்னை திருப்பாதம் போற்றி சொல்லும் ஆதி உடன் நன்னபியும் அகமியம் பேசுமிப்போது நீதி அஹதின் குர்ஸினில் நித்திரை செய்தரவே மாதவங்கள் வழங்கும் பேர் முஹம்மது வழுத்திய செந்தமிழுக்கு உகப்பாய் இருந்தரசே நாகரிகமான என்னுடைய நாயகர் தம்மை எழுப்பி கிருபை செய்தருள்வீரென்று இருபாதம்தனில் விழுந்தே எந்தனுடன் உடம்பது மெழுகினவும் வெந்து உருகுதிப்போ என்னுடைய விதனம் தன்னை தீர மனதில் துயரம் தீர்ப்பீர். மனதில் துயரம் அகற்ற உங்கள் மனதிலில்லா விட்டால் என்னுடைய ஹயாத்து தன்னை உங்களிடத்தில் மடிந்திடுவேன் எனவும் அஞ்சும் வார்த்தை தன்னை கேட்ட திடத்துடனே பாதுஷh முஹிய்யதீனும் பறவைக்கு இப்படித்தான் படைத்த ரஹ்மானே வள்ளபம் என்றே நினைத்து வணங்கி துஆ செய்து அஞ்சகம் தன்னை எழுப்பி பொன்னின் அஞ்சகம்மா மகிழ்ந்து கஞ்சம் என்றும் வளர்த்தீர் தாழையே கெதியென போற்றி எழுந்ததுவும் பின் அஞ்சகம் புகழ்ந்து மனமகிழ்ந்து வாழ்த்தி பறந்து செல்ல மரத்தை விட்டு எழுந்தனரே!

**தொங்கல்**

எழுந்து ஆய்தம் எடுத்து அணிந்து

இலங்கும் மணிபாத குரட்டிலேறி

முழுதும் உடையவன் கிருபையினால்

முடுகி நடந்தனர் வனந்தனிலும்

பழுது பகராத நபி பேரரும்

பயமும் சளித்திட இறைமொழிவார்

அழகுமிக உள்ள சிறுபாலரே

யானை வருகிறது பாதை காட்ட

உந்தன் சோலிஹாக்குள் நானிருக்க

உனக்கு பயமென்ன கிலேசமென்ன

சந்தாபம் வேண்டாம் சலிப்பு வேண்டாம்

சகல பட்சிகளும் வருகிறதிப்போ

முன்னோன் உரைத்திட பட்சிகளும்

முன்னோடி வந்து தஸ்லீம் செய்து

வந்து யானைகளும் பட்சிகளும்

வள்ளலுடன் பேசி காட்டும் பாதை

பாலைவனமும் தான் வந்தடுக்க

பக்கிசாரங்கள் பாதை காட்ட

ஆளா விருட்சமாய் தேக்குமரம்

அகில வேங்கை கவ்தாரி முதல்

சேவல் குறிஞ்சி கருந்தோரை

சந்தனம் குங்குமம் எலுமிச்சையிட்டு

கோலாகலமாக வளர்ந்தோங்கிட

குதித்து விளையாட அந்நேரமே

மந்தி குதிபாய பழம் உதிர

வாசம் தனை வீச வாழை பலா

கொத்து கொத்தாக பேரீச்சமே

குலை சாய்ந்திடும் தேனொழுக

சிந்தை மகிழ்ந்து முஹிய்யதீனும்

சிறந்த கனியுமே எடுத்து அருந்தி

முன்னோன் அருளாலே நடந்திடவும்

முல்லைமரம் வந்து அடுத்திடவும்

முல்லை மல்லிகை இருவாச்சி பூத்தது

முந்திரிகள் கொய்யா மாதுளையும்

நெல்லியுடன் நார்த்தை எலமிச்சமே

திண்ணமனுகுமோ கோன் நெல்லியும்

வில்லை மரமும் சேன் கொட்டையும்

மேகம் உலாவிட கதிர் மறையும்

வல்லோன் அருளாலே இருள் வளமாய்

வந்து அடித்திட வள்ளலுமே

அந்த வனத்தில் தங்கி இருந்து

ஐம்பொன் குண்டாவை முன்னே வைத்து

முன்னோன்தனை கேட்க அவர்கமுதம்

முதலோன் கொடுத்திட எடுத்து அருந்தி

சிந்தை மகிழ்ந்து இருள்வனத்தில்

செல்வர் மூன்று நாள் நடந்தவரும்

அந்த வனம் தாண்டி வெளியேறவும்

அளவகரை வந்து அடுத்ததுவே

அருமை புகழான முஹிய்யதீனும்

அசந்து அவருNமு கரையோரம் வர

ஓர்மை புகழோனும் சோலிஹாக்குள்

உமக்கு சலிப்பேது கோபமேது

கருணை புகழாரே சலிப்பு வேண்டாம்

காலும் கடுத்தால் கால் இருந்து நடவும்

பெருதி கொடியாரை உரைப்ப கேட்டு

பீர் தஸ்தகீர் அங்கிருந்து

ஒருவன் இஷா தொழுதோறும்

உகந்து கூசாவை முன்னே வைத்து

கருத்தில் உதித்திட அமுதபானம்

கத்தன் இரக்கிட இவர் அருந்தி

விருப்பமுடனேதான் தூங்கியெழுந்து

மேலோன் பஜ்ருமே தொழுதவரும்

ஓர்தைம புகழான பஜ்ருக்குமே

உகந்து தொழுதவர் எழுந்தனரே

பருதி துலங்கி முஹிய்யதீனும்

பதினெட்டு ஆயுதம் எடுத்தணிந்து

விருது துலங்கவே இவர்கள் வேறே

மிஸ்ரும் அடுத்திட இவர் நினைத்து

கருணையுடையோரும் கண்மருண்டு

கத்தோன் தன்னையும் மனதிருத்தி

பெருத்த மிஸ்ரும் இறையவனும்

புவியில் அமைத்தானோ என்றே நினைத்து

கருத்தில் மகிழ்ந்து விரைந்தெழுந்து

கதிரோன் ஒளிவிட பொன் மாளிகை

பெருப்பமானதோர் மிஸ்ரு நாடு

பீர்தஸ்தகீர் முடுகி செல்ல

விருப்பமுற்றவர் விருந்தேகவும்

விண்ணும் உலாவியே பூஞ்சோலையும்

மருகுழல் வாசம் மல்லி முல்லை

மாதுளையுடன் எலுமிச்சையும்

தெருக்கள் தோறுமே வாழை பலா

சிறந்து குலைசாய வானரங்கள்

குறுக்கும் மறுக்குமே குதிகள் பாய

குயிலும் மயிலும் ராகம் பாட

தெற்குவடக்குமே வைர மேடை

சிறந்த பலகனி நிலைக் கண்ணாடி

சிறுத்தை இடமின்னார் பல கணக்கில்

சிறந்து நின்று பந்தடிப்பவரே

அடித்து நடந்திட சொஞ்ச காலம்

சதிர ஐம்பொன்மேடைகள் வீசிடவும்

திடுக்கிட வருமே அண்ணாந்து பார்க்கில்

செம்பொன் மணிகள் பின்னலாட

அடிமேல் அடிவைத்து முஹிய்யதீனும்

அவ்வீதி தாண்டி மறுவீதி செல்ல

கடுகி நடந்தனர் நெடுந்தெருவில்

கத்தன் குர்ஆன் ஓதிருப்பவரும்

விரைந்து அவ்வீதி தாண்டிவரும்

வேந்தர் மறுவீதி செல்லுகையில்

நெறி நெறியாக தென்னஞ்சோலைகளும்

நெடிய கமுகு முந்திரிகை

வளைந்து இருபுறம் கனி சொரிய

வாடை பலதையும் கண்டவரும்

இறையோன் அருளென்று மனதிலுன்னி

இலங்கு முஹிய்யதீன் மறுவீதி சென்றார்

பாலசந்தோடு பசுங்கிளியும்

நவரத்தின மேடை சித்திர கூடம்

தூரா தூரமும் அஸ்மான் கீரி

தூக்க விளக்கும் பந்தலுமே

சீராய் மேல்கட்டி செம்பி பொன்மேடை

சிறந்த மரகத கதவுகளும்

மாணிக்க தூண்கள் நிறை நிறையாய்

வச்சிர மேடையும் பூஞ்சோலையும்

ஆணி பொன் துயில் ஆடை சூட்டி

ஆடுவார் கன்னியர் அங்கிருந்து

பூரித்தவருமே நின்று பார்த்து

புதுமை புதுமை என்றவர் நினைத்து

வானின் ஒளி கொண்டு வெறுவாய்போல்

மனது தடுமாறி மறுவீதி சென்றார்

அஸ்தரும் பற்பட்டு உடுத்து

ஆபரணம் பூண்டு சிறு கன்னியர்கள்

மல்லி முல்லைகள் மலர்ந்து

மாணிக்க பந்து போடுவாரும்

வள்ளிமார்களும் சிறிது நிறையாய்

மகிழ்ந்து குர்ஆன் ஓதிருப்பவரும்

சல்லல்லாஹ் நபிதன் பேரரும்

தன்னுள் மகிழ்ந்து அவனி முழுதும்

மிஸ்ரு தன்னாலேதான் சமைந்ததோ

தனியோன் வகுத்தானா நாமறிவோமோ

முன்னாலே இந்த மிஸ்ரு நாட்டை

முஹம்மது மகளுக்கு இறக்கினானோ

இந்நாட்டு அதிசயம் எங்கும் இல்லை

இறையோன் வகுத்தனன் மிஸ்ரு அழகை

வரிசை புகழான அபுசாலிஹ்

மைந்தர் மகிழ்ந்து மறுவீதி செல்ல

தெருக்கள் தோறுமே மஞ்சள் இஞ்சி

சிறந்த மணிமேடை சிகரழகும்

தருக்கள் அதுவென மரிக் கொளுந்து

வண்ண மணிமேடை நிலைக் கண்ணாடி

சிறுத்த பலகனி வாசல்களும்

செம்பொன் கதவும் நிலைவிளக்கும்

பார்த்து மகிழ்ந்து மறுவீதி செல்ல

பஞ்ச வர்ணகிளி கொஞ்சியாட

வாத்து தாராக்கள் தெருக்கள் தோறும்

வாங்கோழி போரவிளக்கு பொன்னின் கொடிகள்

நின்று போர் விளக்கு போற்றி மகிழ்ந்து

பொன்னின் ஊஞ்சலில் இருந்தாடுவாரும்

ஏற்ற வாட்டங்கள் இல்லாமலும்

எங்கும் நிறைந்துமே ஆடுவாரே

மாடங்கள் தோறும் இவ்விதமாய்

மங்கையர் பசுங்கிளி கையில் வைத்து

ஆடல் பாடலும் குரலோசையும்

அவனி முழுதிலும் கண்டறியோன்

கூடமாடவும் படித்துரையும்

குத்து விளக்கும் குடல்வரையும்

மேடைகள் தோறும் பந்தலிட்டு

மெல்லியர் கூப்பிட கட்டுவாரும்

இந்தபடியாக புருசை தோறும்

எண்ண தொலையாது மணிவிளக்கும்

சந்திகள் தோறும் நிலை விளக்கும்



www.sufimanzil.org

துண்டு துண்டுகள் அரை விளக்கும்

பந்தமது போலே பெருவிளக்கும்

பன்னிராயிரம் தெரு ஓர் ஒளிவாம்

முன்னோன் ஒளிவானே சந்திரனொளி

முதலோன் அமைத்தனன் மிஸ்ரதிலே

ஹக்கன் அருளாலே மிஸ்ரு அழகை

அடங்களும் பார்த்தோம் அவனருளால்

மிக்க நபியிரசூல் மகளார்

பீவி பாத்திமா ஜன்னத்துக்கோ

பரக்கத்தால் எந்தன் மிஸ்ரு நாட்டை

முஹல்லதீவினால் நாம் கண்டோம்

தக்க பெரியோனும் உதவியினால்

தானும் முடுகிட மஜ்லிஸில் புக்கி

விரைந்து ஆயுதம்தனை இறக்கி

முகப்பின் முன்னாலே வைத்தவரும்

இறையோன் இஷாவும் இமாமுடனே

இலங்கும் முஹிய்யதீன் தொழுது வந்து

மறையின் நெறியுள்ள முஹிய்யதீனும்

வைத்தார் ஆயுதம் அணுஅணுவாய்

பிறையை பழிக்கின்ற முஹிய்யதீனும்

பொன்னும் சோலிஹா முன்னே வைத்து

மாணிக்க கோடாளி வலதுபுறம்

வைரமணி கோட்டா இடதுபுறம்

ஆணி பொன் கூசா முன்னே வைத்து

அம்பு வில்லுரு தூணில் சாட்டி

பூணிப்பும் முசல்லா பாய் விரித்து

பொன்னின் கோதடி தலை மாட்டில் வைத்து

தாணிக்கும் சூரி காது அறியும்

தம்புசு தன்னியோகத்தன்றி

மிக்க சக்கரம் கம்புளி கயிறும்

விலங்கும் புலிதோல் மயில் விசிறி

ஹக்கன் அருள் பெற்ற ஆசாவுமே

அவர்கள் முன்வைத்த சாய்ந்திருக்க

தக்கோன் தொழுகையுள்ள முஃமினோர்கள்

செய்யிது முஹிய்யதீன் விசாரியாமல்

பக்கீரே என சொல்லி அவரவர்கள்

பவிக்கும் அறியாமல் நடந்தனரே

நடந்து அவர் செல்ல முஹிய்யதீனும்

நாட்டமது கொண்டார் பசியதாலே

கடுக பசியது ஆகிடவும்

காபிர் நஸ்ரா முஹல்ல தீவார்

கடுங்காபிர் என்று நாமிருந்தோம்

பாவி அவரில்லை இவரேயாகும்

அடந்து நடந்த பரக்கத்தாலே

அறிவு கெட்டோர்கள்; பகீலானார்கள்

இந்த நாட்டையும் வைக்குன்னாது

எரித்து சாம்பலாய் ஆக்கவேணும்

சிந்தை நினைத்திட மறு நினைவு

சீமான் கொடுத்திட நினைப்பதானார்

மாதா பாத்திமா ஜன்னத்துக்கோ

முன்னோர் நபியுல்லா சீதனமும்

உகந்து கொடுத்ததால் எரிக்குன்னாது

வயிறு பசிக்காக எரித்தோமானால்

மாதர் தனக்குமே கோபமாகும்

தாயார் தமக்காக மனம் பொறுத்து

தானோன் இடம் கேட்டால் கொடுக்கானேதான்

ஆயாசம் கொண்டு அவரிருக்க

ஆண்டோன் உரைத்திட்டான் மரியமுக்கு

காய்ந்த மனதாகி மிஸ்ருபள்ளி

கருணைபொங்கியே கோபம் கொண்டு

சிந்தை நொந்தவர் இருப்பதாலே

சீக்கிரம் ஒடுக்கு எடுத்து சென்று

வந்து நீருமே மனதை தேற்றி

வயிறு பசியாற்றி வாருமெனில்

முன்னோன் உரைத்திட மறியம் பீவி

முழங்கும் சொர்க்கத்து ஒடுக்கெடுத்து

வந்து மறியமும் மஸ்ஜிது புக்கி

வள்ளல் முன்வைத்து சலாம் கூற

கந்த மகிழ்கின்ற காரணரும்

கருதும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

முன்னோன் அருள்பெற்ற மொய்குழலே

மொழியும் நீயாரு சொல்லுமெனில்

வந்து மஹ்ஷரில் முஹம்மதுக்கு

மணம் சூட்டும் மறியம்பீவி நானே

உங்கள் தமக்குமே பேத்தியாகும்

உம்மை அறிவாரோ மிஸ்றார் தானும்

முன்னோன் தனை கெட்டால் கொடுக்கானோதான்

உங்கள் கோபத்தை அடக்கி நீங்கள்

எந்தன் பேரரே கண்மணியே

இலங்கும் பாலரே பசியாருமெனில்

சந்தோஷமாக இவர் மகிழ்ந்து

தானும் பசியாறி இருந்தனரே

இறையோன் தனக்கு உகப்பானவரே

இலங்கும் பாலரே உங்கள் கோபத்தை

மறையின் நெறியாரை தவிழ்ந்து விடும்

முஹல்லதீவில் சென்றால் அங்காகாது

விரைந்து ஆயுதம் எடுத்து நீங்களும்

முஹல்ல தீவுக்கு செல்லுமென்று

விரைந்து ஏகினார் மறியம் பீவி

விரைந்து ஆயுதம் பூட்டினரே

பூட்டி முஹிய்யதீன் ஆண்டவரும்

பொன்னின் பாத குரட்டிலேறி

தாட்டிகமாக நெடுந் தெருவில்

தங்கமென ஆசா கைபிடித்து

துறவு பொய்வள்ளல் விரைந்தேகவும்

துலுங்கும் மனை ஒன்றுகுட்கு ஏழு கொடி

சூட்டி பறந்திட ஓநாய் ஒன்று

துலங்க கொடிமரம் போட்டு நிற்க

சிறிது நாய்களும் தெருக்கள் தோறும்

சிறந்து துயில் கொள்ள கண்டவரும்

கருத்து கலங்கியே கடிக்குமென்று

கல்பு தடுமாறி முஹிய்யதீனும்

வருத்தம் மிகவாகி மிக பயந்து

இறைமேல் அன்பு தன்னுள் நினைத்தவரும்

அருமை பாலரும் பயம் நினைத்து

தெருவீதி நோக்காமல் நடந்தனரே

கடந்து அவ்வீதி தாண்டும்போது

காரிகை மகன் செத்த சலிப்பினாலே

மடவாள் உருகியே ஒத்த குரல்

வழிய சப்தமும் போட்டு அழுகிடவே

திடவார் அதுகேட்டு மனம் சலித்து

திகைத்து அவருமே நினைக்கலானார்

எந்த சவனத்தை தள்ளினாலும்

இந்த சவனத்தை தள்ளுன்னாது

சவனம் இது மெத்த பொல்லாதது

எடுத்து அடிவைக்க கூடுன்னாது

அந்த மனைசென்று அழுகை மாற்றி

அகல வேணும் நாம் என நினைத்து

சிந்தை தனிலுண்ணி அழுகும் மனை

சிறுவர் மனைதனில் புகுந்து நின்று

வலுத்த சப்தமும் போட்டிருக்க

வழிய கிழவியும் ஓயாதாலே

பலத்த சௌதமும் பின்னும் வர

பெரியோன் முஹிய்யதீன் சௌதமிட

கலங்கி அழுகின்ற கிழவி அவள்

கடும் காரமாக சொல்வாளப்போ

இலையும் குலைகளும் துலுங்கா நேரம்

எங்கு நீ வந்தாய் யாரடா என்றாள்

எந்தன் மாதாவே தாதியரே

எனக்கு பசிதாபம் தீருமென்னில்

இந்த சாமத்தில் தண்ணீர் கேட்டாய்

இரந்து மதிகெட்டு போனியாடா

வந்து என்னிடம் நீரருந்த

மறுமனை சென்று அருந்தி போடா

அந்த மொழி கேட்டு இவர் மொழிவார்

யாருக்கும் நலம் செய்தால் பரக்கத்தாவான்

தாகமது தீர்த்தால் இறையவனும்

சலிப்பை அகற்றுவான் தாதியரே

ஏகன் ஒருவுனால் நபிமார்களால்

இந்த சலிப்பதை அகற்றுண்ணாது

பாகமறியாமல் கிழவியரும்

பக்கீரு உன்னாலே முடியாது போடா

நகைத்து பேசாதே தாதியரே

நானும் மிஸ்ரில்லை பகுதாது நகர்



www.sufimanzil.org

அகத்தை அழிக்கரம் பேசாதெ நீ

அரபுகிளை நானும் தாதியரே

வகை மானம் சொல்ல வந்தானிவன்

பகுதாது நகருள்ளோர் மாடு தின்பார்

சகலதும் தெரியுமே எழுந்து போடா

தண்ணீர் செத்தாலும் கொடுக்கமாட்டேன்

வருமம் சொல்லிய தாதியரே

வருஷம் பன்னிரண்டு சென்றாலும் நீருண்ணாமல்

விரும்பி நானுமே போவதில்லை..

விதப்பமகற்றி நீர் அருந்தி வோவேன்

கருத அவருமே சப்தமிட்டு

காரணர் முசல்லாவை போட்டிருந்து

இருந்து போடா நீ பயமே இல்லை

இடம் கெட்ட மூடன் என்று சொல்லியே

அறுவை அவளுமே அழுதிருக்க

அடுத்த வீட்டானம் கேட்டிருந்து

அடுத்து மனையாளை எழுப்பி சொல்வாள்

ஒருவன் பகீரு கிழவியுடன்

வருந்தி சண்டையும் போடுகிறார்

வயிறு பசியாவே பகீர் தானும்

ஒருவன் பகீரை நம்வீட்டுக்கு

உகந்து அழைத்தேகி வாருமென்றான்

அந்த மொழிகேட்டு அவளெழுந்து

அணிந்து புடவைகள் கொசிவெடுத்து

சிந்தை மகிழ்ந்து வந்தவளும்

சீமான் பக்கீரே சலாம் உமக்கே

முன்னோன் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

முதலோன் அருள் பெற்ற பக்கீரே நீரும்

இந்த கிழவியும் தாகம் தீராள்

எங்கள் வீட்டுக்கு வாருமென்றாள்

வருவேன் தப்பில்லை என் தங்கையே

வழிய கிழவியுடன் சலிப்பகற்றி

அருந்தி நீரு;ணாமல் போவதில்லை

யார் வீட்டுக்கும் போவதில்லை

விரித்த முசல்லாவை எடுப்பதில்லை

மேலோன் பக்கீர் நாங்களாகும்

கருதும் மொழிகேட்டு அடுத்த வீட்டாள்

காதலுடன் சென்று அவள் வாய் பொத்தினள்

வாயும் பொத்திட அமராமலே

வண்ட கிழவியும் மொழிவதானாள்

தாயகமாக அமத்த வந்தாள்

தவறி வீண்பொல்லா வெறு வீணிதான்

உந்தன் மகன் செத்தால் தெரியுமடி

அகர வழிகெட்;ட பக்கீருக்காக

வெந்து கறியாக அழுகச்சேதான்

கடைகெட்ட பக்கீரும் தானும் வந்தான்

உருத்து இருந்தாக்கால் அழைத்து போடி

ஊதாரி பொல்லா வெறு வீணியே

ஒருவன் பக்கீர் அவரை வையாதடி

என்னை வைத்துக் கொள் தாதியரே

வருந்தி அழைத்தேன் நான் என் வீட்டுக்கு

வாரேன் என சொல்லி உன்னிடத்தில்

அருந்தி உண்டு சலிப்பகற்றி

அகலவென சொல்லி இருப்பதாலே

உந்தன் இடத்தில் நீர் அருந்தாமலே

ஒருபோதும் அவர் போவதில்லை

மனக்கவலை அகற்றுவார் தாதியரே

பஹீலு பண்ணாமல் எழுந்திருடி

வனிதை அவளுமே எடுத்துரைத்து

வண்ட கிழவியை தூக்கி வைத்தாள்

கனத்த கிழவியும் வெளியில் வந்து

கருதுவாளப்போ அவரைப் பார்த்து

ஊரில் இருந்துண்டு மதிகெட்டாய் நீ

உத்த நடுசாமம் உறக்கவேளை

பாரில் தண்ணீரும் கிடையாது போ

பலிகாரன் என்னுடனே வாது போட்டு

கூறி சௌதமும் முடுக்கி வந்தாய்

குடிகேடன் பொல்லா அறக் கொடியோன்

பெருத்த மிஸ்ரிலே ஐயாயிரம் பேர்

பக்கீரில் பெரியவன் இவனுமிப்போ

கரும சண்டாளன் என்னுடனே

கடூரம் செய்தானே ஒரு நிலையாய்

அருதி பண்ணினாய் என உரைத்து

அழுது புலம்பியே கொடியவளும்

பொருமி விம்மியே குடத்தருகே

பொல்லா கிழவியும் தண்ணீர் வார்த்து

மூடன் குடித்து நீ எழுந்துபோடா

மூளி அவளுமே முன்னே வைக்க

மூடன் நானில்லை தாதியரே

மொழியும் சலிப்பையும் நிவர்த்தி பண்ணி

அருந்துவதல்லால் வேறொன்றில்லை

அல்லா அறியவே சொன்னேன் உண்மை

தகவல் சொல்லி கேளடி நீ

தண்ணீர் அருந்தியே போகுமுன்னாது

ஒருவன் பக்கீரை வையாதடி

உந்தன் சலிப்பையும் சொல்லடி நீ

கருமம் என்றவர் வெறு வீணிடி

கடலில் மாண்டவன் வருவானோடி

கருதும் மொழிதான் சொல்லலாகும்

கருதால் விசயத்தை கருதலாமோ

கருதடி சும்மா தாதியரே

கரும் அகலாற்றார் போரார் அவர்

மருளும் பிடித்தவன் அலையுறாண்டி

மௌத்தா போனவன் வருவதுண்டோ

அருமை தாதியே சும்மா சொல்லு

ஆண்டோன் அகற்றுவான் உன் சலிப்பை

ஒருவன் நமக்கொண்டும் பயப்படாதே

உரையும் என கேட்க அவள் மொழிவாள்

ஒருவன் அருள் பெற்ற பக்கீரே கேளும்

உடையோன் கொடுத்தனன் பதினாறு பிள்ளை

இறந்து போகவே இருந்ததொன்று

எழுந்து நடக்கையில் புருஷன் மாண்டார்

பிரியப்பட்டு நான் வளர்த்தேன் பிள்ளை

உருவதாகி வயது பத்தில்

பெருதிகொடும் எந்தன் தமயன் வீட்டில்

பெண்ணுக்கு மோதிரம் போட்டேன் நானும்

போட்டேன் பாவிமகன் தனக்கு

பூரித்தவன் முன்னூறு ஜனத்துடனே

வாட்டமில்லாது என் மகனும்

வாரி கடல் முழுதும் தாண்டியேதான்

தாட்டியமாக அவனும் சென்று

சரக்கு விற்றவன் திரும்புகையில்

ஆடபாடமாய் வரும்போது

ஆழிகடலில் தாழ்ந்து போனான்

கேட்டேன் செய்தியை கொடிய பாவி

கிலேசம் அடைந்தேன் பக்கீரே நான் தான்

தாழ்ந்து பனிரண்டு வருடமாயிற்று

தலைவன் மௌத்தானான் இதுவரையும்

வாட்டம் மிகவாகி மடிகிறேன் நான்

வாயும் பேசுது வயிறும் கொதிக்கிறதிப்போ



www.sufimanzil.org

தேட்டம் அதுவல்லால் வேறொன்றில்லை

செப்பு இதுவல்லாள் வேறொன்றில்லை

எந்தன் மகனுக்கு பரிசமிட்ட

ஏந்திழை தன்னை இன்றிரவில்

வந்து மறு இடம் கல்யாணமும்

வனிதை தன்னை முடிக்கிறார்தான்

அந்த விசனத்தாலே அழுதேன் நானும்

அதுவே சலிப்பல்லால் வேறொன்றில்லை

வந்து பசியாறி எழுந்து போவென

வள்ளி உரைத்திட இவர் மொழிவார்

எந்தன் தாதியே சொல்ல கேள்

இறந்த மகன் நாளை வருவான் கண்டாய்

உந்தன் மனம் சற்று சலியாதே நீ

உந்தன் மருமகள் முந்தமுன்

உந்தன் தமயன் வீட்டில்தான்

உத்த ஜமாத்துகள் இருக்க கண்டார்

இந்த விசயத்தை எடுத்து கூறும்

இகழ்ந்து அவர்களும் அடிக்க வந்தான்

முன்னோன் முஹிய்யதீன் மேல் ஆணையிட

முடுகிய அவர்களும் மீறியேதான்

வந்து அடித்தால் கால் ஒன்றுக்கு நூறு

மாதே நான் அடிவாங்கி தாரேன்

சிந்தை தவறாமல் நடவுமெனில்

சீர் கேடன் குடிகெடுக்க வந்தாய்

நீதி சொல்லுகிறான் பாரடி நீ

மனமுடன் பேர் கெடோ இது மொழியும்

திரவாய் அவள் சொல்ல அடுத்த வீட்டார்

செய்தி அறிவோம் நாம் தாதியரே

ஒருவன் சோதனையாய் காணுதிப்போ

ஒன்றுக்கும் பயம் வேண்டாம் நானும் வாரேன்

வருவதும் வராததும் அறிவோம் நாம்

வராவிட்டால் போகட்டும் தாதியரே

கருத்தை தெளிவாக்கி அடுத்த வீட்டான்

ஹக்கன் முஹிய்யதீன் எடுத்தோதுவார்

வருவான் நாளை லுஹர் நேரம்

வருவது நிஜம் தப்பில்லையே

ஒருவன் அறியவே நானும் சொன்னேன்

உகந்து மனைபுக்கி வருமளவும்

இருப்பேன் நானும் நடவுமென்னில்

இழுத்து கொண்டு போனான் அடுத்த வீட்டான்

கருத்து கலங்கியே கிழவியரும்

கல்யாண வீட்டில் சென்றனரே

சென்று அவளுமே தமயன் வீட்டில்

சேர்ந்த ஜனங்களும் ஜமாத்துகளும்

அல்லா அருள்பெற்ற மூஸாநபி

அவர்கள் பேருள்ள ஆலிமானேர்

நல்லோர் பெரியோரும் பந்தலிலே

நிகாஹ் செய்யவே நினைத்திருக்க

ஸல்லல்லாஹ் நபி திருப்பேரரும்

சதி கொண்டுபோய் கிழவி சென்று

மறையின் நெறியுள்ள ஜமாஅத்தாரே

வல்லோன் ஸலாமும் உமக்கெனவே

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

உத்த தாதி நீ எங்கே வந்தாய

இறையோன் அருள் பெற்ற பக்கீரு நானும்

ஏங்கி அழுகையில் தண்ணீர் கேட்டார்

விரைந்து பாணியும் அவருக்கு ஈந்தேன்

உந்தன் சலிப்பையும் சொல்லுமென்றார்

எந்தன் சலிப்பதை கேட்டவரும்

இறந்த மகன் நாளை லுஹரில் வருவான்

உந்தன் தமையன் மனையில் சென்று

உகந்து நிகாஹையும் நிறுத்துமென்றார்

வந்தேன் அதுகேட்டு வந்ததற்கு

வள்ளிதனை மணம் சூட்டுண்ணாது

அந்த மொழி கேட்டு அவர் மொழிவார்

ஆலநபி சரஹை இழக்க வந்தாய்

இறந்த மனிதனும் வருவதுண்டோ

இவளும் மகனாலே பைத்தியம் கொண்டாள்

இருந்த பேரிலே மூஸா என்போர்

இவளை தள்ளியே கதவை அடையுமென்றார்

பிறகு இருந்ததோர் மோதினாருக்கு

பெரியோர் கண் காட்ட அவரெழுந்து

விரைந்து முன்வர அவள் மொழிவாள்

மேலோன் முஹிய்யதீன் மேலாணை என்று

வழிய கிழவியும் ஆணையிட

வந்து மு.:.மீனும் அசந்திருக்க

கலக்கமாகிய ஜமாத்துள்ளோரும்

கல்பு தடுமாறி இருப்பதாலே

உலக மாதாவின் மறியம் மீறி

உகந்து நிகாஹ் முடித்தோமானால்

தலையும் அது இரண்டாய் தெரித்து விழும்

தக்கம் அது பண்ணகூடாதென்றே

இன்று நிகாஹ் நிறுத்தி நானும்

இப்போ மொழிவதை அறிந்து நானும்

கண்டு பார்த்து நாம் செய்வதல்லால்

கல்யாணம் செய்யக் கூடாதென்று

வின்றார் கிழவிக்கு நீயுமிப்போ

மேலோன் லுஹருக்கு வராதிருந்தால்

மன்றாடும் நபி சரகின்படி

மஜ்லிஸில் உன்னைவிட்டு கல்லெறிவோம்

செப்பும்படி வந்தால் நலமதாகும்

ஷெய்கு முஹிய்யதீனுக்காக நிறுத்தி வைத்தோம்

தப்பிதமானால் சங்குவாரி

தப்பாது சொன்னோம் நடவுமெனில்

உகப்பாய் உரைத்திட கிழவியரும்

ஒடுக்கமாகியே திடுக்கமுற்று

தப்பமது சொல்ல அடுத்த விட்டான்

தாதிதனை கூட்டி மனையில் வந்து

வந்த கிழவியும் வாய் குழறி

வள்ளலிடம் சொல்ல அவர் மகிழ்ந்து

சிந்தை மயங்காதே தாதியரே

சேயன் வருவான் லுஹர் நேரம்

சொந்தமானதேர் கன்னியும் நீ

சோவனம் செய்வாய் பயப்படாதே

முன்னோன் அருளாலே வருவான் தாதி

மொய்குழல் தனக்கு வாக்கு மீந்தேன்

கருணைக்குடையதோர் முஹிய்யதீனும்

கடற்கரையோரம் வந்து நின்று

ஒருவன்தனை நாடி முஹிய்யதீனும்

ஒருகால் மேலொரு கால்வைத்து

பெருக ஒரு சப்தம் போட்டு நிற்க

பெரிய நாயனும் ஏன் ஏன் என்றான்

இறப்பும் பிறப்பும் தான் இல்லாதொரு

ஏக பெரியோனே தம்பிரானே

உந்தன் மஜ்லிஸு விட்டெழுந்து

முஹல்லதீவுக்கு ஏகும்போதும்

வந்து நடுசாமம் மேலேதன்னில்

மடவாள் அழுதாள் ஒத்த குரல்

எந்த சவனத்தை தள்ளினாலும்

இந்த சவனத்தை தள்ளூன்னாது

அந்த மனைசென்று குரல் அமர்த்தி

அகலம் என சொல்லி அவள் மனையே

சென்று புக்கியே தண்ணீர் கேட்டு

சினந்து ஒரு சப்தம் போட்டு நின்று

வந்து கிழவியும் மகன் சலிப்பை

வாயும் ஓயாமல் அழுதிருந்தால்

கண்டு பின்னொரு சப்தமிட்டேன்

நெடிய கிழவியும் அமரவில்லை

என்றும் உள்ளவன் உந்தன் சலிப்பை

இஹ்லாசு ஆக்குவான் என செப்பினேன்

அந்த மொழி கேட்டு தண்ணீர் வார்த்து

அறுவை கொடு வந்து முன்னே வைத்தாள்

உந்தன் சலிப்பதை சொல்லுமென்றே

எந்தன் மகனும் ஜனம் முன்னூறும்

சிந்தை மகிழ்ந்துதான் தீவில் சென்று

செம்பொன் ஏற்றியே திரும்புகையில்

வந்து அவர்களும் நடுகடலில்

மாண்டு பன்னிரண்டு வருடமாயிற்று

எந்தன் தமயன் மகள் தனக்கு

எந்தன் மகனே நான் பரிசமிட்டேன்

இன்று கல்யாணம் ஆனதாலே

ஏங்கி நானுமே அழுதிருந்தேன்

வென்று உரைத்தனன் இது மொழியும்

வேறு சலிப்பொன்றுமில்லை என்றாள்

கன்று தவிக்கிற பசுவது போல்

கலங்கி ஏகினாள் அதனைப் பார்த்து

வென்றேன் அவருக்கு நான் வாக்கதுவும்

மேலோன் லுஹருக்கு மகன் வருவானென்று

எந்தன் வாக்குமே பொய் போகாமல்

இறந்த மகனுடன் முன்னூறு ஜனம்

வந்து கப்பலில் அணுவளவும்

வைரம் பொன்வெள்ளி குறையாமலும்

எந்தன் சுப்ஹானே யாரஹீமே

இப்போ நாளை லுஹர் நேரம்

வந்து சேரவும் கிருபை செய்வாய்

வழுத்த பகுமதை உருக்கி பார்க்க

உருக்கி பகுமதை ஒத்த காலில்

உகந்து நின்றிட அர்ஸும் குர்ஸும்

பரிதவிக்கிறது லவ்ஹுகலம்

சுப்ஹானல்லாவும் மொழிவானப்போ

அர்ஸும் குர்ஸும் லவ்ஹு கலம்

அகல கிழிக்கிறது காலை எடும்

ஒருவன் உரைத்திட அவர் மொழிவார்

உகந்து வாக்கு ஈந்தால் காலெடுப்பேன்

எடுக்கேன் என சொன்னாய் சிறுபாலரே

குழந்தை புத்தியா இதனை கேட்டார்

அழிந்த மனிதரும் பிழைப்பதுண்டோ

அறுவை தனக்கு வாக்கை ஈவாருண்டோ

முழுதும் உடையோன் நீ சொன்ன பதில்

மொழிந்தேன் வாக்கு நான் என மொழிய

அழிந்த மனிதரை எழுப்பி நானும்

உறுதி சொன்னது உண்டோவென்னில்

தொழுது மஜ்லிஸில் இருக்கும்போது

சொன்னாய் அல்லவோ எந்தனக்கு

உரைத்தாய் நான் கேட்ட வரமதெல்லாம்

உகப்பாய் நான் தாரேன் நட என்றதால்

இறையோன் உன் ஏவல் தட்டாமலே

எழுந்து வந்தனர் அதனாலேதான்

விரைந்து கேட்டு நான் அதனாலேதான்

மேலோன் தகவல் சொல்லுன்னாது

அந்தபடியாலே நானும் கேட்டேன்

உரைத்த மொழிக்குமே மலக்கு சாட்சி

வல்லவா எந்தன் ரஹ்மானே நீ

வாக்கும் கொடுத்தாக்கால் முஹல்லதீவு

சொல்Nலுன் ஒரு நாளும் நானுமிப்போ

செல்வது பகுதாது திண்ணமென

யாரும் போகாத தீவு அதற்கு

இப்போ உன்பேச்சு நிகழாமலே

உகந்து வந்தேன் நான் இதுதொலைக்கும்

இன்னும் தொலைக்கு போவது எந்தவிதம்

சிறுபிள்ளை இது என்ன புத்தி

செத்த மனிதரை எழுப்பி நானும்

தருகிறோமென்று சொன்னதுண்டோ

சரிதை தவறாமல் தீவில் சென்று

குறையா குபிரதை இஸ்லாம் ஆக்கி

காரணரே வந்தால் வேண்டியதெல்லாம்

தருவேன் கேட்கமுன் நடவுமென்னில்

தந்தால் ஒழிய நான் போகமாட்டேன்

வருசை புகழாரும் உரைத்திடவும்

மலக்கை கூவியே கேட்பானப்போ

அருமை புகழாரே மௌத்தானபேரை

உயிர் விடுவேனென்று உரைத்ததுண்டோ

கிருபைக்குடையோனே நீ சொல்லவில்லை

கேட்டவரமெல்லாம் கொடுப்பே னென்றாய்

அருளினது கொண்டு அவரும் கேட்டார்

ஆனதால் நீயும் கொடுக்க வேணும்

கொடுக்காதிருந்தாக்கால் முஹல்லதீவுக்கு

குத்பு எடுத்தடி வைப்பதில்லை

முடுக உரைத்திட மலக்குகளும்

முன்னோன் உரைத்திட்டான் அவரைப் பார்த்து

கடலில் நீங்களும் சென்றுலாவிப் பார்த்து

கப்பல் சிறா எழுப்பி கொடுவாவென்றார்

**விருத்தம்**

கடலளவு பெரிய நாயன் உரைசெய்ய மிகவும் வானேர் கனகத்துடனே தேடி இடைவிடாமல் ஏழுகடல் தேடி வாடாதவர் தளாவி ஏதுமில்லை என இவர் ஓதவே வாடிவிழ அகதோன் தானும் இருவிழி கருணை கூர்ந்திட வணிகனும் முன்னூறு ஜனத்துடன் மீதுவர நபிபேரர் ஆச்சரிய மிதுவாக்கினார் ஜெயமென இனிது வாஹிதிகள் கிழவியர் சேயன் திகழ்வோடு ஒரு

காசு அவரவர் ஒருகை இசைத்தனர். கிழவிகள் Nசுயும் ஈயப் போடும் ஒவ்வொரு காசும் இறைநபி பேரரிடம் இயம்பியே அவர்கள் வாங்கியே தங்க காசு மாணிக்க சோலிஹாவில் ஓங்கியே இட்டுதானே ஒருபெரு நாயன் தன்னை நான்கு எனும் விசத்தினாலும் நலவுடன் புகுந்து கொண்டு பாலரும் அவ்விடம விட்டு பகிர்ந்து அங்கே மகிழ்ந்து சென்றார். சென்றவர் கரையோரமாய் சொல்வராயிரம் இறக்கி வைத்து மண்டலம் புகழும் முஹிய்யதீனும் மஞ்சுகுடையிட லுஹர் தொழுது ஆண்டவர் மகிழ்ந்து தஸ்பீஹ் ஓதி அலவ கரையோரம் மகிழ்ந்திருக்க.

**தொங்கல்**

என்றுமுள்ளவன் தன்னருளால்

இழந்த கப்பலும் மீண்டு வந்தேன்

குசியதாகி எளியோருக்கும்

கோமான் பேரிலே சதக்கா செய்ய

மிஸ்ரு தனிலுள்ள தீனோர்களும்

வீட்டு ஜனங்களும் சவுதமும் கேட்டு வந்து

தஸ்லீம் செய்தவர் ஒன்றுக்கொன்று

சகல ஜனங்களும் மனம் பூரித்து

முஸ்லீம் மு:மின்கள் எல்லோர்களும்

முதிய தாயாரும் வந்து கண்டாள்

நரைத்த கிழவியும் கண்ணை உற்று

மனதுமுருகியே புலம்பலுற்றாள்

இறையோன் பக்கீர் துஆவினாலும்

ஏகன் கிருபையால் இழந்த உயிர்

கரையும் கண்டியோ என் மகனே

கட்டியணைத்தவள் நீர் சொரிந்து

விரைந்து கூறியே கரைந்தழுது

மயக்கம் தீர்த்தவள் மகிழ்ந்தனளே

மகிழ்ந்து நிற்கவும் கிழவியரும்

வந்து மிஸ்ரு உள்ளோர் கேட்பதானால்

உகந்து உம்மிடம் சொன்னவர் யார்

உரையுமெனக் கேட்க அவள்மொழிவார்

ஜெகமும் துலங்கிய சிறுபாலரும்

சிறந்தாயுதம் மின் வெட்டவே

வந்தார் வயது பதினாறாக

வல்லோன் அருள்பெற்ற பக்கீரவரும்

அந்த வேளையில் மகனை தேடி

அழுது இருக்கச்சே இவரும் வந்து

சந்திரன் ஒளி மின்னும் சிறுபாலறார்

தண்ணீர் கெட்டொரு சப்தமிட்டார்

வந்த வகையுமே அறியாமலே

வந்து திட்டினேன் அவரைப் பார்த்து

செந்தாமரை பூமுகத்தழகும்

செப்பினார் அப்போ வெகுதயவாய்

எந்தன் தாகமு; தீரும் தாதி

இறையோன் அகற்றுவான் உன் சலிப்பை

வந்துரைத்தனர் இரக்கமதாய்

வந்தேன் மனதேங்கி நீருமுண்டு

வள்ளல் திரு முன்னே வந்து நின்று

சந்திரன் அவருக்குமே ஒப்பல்லவே

தரணில் அவரைப் போல் யாருமில்லை

தங்கம் பொன்மேனியானவரே

உலகில் அவருக்கொப்பு சிடையாதெங்கும்

ஒருவன் அருள்பெற்ற கோமான் கானோம்

இலங்கும் சிரசிலே இரத்தின குல்லாய்

இடையில் புலி தோலும் பொன்கயிறும்

வலது இடதுமே ஆயுதமும்

வலது தோலிலே பொன்கோதடியும்

துலங்கும் பாத குரட்டிலேறி

சூரியன் ஒளிபோல் இருந்தவரும்

அருமை தாதியே உன் சலிப்பை சொல்

அகத்தில் அல்லாஹ் அவன் மாற்றுவான்

பரிதி துலங்கியே பக்கீர்தானும்

பகருமென கேட்டார் நான் மொழிந்தேன்

அருமையாகவே அவர் மொழிந்தார்

உந்தன் மகன் நாளை லுஹறில் வருவான்

உகந்து நிகாஹ்ஹது எழுத முன்னே

அவருக்கு உரையுமே தாதியரே

கொஞ்சும் கிளி மொழி இதழுடையோர்

கூறும்மொழி தப்பி அடிக்க வந்தான்

நெஞ்சும் உணராம்ல நீர் மொழியும்

நெடியோன் முஹி;ய்யதீன் மேலாணை என்றும்

மிஞ்சி உன்னையும் அடிக்க மாட்டார்

மீறி அடித்தாக்கால் ஓர் அடிக்கு

பத்து நூறு வாங்கி தாரேன்

தஞ்ச மிக உள்ள தாதியாரே

சந்தாபமில்லை வாங்கி தாரேன்

என்று கூற நான் பயந்து

என்குடி கெடுக்க வந்தாய் என்றேன்

கொண்டு புயமுல்ல சிறுபாலரும்

கலங்கியழுகாதே என உரைத்தார்

நன்று மொழி சொன்னேன் பயப்படாதே

நாயன் அருளாலே உன்மகன் வருவான்

சென்றுரைத்து நீ வருமளவும்

சிறந்திருக்கிறேன் போய்வாவென்றார்

அந்த மொழி கேட்டு நானும் வந்து

அருள அவர் கேட்டு அடிக்க வந்தார்

வந்து முடுகி நான் ஆணையுமே

வலுத்தினேப்போ முஹிய்யதீனும்

சிந்தை தடுமாறி எல்லோரும்

செப்பு மொழியதை ஒப்புக் கொண்டார்

முன்னோன் அருள்பெற்ற பக்கீரே வாரும்

மொழிந்த துஆவையும் கபூலாக்கினான்

கண்ட அதிசயம் இதுவேயல்லால்

கருதவோனான்றுமில்லை என்றாள்

சண்டாள பாவி கொடியவள் நானும்

பக்கீர் அருமையும் அறியாமலே

வண்டதனமாக பேசிவிட்டேன்

வல்லோன் பொறுப்பானோ என்பிழையை

மண்டை எரியுது என் வயிறு எரியுது

வல்லோன் பொறுப்பானோ என்றழுதாள்

கருது மொழியையும் நினைத்தவளும்

கலங்கி மயங்குவாய் நீர் சொரிவாள்

இருந்தபேலெ;லாம் மனதை தேற்றி

இயம்புவாரப்போ எல்லோர்களும்

பெரியவர் ஆனபடியினாலே

பன்னிரண்டு வருடம் இழந்த உயிர்

உருவதாக்கினார் முஹிய்யதீனும்

பங்கிலிருந்து உதவி செய்தார்

உலகில் மௌத்தான பேரெழுப்ப

ஒருவரால் முடியாது முஹிய்யதீன் அல்லால்

தளத்தில் ஒருவரால் முடியாதுகாண்

சகீதமாய் வந்தவர் முஹிய்யதீன் ஆகும்

துலக்கமாகவே எடுத்துக் கூறி

துய்யோன் அளவிலே துஆவிரைந்து

கலக்கமகற்றினார் முஹிய்யதீனும்

காரணர் என்றும் வருவாரென்றே

இருந்தபேரெல்லாம் உண்மை கொண்டு

இயம்பினாரப்போ மோதினுக்கே

வருசை தோறுமே நீரும் சென்று

பெரியோன் முஹிய்யதீன் வருவாரென்று

தர்க்கம் செய்யாமல் தீனோர்கள்

தயவு செய்யுமே தமக்குமிட்டே

திரும்பி வந்திட மோதினாரும்

மீரான் முஹிய்யதீன் வருவாரென்றே

பன்னிராயிரம் தெருவிலுள்ள

பாவைமார்களும் துஆவிரந்து

கண்ணின் மணியான முஹிய்யதீனும்

கண்ணிலெப்போ நாம் காண்போமென்று

தன்னுள் மகிழ்ந்து தனித்தனியே

தானவன் ஹைர்வாரி வைத்துமேதான்

எண்ணி எண்ணியே வரும் பக்கீருக்கு

இவரோ அவரோவென்று அறிவதானார்

ஏகன் முஹிய்யதீன் பொருட்டினாலே

எளியோர் வலியோர் ஆகிடவும்

பாகமுடன் வந்து கிழவி மகன்

பாரம் இறக்கியே விடுதி வந்து

தோகை மயிலாலே சோபனமும்

துலக்கமாகவே முடித்தவரும்

ஏகன் முஹிய்தீன் ஆண்டவரே

ஏற்றி மகிழவும் முஹிய்யதீனும்

வந்தார் நெடுந்தெரு தன்னை விட்டு

வள்ளல் குறுத்தெரு வருகும்போது

சிந்தை மகிழ்ந்துமே சர்படாதி

சிறக்க ஓடுமே மாற்றுகையில்

முன்னோன் இஸ்ராயில் அவர் ஹயாத்தை

முடுகி கொடுபோக கீழே விழுந்தார்

அந்த நேரத்தில் முஹிய்யதீனும்

அவர் ஹயாத்தை நிறுத்துமன்றே

மாணிக்க சோட்டா கோடாரியும்

வள்ளல் அனுப்பிட அவர் நிறுத்த

பூனித்தவருமே நிற்கும் போது

பைங்கொடி நாலுபேர் வந்தவராய்

கூடியவர்களும் தூக்கி சென்று

கோதை மனை புக்கி அழுதிருக்க

ஆணி பொன் மேனி முஹிய்யதீனும்

அவர்கள் மனை சென்று ஹைர் கேட்டார்

வருசை புகழாரும் கேட்டிடவே

மங்கை மூத்தவள் கோபம் கொண்டு

கருதுவாளே அவனைப் பார்த்து

காசினியில் இருந்தொன்று மதிகெட்டாயோ

அருமை தகப்பனை இழந்து நாங்கள்

உருகி அழுகச்சே ஹைர் கேட்டாய்

பெருமை தனமுள்ள பக்கீரையும்

பிடித்து தள்ளி அடையுமென்றாள்

சிறிய கன்னியும் எழுந்து சென்று

செல்வர் தமக்குமே சலாமுரைத்து

அல்லா அருள் பெற்ற பக்கீரே நீர்

என் தமக்கை சொன்னதை அல்லாஹ்வுக்காய்

சொல்லை நீங்களும் மனதில் வையார்

துலங்கும் பக்கீரே இருமென்னில்

நல்ல மனையாளும் மனையில் புக்கி

நாதர் தமக்குமே அமுதெடுத்து

வள்ளல் புயத்தாரும் முன்னே வைக்க

வயிறு பசியாறும் என உரைத்தேன்

சிறிய கன்னியும் உலாவி நின்று

சிறியவளும் ஓய்வு இல்லாமலே

கருத்து கலங்கியே அழுது நிற்க

காதிர் முஹிய்யதீன் கடை கண்ணோக்கி

வருசை மடவாளே நீயுமிப்போ

ஓய்வுமில்லாமல் அழுவதேது

பொருமி அடக்கியே இவள் மொழிவாள்

பெரியோன் பக்கீரே சொல்ல கேளும்

சொல்ல தொலையாது என் சலிப்பு

சுருக்கி சொல்லுறேன் தாயில்லாததால்

வல்லமையுள்ளார் என் தகப்பன்

வகுத்தானவருக்கு நாலு குமர்

எல்லா குடியிலும் நாங்கள் எளியோர்

ஏகி ஒரு காசு கொண்டு வருவார்

அல்லா அருளாலே கனாஅத்துமே

அதபு நெறியாக புசித்து வந்தோம்

எளிமைத் தனத்தாலே எங்களையும்

ஏந்தி கொடுப்பார் யாருமில்லை

எளிமையாகினோம் நாங்களுமே

இனிமேல் ஆதரிப்பார் யாருமில்லை

பழுதுபட்டுமே என் தகப்பன்

படைத்தவன் களாவில் ஆனாரிப்போ

முழுது முடையவன் சோதனையால்

முடுகி கைகெட்டேன் ஆனாதாலே

எந்தன் சலிப்பையும் உள்ளகற்றி

ஈந்தேன் அமர்ந்து பசியாறுவீர்

சிந்தை உருகியே முஹிய்யதீனும்

சிந்தை கலங்காதே பெண்ணரசே

உந்தன் தகப்பன் மூணே முக்கால்

உகந்து நாழிகை விழிப்பார் கண்டீர்

வந்து நீமே சலியாதையும்

வல்லோன் கிருபையால் எழுந்திருப்பார்

பெண்ணாரது கேட்டு மனமகிழ்ந்து

வல்லோன் பக்கீரே பசியாறுமென்னில்

உண்ணேன் வஜீபனம் பெண்ணரசே

உந்தன் தகப்பன் ஹயாத்தெழுப்பி

பின்னால் வந்து நான் புசிப்பேன் தங்கை

பொருமி சலியாமல் இருமென்று

கன்னி தமக்குமே வாக்கும் ஈந்து

கடுக நடந்தார் முஹிய்யதீனும்

வருசை புகழாரும் வானம் புக்கி

வான மலக்கையோர் அடியடிக்க

திரும்பி பார்த்தவரே துரைப்பார்

தீனின் மணியே ஏன் அடித்தீர்

கருதுவாரப்போ முஹிய்யதீனும்

ஹயாத்தை விடுமென அவர் மொழிவார்

ஒருவன் ஏவலாய் கொண்டு போறேன் நான்

உத்தரவு இல்லாமல் வருவதுண்டோ

சரிதை அறியாமல் அடிப்பதுண்டோ

சாத்த மலக்குமே முஹிய்யதீனும்

கருணை பொங்கியே ஆயுதத்தை

கண்ணுமவர் காட்ட அடிமேல் அடி

நெருப்பு பறக்கவே அடித்திடவும்

நெருப்பாலெறிந்தாலும் ஹயாத்தை விடேன்

ஒருவன் ஏவலை அறிந்திருந்து

உங்கள் தனக்குமே கோபம் ஏது

என்னை அடித்து உமக்கென்ன பலன்

இயம்ப கேளுமே குர்ஸில் வேந்தே

சொன்ன உடனேதான் மனதிளகி

துலங்கும் முஹிய்யதீன் அமர்ந்திருக்க

முன்னோன் இஸ்ராயில் மொழிவாரப்போ

முன்னோன் ஏவலாய் முஹல்லதீவை

அண்ணலே இஸ்லாமாக்க போரீர்

அதுவை நிறுத்தி பகுதாதுக்கே

இப்போ நடந்தீரா ஏவல் தட்டி

இலங்கும் ஹயாத்தை விடுவேனெனில்

செப்ப மலக்குமே இவர் மகிழ்ந்து

சீமானிடம் சென்று வருமளவும்

உகப்பாய் இருமென உரைக்க

குத்பு ஆயுதம் காவல் வைத்து

செப்பமுடனேதான் அர்ஸில் சென்று

செல்வர் ஒரு சப்தம் போட்டதுவே

எந்தன் பாலரே இனியவரே

இப்போ தீவுக்கு ஏகாமலே

வந்த வகையேது சொல்லுமெனில்

வள்ளல் முஹிய்யதீன் மொழிவாரப்போ

உந்தன் கிருபையால் நெடுந்தெருவை விட்டு

உடையோன் குநற்தெருவருகும் போது

எந்தனிடம் ஒரு மாது நின்று

எளியோர் வசப்படாதேயுமே

வல்லவா என்முன்னே தள்ளி விட்டாய்

மௌத்தாகவும் நாலு பெண்கள்

இல்லாமதிலே தான் இருந்து வந்து

ஏற்றி கொண்டு போனார் பெண்களுமே

பொல்லா சௌனமும் தடையுமாச்சு

போவோம் வடக்கேயே போவோமென்று

நல்லமனை சென்று ஹைர் கேட்டேன்

தங்கை சிறுகன்னி அமுதளித்தே

பொருமி விம்மியே ஓய்வில்லாமலே

பைங்கொடி நீர் சொரிந்து சென்று

சரிதை அறிந்து நான் கேட்கும்போது

சலிப்பை உரைத்தனன் இளைய கன்னி

உறுதி சொல்லியே வாக்கு மீந்து

உறங்கி முழிப்பார் மூணே முக்கால்

சிறுபிள்ளை புத்தி என்ன இது

ஜெகத்தில் இறந்தோரை எழுப்புவதற்கு

விரும்பி வகுத்தனன் இதுக்குதானோ

வேலை இதுவல்லால் வேறொன்றில்லை

அருமை புகழாரே இஸ்லாமாக்கி

உகந்து நீருமே வரமுன்னமே

அருமை மடவாளை மணமும் சூட்டி

அகத்தில் கொடி ஏழும் பறக்க வைப்பேன்

சிறிய பாதரே நடவுமெனில்

செய்வாய் சக்கில்லை உடையவனே

தந்தையில்லாத சோபனமும்

தங்கைமார்க்கு வாசமாச்சுதோ

உந்தன் பேரிலே இளையகன்னி

உகப்பாய் இருப்பதால் அவளுக்காக

முன்னோன் கிருபை செய்யவேணும்

முதலோனே தகவல் சொல்லுன்னாது

எந்தன் வாக்குமே பொய் போகாமல்

எளியோர் ஹயாத்தையும் விடலாகுமோ

விடவும் சொன்னாய் இனிமேலாக

மேவும் ஹயாத்துக்கு மன்றாடவும்

கடுகி எனதிடம் வரக் கூடாது

கருதுமென கேட்க அவர் மொழிவார்

முடுகி ஒருநாளும் வருவதில்லை

முகிலார் ஹயாத்தையும் விட்டுவிடு

திடவார் உரைத்திட இறையவனும்

சேர்ந்து ஹயாத்து நடமென்றான்

இறையோன் உரைத்திட இவர் மகிழ்ந்து

ஏகி இஸ்ராயில் தன்னை கேட்க

விரைந்து சென்றது ஹயாத்துமிப்போ

விளம்பி இஸ்ராயில் மொழிந்திடவும்

மறையின் நெறியாரும் மனையில் வந்து

வள்ளல் உருமாறி ஹைர் கேட்க

சிறிய கன்னியும் அகமகிழந்து

செல்வர் தனக்குமே சலாமுரைத்து

பரமதானியில் இருத்திவைத்து

பெரியோர் தமக்குமே அவர்க்கமுது

கன்னிய மடவாளும் முன்னே வைத்து

கைக்கு நீர் வார்த்து உபசரித்து

அண்ணலே எந்தன் மாதாவே நீர்

அருந்துமென சொல்லி அவரருந்தி

முன்னோன் பேரிலே துஆவிரைந்து

முதல்கள் மிகுதி கொடுப்பானென்றே

வருசை புகழாரும் துஆவிரைந்து

மங்கையே நான் முன் இது வழியே

வரும்போது நான் அழுகை கண்டேன்

மனையில் வெகுதூரம் சென்று புக்கி

திரும்பி நான்வர செழிப்பு கண்டேன்

செப்புமென கேட்க அவள் மொழிவாள்

ஒருவன் அருள்பெற்ற பக்கீரே கேளும்

உம்மைபோல் ஒரு அழகுடையோர்

பிரியமுடன் வந்து ஹைர் கேட்டார்

பிதாவும் மௌத்தாகி அழுதோம் நாங்கள்

பெரிய தமக்கையும் கோபம் கொண்டாள்

பிதாவும் மௌத்தாகி அழுதோம் நாங்கள்

உகந்து நான் வந்து சலிப்பகற்றி

வறுமை அகற்றியே மனையில் சென்று

வள்ளல் தமக்குமே அமுதம் வைத்து

பொருமி விம்மியே அழுதியிருந்தேன்

பெரியோன் என்னைப் பார்த்து உரைக்கலானார்

வந்துரைத்ததனன் அவர் தமக்கு

மாதா விழுந்த அரப்பாவிகள்

சிந்தை கலங்காமல் எந்தன் பிதா

சீர்தூக்கி இதுவரையும் காப்டபாற்றினார்

இந்த நகரத்தில் கூலி செய்து

இலங்கும் காசு ஒன்று கொண்டு வருவான்

புத்தி போகாமல் நாங்கள் அதை

முன்னோன் அருளாலே புசித்திருந்தோம்

சிந்தை கலங்குகிறோம் இப்போமே

சேர்த்து பிடிப்பார் ஒருவருமில்லை

முழுதும் உடையவன் எழுதினான்

ஊரிலொருவரும் அமர்த்தவில்லை

பழுதுபட்டு நாலு குமரிலிருந்து

பாரிலிருப்பதென்ன பலன்

அழுதேன் துக்கத்தால் வேறொன்றில்லை

அல்லா எழுதினான் எங்கள் தலை

அந்த மொழிகேட்டு அவர் மொழிந்தார்

நங்கை மயங்காதே உன் தகப்பன்

வந்து மூணேமுக்கால் நாழிகையில்

மௌத் ஹயாத்தாகி எழுந்திருப்பார்

சிந்தை மகிழ்ந்து அவர் உரைத்தார்

செப்பும்படி அவர் எழுந்தார்

வந்து நாங்களும் மகிழ்ச்சியானோம்

வல்லோன் பக்கீர் பரக்கத்தாலே

சிறுமை அகன்றது பக்கீராலே

செப்ப மறுமொழி இல்லையென

சரிதை உரைத்தவர் உம்மை போல் தான்

சாடை காணுது அண்ணலாரே

கருத மடவாரும் அவரும் கேட்டு

கத்தன் கொடுப்பான் அதிக வாழ்வும்

ஓர்மை புகழாரே உரைத்தவரும்

உகந்து நடந்தனர் முஹிய்யதீனை

நடந்து செல்லவும் முஹிய்யதீனென்று

தங்கைபின் அவள் நினைத்து கொண்டு

தங்கை கடை சென்று பார்த்தவளும்

தானோன் பக்கீர் அவர் தானென்று

மடவாள் நினைத்து உருகியேதான்

வகை மோசம் போனோம் என்றறிந்து

திடவார் முஹிய்யதீனும் திரும்பி பார்த்து

செல்வர் கைகாட்டி நடந்தனரே

விரைந்தவர் ஏகபின் மடவார்

மெல்லிய அவளுமே மயக்கமுற்று

இறையோன் அருள்பெற்ற பக்கீரவர்

இயல்பு தெரியாமல் நாமிருந்தோம்

தரையில் நானும் எப்பொழுதும்

சகீதமாகவே காண்போமென்று

கரைந்து உருகியே பெண்மடவாள்

கனவிலாகிலும் நாடாரோதான்

இருந்து ஏகவும் முஹிய்யதீனும்

இலங்கும் மிஸ்ரு எல்கை தாண்டி

கருத்தில் வழிதாண்டி நடந்திடவும்

கடியவழி தாண்டி காடு புக்கி

வெறுப்பு வந்தவர் மனம் சடைய

மேலோன் சோலிஹாக்குள்ளிருந்து

அருமை பாலரே சடவுமேது

உமக்கு பட்சிகள் துணைவருகிறது

விரும்பி அதனுடன் பேசி நடவும்

மேலோன் உரைத்திட பட்சிகளும்

சிறகு அடித்துமே கூவியேதான்

சித்த தந்தை வள்ளுர் வர்ணம் போடி

கர்ச்சான் காடை கௌவ்தாரியும்

காகம் பருந்து செவ்வல்லூரும்

சிருநத்த பூஞ்சிட் தொண்டலுட்டு

செம்புகம் தாரா குயில் மயிலே

இறையோன் அருளாலே வனங்கள் தோறும்

இடதும் வலதும் தஸ்லீம் செய்து

விரைந்து அதுகளுமே பாதை கூட்ட

மீரான் முஹிய்யதீன் விரைந்தேகவும்

கருமா முகில் வந்து கவிகையிட

காலும் மதிபூமி தோயாமலே

சிறுவர் வனம் தாண்டி முகிலை வனம்

சிறந்த வனம் தாண்டி பாலைவனம்

பாலைவனம் தாண்டி தேக்வனம்

பருந்து கிரிகளும் ஆறுதாண்டி

சோலைகளும் பூங்காவனம் தாண்டி வந்தடுக்க

சோபனமாக அதிலிருந்து

பாவா ஒன்பது பழம் அருந்தி

நாதர் மகிழ்ந்து எழுந்தவரும்

கோலகோலமாக பட்சிகளும்

கூவி விளையாடி நடந்ததுவே

நடந்து செல்லவும் ஆலமரம்

நாலுகாத வழி அகலும் படர்ந்து வந்து

ஆலவிருட்சமது பழம் சொறிய

அடைந்து மந்திகளும் குதி பாய்ந்திட

அதிலே குடியாக வாழ்ந்திருக்கும்

திடவாரேகவும் அதுகள் வந்து

தூத்து போற்றியே வணங்கிடுமாம்

வரிசை புகழாரும் அகமகிழந்து

முசல்லா பாயுமே விரித்தவரும்

பரிசை புகழாக ஆயுதமும்

பின்னும் முன்னுமாக சூழ வைத்து

திருசை புகழாரும் கோதடியை

சிறப்பாய் சுருட்டியே தலைக்கு வைத்து

ஒருவன் தன்னையும் மனதில் வைத்து

உகந்து லுஹருமே தொழுதனரே

இறையோன் லுஹருமெ தொழுதவரும்

எழுந்து நாலுதிக்கும் விரைந்து பார்த்து

உரைந்த பூமியும் பொன்னீருமாய்

உருக்கி வார்த்தாபோல் இருந்திடவும்

மறையின் நெறியர் மரத்தடியில்

மனது உகந்துமே வந்திருந்து

இறையோன் அமைத்தனன் இந்த மரம்

எங்கும் நாம் காணோம் இந்த பூமி

இறைவன் அருளென்று மனதிலுண்ணி

இருக்கும்போது பசியெழும்ப

அறிய பெரியோனும் மறியமுக்கு

அருளினான் ஒடுக்கு கொண்டு போவேனென்று

பெரிய புகழாக அவரெழுந்து

பீர்தஸ்தகீர் முன்னே வைத்து

ஒருவன் சலாம் எடுத்துரைக்க

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

வருசை மடவாரே நீயார் சொல்லும்

வள்ளல் முஹம்மது நபி தமக்கு

உரிய மனம் சூட்டும் மறியம் நானே

உமக்கு பாட்டியாரும் கண்டீர்

அருமை புகழாரே பசியாருமெனில்

அகமகிழ்ந்து எடுத்துரைத்து

வரிசை மடவாரே இந்தபூமி

மகத்துவமென வாழ்த்துமென்றார்

வாழ்த்தகேளும் இதன் புதுமை

வாழ தன்னாசி இருந்துவிட

பழுத்த பழமாக அவரிருந்து

பஞ்ச பாண்டவர் ஏகும் போது

அழிவு வந்தது இவர் தமக்கு

அவர்கள் இருந்து செம்புதாச்சு

முழுதும் உடையவன் கிருபையென்று

மொழிந்து அவரேக இவர் மகிழ்ந்து

மகிழ்ந்து முஹிய்யதீன் துயிண்டவரும்

வள்ளல் துயிலவும் சன்னாசியும்

உகந்து விண்ணிலே பறந்துவர

ஒடுங்கா காபிர் நிழல்படவே

அகத்தில் கோபம் எழுந்திடவும்

ஐம்பொன் சோட்டாவும் கோடாரியும்

உகந்து கண் காட்ட அதுவெழுந்து

உரைத்த தன்னசை அடித்திடவே

விரும தன்னாசி மனம் பதறி

வேதரே சாமி நீங்கள் யாரு

விருவி அவன் கேட்க அவர் மொழிவார்

வேதர் முஹிய்யதீன் எங்கள் பாவா

ஒருவனருள் பெற்ற முஹிய்யதீனும்

உகந்து மரத்தினில் வந்து நிற்க

கிருபை கடலார்மேல் நிழல்படவும்

கெட்ட பயலே நீ பறந்து வந்தாய்

நடடாவென சொல்லி அடிமேலடி

நடுங்க அடிக்கவும் பயந்துரைப்பான்

உடையோன் முஹிய்யதீன் இருப்பதுவும்

உகந்து நானுமே அறிந்தேனாகில்

தடையுமில்லாமல் வருவதுண்டோ

ஸெய்யிது முஹிய்யதீன் தூதனாரே

அடியாதென்னையும் அடியாதையும்

அல்லா மேலாணை நபி மேலாணை

அல்லா அருள் பெற்ற மூஸா ஈஸா

ஆதம் பயகம்பர் நபி மேலாணை

வல்ல முஹிய்யதீன் பாதத்தானே

வாரேன் ஒருபோதும் இதுவழி நான்

நல்ல புகழுள்ள தூதமாரே

நானும் இனி வந்தால் என் சிரம் வெடிக்கும்

சொல்ல அவனுமே இவருரைப்பார்

சொன்ன மொழியுமே செவியில் கேட்டால்

உன்னையும் என்னையும் எரித்திடுவார்

உகந்து நடடாவென சொல்லியே

தன்னாசுதனை சடைபிடித்து

ஸெய்யிது முஹிய்யதீன் இடத்திவிட

மன்னர் தமை கண்டு தன்னாசியும்

மலர்பாதம் தன்னை குர்ஸீ பண்ணி

சொன்னான் அவனுமே இவரைப் பார்த்து

துய்யோன் அருள்பெற்ற ஆண்டவரே

உங்கள் பாதமும் நோக்கவேதான்

உத்ததாய் தந்தை அனுப்பினாரோ

சிங்க புலி அலி தன்குலத்தில்

செம்மல் அபுசாலிஹ் ஈன்றெடுத்த

தங்கம்பொன் மேனியானவரே

தானவன் குர்ஸினில் துயிலும் கோவே

எங்கும் பிரசங்கமானவரே

இங்கு இருப்பது அறிந்தேனாகில்

இந்த வழியும் நான் வருவதில்லை

இருந்த வகையுமே நான் அறியேன்

வந்தேன் விதியினால் இதுவழியே

மதிகெட்ட மூடன் அறியாமலே

சந்து குலையுதே ஆண்டவரே

சற்றே அடியையும் விலக்குவீர்கள்

வந்து இனிமேல் அடித்தால் நானும்

மாண்டு போவேன் நான் சற்குருவே

உங்கள் தனக்குமே நானுமிப்போ

உத்தமரே என்ன பாவம் செய்தேன்

அங்கம் குலையுதே தௌஸில் வேந்தே

ஆத்மா குன்றுதே அடியேனுக்கு

உங்கள் மனம் சற்றும் இரங்கலையோ

உடையோன் தனக்காக மனம் பொறுத்து

சங்கை நபியுல்லா தனக்காகவும்

சற்றே அடியதை விளக்குவீர்கள்

மருள தன்னாசி மொழிந்திடவும்

மன்னர் முஹிய்யதீன் மனதிளகி

வருசை புகழாரும் அடி நிறுத்தி

வணங்கி கதம் போற்றி அவன் மொழிவான்

அருமை புகழான மூஸா ஈஸா

ஆதம் பயகாம்பர் தன் மேலாணை

ஒருவன் மேலாணை உத்தயார்கள்தன் மேலாணை

திருசை புகழான பாதத்தாணை

செத்தாலும் இதுவழிவரவும் மாட்டேன்

உரைத்த மொழி தப்பி வந்தேனாகில்

உடனே சிரசும் ரண்டதாகும்

அருள அவருக்குமே மனதிளகி

அவனை விடுகவும் மனதிலெண்ணி

ஒருவன் உரைத்திட்டான் பொல்லாதவன்

உகந்து கூசாவில் அடையுமென்றான்

முன்னோன் உரைத்திட முஹிய்யதீனும்

மொழிந்தார் தன்னாசி தன்னைப் பார்த்து

உந்தன் மொழியுமே வீணதாச்சு

உடையோன் உரைத்திட்டான் பிரட்டனென்று

கந்தன் மகிழ்கின்ற காரணரும்

கருணை கூசாவை முன்னே வைத்து

உந்தன் குழிசையை தந்துவிட்டு

வலுத்த காபீரே நுழையுமென்றார்

எந்தன் சரீரமும் சுண்டுவிரல்

இந்த கூசாவில் எந்தவிதம்

வந்து நுழையவும் மாட்டாதெனில்

வரையும் கையிறெனில் துரும்பதாக

சிந்தை கலங்கவே தன்னாசியும்

திருடன் நுழையிதில் அவன் நுழைய

கந்தம் மகிழ்கின்ற காரணரும்

கருணை கூசாவில் அடைத்தனரே

அடைத்து அவருமே அவனை தூக்கி

ஆலமரம் சென்று பொதும்பில் வைத்து

மடையன் சன்னாசி கொடுத்தாயேயானால்

மரமே உன்னை நானும் தரிப்பேன் கண்டாய்

கடலேறி மீண்டும் வருமளவும்

கருணை கூசாவும் பதனமென்று

உடையோன் முஹிய்யதீன் ஆண்டவரும்

உரைத்து இருப்பிடம் வந்து நின்றே

பதினெட்டாயுதம் எடுத்தணிந்து

பாத குரட்டிலேறி பாதை கூட்ட

உதித்து வானரம் படைகளெல்லாம்

குதித்து பட்டணம் சென்றுவர

கதித்த முஹிய்யதீன் விசை கொண்டு ஏக

கடலும் வந்தேகி எதிர்த்ததுவே

கடலும் எதிர்த்திட முஹிய்யதீனும்

கருத்து கலங்கியே கரையோரம் வந்து

திடவார் மனதுமே சலித்து வாடி

திசையும் தெரியாமல் மூச்சரிந்து

உடையோனே எந்தன் ரஹ்மானே நீ

உறமத இல்லை ஏறி ஏக

வடக்கு தெற்குமே தெரியவில்லை

முஹல்லதீவுக்கு எவ்விதமே

அறிய பெரியோனே நானும் இப்போ

அளவ கரையுமே காணாதிப்போ

திருசை புகழாரும் மனதில் நீ

செல்வர் கரையோரம் உலாவி நிற்க

ஒருவன் அவனுமே உரைப்பானப்போ

உமக்கு சலிப்பேது தயக்கமேது

வருசை புகழான நபிமார்கள் எல்லாம்

வாரார் சலியாதிருமெனில்

வருவார் கலங்காதீர் சிறுபாலரே

வந்து அனுப்புவார் முஹல்லதீவு

எந்தன் பாலரே இனியவரே

இடஞ்சல் அது வேண்டாம் நில்லுமென்றேன்

முன்னோன் முஹம்மதுதனையழைத்து

மொழிந்தான் இறையவன் அந்நேரமே

உந்தன் பேரரும் கடலோரம்வந்து

உலாவி நிற்கிறார் முஹல்லதீவை

வந்து இஸ்லாம் ஆக்குவதற்கு

அருதி பண்ணினேன் அவர் தமக்கு

சிந்தை கலங்குரார் கடலோரம் வந்து

சீக்கிரம் நபிமார் எல்லோரும்

சென்றுவந்து அவர்க்கு புத்திமதி

வகையாய் உரைத்து அனுப்பி வாருங்கள்

முன்னோன் உரைத்திட நபி ரசூல்

முழங்கும் சொர்க்கம்விட்டெழுந்தனரே

வரிசை நபியுடன் ஆதம்நபி

வள்ளல் சுலைமான் சிக்கந்தரும்

வள்ளல் மூஸா ஈஸாநபி

திருசை புகழான இப்றாஹிம் நபி

வரிசை புகழான செய்துநபி

வள்ளல் தாவூத் இஸ்மாயில்நபி

அருமை புகழான அபூபக்கரும்

அறிய உமர்உதுமான் அலியுல்லாவே

சுவர்க்க மடவார்கள் தொட்டிலாடும்

துலங்கும் இமாம் ஹஸன் ஹுஸைன்

மிக்க தூதர்கள் பன்னீராயிரம் பேர்

வீதியுடன் வந்து கூடினார்கள்

ஹக்கன் உரைத்திட்டான் பீவிமார்க்கு

அனைவோர் சுவர்க்கம் விட்டெழுந்தருள

தக்க நபிமாரும் பீவிமாரும்

தளத்தை விட்டவர் எழுந்தனரே

வர்ண மணி புராக்குதன்னில் ஏறி

வச்சிரம் கடிவாளம்நிகர் வெட்டவே

அருணன் ஒளிபோல முகமிலங்க

ஆசை மணிபுராக்கு முரசதிர

கருணைக்குடையதோர் நபி தமக்கு

கருமா முகில் வந்து கவிகையிட

தருள மணிகுப்பாயம் சருபந்துமே

சந்திரனொளி மின்ன தோழர் சூழ்ந்தே

படசமுடனேதான் நபிமாரெல்லாம்

பாவைமாரெல்லாம் சூழ்ந்துவர

லட்சத்திருபத்தி நாலாயிரம்

நெறியுள்ள சின்ன நபிமாரெல்லாம்

அச்சமகற்றியே முன்னூற்றி பதிமூன்றாம்

முர்ஸலீன் நபிமார்களுடன்

இச்சை நபியுடன் கூடியேதான்

இறங்கினாரெல்லாரும் கடலோரமே

வரிசை நபிமார் ஓராயிரம்

வள்ளல் நபி மகள் பீவிமாரும்

திருசை புகழாக வந்திறங்கி

ஷெய்கு அப்துல்காதிர் முஹிய்யதீன்

வருசை புகழாக புகழ்ந்து போற்றி

வள்ளல் தமக்குமே புத்திமதி

அருமை புகழான நபியிரசூல்

உகந்து மார் தழுவி உரைக்கலானார்

முஹல்லதீவுக்கு போரீரே நீரும்

முதலோன் சோலிஹாக்குள்ளிருந்து

அஹதோன் உமக்குமே சரியதாக

அருகே இருந்துதான் பேசுகிறான்

சகல ரஹ்மத்தும் உமக்கேயாச்சு

தந்தான் விலாயத்து அதிகமாக

ஜெகமும் துலங்கியே சிறுபாலரே

செல்லும் முஹல்லதீவு ஜெயமாகுமே

ஜெயமதாகுமே போகும் முன்னே

செல்வரே மனதில் பயமுமக்கேன்

அச்சமது வேண்டாம் சலிப்பும் வேண்டாம்

ஆகா நஸ்ராக்கள் இஸ்லாமாவார்

கையைப் பிடித்தெருகண்ணில் வைத்து

ஹபீபு முஹம்மது மகிழ்ந்துரைப்பார்

துய்யோன் எல்லோரையும் தூதுவிட்டான்

துலங்கும் பாலரே சலியாதேயும்

ஹக்கு உமதிடம் பேசுகிறான்

யாருமிப்படி இல்லையென

மிக்க கோபத்தை இழந்துவிடும்

வெற்றியாகுமே போகமுன்னே

தக்க சலிப்பையும் அகற்றிவிடும்

சலிப்பது வேண்டாம் பயமும் வேண்டாம்

மிக்க நபியுல்லா எடுத்துரைத்து

வேத சலிப்பையும் அகற்றினரே

பெண்ணும் குறைஷியோர் பெரியோருமாய்

பூவைமார்களும் சூழ்ந்திருக்க

மன்னர் நபியுல்லா தேவிமாரும்

மற்றோரும் படைசூழ கவிகைவிட

மின்னும் சிரசு சூரத்தோதும்

முழங்கும் வாயது தஸ்பீஹ் ஓதும்

கண்ணு இரண்டுமே ஸலவாத்தோதும்

காது இரண்டுமே பாங்கு கூறும்

பொன்னின் திருமேனி கலிமா ஓத

பூரண சந்திரன் போல் முகமிலங்க

பொன்னின் பதித்த கண்ணாடி போல்

பதினாறு வயது எழிலழகும்

மின்னினொளிபோல நிகர் வெட்டவே

பீவி பாத்திமா ஜன்னத்துமே

மன்னர் முஹிய்யதீன் செல்வர்தம்மை

மார்பு தழுவியே புகழ்ந்தோதுவார்

புகழ்ந்து போற்றியே புத்திமதி

பொன்னின் குரைஷியர் எடுத்துரைப்பார்

அஹதோன் சோலிஹாக்குள் இருக்க

அகத்தில் பயமேது சலிப்புமேது

சகல நபிமார்களுக்கும் வஹியாச்சுது

தங்களிடமிருந்து பேசுகிறான்

முஹல்லதீவுக்கு போனீரானால்

உங்கள் கோபமும் அங்காகாது

ஒடுங்கா காபீரும் உம்மைக் கண்டால்

ஒடுங்கி அவர்களும் இஸ்லாமாவார்

கண்ணின் மணியே குலக் கொழுந்தே

கருணைகுடையதோர் என் மகவே

பொன்னின் திருமேனி இளவரசே

பெரியோன் அருளால் போய்வருவீர்

மன்னர் நபியுல்லா நபி மகளார்

வாழ்த்தி விடையுமே அவருக்கருள

அண்ணல் முஹிய்யதீன் ஆண்டவரும்

அவ்விடம்தனை விட்டு எழுந்து வந்தே

அல்லா மொழிந்தான் சோலிஹாக்குள்

அருளினான் இமாமுக்கு நில்லுமென்று

சொல்லும் அதுதானும் செவியில்தாள

துலங்கும் முஹிய்யதீன் திடுக்கமுற்று

நல்ல நபியுல்லா முஹம்மதுடன்

நாலுயார்களும் அவ்லியாமாரும்

வந்து இருக்கச்சே என்னையுமே

வள்ளவாய் இமாமத் செய்ய சொன்னாய்

சிந்தை தனிலேதான் கூச்சம் மெத்த

சின்னஞ் சிறுபிள்ளை செய்யலாமோ

அந்த மொழிகேட்டு இறைமொழிவான்

அகத்தில் பயம் வேண்டாம் சொல்ல கேளு

உந்தன் சிரசுமே குர்சும் முட்ட

உந்தன் கதம் பூமி அருகே வைத்தேன்

எந்தன் பைத்துல் முகத்திஸிலே

எல்லா ஒலிமார்களுக்கும் உன்கை மேலாம்

வந்த சந்தனம் உயர்த்தி வைத்தேன்

விலாயத்து உமக்குமே அதிகம் ஈந்தேன்

வந்து உமக்குமே கொடுத்ததல்லால்

மறுகால் ஒருவருக்கும் கொடுக்கவில்லை

உந்தன் தனக்குமே கூச்சம் வேண்டாம்

ஒளு கொண்டு நீரும் தொழ வைப்பீரே

அல்லா ஒருவனும் உரைத்திடவே

ஒளுவும் கொண்டவர் முன்னிருக்க

வீராய் புகழ் கொண்டு நபி இரசூல்

வள்ளல் உடனேதான் ஜமாஅத்து நிற்க

சீராய் புகழ்கொண்ட நபிமார்கள்

சிறந்து பின்னாக நின்றிடவும்

கூராய் முஹிய்யதீன் ஆண்டவரும்

கூடி அவரும் தொழுவித்தாரே

வரிசை புகழாரும் தொழுவித்தேதான்

வல்லோன் இடத்திலே துஆவிரைய

நபிமாரெல்லாம் ஆமீன் கூறிட அகமகிழ்ந்து

அருமை புகழான முஹிய்யதீனே

சேர்த்து தழுவியே சலவாத்தோதி

ஓர்மை புகழாக எல்லோர்களும்

உகந்து சலாமுரைத்து அகமகிழ்ந்து

வல்லோன் அருள்பெற்ற நபிமாரெல்லாம்

வள்ளல் தனக்குமே புத்தி சொல்லி

அல்லா அருளால் போய்வாருமென்று

அனைவோரும் சலாம் எடுத்துரைத்து

சலாமும் சொல்லிதான் அவரேகவும்

தனியோன் அருள்பெற்ற சுலைமான் சிக்கந்தர்

இந்த கடல்தனை தாண்டும்வகை

இருந்து பார்த்துதான் போகவேணும்

சிந்தை தனிலுன்னி நின்றிடவும்

சீமான் சோலிஹாக்குள் இருந்து

எந்தன் பாலரே இனியவரே

எதிர்த்துவரும் அலையை அமர்த்துமென்றான்

இறையோன் உரைத்திட இவர் மகிழ்ந்து

இருகை காட்டிட அலை நிற்கவுமே

பெருக முழங்கால் தண்ணீர் நின்று

தாக்கி இலையுமென்றான்

பிசகாமல் முசல்லா போடுமென்றான்

உரையும்படியே இவர் போடவும்

ஊண்டி ஆசாவும் கயிறு இழையுமென்றான்

அருளும்படியே இவர் செய்யவும்

அணையும் சோட்டாவை சுக்கானாக

அந்தபடியாக அணிந்து நிற்க

ஐம்பொன் சோலிஹாக்குள் வந்து

கோடாலி நங்கூரம் போட்டோம்

மாணிக்க கோதடி திரையாய் அகற்றி

உந்தன் புலி தோலை பாயாக தூக்கி

உயரே ஏறியே இருந்திரானால்

வந்து மணிக் கப்பலோடும் பாரும்

வல்லோன் உரைத்திட அவர் ஏறியே

வரிசை புயவள்ளல் மகிழ்ந்திருக்க

சுலைமான் நபியும் கிலுறு நபியும் வந்து

வரிசை புகழாருக்கு சலாமுரைத்து

வள்ளல் பிறத்தி சொல்லி மகிழ்ந்திருக்க

திருசை கடலோரே இறை அருளால்

கிலேசமது வேண்டாம் கோபம் வேண்டாம்

சென்று நீர் போய் வாருமென்று

அர்ஸை படைத்தோன் தன்னருளால்

ஆகா நஸ்ரா தீவில் சென்று

முஹல்லதீவினில் உம்மைக் கண்டால்

முழுதும் இஸ்லாம் ஆவார் கண்டீர்

அகத்தில் பயம் வேண்டாம் ஜெயமதாகும்

ஆண்டோன் சோலிஹாக்குள் இருப்பதாலே

உகந்து இஸ்லாமாவார் கண்டீர்

உமக்கு பயமென்ன நடவுமென்று

புகழ்ந்து போற்றியே நடந்தவரும்

போனார் விண்ணுலகம் இருவருமே

விண்ணில் பறந்திட மணிக் கப்பலும்

விரைந்து மூன்றாம் நாள் ஓடியதை

அண்ணல் முஹிய்யதீன் ஆண்டவரே

அசந்து அவருமே பசியதாக

முன்னோன் உரைத்திட்டான் மறியமுக்கு

முஹிய்யதீன் பசியதாக இருப்பதாலே

மன்னர் தமக்குமே ஒடுக்கெடுத்து

வயிறு பசியாற்றி வாருமென்றாள்

இறையோன் உரைத்திட ஒடுக்கெடுத்து

இலங்கும் மணி கப்பல் வந்திறங்கி

மறையின் நெறியாருக்கு சலாமுரைத்து

வள்ளல் பிறத்தி சொல்லி ஒடுக்கை வைத்து

பிறையை பழிக்கின்ற சிறுபாலரே

பெரியோன் கொடுத்தனன் பசியாருமெனில்

நெறியின் மிகவுள்ள பெண்மயிலே

நீயார் சொல்லும் எனக் கேட்கவும்

எந்தன் இரு கண்மணியே கேளும்

ஏகன் மஹ்ஷரில் நாளையுமே

வந்து முஹம்மதுநபி தமக்கு

வாகாய் மணம் சூட்டும் மறியம் நாமே

உந்தன் தமக்குமே பாட்டியாகும்

உத்தமரே மசியாருமெனில்

சந்தோஷமாக எடுத்தருந்தி

தாதி கடல் வெகுதூரம் உண்டோ

அருமை மடவார்கள் பின்வருவார்

அவர்கள் உரைப்பார் பயப்படாதே

ஒருவன் சோலிஹாக்குள்ளிருக்க

உமக்கு பயமென்ன கோபமென்ன

கருத்தில் பயம் வேண்டாம் சலிப்பு வேண்டாம்

கொடிய கோபத்தை விட்டகற்றி

சிறிய பாலரே இருமென்று

திருவாய் விண்ணுலகம் பறந்தனரே

பறந்து சென்றிட மணிக் கப்பலும்

பாசிகடலினில் விரைந்தோடவும்

இரவுபகலாக ஓடிடவும்

இருவரும் சூம்பியே இருந்திடவும்

சிறந்த சோலிஹாக்குள்ளிலிருந்து

சிறுவரே முகம் சோம்பல் ஏது

வருகுது மச்சம் பேசி நடவும்

வல்லோன் உரைத்திட அவர் மகிழ்ந்து

கருணைக்குடைய வரிருக்கும் போது

கடலில் மச்சங்கள் நிறைநிறையாய்

திரண்டு இருபுறம் சுறா திருக்கை

பெருத்த இறால் கெழுதோங்கிலுமே

பின்னும் தோல்பனை உருட்டி

செயல் கெண்டைவாளை நெய் மடவாய்

பெருத்த ஆண் மீன் பெண் மீனுமே

பாறை மீனுடன் நகர மீனும்

சார சரியாய் வந்து நின்று

தஸ்லீமும் செய்து புகழ்ந்து போற்றி

வாரும் மன்னரே சிகாமணியே

வாரி கடலிலே எங்கே போறீர்

கூறினாரப்போ முஹிய்யதீனும்

கொடிய முஹல்லதீவில் சென்று

தீராய் காபீரை இஸ்லாமாக்க

ஏகன் உத்திரவால் போறேனென்றார்

அறிவு கெட்டதோர் கொடிய காபீர்

அசடார் பேர் கெடர் நஸ்ரா கண்டீர்

உரிய பாலரே சிகாமணியே

உங்கள் கோபமும் அங்காகாது

செருக்கு மதுவேது சலிப்பு ஏது

சீமான் சோலிஹாக்குள் இருந்து

பெருதி கொண்டு மக்கு துணைவரவும்

பீர்தஸ்தகீர் பயம் உமக்கேன்

விருப்பமுடன் பேசி மச்சங்களும்

விரைந்து நடந்திட அவர் மகிழ்ந்து

விரைந்து பத்தாம் நாள் ஓடிடவும்

வேதர் தமக்குமே மசியதாக

கரைந்த மனதாக இருப்பவரும்

கதீஜா பீவிக்கு உரைத்தனரே

நீதி இறைதூதர் மகிழ்கின்ற

இலங்கும் மடவாரே கதீஜா நீர்

உந்தன் பேரரும் மணிகப்பலில்

உகந்து இருக்கிறார் பசியதாக

வந்து நீருமே ஒடுக்கெடுத்து

வந்து பசியாற்றி வாருமென்னில்

துய்யோன் உரைத்திட கதீஜாபீவி

முப்பது தாதிமர் சொர்க்கம் விட்டே

விரைந்து வந்தவர் மணிகப்பலில்

வேதர் முன்னமே ஒடுக்கு வைத்து

இறையோன் சலாமும் எடுத்துரைக்க

இயம்பும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

மறையின் நெறியாரே நீயார் சொல்லும்

முஹிய்யதீன் கேட்க அவர் மொழிவார்

குறையொன்றணுகாத மக்கா நகர்

ஹுவைலீ தென்றதோர் கதீஜத்துதான்

முன்னோன் முஹம்மது தேவியாகும்

உங்கள் தமக்குமே பாட்டியாகும்

கண்ணின் மணியாரே பசியாறுமென்று

கல்பு மகிழ்ந்து எடுத்தருந்தி

இன்னும் வெகுதூரம் கடலுமுண்டோ

இயம்புமென கேட்க அவர் மொழிவார்

பின்னால் வருகின்ற மடவார் சொல்வார்

பெருதி கலங்காதே இளவரசே

இறையோன் சோலிஹாக்குள்ளிருக்க

ஏக்கமது ஏது சலிப்பும் ஏது

மறையின் நெறியாரே நீருமிப்போ

மயங்காதிருவென்று விரைந்து சொல்ல

கரைந்து உருகியே வாட்டம் கொள்ள

கருணை மணிக்கப்பல் விரைந்தோடுமாம்

பதினைந்துநாள் ஓடும்போது

மேலான் சொலிஹாக்குள் உரைத்தனரே

வரிசை குமாரரே முஹிய்யதீனே

மயக்கமது வேது சலிப்பும் ஏது

கருத்தில் கோபமும் இருப்பதினால்

கடலும் தொலையவில்லை அகற்றி விட்டான்

சுருக்கமாகவும் கடலதுவும்

தங்கள் கோபத்தால் தொலையவில்லை

சிரமம் அதுவேண்டாம் செருக்கு வேண்டாம்

செப்ப அவருமே சுக்குன் செய்தார்

சுக்குர் செய்துமே அவரிருக்க

துய்யோன் ஆயிஷா தனக்குரைப்பார்

மிக்க பசியாக முஹிய்யதீனும்

விளங்கும் மணிகப்பல் இருப்பதாலே

இக்கணமேதான் ஒடுக்கெடுத்து

இலங்கும் பாலரே பசியமர்த்தும்

பசி அகற்றியே வாருமெனில்

பெண்ணார் நாற்பது பேருடனே

வரிசை புகழான ஆயிஷாவும்

வந்து மணிக் கப்பல் பதினைந்தாம் நாள்

திருவைமார் சூழ ஆயிஷாவும்

தீனோர் முன்னாக ஒடுக்கு வைத்து

ஒருவன் சலாமும் எடுத்துரைக்க

உரைக்கும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

கருதும் மடவாரே நீயார் சொல்லும்

கருதுமென கேட்க அவர் மொழிவார்

அருமை புகழாரே சொல்ல கேளீர்

அபூபக்கர் சித்தீக் மகளார் ஆகும்

வரிசை புகழான நபி இரசூல்

தேவியார் ஆகும் ஆயிஷா நான்

அருமை புகழாருக்கு பாட்டியாகும்

உங்கள் கோபத்தை அடக்கவேண்டும்

வரிசை புகழாரே அடக்கி நீரும்

வயிறு பசியாருமென்று உரைத்திடவே

அல்லா அருள் பெற்ற அபுசாலிஹூ

அருமை குமாரரும் எடுத்தருந்தி

வல்லோன் அருள் பெற்ற பெண்மயிலே

வழுத்தும் கடல் வெகுதூரமுண்டோ

நல்ல மடவாரும் பின் வருவார்

நவிலுவார் உமக்கு பின் வருவோர்

அல்லா சோலிஹாக்குள்ளிருக்க

அகத்தில் சலிப்பேது கோபமேது

ஒருவன் அனுப்பினான் எங்களையும்

உமக்கு சலிப்பாரதாய் தந்தைபோல்

பெருதி கொண்டு வாரோம் நாங்களுமே

பெருதி கலங்காதே சிறுபாலரே

கருத ஆயிஷா அவருரைப்பார்

கடல் தூரம் கேட்க வந்தோரெல்லாம்

கருதினார் இதுமொழி இந்தப்படி

கத்தோனுரைத்தானோ உங்களுக்கே

கருத மொழியுமே நிசமல்லவே

கவுத்துக்கப் போறான் காணுதிப்போ

ஒருத்தரும் நமக்கு நிஜம் சொல்லவில்லை

ஒரு போதும் கரை காண்பதில்லை

வரிசை ஆயிஷா கேட்க உகந்து

மாணிக்க மாலை கழுத்திலிட்டு

கருதுவாரப்போ அவரைப் பார்த்து

கண்ணின் மணியே நீ சொல்லக் கேளாய்

திருசை புகழான சுலைமான் நபி

தேவியார் தந்த மாலை இது

வரிசை மணிமாலை கண்டமட்டும்

வருசை கடலுமே தொலையும் கண்டாய்

கருக குபீரான முஹல்லதீவார்

கண்ட உடனேதான் இஸ்லாமாவார்

பிருசை புகழாரே ஜின் பூதங்கள்

பெருத்த ராஜனும் அடிபணிவார்

அர்சை படைத்தோன் தன் அருளால்

அல்லா நமக்கொண்டும் பயப்படாதே

அருமை புகழான பாலருக்கு

ஆயிஷா பீவி புத்திமதி

விருப்பமுடனேதான் எடுத்துரைத்து

விண்ணில் பறந்திட ஆயிஷாவும்

திருசை புகழாரும் மனமும் ஏங்கி

செப்பு வாரப்போ எண்ணமானால்

சிந்தை கலங்கியே மொழிவதானால்

திருகடல் தாண்டி போவதெப்போ

சிந்தை அதுகூட்ட மனிதர்வாழ்க்கை

சந்தாபமில்லை மௌத் உண்மை

வந்தோம் தாய்சொல் தட்டியேதான்

வந்தான் இப்போது கஷ்டமது

முன்னோன் கொடுத்தான் நமக்குமிப்போ

முடுகி பகுதாது செல்வதில்லை

பிசகு வருமென்று அறிந்தோமானால்

எடுத்தடி வைக்க மாட்டோம் நாமும்

வசமதாகவே மொழிந்ததாவே

வந்து பிசகு படுகிறோம் நாம்

கஸ்பு கராமத் உள்ளவனும்

கரையும் நம்மை சேர்ப்பதில்லை

நிஜம் ஒருத்தரும் சொல்லவில்லை

நீதர் புலம்பியே மொழிவதானார்

சிந்தை உருகுதே சிறுபாலரே

செருக்கமது வேண்டாம் சொல்ல கேளீர்

எந்தன்மேல் குற்றமில்லை இப்போ

இலங்கும் பாலரே கோபத்தாலே

வந்து கடலுமே தொலையவில்லை

வருகுது மச்சம் பேசி நடவும்

முன்னோன் உரைத்திட அம்மச்சங்களும்

முடுகி வந்து சலாம் உரைக்கும்

வந்தது சுறா திருக்கையுடன்

மகரமீன் பாறை மடவாய் தேளி

முன்னோன் சலாமுமே எடுத்துக் கூறி

முஹிய்யதீன் கதம் வாழ்த்தி சொல்லும்

கந்த மகிழ்கின்ற காரணரே

கத்தன் அனுப்பினான் எங்களையும்

உந்தனுடன் பேசி நடக்க சொன்னான்

உமக்கு சலிப்பேது யூனுஸ் நபி

வந்து அவருமே மீன் வயிற்றில்

வருடம் பன்னிரண்டு இருந்தாரல்லோ

அந்த கஷ்டமும் உமக்குமுன்றோ

அல்லாஹ் பேரில் கோபமேது

வந்தடிக்கடி மாதாவுமே

வந்து ஏகவும் வரமும் பெற்றீர்

முன்னோன் அவனுமே இடை விடாமல்

முடுகி பேசிட வரமும் பெற்றீர்

சுகமும் பெற்றீர்கள் என்னரசே

துய்யோன் ஒருத்தருக்கும் கொடுக்கவில்லை

அகத்தில் கோபத்தால் உமக்குமிப்போ

ஆயாசம் வருகிறது தப்பில்லையே

உகந்து பேசவும் மனமகிழ்ந்து

முகிலார் பசியது வாட்டமாக

அஹதோன் ஜெய்னம்பு பீவியருக்கு

இறையோன் உரைத்திட்டான் ஜெய்னம்புக்கு

அழைத்துக் கூறினான் அந்நேரமே

உங்கள் பேருக்கு ஒடுக்கெடுத்து

திரைகடல் மீதில் சென்று நீங்கள்

தீனோர் பசியாற்றி வாருமென்னில்

குறையொன்றணுகாத ஜெய்னம்பு பீவி

ஹுரானி எழுபது தாதியுடன்

இறையோன் மணிக்கப்பல் வந்திறங்கி

இலங்கும் பாலருக்கு சலாமுரைக்க

உரைத்த சலவாத்துக்கு பிறத்தி சொல்லி

உகந்து மடவாரும் ஒடுக்கைவைக்க

மறையின் நெறியாரும் மனமகிழ்;ந்து

மயிலே நீயார் சொல்லுமெனில்

இறையோன் திருதூதர் தேவியாரும்

என்பெயர் ஜெய்னம்பு பீவி ஆகும்

குறையாமனதான உமர் ஹத்தாப்

குழவி நானாகும் உமக்கு பாட்டி

கருத்தில் சலிப்பேது கோபமேது

அழகு பொருந்தியகண்மணியே

ஒருவன் தனக்கு உகப்பானவரே

உங்கள் கோபத்தை உள்ளடக்கி

பருகும் வஜீபனம் பருகுமென

பாலர் அருந்தியே மகிழ்ந்துரைப்பார்

அருமை மடவாளே கடலுமிப்போ

அருள வெகுதூரம் உண்டோவென

செல்வியர் வருவார் நமக்குப் பின்னால்

மடவார் வாழ்த்துவார் உமக்கு வழிபாதையும்

அருமை மடவாளே வந்தோரெல்லாம்

உரைத்தார் இது மொழி நலமல்லவே

கருத சொன்னானோ உடையவனும்

கபடமாய் தோத்துது எந்தனக்கு

விருதும் பெரும் வேந்தே உமக்குமிப்போ

மேலோன் சோலிஹாக்குள்ளிருந்து

உறவு செய்யும்முன் அதுவுமல்லால்

உகந்து எங்களை அனுப்புகிறான்

கிரக்கம் அதுவேது சலிப்புமேது

கிலேசமேது வேண்டாம் கண்மணியே

பெருதி கொடு வந்து தாய்தந்தை போல்

பேசி நாங்களும் போறோம் நிதம்

கருத்தில் மயங்காமல் இருமென்று

கணையாழி தன்னை விரலிலிட்டே

வரிசை புகழாரே சொல்லக் கேளும்

மன்னர் சுலைமான் நபி கணையாழியாம்

பெருதி துலங்கியே கண்மணியே

பகையும் உருவாகும் ஜின் பூதங்கள்

திருசை புகழாருக்கு பாதம்பணியும்

திருகடல் தொலையும் ஜெயமதாகும்

அருமை புகழாரே மலையாதிரும்

உரைத்து விண்ணுலகம் பறந்தனரே

பறந்து அவர் செல்ல முஹிய்யதீனும்

பாலர் மகிழ்ந்து விரைந்தோடும் கப்பல்

இறையோன் அருளாலே மணிக்கப்பலும்

இருபதுடன் பத்து நாளதாக

கிரக்கமிகவாகி பசியெழும்ப

கிருபையானவன் மைமூனுக்கு

உறவு செய்தனன் ஒடுக்கெடுத்து

உகந்து போவெனில் அவரெழுந்து

சிறந்த தாதியும் எழுபதுடன்

சீக்கிரம் வந்து இறங்கினதே

இறங்கி மைமூனும் சலாமுரைத்தும்

இயம்பும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

பிறவை துலங்கிய குயில் மயிலே

பேரு நீயார் சொல்லுமென்ன

அரசுபதியான நாகராஜா மகள்

ஆல நபி தேவி நாமேயாகும்

பேரு மைமூனு உமக்குப் பாட்டி

பெண்ணார் உரைத்திட்ட அவர் மகிழ்ந்தே

சந்தோஷமாகி ஒடுக்கருந்தி

ஸெய்யிது முஹிய்யதீன் மகிழ்ந்துரைப்பார்

எந்தன் மாதாவே கடலுமிப்போ

இயம்பும் வெகுதூரம் உண்டோ சொல்லும்

பிந்தி வருவாரோ மடவார் தானும்

பிறத்தி உரைப்பார்கள் உந்தனக்கு

முன்னோன் அருள் பெற்ற கண்மணியே

மொய் குழல் தமக்கு பின்வரவு மாட்டார்

புத்திமதி சொல்லி மைமூன் பீவி

புகழ்ந்து  போற்றியே மார்தழுவி

கத்தீபு நன்னபி தேவியாகும்

கனக சலிப்பை அகற்றி வைத்து

உத்தமியான பெண் மயிலோ

உகந்து வந்ததோர் ஹூரானியும்

தத்துவம் கொண்டு விண்ணுலகம்

தானே பறந்திட இவரிருந்தார்

இருந்து முஹிய்யதீன் மனது வாடி

ஏகன் சோலிஹாக்குள்ளிருந்து

பெருதி துலங்கிய சிறுபாலரே

பயமது வேண்டாம் சலிப்பும் வேண்டாம்

அருதி சொன்னது தவறாவண்ணம்

ஆகா நஸ்ரா எஹூதிகளை

சரிதை தவறாமல் நீரும் சென்று

ஸெய்யிது முஹிய்யதீன் நபி தீனிலே

எனது பாலரே மொழியை கேளும்

இயம்பும் மொழியது தவறா வண்ணம்

உந்தன் மனதுமே குசியதாக

உகந்து நானுமே அமைப்பதுண்மை

மனதில் கோபமும் அதனை இப்போ

மறந்து நப்ஸையும் உணர்ந்தீராகில்

கனவு கண்டது வராதுபோல்

கடலும் தொலையும் இது நிஜமே

உந்தன் கோபத்தை அகற்றிவிட்டால்

உடனே கடலுமே தொலையும் கண்டாய்

சந்தாபமில்லை சிறுபாலரே

சலித்தால் நானுமே என்ன செய்வேன்

வந்து நீருமே சலிக்க வேண்டாம்

மகர மீனுமே வருகுதிப்போ

எந்தன் பாலரே பேசி நட

ஏக்கமது வேண்டாம் சலிப்பும் வேண்டாம்

முன்னோன் உரைத்திட மகரமீனும்

முடுகி வந்தது பதினாறிலே

வந்து கண்டுமே மகர மீனும்

வல்லோன்சலாம் எடுத்துரைக்க

சிந்தை மகிழ்ந்து சிறுபாலரும்

செப்பும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

கந்த மகிழ்வாரும் கண்டாரொரு

கருணைக்குடையதோர் முஃமினாரே

வந்து இவரை கேட்பார் அவரைப்பார்த்து

மகரமீன் எங்கே போகுதென்னில்

முன்னோன் ஏழுவானிலிருந்து நாங்கள்

முதலோன் படுவானில் சென்று மீள

வந்து கற்பித்தான் எங்களையும்

வல்லோன் கியாமம் முடிய மட்டும்

சிந்தை மகிழ்ந்து இவர் அறிந்து

செல்வரே எங்கே போறீரென்றார்

இறையோன் அருளாலே முஹல்லதீவை

இஸ்லாமாக்கவும் போறேன் எனில்

கரையா குபிரான முஹல்ல தீவார்

காபிரிலும் கொடிய காபிரவர்

மறையின் நெறியில்லா நெறி மூடர்கள்

வல்லோன் தனக்கஞ்சா பகீலாவார்

மறையின் நெறியுமே அவரறியார்

உங்கள் கோபமும் அங்காகாது

பெரியோன் தனக்கு உகப்பானவரே

தங்கள் கோபத்தை அகற்றி விடும்

கதிரோன் உதித்து அடைந்த பின்பு

கருமேகம் சூழ பசியெழும்ப

அதிர இடித்துமே மிக முழங்க

அக இருளும் மூணே முக்கால் நாழிகை

சதிரிடும் நாழிகை தப்பில்லையே

தானவன் அகற்றுவான் தப்பில்லையே

உரைத்து அவரேக மீன் முதுகில்

இருந்து ஒரு முஃமீன் சலாமுரைக்க

உரைக்கும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

மிக்க முஃமீன் எங்கே போறீர்

உரைக்க முன்போல் இவருரைத்து

உகந்து சென்றிடபின் ஒருவர்

விரைந்து வந்தனர் மீன் வாயினில்

வேதர் தம்மைக் கண்டு சலாமுரைத்தார்

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

உகந்து முஃமீன் எங்கே போறீர்

மறையோர் கேட்டிட அவர் மொழிவார்

வாழ்த்தும் மொழிபோல இவருரைத்து

இறையோன் அருள்பெற்ற முஹிய்யதீனை

எழுந்து கோபத்தை விட்டு விடும்

உரைத்த முஃமீனும் அகன்றிடவே

உடையோன் இருள் வந்து அடுத்ததுவே

விருத்தம்

மணிகயிர் குதித்து துள்ளிவந்திடும் கெர்ப்பம் கண்களும் நிகராவண்ணம் கண்கள் மிரண்டு தாவ மண்களும் புளிய வாடை. வாடையும் தொடர்ந்து மீற பொன்குலத்தின் மேல் புலிந்திடும்

இடியும் தானே பளிங்கிடும் இடியும் தானே. பளிங்கிடும் இடியும் காற்றால் பொருமே சலித்துவாடி அழிவது வந்ததென்று அன்னையும் இழந்தோம் நாம் விழிரண்டும் நீரோட விம்மி நடுங்கியே மேனி உளறிட விண்ணினாலும் தயங்கியே புலம்பலுற்றார். புலம்பிய முஹிய்யதீனும் பிறகலை தப்பி தானும் பலமது குறைந்து குன்றி புயலது காற்றும் நாலும் கல்பது தரியா வண்ணம் கரைந்துமே மெழுகதாகி நலமது மறைந்து தானும் நல் மவ்த்துவந்தடுத்ததுவே.

தொங்கல்

மனது தடுமாறி முஹிய்யதீனும்

வாயும் விருவியே புலம்பி சொல்வார்

எனது தாய்தம்பி தனை இழந்து

இந்த கடலிலே  மாள்வதற்கு

உனக்கும் பொருத்தமாய் நீ உரைத்து

இதுக்கோ கொடுவந்தாய் எந்தனையும்

தனக்கு பொருத்தமா இருந்ததினால்

சரிதானவன் எந்தன் ரஹ்மானே

எந்தன் தலையில் இவ்வயதில்

இடைஞ்சல் படவென்று எழுதினாயோ

வந்து நானுமே இந்த காற்றில்

வருத்தப்படுவது பொருத்தம் தானோ

சிந்தை கலங்கவே எனை வகுத்தாய்

சீமான்தனை கூவி சப்தமிட

முன்னோன் சோலிஹாக்குள்ளிருந்து

முஹிய்யதீனை இங்கு மௌத்தில்லை

உந்தன் மௌத்து பகுதாதிலே

உமக்கு மௌத்தில்லை பயப்படாதே

வந்து பஹ்மதை உருக்கி பாரும்

மழையும் காற்றுமே அகல கண்டாய்

முன்னோன் உரைத்திட அகமகிழ்ந்து

முஹிய்யதீன் பஹ்மதை உருக்கிடவும்

வந்து சூழ்ந்ததோர் இடியும் காற்று

வல்லோன் அகத்திட முஹிய்யதீனும்

இருளும் காற்றினில் அடிப்பட்டவர்

ஏங்கி மயங்கியே அவரிருக்க

ஒருவன் உரைத்திட்டான் மறியமுக்கு

உந்தன் பேரரும் புவி மீதிலே

சர்க்கம் பிடித்தவர் இருக்கிறார் காண்

சந்தனம் கொடுவாசமுள்ள

கருணைக்குடையதோர் முஹிய்யதீனை

கலிமா விரல் தொட்டுமூக்கிலேதான்

வரிசை புகழாரும் வாசம் கொண்டால்

மனம் தெளியும் பலனுண்டாகும்

தர்மம் புகழாருக்கு பானக்கமும்

சந்தனம் கொண்டு ஏகுமெனில்

ஒருவன் உரைத்திட மறியம் பீவி

உகந்து சந்தனம் பானக்கம் கொண்டு

விரைந்து மறியம் மணிக்கப்பலில்

வேதர் தமக்குமே சலாமுரைத்து

சந்தனம் பானக்கம் முன்னே வைத்து

தையல் நின்றிட இவருரைப்பார்

வந்த மடவாரே நீயார் சொல்லும்

வல்லோன் மஹ்ஷரில் முஹம்மதுக்கு

சொந்த மணம் சூட்டும் மறியம் நாமே

துலங்கும் பாலரே உமக்கு பாட்டி

கந்த மகிழ்கின்ற காரணரே

கலிமா விரல் கொண்டு சந்தனத்தை

தொட்டு மூக்கினில் வாசம் கொண்டால்

துயரம் அகலுவும் பலமுண்டாகும்

சட்டமதாக வாசம் கொண்டு

தர்மரே  பசியாருமெனில்

விட்டு அகன்றது ஆயாசமும்

பூரித்து அவரும் மகிழ்ந்துரைப்பார்

கருணை மடவாரே கடலுமிப்போ

கரையும் வெகுதூரம் காணுமோதான்

வருவார் பின்னொரு மடவார் தானும்

வாழ்த்துவாருமக்கு வழிப்பாதையும்

வருவாhர் தமக்குப்பின் வரவும் மாட்டார்

ஆயாசம் வேண்டாம் சலிப்பு வேண்டாம்

கருத்து கலங்காதிருமெனில்

கடுகவிரைந்தனர் மறியம் பீவி

வயது பதினொன்றில் நமக்குமிப்போ

வாரி கடலினில் அவதிபட

பயமும் சலித்துதான் உருகி

படைத்தோன் நம் தலையில் எழுதினானோ

நயமும் பயமுமாய் வகுத்து வந்தான்

நாயனே உனக்கு இரக்கம்தானோ

இறையோன் பங்கிலே கிருபை வைத்து

இலங்கும் பாலரே சடவும் வைக்க

மறையின் நெறியுள்ள பாத்திமுத்து

வள்ளல் தமக்குமே இறை உரைப்பான்

திரைகடல் மீது முஹிய்யதீனும்

தயங்கி மயங்கிறார் பாத்திமுத்தே

விரைந்து நீர் சென்று ஆயாசமும்

விருப்பமகற்றியே வாருமென்றான்

முன்னோன் உரைத்திட நபிமகளார்

மூவாயிரம் தாதிமார்கள் சூழ

கந்த மரவே ரச வர்க்கங்கள்

கனகமணி தட்டில் ஏந்தி கொண்டு

மந்திரகிரி பட்டுநிகர் வெட்டவே

வச்சிர மணிமாலை பிறவை தானே

வந்தார் ஏழு கோடி சந்திரன் போல்

வயது பதினாராம் எழிலழகே

வந்தார் ஜன்னத்து பீவியரும்

வைரமணி சிரசு சூரத்தோதும்

சந்திரன் ஒளி போல விழிகள் இரண்டும்

சலவாத்தோத நாவதுவும்

அந்தம் பிறக்கவே அல்ஹம்து ஓதி

அவர்கள் நாசியும் கலிமா ஓதும்

துலங்கும்காது இரண்டும் பாங்கு கூற

ஏழுகோடி சந்திரன் பிறவைபோல

இறங்கினார் மணிக்கப்பல் தன்னிலே தான்

ஒளிவு பிரகாசம் நிகர் வெட்டவே

ஒளிவுதனை கொண்டு கண்மருண்டு

விழியும் மூடியே முஹிய்யதீனும்

மெய்யும் மறந்து இருந்திடவும்

கருவி உகந்து பாத்திமாவும்

தானவன் சலாம் எடுத்தோதினார்

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

உத்த மாதாவே நீர்; யார் சொல்லும்?

கத்தன் தனக்கு உகப்பானவரே

கருதமுடியாது என் சரிதை

உத்தமரே எந்தன் கண்மணியே

உரைக்கிறேன் கேளும் என்சரிதை

கத்தன் குர்ஸினில் துயிலும் கோவே

கண்மணியே நீர் சொல்ல கேளும்

லட்சத்திருபத்தி நாலாயிரம்

நெறியுள்ள நபிமாரும் என்பிதாவுமாகும்

மிச்சம் முன்னூற்றி பதிமூன்றாம்

விளங்கும் முர்ஸலீன் என் தந்தையாகும்

அச்சமகற்றியே ஆதம் நபி

அறிய தாவூதும் என் தந்தையாகும்

பட்சமாகிய ஈஸா மூஸா

பாரில் சுலைமானார் என் தந்தையாகும்

பின்னே இப்றாகிம் ஹிழ்ரு நபியும்

பிறகு இஸ்மாயில் நபி தந்தையாகும்

யூனுஸ் நபி அன்பியாவும்

ஏற்றமுள்ள அவுலியா பிதாவுமாகும்

முன்னோன் இறை தூதர் நபி இரசூல்

முஹம்மது மகளார் நாமேயாகும்

அர்ஸில் புலிஅலி தேவியாகும்

பிந்தி ஹஸன் ஹுஸைன் நான் தாயாராகும்

எத்திசையுள்ள மாதர்க்கெல்லாம்

ஏற்ற குறைஷியர் நானேயாகும்

கத்தன் மஹ்ஷரில் மன்றாட்டம் செய்யும்

ஹாத்தூன் ஜன்னத்து என் பேராகும்

கதீஜத்து பீவி மகளாராகும்

கண்ணின் மணியே என்மகவே

உத்தமரே என் குலக் கொழுந்தே

உடையோன் தனக்கு உகப்பானவரே

வரிசை புகழாரே உமக்குமிப்போ

வல்லோன் சோலிஹாக்குள்ளிருக்க

திருசை புகழாரே பயமுமக்கேன்

ஜன்னத்து பீவி மார்தழுவி

வரிசை புகழாரும் எடுத்துரைத்து

மகிழ்ந்து இருந்தனர் முஹிய்யதீனும்

மகிழ்ந்து இருக்கவும் பாத்திமுத்து

வள்ளல் மகளாரும் தாம்பூலத்தை

உகந்து கடுதாசில் மடித்தவரும்

உகப்பாய் ஈந்தவர் மொழிவதானார்

முஹல்லதீவினில் சென்றீரானால்

மூடர் தீவினில் ஒருதேவுதான்

சகலபேரையும் காவல் கொண்டு

தனியோன் ஏவலை தட்டியேதான்

அந்த தீவையும் ஆளுதிப்போ

அவிடம்சென்ற பின் அடுத்தவரும்

இந்த தாம்பூலம் ஏவி விடும்

ஈரல் தெறித்து உருகிநிற்கும்

வந்து ஆயுதம்தனை அனுப்பும்

வதைத்துக் கொண்டுவர அடிபணியும்

சிந்தை கலங்கும் பொய்யுரைக்கும்

செலுத்த கம்பளி கயிறனுப்பி

துரும்பதாக்கிடும் தேவுதன்னை

துலங்கும் கூசாவில் அடைத்து வையும்

விருப்பமுடன் வந்து இஸ்லாமாவார்

வெற்றி உமக்காகும் பயப்படாதே

கிரியும் எதிர்க்கும் முப்பத்தைந்தில்

கிலேசமது வேண்டாம் கிரக்கவேண்டாம்

ஒருவரினிமேலும் வரமாட்டார்

உமக்கு கரை காணும் நாற்பதாம் நாள்

மனதில் கோபத்தை அகற்றிவிடும்

வல்லோன் இருக்கச்சே பயமுமக்கேன்

தனிமை வரும்போது சலவாத்தோது

சலிப்பும் அகலும் சந்தோஷமாகும்

உனது மனம் சற்றும் சலியாதிரும்

உடையோன் கிருபையால் இஸ்லாமாக்கி

மனது குஷியாக பகுதாதுக்கு

மாதாஉடன் சேர்ப்பான் பயப்படாதே

வரிசை குமாரரே பயமும் வேண்டாம்

வல்லோன் இருக்க பயம் உமக்கேன்

திருசை புகழாரே ஜெயமதாகும்

தீனோர் கோபத்தை அகற்றி விடும்

வரிசை புகழாரே பயப்படாதே

பெரியோன் மலக்கு வந்து அகற்றுவாரே

அகற்றுவார் மலக்கு பயப்படாதே

அச்சமது வேண்டாம் என் மகவே

ஜெகமும் துலங்கிய பாத்திமுத்து

திருவை மாதரும் பறந்திடவே

முகமும் சோம்பியே இவரிருக்க

முப்பத்தைந்தாம் நாள் சரியதாக

பகரமானதோர் கிரியும் வந்து

பாசி கடலினில் மறைத்துக் கொள்ள

தகர்த்து மனது சடவதாகிதன்னை

மறந்து புலம்புவாரே

**விருத்தம்**

புலம்பியே சப்தம் போட பதியவா உந்தன்காவல் கலங்கியே தயங்கி ஏங்கி கல்பது நாட்டம் கொள்ள பெரியவனும் உரைப்பானப்போ பெரிது நீர்கலங்க வேண்டாம். விலகுது மயலயம் பாரும் வேதரே சலியாதென்றே ஒருபெருநாயன் தானும் உத்ததோர் மலக்கே நீங்கள் பெருமலைதனையும் மூன்றாய் பெரிய தூரம் பம்பம்போட்டு சுருக்கவே தரித்து நீங்கள் சீக்கிரம் இரண்டு பங்காய் பொருமலை எடுவானிலேற்றி படுவானில் கொண்டு சேர்த்தே சேர்த்து நீர் பெரும் வெளிச்சம் சீக்கிரம் போடுமெனில் வேற்றுமையில்லா நாயன் விரும்பிட ஜிப்ராயிலும்காத்து விரைந்து வர கடுகியே இஸ்ராயில் சீக்கிரம் மீக்காயிலும் ஏற்றுவாரம்பம் போட்டு எழுவானும் படுவானும் வந்ததாம்.

**தொங்கல்**

எழுவான் படுவான் தன்னிலேற்றி

ஏக வெளிச்சம் போட்டு நிற்க

பழுது பகராத நபி பேரரும்

பாரவெளிச்சம் கண்டு அகமகிழ்ந்து

முழுதும் உடையவன் கிருபையினால்

முடுகி சென்றிட நாற்பது நாள்

பொழுது எழும்பிட கரை சேர்ந்திட

பெரியோன் முஹிய்யதீன் அகமகிழ்ந்து

கரையும் விட்டவர் கீழிறங்கி

கனகமணிக் கப்பல் தனை பிரித்து

இறையோன் அருளென்று மனதிலுண்ணி

எடுத்து ஆயுதம் வரைந்து கட்டி

மறையின் நெறியாரும் பாதகுரட்டிலேறி

வைரமணி ஆசா கை பிடித்து

விரைந்து மன்மலை தன்னிலேறி

வேந்தன் கோட்டையை கண்டனரே

கண்டு மகிழ்ந்து முஹிய்யத்தீனும்

கல்பு மகிழந்துமே கீழிறங்கி

சென்று வடமுகம் தன்னை நோக்கி

செந்தாமரைப் பொன் கண்டவரும்

நின்று அவருமே ஆயுதமும்

தளத்தில் வைத்தவர் நீராடியே

வண்டு மலர்ந்து பூவெடுத்து

வேதர் வாசமும் கொண்டனரே

அகன்று அவருமே விரைந்து ஏக

ஆகிலும் கும்கும் தேவியாரும்

விகன்று புற மல்லி முல்லை

வெகு வாசமுள்ள எழுமிச்சையும்

அகன்று இடைவிட நாக தழி

சந்தனம் முந்திரிகை பேசீச்சமுமே

முகண்டு வளைந்தோங்கி கனி சொறிய

முஹிய்யதீன் அருந்தி நடந்தனரே

நடந்தார் பெருவனம் ஒரு நொடியில்

நடந்து வனம் தாண்டி பால் மடமும்

கிடவார் முன்னாக மனமகிழ்ந்து

சீமானருளென்று மனதிலுண்ணி

கொடுவரான பால்மடத்தில்

குத்பு முஹிய்யதீன் சென்று புக்கி

**விருத்தம்**

அகதோன் கொடுத்தான் என்று உகந்தவர் முசல்லா போட்டு அகத்தில் நினைத்துக் கொண்டு ஆயுதம் இறக்கி வைத்து புகழ்ந்தவர் ஒளு கொண்டு தொழுதிருக்க வந்தடுத்ததுவே லுஹரும் தானே.

**தொங்கல்**

உகந்து நபில் தொழுதிருக்க

உடையோன் லுஹர் வந்தடுத்திடவும்

மகிழ்ந்து லுஹருமே தொழுதவரும்

வல்லோன் அளவிலே துஆஇறைந்து

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனும்

செம்பொன் கோதடி தலைக்கு வைத்து

உகந்து துயில் கொண்டு எழுந்திடவும்

உடையோன் அஸ்ரு வந்தடுத்திடவும்

அஸ்ரும் மஃரிபும் தொழுதவரும்

ஆண்டோன் இஷாவும் தாம் தொழுக

வசமதாகவே துஆ விரைந்து

மகிழ்ந்திருக்கவும் இறையவனும்

பசும்பொன் பீவி மறியத்தையும்

பாலர் பசியாற்றி வாருமெனில்

உரைத்து மொழி கேட்டு;டனே

கனகமுடன் வந்தார் மறியம்பீவி

வந்து மறியமும் சலாமுரைத்து

வள்ளல் திருமுன்னே ஒடுக்குவைத்து

முந்தும் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

மொய் குழல் நீயார் சொல்லுமெனில்

வந்து மஹ்ஷரில் முஹம்மதுக்கு

வாகாய் மணம் சூட்டும் மறியம் நாமே

சந்தோஷமாகி முஹிய்யதீனும்

தானும் பசியாறி மகிழ்ந்தனரே

மகிழ்ந்திருக்கவும் மறியம்பீவி

வருசை குமாரரே மணவாளரே

அகத்தில் பயம் வேண்டாம் கோபம் வேண்டாம்

ஆண்டோன் பொழிந்தனன் சொல்லக் கேளும்

ஜெகமும் துலங்கிய இராஜனுக்கு

தேவு தனக்காக  கரைவதுவும்

மகளை உகப்பாக கொடுக்கப் போனான்

வழிய தேவது வரும் இங்கே

வருக இருபது நாளதாகும்

வழிய தேவியினால் உமக்கு வெற்றி

அறுபத்தி நாலு தெருவிலுள்ளோர்

ஆல நபிதீனில் ஆவார் கண்டீர்

ஒருவன் உரைத்தனன் இதுமொழியும்

உத்தமரே சலியாதிருமென்றான்

கருதி மறியமும் விண்ணுலகம்

கடுகி மறைந்தனர் அந்நேரமே

கடுகி நடந்திட முஹிய்யதீனும்

கத்தன் அளவிலே துஆவிரைந்து

முடுகலாகிய புதுமையாக

மொழிந்தான் இறைவன் அவர்தமக்கு

அடுக்க நானுமே துணையதாக

அகலாதிருக்கையில் பயம் உனக்கேன்

விடியற் காலமே நீர் எழுந்து

வேந்தன் அரண்மனை ஏகுவீரே

வல்லோன் உரைத்திட இவர் மகிழ்ந்து

மடத்தில் துயில் கொண்டெழுந்தவரும்

அல்லா அருள் பெற்ற முஹிய்யதீனும்

அவ்வல் பஜ்ருமே தொழுதபின்பு

அல்லாஹ் இடத்தில் துஆ இரந்து

நல்லார் புகழுள்ள நபி பேரரும்

நாயன் இஸ்ராக் தொழுதவரும்

பொல்லா நஸ்ரானி பட்டணத்து

பெண் கொடிபத்து பேர் வந்தனரே

மந்திரி கிரிப்பட்டு கொய்தெடுத்து

வைரமணி மாலை கொலுசதிர

கந்த மிக வீசும் மல்லிமுல்லை

கடையும் கைவளையல் கதிரிடவே

வந்தார் தெப்பகுளம் தனக்கு

வள்ளல் தனை கண்டு திகைத்தனனே

திகைத்து அவர்களும் ஒன்றுக்கொன்று

திருவாய் மலர்ந்து மொழிவதானார்

வகைக்கு வகையாக பேச்சு பேசி

வள்ளல் தன்னுடைய அழகை கண்டு

தொழுகைக்கு அடங்கா இவர்களுக்கு

துய்ய சன்னாசி எந்த ஊரோ

நகைத்து அவர்களும் நளினம் பேசி

நாதர் ஆனதால் இவ்விடத்தில்

இருக்கிறார் சன்னாசி இவர் கொப்போ

எங்கும் கிடையாது இங்கு கண்டோம்

விரும சன்னாசி ஆனதினால்

வேங்கை புலியும் தீண்டவில்லை

பருதி இவருக்குமே ஒப்பல்லவே

பாரில் பிறந்தவர் இவருமில்லை

சிறுவர் இவர்தானும் வயது பத்து

சிறந்த வங்கிசமாகுமென்று

பொன்னின் மடவாரும் நின்று கொண்டு

பூராயமாக பேசி நிற்க

மன்னர் முஹிய்யதீன் மனதிலுண்ணி

மரண்டு நஸ்ராவை ஒட்டவேண்டும்

தன்னுள் வாயை இழுத்தடைத்து

செய்யிது முஹிய்யதீன் பஹ்முருக்கி

விண்ணிலிடி போல மிக முழங்க

வில்லடி இல்லடி விழுந்தது போல்

**விருத்தம்**

உன்னியே முஹிய்யதீனும் ஒரு நாழிகை தம்மடக்கி விண்ணிலே இருந்து தானும் வில்லிடி விழுந்ததுபோல் கன்னிமார் கண்டுசேர கலைகளும் வளைகள் சேர்ந்து பொன்னாபரணம் பூசராதிகள் பின்ன மின்னியே இடியதாக விழுந்தது ஏக்கமுற்றே. தன்னினைவற்று சேர தரையினில் கிடந்துருண்டு கண்ணினால் நீர் சொறிய கலக்கமும் மிகுதிகொண்டு முன்னவன் மஃஷரில் முடிந்திடும் வாகுபோல பெண்ணியர்கள் கிரக்கமுற்று பூமியில் கிடந்தவரே.

**தொங்கல்**

செத்த சவன்போல் அவள் கிடக்க

சீமான் முஹிய்யதீன் விழித்துப் பார்த்து

தத்துவம் கொண்டு இவர் எழுப்ப

தன்நினைவு வந்து எழுந்தவரும்

சித்திடை மின்னார் மனம்  பதறி

சீக்கிரம் நீர் கொண்டு ஓர் முகமாய்

புத்தி கெட்டோமே நின்றோம் நாமும்

புதிய சன்னாசி பொல்லாதவர்

கலக்கம் செய்தனர் நம்மையும்

காரணம் தெரியாமல் நின்று விட்டோம்

பலத்த சன்னாசி இவரேயாகும்

பின்பு நம்மை எழுப்பிவி;டார்

தளத்தில் பெரியோர் இவரே அல்லால்

தரையில் கிடையாது தங்கமாரே

உலகில் இவரைப் போல் அழகுமில்லை

உகந்து வாராரோ நம் தெருவில்

பொன்னின் மடவாரும் இவ்விதமாய்

பேசி நடந்தவர் மனையில்புக்கி

தண்ணீர் குடமும் இறக்கி வைத்து

சன்னாசி சரிதை தாய் தந்தைக்கு

கன்னிமார்களும் எடுத்துக் கூற

காதிலே கேட்டு அவர் மகழ்ந்து

இந்நகர் தன்னில் வாராNhர வென்று

ஏங்கி இருந்தனர் அவரவரே

அன்று பொழுதுபோய் மற்ற நாளில்

அப்துல் காதிறு துயின்றெழுந்து

என்றுமுள்ளவன் பஜ்ரு தொழுது

ஏகன் இஸ்ராக் தொழுதவரும்

நின்று உலாவிட இறையவனும்

நீர் தமக்குமே உரைக்கலானான்

சென்று நீருமே முஹல்லதீவை

சுற்றிப் பார்த்துமே வாருமென்றான்

ஒருவன் உரைத்திட இவர் மகிழ்ந்து

உகந்து ஆயதம் எடுத்தணிந்து

பருதி துலங்கிய முஹிய்யதீனும்

பாத குரடேறி மடமும் விட்டு

விருது துலங்கவே விரைந்தவரும்

வேந்தன் கோட்டை வாசல் நின்று

கருத்தில் நினைத்தார்கள் முஹிய்யதீனும்

கனத்த கோட்டை விஸ்தீரணத்;தை

கண்டு மகிழ்ந்து முஹிய்யதீனும்

கடுகி நடந்தனர் தெருவீதியே

கொண்டு மலைபோல மேடைகளும்

கூராய் அரண்மனை சித்திர கூடம்

என்று மனைதோறும் புத்துகான்கள்

ஏழு ஐம்பொன் வெள்ளியால் தங்கதும்

நின்றது செம்பு வெங்கலத்தால்

நிறுத்தி இருந்தது மனைகள் தோறும்

சுருக்கம் நெடுப்பம் பார்ப்போமென்று

சுற்றி விரைந்தனர் முஹிய்யதீனும்

இராஜன் கோட்டை தூரம் அது

எழுபதின் காதவழி ஒரு நொடியில்

விரைவாக சுற்றி முஹிய்யதீனும்

அண்ணாந்து பார்த்து மொழிவதானார்

சீராய் கொத்தளம் செம்பொன் கோட்டை

சிங்காச மேடை மேகங்கள் போ

தூரா தூரமும் கண்ணுக்கெட்டாது

துலங்கும் மணிமேடை ஒப்பிருக்க

கண்டு மகிழ்ந்துமே முஹிய்யதீனும்

கடுகி விரைந்து நம் தெருவீதியே

கொண்டு மலைபோல மேடைகளும்

கோல அரண்மனை சித்திர கூடம்

உண்டு மனைதோறும் புத்துஹானேழு

ஐம்பொன் வெள்ளி தங்கதுரா

நின்றது செம்பொன் வெங்கலத்தால்

நிறுத்தி இருந்தது மனைகள் தோறும்

வரிசை புகழான முஹிய்யதீனும்

மனதில் குறித்திட புத்தும் சிதறி

வெருவி அவருமே புலம்பி நின்று

வேதர்தனைப் பார்த்து கண்மருண்டு

உருண்டு கிடந்திட பின் மடவாள்

ஓடிவந்தவர் எடுத்துரைத்து

சிறுவர் சன்னாசி எந்த ஊரோ

செய்த ராக்கினை இவரே என்று

மனதில் குறித்து நின்றிடவும்

மறுவீதி சென்று முஹிய்யதீனும்

கனத்த சப்தமும் போட்டவரும்

கடுகி விரைந்து நின்றார்களெல்லாம்

மனது தடுமாறி கிறுகிறுத்து

வல்லுசாரை கண் கொக்கு போலே

விண்ணாந்தவர் அவர் உருகுலைந்து

மெய்யும் மறந்து விழிகள் சோர்ந்து

கண்ணாலே கண்ணீர் ஆரோடவும்

கலங்குவார் தெரு வீதியுள்ளோhர்

கலங்கி விண்ணாந்து நிற்பார் சிலர்

கைவளை சோர்ந்து நிற்பார் சிலர்

நிலத்தில் கிடந்து உருளுவார் சிலர்

நெடிய மரம் போல நிற்பார் சிலர்

பாலர் தம்மை கண்டு நிற்பார் சிலர்

பலது மொழி கூடி நிற்பார் சிலர்

இலங்கும் பாலரும் இவ்வுலகம்

எங்கிருந்து எங்கே வந்தவரே

கருதுவாரப்போ கண்டோரெல்லாம்

காசினியில் பிறந்தவர் இவரல்லவே

விருப்ப சன்னாசி இவ்வைகுண்டமாகும்

மேலோன் இறக்கினான் இந்த தேசம்

பருதி அவருக்குமே ஒப்பல்லவே

பாலர் சன்னாசி இவராகுமே

சிறுவர் சன்னாசி நம்மளவில்

திகைப்பு மரியாதை செய்யப்போராரோதான்

இந்தவிதமாக தெருவிலுள்ளோர்

இலங்கும் பாலரே கண்டவர்கள்

சிந்தை கலங்கியே புலம்புவாரும்

தேட்டமதுவாகி நிற்பரும்

வந்து ஏகாரோ என்பவரும்

வாயும் விருவியே புலம்புவாரும்

கந்த மகிழ்கின்ற காரணரும்

கண்டு மயங்கியே இருப்பவரும்

முஹல்லதீவு பட்டணம்

முன்னூற்றி பதினாறு தூரம் உண்டும்

அகல நீளமும் ஒருநிறையாய்

அறுபத்திநாலு தெருவுமுண்டு

உகந்து தெருவுமே ஒன்றுக்கொன்று

ஒருகாத வழி தூரமுண்டும்

சகல விசாலமுள்ள முஹிய்யதீனும்

சித்த நடந்தனர் ஒரு நொடியில்

நொடியில் தெரு வீதி எல்லாம் சுற்றி

நின்றார் முஹிய்யதீனும்

கொடிய காபீரை தீனில் ஆக்காமல்

கூடி பகுதாதுக்கு ஏகுனட்னாது

அடிமேல் அடிவைத்து அசையாமலே

அண்ணல் முஹிய்யதீனும் பசியதாக

படு காபீர் பட்டணம் தாண்டி வர

பாதை வழிகூட பூந்தோப்புமே

வந்து எதிர்பட வாசல் தானும்

வள்ளல் பசியால் பூந்தோப்பில் சென்று

சிந்தை மகிழ்ந்து மாதுளையும்

சிறந்த கனி கொய்திடவும்

கந்த மகிழ்கின்ற காரணரும்

காவல்காரர்கள் இருப்பாரென்றும்

வந்து இவருமே பார்க்கும்போது

வலிய காபீரும் வெகு தூரமே

நிற்க அவன் கண்ணை பார்த்தவரும்

நீதர் மாதுளை கனி கொய்திடவே

ஹக்கன் ஏவலாய் அவன்வந்து

அதட்டி கனியும் பறித்துக் கொண்டு

உக்கிரதமாக கனியும் ஆய்ந்தாய்

ஊரில் இரந்துண்டு மதிகெட்டாயே

மிக்க ராஜனும் கண்டாளிப்போ

வீணாய் உன் காலில் விலங்கிடுவான்

அருமை தெரியாத எஹூதி அவன்

அதட்டி அவன் ஒருஅடி அடிக்க

கருத்தில் கோபமும் மிக பெருகி

கனலாய் எரிக்கவும் என்றே நினைக்க

ஒருவன் உரைத்திட்டான் சோலிஹாக்குள்ளிருந்து

உமது அருமையும் அறிவானோதான்

எரிச்சல் அதுவேண்டாம் சிறு பாலரே

எந்தன் பகையை பாருமென்றான்

இலங்கும் முஹிய்யதீன் சுக்ருசெய்து

ஏறிட்டுப் பார்த்தார் பலகைதனை

இலங்கும் மஹ்பூலு பலகைதன்னில்

இஸ்லாமகச்சே ஓரடி உண்டு என்றும்

பலகை தனிலே வந்திருக்க

பழைய விதியென்று நினைத்துக் கொண்டு

கலங்கி மயங்கவே எஹூதி அவன்

காரணர் தம்மை மடிபிடித்தே

மன்னர் தம்மையும் இழுத்தவனும்

மறுக்காலடிக்க கை ஓங்கிடவே

முன்னோன் அருளாலே கைமுடங்கி

பட்டமரம் போலே நின்றிடவும்

அண்ணாந்து பார்த்து முஹிய்யதீனும்

அவர்வாய் அமுதம் பூசிடவும்

விண்ணும் கலங்கி எஹூதி அவன்

வேதர் தம்மையும் இழுத்தனனே

இழுத்து அவனுமே அலட்டிடவே

ராஜாயிடம் போக வாருமெனில்

வாழ்த்துவாரப்போ அவனை பார்த்து

மடியை விடு அண்ணே நான் எளியேன்

இழுக்காதே அண்ணே கனி ஒன்றுக்கு

ஏழு கனி தாரேன் மடியை விடு

வழுத்த அவனுமே அறிவோ மென்று

மடியை விட்டவன் கனியெடென்றான்

ஒருவன் தனை நாடி சோலிஹாக்குள்

உகந்து கைபோட மறியம் பீவி

சிறுவர் கையிலே ஏழு கனி

செல்வி ஈந்திட அதனை வாங்கி

பருவம் அறியா எஹூதிகையில்

பழமும் ஈந்திட வாங்கிக் கொண்டு

திருடன் நீயல்லால் வேறு யாருமில்லை

சிறந்த கனிஏழும் எங்கே ஆய்ந்தாய்

உந்தன் தோப்பினில் ஆயவில்லை

ஊரார் தோப்பினில் ஆய்ந்து வந்தேன்

அந்த மரத்தை நீர் காட்டுமென்றான்

அப்போ சோலிஹா தனை விரித்து

சிந்தை மகிழ்ந்து நல்ல முஹிய்யதீனும்

சிறந்து பாரடா நிற்குமெனில்

அந்த எஹூதியும் உற்றுப் பார்க்க

மரமும் அங்குதான் நின்றிடவே

கண்டான் அந்த மரம்தன்னையும்

காரணர் என்று மனதிலுண்ணி

நின்ற எஹூதியும் பின்னும் பார்க்க

நெடியோன் கிருபையால் மலைமலையாய்

கண்டான் வைர தங்கமலை

கண்ணுக்கடங்காத பட்டணமும்

வண்டாடும் சோலை பூந்தோப்புமாய்

வகை கண்டிட தேவலோகமே

கண்ட எஹூதியும் மனம் பயந்து

கருத்தை அறியாமல் நாமடித்தோம்

நின்ற நிலைமாறி மனம் பதறி

நீதர் கதம்பிடித்து உருகியவன்

வண்டன்தான் சாமி சிறுமூடன்தான்

வரத்தாரென்றறியாமல் அடித்தேன்நானும்

சண்டாளன் நான் கொடிய பாவி

தானவன் தனக்காய் மனம் பொறுத்து

அழுது உருகிட முஹிய்யதீனும்

படுக்காபீர் தனை பார்த்துரைப்பார்

பரமன் அடித்தான் நீ அடிக்கவில்லை

கொடிய காபீரே எழுந்திருடா

குற்றம் நமக்கொன்றும் செய்யவில்லை

திடவார் உரைத்திட அவனெழுந்து

தெண்டனிட கனியொன்றும் ஈந்தே

விருப்பமுற்றவன் எடுத்துரைப்பான்

விரும சன்னாசி என்குருவே

கருத்தை அறியாமல் அடித்தேன் மூடன்

கத்தன் தனக்காக மனம் பொறுத்தே

பெருத்த குடியிலும் நான் எளியேன்

பெரிய குடிக்கு பிழை வராமல்

கருத்தில் மகிழ்ந்திட விடையருள்வீர்

காபீர் கேட்டிட அவர் மொழிவார்

பொறுத்தேன் என சொல்ல எஹூதியவன்

பெரியோர் தம்மையும் மகிழ்ந்து போற்றி

இருப்பிடம் எங்கே சுவாமி ஐயா

இயம்புமென கேட்க இவர் மொழிவார்

பெருத்த வனத்தில் பால்மடங்கள்

பிசகாதிருப்பது நாமேயாகும்

கருத்தை அறியாத மூடன் கேட்டு

கனி எட்டு மீந்தே கருதுவானே

அருமை புகழான குலதெய்வத்தை

யாராகிலும்கண்டு கனி ஏதென்றால்

கருதுவேன் அவருக்கு எஹூதி வேந்தன்

கனியும் கொடுத்தான் என சொல்லியே

குருவே சாமி போய் வாருமென்று

கும்பிட்டு நிற்க இவர் விரைந்தே

பருதி துலங்கிட முஹிய்யதீனும்

பால் மடம்வந்து முஸல்லா விரித்து

அருமை புகழான முஹிய்யதீனும்

ஆயுதமிறக்கி அஸர் தொழுது

அருமை புகழான ம்ஃரிபு இஷா

உகந்து தொழுதவர் இருக்கும் நேரம்

பிரிசை புகழான மறியம் பீவி

பெரியோன் ஒடுக்கு கொண்டிறங்கியதை

வரிசை புகழாரும் தன்முன்னே வைத்து

வல்லோன் சலாமும் எடுத்தோதினரே

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லி

உகந்து மடவார் நீயார் சொல்லுமெனில்

இறையோன் மஹ்ஷரில் முஹம்மதுக்கு

இன்பம் மணம் சூட்டும் மறியம் நாமே

மறையின் நெறியாரே உமக்கு பாட்டியாகும்

வயிறுபசியாலே எஹூதி தோப்பில்

பழத்தை நீர் பறிக்கலாமோ

கரையா குபிரான எஹூதி கையில்

கரையாய் இருந்து நீர் அடிபடலாமோ

சிறுவர் பசிவந்தால் ஆதி தரானோதான்

அருமை மடவாரும் சொன்ன போது

அப்துல் காதிரே பசியாருமெனில்

அருமை புகழாக எடுத்துரைத்து

உகந்து இருக்கவும் அவர் மொழிவார்

வரிசை புகழாரே எஹூதி நாளை

வந்து இஸ்லாமில் ஆவான் கண்டீர்

இறையோன் அருளாலே இனிமேலாக

எஹூதி அவனாலே எல்லோருமே

மறையின் நெறியுள்ள நபி தீனிலே

வருவார் பயப்படாதிரும் என்று

உரைத்து மடவாரும் விண்ணிலேக

உகந்து மகிழ்ந்தவர் இருந்தனரே

மகிந்திருக்கவும் எஹூதியவன்

வந்து அவனும் விடுதி சென்று

புகழ்ந்து அறியாதான் பொஞ்சாதியிடம்

புதிய சன்னாசி காரணத்தை

உகந்து அவள் கேட்டு மனம் பதறி

ஓகோ சன்னாசை அடிக்கலாமோ

அகமும் உருகியே பெண் மொழிவாள்

அருமை சன்னாசை அடித்தோமென்றே

வெற்றி மாராயம் சொல்ல வந்தாய்

விரும சன்னாசை தீண்டலாமோ

சத்தி சிவனுக்கு ஒப்பாகுமோ

சண்டாள பாவி அடிக்கலாமோ

தத்துவம் கூறினான் எஹூதி வேந்தன்

தலை புழுத்து மாளவோ வேலைசெய்தாய்

பக்தியாய் மனம்கொண்டு பெண் மயிலும்

பெருதி கலங்கியே அழுது சொல்வாள்

அருமை தமக்குமே அடிகள் பட

வரும சன்னாசை அடித்தாய் நீயும்

கருமம் வந்தல்லோ சூழந்ததிப்போ

கரும சண்டாளி இதுக்கென்ன செய்வோம்

இருப்பிடம் எங்கே எஹூதி வேந்தா

இருப்பு பால்மடம் பெண் மயிலே

சிறுபிள்ளை செய்தி எவ்விதமோ

என்ன அவதி படுகிறோம்தான்

ஈரல் எரியுதே எஹூதி வேந்தா

இப்போ நம் தோப்பில் அணில் குருவி

யாரும் அறியாமல் அருந்துதிப்போ

வெம்பி விழுகுது அநேக கோடி

சீறி அடித்துதான் என்றுரைத்தாய்

சிறந்த சன்னாசி மனம் கோணினால்

வருமத்திலாக்கி உன் வங்கிசமும்

வாழ்வு குன்றியே போகும் ஐயா

நிலத்தில் மோதுவாள் பரிதவிப்பாள்

நெடிய கூந்தல் விரித்தழுவாள்

கலக்கமாகுவாள் நீர்சொரிவாள்

காலில் மோதிவாள் கதறிடுவாள்

பலமும் குறைந்தது எஹூதி அவன்

பித்து கலங்கியே அவன் அழுதுதான்

கலக்கமது ஏது பெண்மயிலே

காரணம் அறியாமல் கலக்கம் செய்தேன்

புத்தி கெட்டதோர் நீர் மூடன்தான்

பலனும் தெரியாமல் அடித்து விட்டேன்

உத்த மனைவியே உன் மனதின்படி

உகந்து நடக்கிறேன் அழுகாதிரு

பத்தாரு உரைத்திட மயிலும் கேட்டு

பாங்காய் சன்னாசை அவர்கேற்ற கனி

துய்தமாகவே தோப்பில் போய்

சோலி பண்ணாமல் கனி எடுத்தே

சீக்கிரமாகவே கொண்டு வாவென

சீர்கேடன் தோப்பில் சென்று புக்கி

ஜாக்கிரதை கொண்டு கனியும் பூவும்

தலைவன் எடுத்துமே விடையருள

பாக்கியம் பெற்ற முஹிய்யதீனுக்கு

பால்பழம் சர்க்கரை கற்கண்டுடன்

ஏற்கும்படியாக ஒரு தட்டிலே

எலுமிச்சை பழம் நிறைய வைத்தே

திரும்ப ஒரு தட்டில் பருப்பரிசி

சிறந்த காரா பசுவின் வெண்ணெயும்

கருமம் தொலையவே எஹூதி வேந்தர்

விரும சன்னாசை அடித்த கரம்

கருமம் அகலவே கொய்த்திப்போ

கரத்தை தரித்தங்கே வைய்யுமெனில்

மறுத்து மறுமொழி அவன் சொல்லாமலும்

வாளை எடுத்தவன் கரம் தறித்தே

வைத்தான் பொன்மரவையில் ஒருதட்டிலே

வாழை இலையும் கீழ்மேலிட்டு

சித்தால் விளங்கிய முஹிய்யதீனுக்கு

சீரும் எடுத்துமே மகள் தலைமேல்

பத்தான்தனைக் கூட்டி பிள்ளை நால்வரும்

பாங்கி பால்மடம் வந்துபுக்கி

முகமும் சோர்ந்தாற் போல் இரு கண்ணில்

மொய் குழல் நீர் சொறிந்ததுவே

எந்தன் குருவே சுவாமி ஐயா

எந்தன் களிதீர வந்த கோவே

பகுத்தான் நீர்மூடன் என் கணவனள்

வரத்தாரென்றறியாமல் அடித்தானிப்போ

முன்Nனூன் தனக்காக மனம் பொறுங்கள்

மெய்யரே உங்கள் மனம் போற்றினேன்

வந்து எனைக் காப்பீர் என்குருவே

வாழ்த்தி அவளுமே முன்னே வைத்து

முன்னே வைத்தவள் தெண்டல் செய்து

மொய்குழல் புகழ்ந்து நின்றிடவும்

பொன்னின் மயிலாரே நீயுமிப்போ

புருசன் கையை ஏன் தரித்தாய்

மன்னன் தனக்கும் வருத்தமாமே

உந்தன் தனக்கு குற்றம் ஏது செய்தான்

விதனப்படுத்தினாய் நீயுமிப்போ

வென்ற கரமது பொருந்துமோதான்

கண்ணின் மணியே எங்கள் காரணரே

கருமம் தொலைந்திடும் என் குருவே

எங்கள் தனையும் காப்பாற்றுவீர்

எந்தன் மாதாவே குலக் கொழுந்தே

மங்கை உரைக்க இவர் மொழிவார்

மாதே என் கருத்தை சொல்ல கேளீர்

தங்கை சன்னாசி நானல்லவேதான்

நானுமே இருப்பிடம் பகுதாது நகர்

உங்கள் தேசமும் தீனிலேதான்

உகந்து அழைக்கவும் வந்தேன் நானும்

நன்னபி தீனில் அழைக்க சொல்லி

நாடி வந்ததால் நீயுமிப்போ

முன்னோன் கலிமாவும் மொழிந்தாயானால்

உந்தன் கையுமே பொருந்துமெனில்

அந்த மொழி கேட்டு பெண்மயிலும்

சொந்த மகன் நாலும் கணவனுமே

உடையோன் கலிமாவை மொழியுமெனில்

உகந்து ஆறுபேரும் கலிமா சொல்ல

திடவார் கரத்தையும் ஆசாவை தொட்டு

சிறந்த எஹூதி கையில் வைத்து

உடையோன் அருளாலே கரம் பொருந்தி

உகந்து மடவார் மனம் பூரித்து

கதமும் அவள் தோய்ந்து மொழிவதானார்

படைத்தோன் அறியாமல் கெட்டோம் நாங்கள்

பொய்யை பிடித்து புலத்தாட்டினோம்

பெரியோன் அருள் பெற்ற காரணரே

மெய்யை பிடித்தோம் நான் இனிமேலாக

வேத தவத்தினால் சுகமும் பெற்றோம்

தையல் அவளுமே புகழ்ந்து போற்றி

ஸெய்யிது நபிதீனில் வழிப்பட்டவள்

கையும் பொருந்திஅவள் நடந்து

கொடிய புத்துகள் ஏழுதன்னை

காலும் தலைமாய் மாறி கட்டியேதான்

கடலில் கொண்டு போய் தாழ்த்தி விட்டு

ஆலநபி தீனில் ஓர்மையாகி

அவளும் விடுதியை துருசதாகி

பால்பழம் சீனி சர்க்கரை சீPனிவிட்டு

பாச்சோர் ஆக்கி பொன் மரவையில் வைத்து

வாழ குருவான முஹிய்யதீனுக்கு

மங்கை கொடுவந்து முன்னே வைத்தாள்

வரிசை மடவாரும் தஸ்லீம் செய்து

மங்கை கைகாட்டி நின்று சொல்வாள்

ஒருவன் பேரிலே பாத்திஹாவும்

உகந்து கொண்டு வந்தேன் என மொழிய

கருணைக்குடையதோர் முஹிய்யதீனும்

கத்தன் பேரிலே துஆவிரைந்து

அருமை மடவாளுக்கு அதிக வாழ்வு

ஆண்டவனே நீ கொடு எனவே

வருசை புகழாரும் துஆ கேட்கவும்

வல்லோன் உரைத்திட சோலிஹாக்குள்

அருமை மடவாளுக்கு பொருளுமீந்தேன்

உகந்து மனைசென்று பார்க்கச் சொல்லும்

www.sufimanzil.org

கருதும் மொழிகேட்டு அவர் மொழிவார்

கத்தன் உரைத்திட்டான் உன் வீட்டுக்கு

பொருளும் ஈந்தே என உரைத்தான்

போய் பார்த்து வந்து சொல்லுமென்றார்

அந்த மொழி கேட்டு மனையில் புக்கி

அவளும் பார்த்திட பானை தோறும்

வந்து நிறைந்துமே பணம் இருக்க

மகிழ்ந்து அவளுமே ஓடி வந்து

முன்னோன் அருள் பெற்ற முஹிய்யதீன் கதம்

மொய்குழல் போற்றி மொழிவதானான்

எந்தன் மனைதோறும் பொன் பணமாய்

ஏகன் கொடுத்தான் என்றுரைத்தாள்

இறையோன் அளவிலே துஆவிரைந்து

இதிலும் பெருவாழ்வு நீ கொடென்று

மறையோர் துஆ செய்து மன மகிழ்ந்து

வயிறு பசியாறி மகிழ்ந்திருக்க

கறையும் அகற்றியே பொன்மயிலும்

கதமும் தோய்ந்தவள் மனையில் புக்கி

இறையோன் பங்கிலே கிருபையுற்று

ஏவல் தவறாமல் நடந்தார்களே

சரஹில் தெளிந்து அவள் நடந்து

செய்யிது முஹிய்யதீன் தனைப் புகழ்ந்து

உறுதி கொண்டவள் அனுதினமும்

பீர்தஸ்தகீருக்கு அமுதளித்து

வரும் நாளினில் பேர் அவருக்கும்

மாற்றி வைத்தார்கள் முஹிய்யதீனும்

புருசன் தனக்கு பேர் பஹ்ருதீன் என்றும்

பெண்கள் பேர் பாத்திமா என்றும்

பிள்ளை நாலுக்கும் ஹஸன் ஹுஸைன் என்றும்

பேர் முஹம்மது ஸெய்யிது என்றும்

வள்ளல் அவருக்குமே பேர் கொடுத்து

வாழ்வு உயர்ந்துதான் இருக்கும் நாளில்

வெல்லுவார் வந்து பஹ்ருதீனும்

வெகுநாளாய் ஒரு தேவுவந்து

தௌ;ளு மணியான கண்மணியே

சிறையை அழித்துமே போகுதிப்போ

இறையோன் அருள் பெற்ற ஆண்டவரே

இங்கும் வராமல் மாற்றம் செய்தால்

மறையில் அவர்கள் எல்லோருமே

முஹம்மது தீனில் துலங்குமிப்போ

உரைத்த மொழி கேட்டு முஹிய்யதீனும்

உடையோன் நமக்கொண்டு பயப்படாதே

கரையும் விழுந்தது ராஜன் மகள்

கன்னி கொண்டு போக இருபதுநாள்

இருக்குதென சொல்ல இவர் மொழிவார்

எதிர்த்துவரும் ஜின்னை பிடித்தடைப்போம்

கருக்கி அடைக்கவும் திறமுமுண்டு

கொன்று போடவும் திறமுமுண்டு

கருத்தில் பயம் வேண்டாம் பஹ்ருதீனே

கருதும் வகை கேட்டால் வாரார் இங்கு

சிறுவர் உரைத்திட அவர் மகிழ்ந்து

செல்வர் தனைப் போற்றி இருந்தாரப்போ

இருந்து மகிழவும் இறையவனும்

இவருக்கு உரைத்திட்டான் சோலிஹாக்குள்

விரைந்து பெருகின்ற வேந்தனுக்கு

வெகுநாள் குன்ம வலியும் உண்டு

மருந்து மாத்திரை பலிக்கவில்லை

அவதிப்படுகிறான் ராஜன் அவன்

பெரும் பூஜை போடுகிறான் அவன் மனையில்

பெருதி கொடு சென்று தீர்த்து வரவே

இறையோன் உரைத்திட இவர் மகிழ்ந்து

எழுந்து ஆயுதம் இவர்கள் அணிந்து

மறையின் நெறியான பஹ்ருதீனே

வள்ளல் கூட்டியே கோட்டை புக்கி

முறையாய் நின்றிட வாசல் காப்பான்

முன்னே வந்துஅவன் அடிபணிந்து

கரையாகுபிரோனும் கையும்கட்டி

கருத்தில் மகிழ்ந்தவன் மொழிவதானான்

எந்த ஊர் சாமி எங்கு வந்தீர்

இயம்புமென கேட்க அவர் மொழிவார்

எந்தன் இருப்பிடம் பகுதாதுநகர்

வந்து பால்மடம் இருப்பதுகாண்

உந்தன் ராஜா தனக்குமிப்போ

உபத்திரியம் கேட்டு வந்தேன் நானும்

ஆண்டோன் அருளாலே தீர்ப்பேன் நானும்

முகிலார் தனைக் கேட்டு வாருமென்றார்

அந்த மொழிகேட்டு தூதனுமே

ராஜனிடம் கேட்டு மொழிவதானான்

எங்கள் சுவாமி சிகாமணியே

இப்போ நம்முடைய கோட்டை வாசல்

வந்தார் பரதேசி சிறுவர் தானும்

வயது பதினாறு எழில் அழகாம்

இந்த தேசத்தில் அவர்களுக்கொப்ப

எங்கும் நான் காணேன் ராஜகோவே

சந்திர சூரியன் ஒப்பல்லவே

சன்னாசி இவர்களாகும் ஐயா

விருமம் சன்னாசி தம்மைக் கண்டால்

வினையும் கழன்று ஓடும் தப்பில்லையே

கருமம் தொலையுமே கண்டவுடன்

கருத மொழிக்கு நான் என்ன சொல்வேன்

விரும சன்னாசி தமக்குமிப்போ

வெள்ளி குருசு கொண்டு போகுமென்றான்

சிறுவர் தம்மையும் நிறுத்தியேதான்

சீக்கிரம் வருகிறேன் நடவுமென்றான்

வென்ற மொழிகேட்டு வாசல் காப்பான்

வெள்ளி முக குருஸுமே கொண்டு வந்து

ஆண்டவர் தமக்குமே அவனும் போட்டு

அவனும் ஆசாரம் செய்து இருத்திவைத்து

விண்ட விசகலம் எடுத்துரைக்க

வேதர் மகிழ்ந்து இருந்திடவும்

சண்டாள துரோகி காளிக்குமே

துலங்கும் வெள்ளியால் பருப்பரிசி

அரசன் சமைத்து அங்கு வைத்து

அறிய தரும் சீனின் பால் சோறும்

பருசு படமுப்பது சன்னாசியும்

பால்சோறு கற்பூர தீபமிட்டு

வகுஸூ பண்ணியே பூஜை போட்டு

வெகுநேரம் செல்ல முஹிய்யதீனும்

கருணை பொங்கியே கோபம் கொள்ள

கரடிபோல சப்தம் விழ

அரசன் கோட்டையும் அரண்மனையும்

அதட்டி ஒரு சப்தம் போட்டிடவே

கருத்த மலைதேவு வந்ததென்று

கருத்து கலங்கியே ராஜன் அவன்

விருமத்து கொண்டு மனம் பயந்து

வேந்தன் மனைவிக்கு உரைக்கலானான்

கருத்த மலைதேவு சப்தம்போல

காணுதிப்போ நீ ஏகியே

தெருவாசல் நின்று பார்த்து வாவேன்

செப்ப அவளோடி வந்து பார்க்க

குர்ஸூ பலகையில் இவரை கண்டு

கோதை மருண்டு கண் நீலம் பூத்து

கிட்ட வந்தவள் சர்க்கணம் செய்து

கிளி மொழியைப் போல் மொழிவதானாள்

அட்டதிசை புகழும் சன்னாசியே

ஐயா சுவாமி என் குருவே

கட்டளைப்படி எங்கள் ராஜன்

காளி தனக்குமே பூஜை போட்டு

திட்டப் படுத்தியே வருவாரிப்போ

செல்வரே நீங்கள் இருங்களென்றாள்

வந்து ராஜனுக்கு எடுத்துரைக்க

விரும சன்னாசும் நம் வாசலிலே

சந்திரன் ஒளிபோல முகத்தழகும்

சட்டை குப்பாயமும் தேன் ஒழுக

கந்த மகிழ்கின்ற காரணருக்கும்

காலில் நல்ல பாதகுரடும் பூட்டி

வந்து ஆயுதம் பரிசுடனே

வயது பதினாறு எழில் அழகே

வரவில்லை என்று கோபம்கொண்டு

வழிய சப்தமும் உண்டாச்சுது

திரவு தெரியாமல் நாமிருந்தோம்

சீக்கிரம் போக வேணுமென்றாள்

திருவை மொழிந்திட பயஞ்செனித்து

சீக்கிரம் வந்து அடிபணிந்தேன்

கையும் காட்டி நின்று அவனுரைப்பான்

காரணம் சன்னாசை என்குருவே

ஐயா சுவாமி எந்தனுக்கு

அனேக நாளாக குன்ம வலி

மெய்யும் தளர்ந்து மெலிகிறேன் நான்

விலக்குவதற்கு மருந்து உண்டோவென்று

துய்யோன் கிருபையால் விலகும்பாரு

சொல்லி கைபோட்டு சாம்புராணி

கையால் எடுத்து நுணுக்கி அவர்

கையில் கொடுத்து விழுங்குமென்றார்

அந்தபடியேதான் அவர்விழுங்க

அகன்றது வலி அந்நேரமே

சிந்தை மகிழ்ந்து ராஜன் அவன்

சென்று மனைபுக்கி காசாயிரம்

கந்த மகிழ்கின்ற காரணருக்கு

கனகமணி தட்டில் வைத்தவனும்

சந்திரகாவி சால்வை ஒன்று

தங்க காசுமே மடித்து வைத்து

பெருத்த ராஜனும் எடுத்துக் கொண்டு

பிள்ளை தன்னையும் கூட்டிவந்து

திருசை புகழான முஹியத்தீனிடம்

செம்மல் கொண்டு வந்து முன்னே வைத்து

விரும சன்னாசே என்குருவே

வெகு நாளாகுது ஒரு தேவு வந்தே

www.sufimanzil.org

இந்த தீவையும் காவல் கொண்டு

இந்த குடிகள் முழுவதிலுமே

வந்து அதற்குமே இளங் கன்னியை

வருஷா வருஷம் கொடுத்து வாரோம்

வந்து குடியெல்லாம் சரியாச்சுது

வழிய தேவுக்கு நம் குழந்தையை

உகந்து மகிழ்கின்ற காரணரே

கரையும் விழுந்து இருக்குதிப்போ

எந்தன் குருவே சுவாமி ஐயா

இனி எட்டு நாளில் தேவு வரும்

அந்த தேவையும் அகற்றுவதற்கு

ஐயா மாற்றங்கள் உண்டோவென்று

வந்து அகற்றவும் மருந்துமுண்டு

வரைந்து இருக்கவும் திறமும் உண்டு

சிந்தை கலங்காதே ராஜகோவே

சிறுகன்னி எழுந்திரு என மொழிந்தார்

சிந்தை மகிழ்ந்து இவருரைப்பார்

ஜின்னும் வரும்போது நமக்குரைத்து

முந்திவழக்கமாய் கொண்டுபோய் வைத்தான்

முனியை செய்விப்பேன் பயப்படாதே

உங்கள் தமக்கு சலிப்பு வேண்டாம்

உடையோன் நமக்குண்டும் இருமென்றார்

உரைத்த முஹிய்யதீனும் தங்க காசை

உகந்து அளித்தார்கள் நின்றோர்க்கே

நிறைந்த முஹிய்யதீனும் சால்வையும்

நின்ற பஹ்ருதீனுக்கும் ஈந்தார்களே

விரைந்து வந்துமே பால்மடத்தில்

மீரா முஹிய்யதீன் முசல்லா போட்டு

இறையோன் ஆயுதம் இறக்கி வைத்து

இலங்கும் முஹிய்யதீன் இருந்தார்களே

இருந்து மகிழவும் பஹ்ருதீனும்

சென்று இவருக்கு பால்சர்க்கரை வைத்து

திருவடிபோற்றி முன்னே வைக்க

தீனோர் அருந்தி மகிழ்ந்திருக்க

கருதுவானப்போ பஹ்ருதீனும்

கொடிய தேவு வருகிற நாளாச்சுது

இலங்கும் முஹிய்யதீன் ஆண்டவரே

இன்று இரவு தேவு வருகுதென்றார்

பெருத்த மலைதேவு வந்திடாமல்

பெரியோன் அருளாலே நிறுத்துமென்றார்

வருகிறதே என்று சொல்லி ராஜனுமே

வள்ளி தன்னையும் நீராட்டினான்

வராமல் இங்கு காத்தீரானால்

சர்வ ஜனங்களும் நபி தீனிலே

தடங்கல் இல்லாமல் வந்திடுவோம்

பருதி கொண்டவன் எடுத்துரைக்க

பீர்தஸ்தகீர் மகிழ்ந்துரைப்பார்

தருகாமல் இங்கு வந்தீரானால்

சமத்தை அறியலாம் பஹ்ருதீனே

பெருத்த மலைதேவு படும்பாட்டையும்

புரண்டு உருளவும் வகைபார்த்திரு நீ

கருத்த மலைதேவு வரவும் வேணும்

கருணை மணி கூசாவில் அடைக்கவேணும்

பெருத்த ராஜனும் மகிழ வேணும்

பெரியோன் கூத்தையும் பார்க்கலாமே

பார்க்கலாம் நாளை ஒரு சாமத்தில்

பாரமலை தேவு படும்பாட்டையும்

ஏற்கை செய்வது எங்கே என்னில்

இருப்பது காளி கோவிலிலே

காக்குமோ காளி பஹ்ருதீனே

கண் கெட்ட தேவும் காப்பதுண்டோ

யாருக்கும் பெரியவன் காப்பதல்லால்

யாராலும் முடியாது பஹ்ருதீனே

பொய்யை பிடித்தவன் சீமானல்ல

பிழை அவனாவான் பஹ்ருதீனே

மெய்யை பிடித்தவன் சீமான் ஆவான்

மேலோன் தீதாரும் மிக பெறுவான்

கையில் பலனாகும் கலிமாவுமே

ஹபீபு சபாஅத்தும் மிக பெருவான்

மெய்யும் பொய்யுமே பிடிக்கலாமே

வேந்தன் கன்னியால் தெரியலாமே

தெரியவருமெனில் அவன் மகிழ்ந்து

www.sufimanzil.org

திருவடி போற்றி மகிழ்ந்திருக்க

சிறிய கன்னியை ராஜனுமே

சிறந்த மஞ்சள் நீராட்டியேதான்

வர்ண பட்டாங்கு அனைத்தவரும்

மயிர் சீவியே முத்தணிந்து

இருவிழி கைரசனும் தீட்டியே தான்

இருகொப்பு அணிந்து பதக்கமிட்டு

மூன்றாம் பிறைபோல பதைக்கன் அணிந்து

முத்து பல்லாக்கு மூக்கணிந்து

தண்டாமலர் தனக்காசணிந்து

தங்க பதைக்கனும் வடமாலையும்

பூண்டாமணி தங்க கடயம் இட்டு

பொன்னின் அரைஞான் கொடியும் இடைக்கணிந்து

காண்டா மணிரூப கன்னியருக்கு

கைக்கு கணையாழி விரலுக்கணிந்து

குண்டு மல்லிகை முல்லை சூட்டி

குங்குமம் கஸ்தூரி ஜவாதணிந்து

மண்டலம் புகழும் மகள் தன்னையும்

மரகத தேரிலே வைத்தவனும்

ஜின்னு மல்லிகை கைப்பிடித்து

தேரில் இருந்திட முரசதிர

வண்டுரையும் கூந்தல் மடவாள் சூழ

மடவாசல் நோக்கி நடந்தனரே

விருத பலர் சூழ கட்டியம் கூற

வெஞ்சாமரை போட நாட்டியமாட

திருவை பலர் சூழ குப்பிகூட்ட

தேரும் உருளவிட்டதிர

கருத்து கலங்கிய ராஜன் அவன்

கண்ணீர் சொரிந்து மாரழுது

அருவைமார்களும் மற்றெல்லோரும்

அரசன்மகள் தன்னை பார்த்து பார்த்தே

அண்ணாந்தழுது நிற்பவரும்

விருவி புலம்பியே அழுதவரும்

கண்ணீர் சொறிந்து புலம்புவாரும்

கலைகள் சோர்ந்து நிற்பவனும்

தன்னை மறந்து நிற்பவரும்

தரையில் கிடந்து உருளுவாரும்

சின்னஞ்சிறியவளுக்கு இது பலனோ

திரும்பி இது வழி வாரார்களோதான்

நின்று அனைவரும் புலம்புவாரும்

ராஜன் தேவியும் பரிதவிக்க

வண்டும் பூவை அது சூழ்ந்தது போல்

மருவி கை சோர்ந்து கொண்டு மலை

அண்ணாந்து பார்த்து உமது மூப்பியும்

குலைந்து உருகியே நிற்பவரும்

நின்று சோம்பியே அழுதவரும்

நினைவு தடுமாறி நிற்பவரும்

இந்த படியாக தீவிலுள்ளோர்

ஏழுகடல் ஜலம் அலைவருவதுபோல்

சிந்தை கலங்கியே மடவாசல் வந்து

சிறுத்த இடை மின்னை கீழிறக்கி

வந்து ராஜனும் முஹிய்யதீன் கதம்

மகிழந்து தனைப்போற்றி தெண்டல் செய்து

கந்தமலர் கதம் தன்னிலே தான்

கனத்தசேனை அடங்கலுமே

சென்னல் கதிர்கள் சாய்ந்தது போல்

திருமலர் போற்றி கிடந்திடவும்

அண்ணல் முஹிய்யதீன் எழுந்திருங்களென்று

அருளும் மொழிகேட்டு அவரெழும்பினார்கள்

மன்னன் கைகட்டி வாயும் பொத்தி

வாழ சன்னாசே என் குருவே

கண்ணின் மயிலாரும் உங்கள் காவல்

காத்து ரட்சிக்க வேணும் ஐயா

எந்தன் வலியுமே தீர்த்தவரே

எந்தன் குழந்தையும் காப்பாற்றுவீர்

சிந்தா திரையாக தீர்ப்பீராகில்

தீவு அடங்கலும் அடிமையாகும்

வந்து அனைவோரும் பதம் பணிவார்

வாக்கும் அருள்வீக்கள் என்குருவே

முன்னோன் முஹிய்யதீன் குறுஞ்சிரிப்பு கொண்டு

மொழிவான் ராஜன் தன்னைப் பார்த்து

பரமன் நமக்கொண்டும் பயமும் வேண்டாம்

பருத்த தேவு வந்ததானால்

மருள அடிப்பேன் பிடித்து அடைப்பேன்

மன்னா மனம் சற்று மலையாதே நீ

குறையொன்றணுகாது இறையருளால்

கொண்டுபோய் எந்நாளும் வைக்குமிடம்

சிறுத்த இடைமின்னை வைத்தே நீயும்

செல்வர் உரைத்திட அவன் மகிழ்ந்தே

புகழ்ந்து மலரடி பணிந்தவனும்

பொன்னின் மயிலாரை தேரில் ஏற்றி

மகிழ்ந்து ராஜனும் மற்றுள்ளோரும்

மடவாசல் விட்டு நடந்திடவே

உகந்து அவர்சொல்ல இவர் எழுந்து

உடையோன் ஆயுதம் எடுத்தணிந்து

அகமும் மகிழ்ந்தவர் கீழிறங்கி

ஐம்பொன் பாதகுரட்டிலேறி

சக்கரமாக தரி இரண்டையும்

தலைமேல் இட்டு சிலம்பொலிய

மிக்க நபியுல்லா முஹம்மது மேல்

மகிழ்ந்து பைத்துமே ஓதிடவும்

சிக்காமல் ஓதி சிலம்பொலிய

சேனைதளமெல்லாம் திரும்பி பார்த்து

மிக்க சன்னாசை பதம் பணிந்து

வெல்லுவாரப்போ சேனை தளம்

இந்த அதிசயம் எங்கும் காணோம்

இவரும் வரத்தா ராகுமென

வந்து சிறை மூழ்வார் தப்பில்லையே

என்று வதைப்பார் தேவையும் மோசமில்லை

சந்தோசமாக கோயில் புக்கி

தங்கை தன்னையும் கீழி;றக்கி

வந்த ஜனத்துக்கு தர்மம் ஈய

வள்ளல் எதிர்பட அவருக்கும் ஈய

அகமும் மகிழ்ந்து அதனை வாங்கி

அவர்கள் சோலிட்டு அகன்றிருக்க

உகந்து கன்னியே தாய் தந்தையும்

உகந்து கொண்டுபோய் காளிமுன்னே

வைத்து மகிழ்ந்துமே பொங்கலிட்டு

வரிசை பொரியும் போட்டவனும்

புகழ்ந்து கற்பூரம் தீபம் இட்டு

பூலோக நாயகி எந்தனம்மா

எந்தன் சாமி குல தெய்வமே

எந்தன் குழந்தை உங்கள் காவல்

தந்தேன் உங்கள் காவல் காப்பாற்றுவீர்

சண்டாள தேவு வராமலும்

வந்து காத்துமே எந்தனம்மா

வள்ளி எந்தனுடன் வந்ததானால்

உங்கள் தனக்குமே எதிராவுக்கு

உகந்து தேருமே ஓட்டி வைப்பேன்

வைப்பேன் தப்பில்லை உங்களுக்கு

வள்ளி திருவுளம் சொல்லு அம்மா

விரும்பி அவர் கேட்க வலது இடம்

வெல்லாததனாலே மனம் சடைந்து

கச்சுதோ காளி உன் மனது

காட்டி கொடுத்தாயோ சண்டாளி நீ

பைங்கொடி தன்னை இன்று இழந்தேன்

பாவி உன்னை நம்பி வீணாச்சுது

சண்டாளி உன்னை நம்பினதும்

சண்டாள தேவு ஒப்பினதும்

ஆண்ட அரசன் சொல்லி புலம்பினதும்

அதுகண்டு வள்ளல் படியில் ஏற

நின்ற சேவகன் இவர்களைப் பார்த்து

நீர் எங்கே போகிறீர்கள் நில்லுமென்றான்

விண்டால் அவனுமே தேவு கிட்டே

போறீர்கள் போவோம் என்றான்

நின்ற சேவகன் உரைத்திடவும்

நீதர் திரும்பினார் கோபம் கொண்டு

சென்று மரத்தடி இவர் இருந்து

செல்வர் கோபிக்க இறை மொழிவான்

வண்டவன் அறிவானோ உமதருமை

மனதில் கோபத்தை உள்ளடக்கி

சண்டாளன் நிற்பான் குருடதாக

சலவாத்தோதி நடங்களென்று

என்ற மொழிகேட்டு இவரெழுந்து

வேதநபியுல்லா சலவாத்தோதி

சேல்வ அவருமே அவன் குருடாய் நிற்க

சீமான் முஹிய்யதீன் உள்மகிழ்ந்து

நல்ல நபிபேரர் தூண் மரப்பில்

நாதர் நின்றிட நாலுபுறமும்

குத்து விளக்குமே போட்டு நன்றாய்

குத்துவிளக்குடன் சர விளக்கும்

வள்ளி தமக்குமே மஞ்சள் இஞ்சி

மடையில் வைத்தவர் வாக்கரிசி போட்டு

வெளியில் வந்தவன் கதவை பூட்டி

வேந்தர் சன்னாசே ஐநூறு பேராய்

அழைத்து ராஜனும் வெகுமதியும்

அவர்களுக்கு மீந்து மொழிவானப்போ

காளிக்கு பூஜை போட்டுக் கொண்டு

கடூரமாகவே அக்னியும்

வெளியில் இருந்து செய்வதுவும்

வெளிச்சமும் போட்டு இருக்களென்று

திட்டம் செய்தவன் ராஜனுமே

சென்றான் சேனை தளத்துடனே

அற்ற திசை புகழும் முஹிய்யதீனும்

அவர்களும் தூண்விட்டு வெளியில்வந்து

சப்தமுடனேதான் முசல்லா போட்டு

ஸெய்யிது முஹிய்யதீன் ஆயுதமும்

வலது இடதாக சூழவைத்து

வள்ளல் முஹிய்யதீன் இருக்கும்போது

வேந்தன் மகளுமே எடுத்துரைப்பாள்

விரும சன்னாசே என்குருவே

நான்தான் தேவுக்கு இறையாகவே

சண்டாள தேவு பொல்லாதது

வந்து தலையில் விருமாவுமே

விரைந்து மயிரால் மறைத்து வைத்தாள்

காந்தாரி பொல்லா சண்டாளி நான்

கருமம் தொலைக்கவே வந்தேன் நானும்

இங்கே சுவாமி இருக்குன்னாது

எழுந்து போவீர்கள் என்குருவே

மங்கை அவள் சொல்ல குறுஞ்சிரிப்பு கொண்டு

வாழ்த்துவாரப்போ முஹிய்யதீனும்

தங்கள் உயிருமே போவதினால்

சன்னாசி உயிருமே மாண்டாளென்ன

பங்கம் வராது பெண்மயிலே

பரமன் நமக்குண்டும் சொல்ல கேளாய்

கருத்தமலை தேவு வந்ததனால்

கதற அடிப்பேன் நான் பார்த்திரு நீ

குறுக்கி அடைக்கவும் மருந்துமுண்டும்

குலைய அடிக்கவும் வலிமையுண்டும்

இருப்பதறிந்தால் வரமாட்டாது

இனமும் தெரியாமல் வந்ததானால்

அறுத்து கிழிப்பேன் ராஜன் கன்னி

அதற்கு பயம் வேண்டாம் சும்மா இரு

இருப்பது சரி என்குருவே

இப்போ அதற்குமே எதிரி இல்லையே

பெருத்தமலை தேவை செய்விப்பதற்கு

பெரியோன் ஆயுதம் இருக்குதுதான்

கருத அவளுமே எடுத்துரைப்பார்

கத்தன் வல்லையும் என் வல்லையும்

சிறுத்த இடைமின்னி சீமானுமே

செய்விக்க கொடுத்து இருக்குது பார்

வரிசை புகழான முஹிய்யதீனும்

வாயை அடக்கியே மூச்சை விட

விருவி குமுறியே வெள்ளிடி போல்

மேகம் உலாவிட கன்னியரும்

கருத்து கலங்கியே ராஜன் கன்னி

காரணரே தேவு வந்ததென்றார்

சிறுத்த மடவாரே செய்விக்கவும்

சீமான் ஆயுதம் இதுவல்லவோ

துய்யோன் சப்தமும் இதுவேயாகும்

முனியும் வரவில்லை என்அரசே

மன்னன் உன்னையும் காளியிடம்

வைத்து பின்சாட்டி போயிருக்க

கன்னி மயிலாரே பயமுமக்கேன்

கருதுவாளப்போ ராஜன் கன்னி

மன்னர் அவ்வாசை ஒழிந்து போனார்

மாகாளி காப்பது எங்குமுண்டோ

எந்தன் விதியே முடிந்ததல்லால்

இடையில் ஒருவராலில்லை ஐயா

வந்து அவளுமே எடுத்துரைத்து

ஓய்வில்லாமல் நீர் சொறிய

சிந்தை கலங்காதே பெண்ணரசே

செய்விப்பேன் பார்த்திரு ராஜன் கன்னி

மறுவல் செய்துமே இவர் உரைப்பார்

முன்னோன் நமக்குண்டும் பயப்படாதே

கருதி அவளுமே மகிழ்ந்திருக்க

கத்தன் உரைத்திட்டான் மறியம் ஆயிசா

அருமை மடவாரை அழைத்து சொல்வாள்

ஆனைமலை தேவு வருகுதிப்போ

வருகுது வேகம் கொண்டதுவும்

கொடியதாகவும் கருகுதிப்போ

பொருத்த விளக்குமே நுகரும் கண்டாய்

பாலரிடம் சென்று அவருக்குரைத்து

கருத்து கலங்காமல் பாலருமே

காவலாய் நின்று விளக்கு தூண்டி

கருத்த மலைதேவை அடைத்த பின்பு

கருதி வாருங்கள் என்றுரைத்தான்

ஒருவன் உரைத்திட மறியம் ஆயிசா

உகந்து பானக்கம் முன்னே வைத்து

பெருதி கொண்டு சலாம் எடுத்துரைக்க

www.sufimanzil.org

பிறத்தி சொல்லியே நீயாரென்னில்

கருதுவாரப்போ நபியிரசூல்

ஹபீபு முஹம்மது தேவியாகும்

அருமை அபூபக்கர் மகளார் ஆகும்

ஆயிசா என்பேர் உமக்குப் பாட்டி

பின்னும் மறியம் எடுத்துரைப்பார்

பெரியோன் மஹ்ஸரில் முஹம்மதுக்கு

முன்னோன் மணம் சூட்டும் மறியம் நானும்

உகந்து உங்களுக்கு பாட்டியாகும்

ஜின்னும் வருகுது பெரு மூச்சிடும்

சில்லியாகும் கதவதுவும்

குத்து விளக்கும் நுகருமென்றும்

ஹுதாயன் அனுப்பினான் எங்களையும்

எங்கள் இருவரையும் அனுப்பி வைத்தான்

இலங்கும் பாலரே பயமும் வேண்டாம்

உங்கள் தமக்கு காவலாக

உத்தமரே வந்தோம் நாங்களுமே

திங்கள் பொருந்திடும் நபி பேரரே

தேவு வருகிற நேரமாச்சு

தாங்கள் பசியாறி திறமதாகவே

தவியாதிருங்கள் நீங்களுமே

விளக்கு தூண்டுகிறோம் நாங்களுமே

வேந்தரே இருமென்று விளக்கு தூண்ட

ஒளிவு துலங்கியே மடவார் நிற்க

ஓர்மையாகிய ராஜன் கன்னி

வாழ்த்துவாளப்போ இவரைப் பார்த்து

வந்தவர் யார் என்குருவே

வாழ்த்துமென கேட்டு அவர் மொழிவார்

வல்லோன் அனுப்பினான் பயப்படாதே

பயப்படாதிரும் என்குருவே

பைங்கொடி தானும் கருத்திலுற்றாள்

பயமும் நமக்காச்சு இனிமேலாக

நாதர் தம்மையும் காப்பாற்றுவீர்

அசலார் காவலாய் நிற்பதாலே

அறுத்து குவிப்பார் ஜின்தனை

கையில் கோன் விழி மடவாள் தானும்

கருத்திலுற்றவள் இருக்கும் நேரம்

மகிழ்ந்து இருக்கவும் ராஜன் கன்னி

மலையை விட்டு தேவு திரும்புகையில்

ஓசை வந்திட  இவன் செவியில் தாள

மணியோசை ஓய கடலிரைச்சல் போலும்

இமைகள் விரித்து உபரித்து நின்ற

பயனை போலும் சடை விரித்து

அகலம் ஏழுகாதம் தூள் பறக்க

அண்டபிண்டமும் கிடுகிடென்றே

மடைபோல் நாசியும் சால் வயிறும்

மண்ட கிடிபோலும் கொண்டு விழியும்

சடையும் நிலம் தூக்கி விண்ணுலாவி

சண்டாள தேவு மூச்செறிய

அடர்ந்து பெரும்வனம் மரங்கள் சாய

ஆக்கிரம் கொண்டது ஏழு காதம்

தடையற எழுந்தது தேவதுவும்

தடை மீறியே வருகும் போது

வருகுது சாமி தேவதுவும்

மனதில் பயம் மெத்த எந்தனுக்கு

கருத்து கலங்குது என்குருவே

கண்ணும் தெரியவில்லை எந்தனுக்கு

இருக்கக் கூடாது எந்தன் உயிர்

ஏகுது சாமி தப்பில்லையே

சிறுத்த இடைமின்னா மலையாதிரு

ஜெகத்தில் இருக்கிறேன் எழுந்திராதே

இறைவன் பேரிலே நாட்டம் கொண்டேன்

எழுந்து வந்து நீ என்னை தொடாதே

ஒருவன் நமக்குண்டும் ராஜகன்னி

ஒடுங்கி மெலியாதே மாட்டுகிறேன் பார்

தயங்கி மயங்காதே சலவாத்தோது

தயங்க அடிக்கிறேன் பார்த்திரு நீ

சிறுத்த இடைமின்னே மலையாதிரு

சந்து குலையவே அடிக்கிறேன் பார்

கருத மொழிகேட்டு கன்னியரும்

ஹபீபு முஹம்மது மேல் சலவாத்தோது

வருமம் அகற்றி அவர்கள் இருக்க

விரண்டு தேவது முடுகி வர

அரண்ட சன்னாசே ஐநூறு பேராய்

அவர்களின் மேல் மூச்செறிய

கருத்த மலைதேவு முடுகி வர

கதவு தெறித்து தூளதாச்சே

பொடியதாகிட ராஜன் கன்னி

புத்தி தழும்பியே புலம்பிடவும்

முடுகி வரும் தேவை அடக்கிறேன் பார்

மொய்குழலே பதறாதிருங்களென்று

துடித்து பதைக்குதே சுவாமி ஐயா

துண்டுதுண்டாகுதே என் சரீரம்

அடிக்கிறேன்பார் ராஜகன்னி

அஞ்சாதென சொல்ல இவள் மகிழ்ந்து

திருசை புகழான நபி மகளார்

ஜன்னத்து பீவி மெலிந்த தன்னை

வரிசை புகழாரும் எடுத்துவீச

வல்லோன் கிருபையால் பறந்துசென்று

உரைத்த ஒன்பது துவாரத்திலும்

உரைத்து பாய்ந்தது அனல் எழும்ப

கருத்த மலைதேவு கரைந்துருகி

கண்ணீர் கலங்கியே புலம்பலானார்

கொண்டு பட்டதோ மஞ்சை போலும்

குலைந்து உருகியே என சொல்லுவான்

இன்று வினையுமே செய்தவர் யார்

இதுவரையும் இல்லாத அவகேடுதான்

கண்டு பார்த்து நான் போக வேணும்

கருத்து கலங்கியே சொல்லமுது

என்றுமுள்ள நபி வந்தாலுண்டும்

ஈஸா மூஸா நபி வந்தாலுண்டும்

வரிசை புகழான இபுறாஹிம் நபி

வள்ளல் இஸ்மாயில் ஆதம் நபி

கிருபை கடலான கிலுறு நபியும்

கிருபை புகழான ஹஸன் ஹுஸைனார்

சிறுவர் முஹிய்யதீன் வந்தாலுண்டும்

ஜெகத்தில் இருப்பவர்கள் செய்வதுண்டோ

கருத்தில் பலபல நினைவிலுற்று

கலங்கி தேவுமே புலம்பிடவே

சிந்தை கலங்குது தேவதுவும்

சிறகு ஒடிந்து நிற்குதுகான்

இங்கே முகம்நாடி வருவதில்லை

ஆயுதத்தைக் கூறுகிறேன் பார் ராஜகன்னி

ஆந்த தேவுதான் படும்பாட்டையும்

அருவைப் பார்த்திரு என சொல்லியே

முன்னோன் சோட்டா கோடாலியும்

முடுகி கொண்டுவா வென்று அனுப்பினாரே

அருமை புகழாரும் அனுப்பிடவும்

அதுகள் ரண்டுமே சென்று புக்கி

பெருத்த மலைதேவை அடிமேல்அடி

பெரியோன் ஆயுதம் அடித்திடவும்

வினவி மலைதேவு பயந்ததுவும்

வேதரே நீங்கள் யார் சொல்லுங்கள்

இறையோன் முஹிய்யதீன் தூதரடா

எட்டி நடவென்று அடிமேல் அடி

அடித்து முடுகிட அவன்பயந்து

ஐயா சுவாமி அடியாதீர்கள்

படுத்துக் கொண்டவன் கெஞ்சுவானாம்

பாலர் தூதரே இனிமேல் நானும்

எடுத்தடி வைக்கமாட்டேன் நானும்

இறந்தாலும் வரமாட்டேன் சுவாமிமாரே

படிக்குள் வசனித்த முஹம்மது மேல்

பயகாம்பர் தூதர்யார்கள் ஆணை

அருமை புகழான ஈஸா மூஸா

ஆதம் பயகாம்பர் நபி மேலாணை

விரும்பி நான் அங்கே வருவதில்லை

வேதர் முஹிய்யதீன் பாதத்தாணை

கருத்தமலை தேவு கெஞ்சிடவும்

கருதும் மொழியது செவியில் கேட்டால்

இருவர் தம்மையும் நெருப்பல்லவே

எரிப்பார் முஹிய்யதீன் ஆண்டவரே

வரிசை சோட்டாவும் கோடாலியும்

வரிசைக் கவனுமே எழும்பாததால்

திருசை புகழாரும் அது அறிந்து

தேவரீர்; கொண்டுவர சொன்னார்கள்

கருத அதுவே விரைந்து வந்து

கருத அதுகூறும் அவரைப் பார்த்து

திருட்டுப் பயலே நீ எழுந்திருடா

தீனோர் மனக்கோபம் ஆகுதிப்போ

வண்டகசடா எழுந்திருடா

வதைத்து சக்கரம் மயிர்பிடித்து

கொன்றார் கோடாலி சோட்டாவுமே

கனலும் பறக்கவே அடித்திடவும்

சண்டாள தேவை இழுத்துவர

ஸெய்யிது முஹிய்யதீன் உரைப்பதானர்

மண்டலம் புகழும் ராஜகன்னி

வண்டன் தனையும் இழுத்து வாரார்

கண்டு நீயுமே பயப்படாதே

கடுகி மெலிந்து வருகிறது காண்

நின்று அவருமே மகிழ்ந்திருக்க

விழிகள் இரண்டுமே நெருப்பெரிய

கொண்டு அவனுமே மடவாசலில்

கொள்ளிக் கட்டைபோல் நிறுத்திகொண்டு

சட்டம் மாறுதல் செய்திடவும்

சண்டாள தேவு எட்டிப் பார்த்தே

இறையோன் முஹிய்யதீன் நம்மைக் கண்டு

ஈரல் கருகி கதம் பணிந்தே

இறையோன் அருள்பெற்ற ஆண்டவர்களே

ஏகன் குர்ஸினில் துயிலும் கோவே

மறையின் நெறியுள்ள தவப்பொருளே

மாதாபிதாவுமே இத்தூரம்தான்

திரைகடல் மலைவளமும் தாண்டி

சீர்பாதம் நோக்க புறப்பட்டீர்களோ

வந்த செய்தியும் அறிந்தேனாகில்

வள்ளலே எடுத்தடி வைக்க மாட்டேன்

சந்து குலையுது ஆண்டவரே

சந்றே அடியை விலக்குவீர்கள்

எந்தன் சரீரம் குலையுது ஐயா

இறந்துபோவேன் இனி அடித்தால்

உகந்து மகிழ்கின்ற காரணரே

கருமம் நான்ஒன்றும் செய்யவில்லை

அங்கம் குலையுதே ஆண்டவரே

ஆத்மா குன்றுதே தவப்பொருளே

சங்கை அழகுள்ள தயாபரமே

சற்று மனது இரங்கலையோ

பொங்கி அவனுமே நீர்சொரிய

பெரியோன் முஹிய்யதீன் மனதிளகி

தொங்கர் அடியதை நிறுத்துமென்று

தூதர் அடியாமல் நின்றிடவே

பொன்னி;ன் மயிலாரும் நடுக்கமுற்று

பொருமி விம்மியே இருக்க கண்டு

கண்ணின் மயிலாரை பார்த்தவரும்

கலங்காதே பெண்ணே சலவாத்தோது

உன்னி அவர்களும் எடுத்துரைத்து

உகந்து இருக்கவும் தேவு உரைக்கும்

முன்னோன் அருள் பெற்ற ஆண்டவரே

உங்கள் தனக்குதான் அடிமையானேன்

அடங்கா நஸ்ராவை அடங்க வைப்பேன்

ஆண்டவர் சொல்மேல் நடப்பேன் நானும்

உடையோன் மேலாணை நபிமேலாணை

உத்தயார்களே தன்மேலாணை

ஆதம் சுலைமான் நபிமேலாணை

ஆதம் பயகாம்பர் நபி மேலாணை

வள்ளலே உங்கள் பாதத்தாணை

வரவும் மாட்டேன் நான் வந்தேனாகில்

வெல்லும் சிரமும் இரண்டதாகும்

வேதரே என்னை காப்பாற்றுவீர்

கள்ள மனதை அறியாமலே

காதர் முஹிய்யதீன் மனதிளகி

உள்ளம் மனதிலே விடுவோ மென்று

உரைப்பதாகிட இறை மொழிவான்

சொல்லில் பிரட்டன் கொடிய கள்ளன்

சொல்லை மீறியே நடந்தவன்தான்

வள்ளி தன்னையும் கொலை செய்தவன்

வண்டன் பெரும் கேடன் சொல்பிரட்டன்

பொல்லா கொடியவன் சண்டாளனை

பொன்னின் கூசாவில் அடைத்து நீரும்

நல்லா அவனையும் செம்மிவையும்

நாயன் உரைத்திட இவர் மகிழ்ந்தே

பொன்னின் நல்ல கூசாவை முன்னே வைத்து

புகு என்று சொல்ல அவன் மொழிவான்

உன்னி நுழையுமே என் சரீரம்

உத்தபெருவிரல் நுழையாதென்று

சின்ன விரலுமே நுழையாதென்றான்

திருடன் நுழைய மருந்து இருக்குதென்றார்

கண்ணால் நோக்கினார் கயிறு தன்னை

கம்பளி கயிறு எழுந்துடனே

விரைந்து சென்றது கயிறு அதுவும்

மேலோன் கிருபையால் தேவுதன்னை

வதைத்து இறுக்கிட துரும்பதாக

வண்டா நுழைபெயன்று நுழைந்திடவும்

இறையோன் கிருபையால்அடைத்திடவும்

இறுக்கி பின்னாக வைத்திடவும்

கரைந்து உருகின்ற ராஜன் கன்னி

கலக்கம் தெளிந்துமே எதிரே வந்து

கன்னி மயிலாரும் வலமும் சுற்றி

கதமும் தொட்டவன் பாதம் பணிந்தே

பொன்னும் திருமேனி என்குருவே

போன உயிர் மீண்ட புண்ணியரே

அடியான் நானும் உங்கள் அடிமை

ரட்சித்து என்னை காப்பாற்றினீர்கள்

பொன்னும் திரவியம் ஒட்டகை மேல்

போட்டு அனுப்புவேன் உங்கள் தேசம்

பருதி துலங்கிய முஹிய்யதீனும்

பாங்கிதனை பார்த்து குறுஞ் சிரிப்பு கொண்டு

கருதும் மடவாளே சொல்ல கேளாய்

கத்தன் அனுப்பினான் உங்கள் தேசம்

ஒருவன் திருத்தூதர் நபியிரசூல்

உண்மை தீனில் அழைக்க சொன்னான்

விரும சன்னாசு நானல்லவே

வேதபடிக்கல்லோ நானும் வந்தேன்

மக்க நகர் வாழும்நபியிரசூல்

முஹம்மது நபி திருப்பேரராகும்

மிக்க பகுதாது இருப்பிடம் காண்

விளங்கும் பேரது முஹிய்யதீன் ஆகும்

ஹக்கன் கலிமா மொழிந்தீரெனில்

அருள அவள் கேட்டுமொழிந்தனளே

சிக்காமல் கலிமா மிக ஓதியே

சீமான் நபி தீனில் வழிப்பட்டாளே

தீனில் வழிப்பட்டு ஓர்மையாக்கி

செல்வி அவளுமே nறி ஒழுஙங்கு

பூணிப்பாகிய பர்லு சுன்னத்து

பூராயமாக பிடித்து அவளும்

ஆணி கலிமாவை நினைவில் இறுத்தி

அறுவை இஸ்லாத்தில் தெளிந்தவளும்

கோண மனதாக இன்பமுமுற்று

ஹுதாயை ஒருவனென்று அறிந்தனளே

அறிவும் படித்தவள் தௌ;ளமையாய்

அல்லாஹ் முஹம்மது என உண்மை கொண்டாள்

சரஹு வழி நான்கும் மிக தெளிந்து

ஸெய்யிது முஹிய்யதீனை தாழ்பணிந்து

பிரியமுற்றவள் இருக்கும்போது

பெரியோன் சொர்க்கத்து சேவலுமே

சிறகு அடித்து கூவிடுமாம்

தீனில் அனைவோரும் வருவாரென்று

குரலும் எழுப்பியே மூன்றுதரம்

கூவி நின்றிட ராஜன் கன்னி

இறையோன் அருள்பெற்ற ஆண்டவரே

எங்கே சேவல் கூவுதென்றே

அறிய பெரியோன் சொர்க்கமதில்

அங்கே நின்று கூவியது

சிறுவர் உரைத்திட அவள் மகிழ்ந்து

தீன்தீன் முஹம்மது தீனே என்றாள்

எங்கள் மார்க்கமும் மார்க்கமில்லை

உங்கள் தீனே மார்க்கம் ஐயா

உங்கள் மத்ஹல்லால் வேறொன்றில்லை

அருள பேய் பிசாசை நம்பி கெட்டோம்

எங்கள் அதிர்ஷ்டம் நீங்கள் வந்தீர்



www.sufimanzil.org

இனிமேல் பயமில்லை என்குருவே

சங்கை அழகுள்ள முஹிய்யதீனே

தஸ்லீம் தஸ்லீம் என்று அவள் உகந்தனளே

உகந்து இருக்கவும் பஜ்ரதாக

உடையோன் முஹிய்யதீன் வெளியில் வந்து

மகிழ்ந்து கொண்டு நிலத்தில் வைக்க

வல்லோன் கிருபையால் பனித்துளி விழ

புகழ்ந்து போற்றியே ஒளுக் கொண்டு

பூவை அதுபார்த்து ஒளு கொண்டிட

மகிழ்ந்து முஹிய்யதீன் முன்னே நின்று

மங்கை பின் நின்று தொழுவியேதான்

உகந்து பாத்திஹா ஓதியேதான்

உடையோன் முஹிய்யதீன் இருந்தார்களே

மகிழ்ந்து இருக்கவும் பொழுது எழும்ப

மன்னர் மந்திரி தன்னை அழைத்து

மகள் தன்னை எடுத்து தகனம் செய்ய

வச்சிர தேரு சமையுமெனில்

பகரும் மொழி கேட்டு வச்சனமே

பாங்காய் முடித்தவன் மொழிவதானான்

பெருத்த ராஜனும் கோட்டைவிட்டு

பேரிசை டம்மானம் முரசதிர

வருத்த மிகவாகி ராஜன் தேவி

மாரி பொழிந்தாபோல் நீர் சொரிய

கருத்து நெடுங்கூந்தல் அவிழ்ந்து செல்ல

கலங்கி புலம்பியே வெளியில் வர

சிறுத்த இடை மின்னால் தாதி சூழ

ஜேஜே ராஜனும் சூழ்ந்து வாரார்

அண்டம் அதிரவே அசிர வெற்றிட

ஐம்பொன் கொடியுமே நின்றிலங்க

மண்டலம் அதிர பேரிசையும்

மங்கையர் சூழ குப்பி கொட்ட

நின்று அழுவோரும் விழுபவரும்

நிலத்தில் கிடந்து உருளுவாரும்

அண்டம் நோக்கியே அழுவாரும்

ஆவி தடுமாறி நிற்பவரே

இந்தப்படியாக ராஜன்சேனை

ஏங்கி முகம்வாடி தேர் சூழவே

வந்தான் கோவில் சமூகமதில்

மன்னர்சேனை தனை நிறுத்தி

மந்திரி தனக்கு உரைக்கலானர்

வழியதேவு இருப்பதுவும் இல்லாததும்

வந்து பார்த்து நீ ஏக வேணும்

வழிய சேவகன் அனுப்பு மென்றான்

அந்த மொழிகேட்டு மந்திரியும்

ஆளும் இரண்டுபேர் அனுப்பிவைக்க

சிந்தை கலங்கியே அவரோடியே

சிறந்து பார்த்தவர் தேவு இருக்கிறதென்று

புத்தி கலங்கி அபயமிட்டு

போன சேவகன் ஓடிவர

சிந்தை கலங்கிய ராஜனுமே

தரிபட சேனை ஓடியேதான்

ஓடி வெகுதூரம் நின்றவனும்

உழன்று நிற்கவும் முஹிய்யதீனும்

கிருட சேனையும் புலியடிக்கும் முன்னே

கிளியடித்து ஓடுது ராஜகன்னி

வாடா மல்லிகை முகத்தளவும்

வள்ளல் குறுஞ்சிரிப்பு கொண்டிடவும்

வாடி முகம் சோம்பி ராஜகன்னி

வாசல்படி நின்று பார்த்தனனே

பார்த்து முகம் சோம்பி ராஜன் கண்டு

பாங்கி தன்னைப் பார்த்து கை நீட்டவும்

வியர்த்து முகம் சோம்பி கண்ணீரும்

மீரா முஹிய்யதீன் தாழ்பணிந்து

சாற்றுவாளப்போ என் தகப்பன்

என்னை அழைக்கிறார் என்குருவே

புத்தி மகிழந்துமே இவருரைப்பார்

பொன்னை பார்த்து வாருமென்றார்

கந்த மடவாளும் விடை வாங்கியே

கடுகி சென்றிட ராஜன் அவன்

பந்துபோல் தூக்கி மடியில் வைத்து

பதறி துடித்தவன் அழுது சொல்வான்

எந்தன் மகளாரே கண்மணியே

இழந்த உயிரும் மீண்டு வந்த தென்ன

வந்ததோ தேவு வரவில்லையோ

வழுத்தும் என கேட்க அவள் மொழிவாள்

எந்தன் தகப்பரே இனியவரே

இதம் கொண்ட தேவு வந்ததிப்போ

சிந்தை கலங்கவே வந்த தேவை

செய்வித்து அடைத்தார்கள் கூசாவிலே

முந்தி உமது வலி தீர்த்தவர்தான்

முகிலார் மடத்தினில் இருந்தவர்தான்

வந்து நாமும் சன்னியாசி என்று

மனதில் குறித்தோம் அறியாமலே

வந்த வல்லமை சொல்ல கேளும்

வல்லோன் அனுப்பினான் நம்ம தீவை

ஆண்டவன் இஸ்லாமில் அழைக்கச் சொல்லி

பகுதாது நகர் வாழும் முஹிய்யதீன் ஆவார்

இந்த வரலாறு தெரியாமலே

இடம் கெட்ட காளி காப்பாய் என்றே

நின்று அவளிடம் வரமும் கேட்டாய்

நீலி சண்டாளி காத்தாலோதான்

என்று போற்றினோம் வீரனையும்

இடம் பொன் மாகாளி சண்டாளியும்

கொண்டாடி நிதம் பூஜை செய்தோம்

குற்றமகற்றி குடி காக்கவில்லை

சண்டாள பிசாசை நம்பியேதான்

சாம்பூராணி கற்பூரம் தீபமிட்டே

பொய்யை பிடித்து பிழையாடினோம்

பெரியோன் தன்னையும் அறியாமலே

மெய்யை பிடித்து இனிமேலாக

வேத நபியுல்லா தீனில் ஆனாள்

கைசேதமில்லை நமக்கொண்டுமில்லை

கத்தன் வேதத்தில் எல்லோருமே

நயந்து கலிமாவும் உரைத்தோமானால்

நல்ல பதவி கிட்டும் சொர்க்கம் சேர்வோம்

பெருத்த மலைதேவ வந்தவாரும்

மேலோன் பிசாசை அடைத்தவாரும்

விருமத்தி பிடித்து இருந்தவாரும்

மேலோன் மடவாரும் வந்தவாரும்

கருத்து கலங்காமல் உரைத்தவாரும்

காரணர் அங்கிருந்து செய்வித்தவாரும்

பெருத்த ராஜனுக்கு எடுத்துரைக்க

பிரியம் கொண்டவன் எழுந்தனனே

எழுந்து ராஜனும் சேனையுடன்

இலங்கும் முஹிய்யதீன் இடத்தில் வந்து

விழுந்து எல்லோரும் சரணம் செய்ய

மீரா முஹிய்யதீன் எழுந்திருங்களென்று

எழுந்து கைகட்டி ராஜனுமே

துய்யோன் அருள்பெற்ற ஆண்டவரே

ஒளிவு தெரியாமல் நான் இருந்தேன்

உங்கள் அருமையும் தெரிந்ததிப்போ

இறந்த உயிர் மீண்ட மாதாவுக்கு

என்ன கொடுத்தாலும் ஒப்பாகுமோ

சிரசை அறுத்து செலவிட்டாலும்

செய்த நன்றிக்கு ஒப்பாகுமோ

ஒருவன் அருள் பெற்ற ஆண்டவரே

உங்கள் அடிமையும் நாங்களாவோம்

கருத்தில் மகிழ்ந்தவன் எடுத்துரைக்க

காரணர் தம்மையும் கதம் பணிந்தே

வர்ண கூடாரம் மிக அடித்து

மசௌரி பந்தமேல் கட்டியமும்

திரைவீசு பண்ணி ராஜன் அவன்

சீனி கற்கண்டு பால்பழமும்

வீரமுடன் தங்க தாம்பூலமத்தில்

வேந்தர் முன் வைத்து குர்ஸு பண்ணி

இறையோன் அருள்பெற்ற ஆண்டவரே

எங்கள் உயிர் மீட்டிய சற்குருவே

ஜெகமும் துலங்கிய மணிவிளக்கே

செல்வர் பசியாருமெனில்

அகமும் மகிழ்ந்து முஹிய்யதீனும்

அவர்கள் பசியாறி மகிழ்ந்திருக்க

உகந்து வந்து ஒரு மடவாள்

உத்த கணவனும் பிள்ளையும்

தவறிபோனதால் மனம் சடைந்து

தலைமேல் கைவைத்து அழுதனளே

மருகர் முஹம்மது அப்துல் காதிர்

முஹிய்யதீன் வந்து மொழிபவரும்

ஒருவர் எனக்கில்லை ஒருவர் துணை

ஓடி மடிந்தார்கள் விதிப்படியே

இறந்து போனார்கள் தகப்பன் பிள்ளை

எழுப்பித்தர வேணும் என்குருவே

பொருமி விம்மியே உருகி கேட்க

பெரியோன் இடத்திலே துஆவிரைந்து

இறையோன் சோலிஹாக்குள் இருந்துகொண்டு

இலங்கும் ஆசாவை அனுப்புமென்று

மறையின் நெறியுள்ளோர் கண் காட்டவும்

மகிழ்ந்து ஆசாவும் சென்று புக்கி

இடறிமௌத்தான நூறு பேரும்

இறையோன் ஆசாவும் எழுப்பிடவும்

விரைந்து வந்தவர் நூறு பேரும்

ஓதினார் கலிமா அந்நேரமே

அந்த புதுமை கண்ட அரசன்

அடியும் பணிந்தவன் எடுத்தோதுவான்

எந்தன் குருவே காரணரே

இப்போ ஐந்நூறு சன்னாசியும்

அந்த மூச்சிலே இறந்து போனார்

வல்லோன் இடம் கேட்டு எழுப்புவீர்கள்

முன்னோன் இடத்திலே துஆ கேட்கவும்

மொழிந்தார் அவ்விதம் எழுப்பினாரே

சந்தோஷமாக ஐந்நூறு பேரும்

ஸெய்யிது முஹிய்யதீன் கதம் பணிந்து

சிந்தை மகிழ்ந்து கலிமா சொல்லி

சீமான் நபிதீனில் வழிப்படவும்

வந்து ராஜனும் மந்திரிக்கு

முஹிய்யதீனை அழைத்து போக வேணும்

உகந்து மகிழவே பரிசைதோறும்

கற்பூரம் சாம்புராணி தீபமிட்டே

சிவகாரம் செய்யும் என்றுரைக்க

ஜெனத்தில் சிங்காரம் செய்துவர

மங்களமாக செவிகை வைத்து

மகர கொடியும் மிக துலங்க

சங்கீதம் பாட நடனம் செய்ய

தவண நௌபத்து விண்ணதிர

எங்கும் பிரசங்கமாகவேதான்

இறையோன் முஹிய்யதீன் பிரியத்தோடும்

வந்தார் பவனி முஹிய்யதீனும்

மடவார் எதிர் வந்து திருஷ்டி சுற்றி

உகந்து மடவார் கதம் பணிய

கட்டியம் கூற கம்புளி இட

சிந்தை மகிழ்ந்திட செய்கப்துல்காதிர்

சீர்பாதம் போற்றி தெண்டனிட்டு

வந்தார் மேக குடை நிழற்ற

முஹிய்யதீன் கோட்டையில் புக்கினரே

கோட்டை புக்கிட மனவராலாத்திகள்

கோலாகுலமாக ஆலாத்தியே

தாட்டிகமாக கொண்டு வந்து

ஸெய்யிது முஹிய்யதீன் சுற்றவும்

வாட்டமில்லாமல் ராஜகோவே

விளங்கினார் ஆயிரம் தங்ககாசு

கூட்டமாகவே தாதியர்கள்

குர்ஸு பண்ணியே மகிழ்ந்தனரே

மகிழ்ந்து தாதியர் புகழ்ந்தேற்றவும்

முஹிய்யதீன் செவிகை தன்னை விட்டு

உகந்து அவருமே கொலுவில் செல்ல

உத்த ராஜனும் கொடை நிழற்ற

புகழ்ந்து கன்னியர்கள் விசிறி தூவ

பெரியோன் முஹிய்யதீன் சிங்காசனமிருக்க

அகமும் மகிழ்ந்து அரசன்சேனை

அடிமலர் போற்றி நின்றனரே

**விருத்தம்**

முன்னவர் ரஸூலுல்லாஹ் முஹம்மது நபி திருப்பேரனாகும் பொன்னினும் நவரத்தின பொற் குர்ஸுதனிமீதில் அண்ணல் முஹிய்யத்தீனும் அருணன் போல் வீற்றிருக்க திண்ணமாய் அரசன் சேனைகளையும் சூழ்ந்து நின்றாய் தாட்டிகமான ராஜன் தன் அமைச்சன் பக்கல் ஒட்டன்மேல் ஏழு கோடி உயர்ந்ததோர் தங்க காசும் வாட்டம் இல்லாமல் எடுத்து போட்டு பகுதாதுக்கு அனுப்புமெனில் சூட்டிடும் விசலம் கேட்டு சொல்பவர் முஹிய்யதீனும் வேந்தன் என்ன சொன்னாய் வேந்தனே முதலும் ஈவேன். சாந்தாக வார்த்தை சொன்னாய். சரிதையும் அறியவில்லை. போதியாய் இறையவனும் தான் புகழ் இரஸூல் தீனில் உன்னை

வாந்தகப்படுத்த சொன்னான். வந்துதான் உந்தன் தேவை இசைத்திடும் ராஜன் கேட்பான். ஈந்திடும் முதலம் எங்கே திசையுள்ளோர் அறிய வேணும். செம்மலே காட்டுமெனில் இசைப்பவரும் ஒடுங்க வேண்டும். மேலோன் சோலிஹாவை பொசுக்கொன்று எடுத்து முன்னே வைத்து பாரடா என்னவென்றார். பார்த்திட சோலிஹாக்குள் பருவதம்போல் தங்கம் வாய்த்திடும் பொன்னும் வெள்ளிமைல மலையாய் வந்து நிற்க கண்டு நாற்திசை புகழும் வேந்தன் நடுக்கமுற்றே சொல்வான் சாற்றிய விசலம் குற்றம் தர்மரே காப்பாற்றுவீர். காப்பாற்றும் முன்னே கூற கதமுமே தோய்ந்து ராஜன் தானும் பிசகதாய் கலிமா சொல்ல கோபத்தை அறிந்து வேதியர் குணமதை அறியோம் என்றாய்.ஏற்பாடு தானுமாகி எல்லோரும் கலிமா சொல்ல பேய் பயல் ராஜன் தானும் அகத்தினில் நினைத்திருக்க அவனுமே ஏது சொல்வான். உகப்பதை அறியா மூடன் உள் ஈமான் கொள்ளாதாலே இகழ்ச்சியாய் கேட்பானப்போ. ஏழுகடல் கொண்ட வில்வாக குணமதாய் முத்தொன்று தானும் கைவர வேணுமையா.

**தொங்கல்**

மருண்டு குபிரனும் கேட்டிடவே

வழிய நஸ்ரானி இவன் தான் என்று

தரள மணிக் குண்டா முன்னே வைத்து

தழும்பி இருக்கவும் ஏழு கடலும்

பருத்த முத்தொன்றும் அதிலிருக்க

பாலர் உரைத்திட்டார் அவனைப் பார்த்து

கருத்தில்லா மூடனே எடுடா வெனில்

கைபோட்டு அவனுமே துளாவினானே

அரசன் கைபோட்டு துலாவிடவும்

ஆணிமுத்துமே தென்படாதாய்

விருமம் பிடித்து மனம் கோணியே

வெட்கித்து அவனுமே கேட்கலானார்

குருவே என்கையில் முத்ததுவும்

குறிப்பாய் தட்டுது வராத்தது என்ன

வருவதும் வராததும் அறியலையோ

வந்து உன்மகள் எடுப்பாள் பாரு

அருமை புகழான கன்னியரே

உகந்து முத்தை எடுநீர் என்னில்

கருதும் மொழி கேட்டு கன்னியரும்

கதமும் தோய்ந்தவன் பிஸ்மி ஓதி

ஒருவன் கலிமாவை மனதிலுண்ணி

உகந்து கைபோட மறியம் பீவி வந்து

பெருக முத்துமே வாரி ஈய

பெண்ணார் வாங்கிமுன் குவித்தனனே

குவிக்க முத்தைக் கண்டவனும்

குலைந்து அவனுமே எடுத்துரைப்பான்

புவிகமுள்ள முத்து எந்தன் கையில்

பாலரே வாராதென்ன வெனில்

கவலும் கலிமாவும் பொய்யதாச்சு

கன்னி மனதுமே மெய்யதாச்சு

நவிலும் கலிமாவும் ஒப்பில்லாததால்

நழுவி ஓடிச்சே முத்ததுவும்

உந்தன் மனதில் பொய்யும் மெய்யும்

உடனே தெரிந்தது நமக்குமிப்போ

முன்னோன் முஹிய்யதீன் உரைத்திடவும்

முகமும் சோம்பியே ஏ;துரைப்பான்

வந்து மதிகெட்ட நீர் மூடன்தான்

மனமும் பொறுத்து கலிமாவுமே

எந்தன் குருவே மொழிவீரென்று

இயம்ப கலிமாவும் அவன் மொழிந்தான்

ஓர்மை கண்டவன் புகழ்ந்து போற்றி

உடையோன் அருள்பெற்ற சற்குருவே

கருத்த மலைதேவை கொல்லாமலே

காரணர் கூசாவில் அடைத்ததென்ன

விருப்பமுடன் கேட்க இவர் மொழிவார்

மேலோன் பகுதாதில் தாழ்க்க சொன்னான்

கருதும் மொழிகேட்டு இவன் மொழிவான்

கருத்த மலைதேவை பார்க்கலாமோ

பார்க்கலாம் என்று முன்னே வைத்து

பாரசிரசை நீட்டுமெனில்

ஆரபாரமாய் கோபம் கொண்டு

அங்கி பறக்கவே விழிகள் இரண்டும்

சீறி சினத்து மூச்சு விட்டு

சிரமும் நீட்டிட கண்டெல்லோரும்

வீரும் குலைந்து மெய் மறந்து

விருவி எல்லோரும் உருண்டனரே

உருண்டு தவித்திட இவர் மகிழ்ந்து

உகந்து கூசாவை அடைத்து வைத்து

தேறுதல் சொல்லி வாய் உமிழ்நீரை

செல்வர் பூசிட மனம் தெளிந்து

சர்வ சண்டாள தேவதுவும்

தத்துவம் குலைந்து இவ்வலிமை

இருப்பதுண்டோ சற்குருவே

எதிரே இருக்கையில் அணுகலாமோ

பருத்த சடலமும் ஜடை முடியும்

பாங்காய் அடைத்து வைத்தீர்களே

பருத்த விழியும் நெருப்பாய் பாய்ந்து

புரண்டு கிடந்தோடி நாங்களுமே

கருத்த மலைதேவை கொண்டு போட்டால்

கருத்தில் பயமில்லை எங்கள் கோவே

மனதி;ல் பயம் வேண்டாம் சலிப்பு வேண்டாம்

சீமான் உத்திரவால் கொண்டு போறேன்

சர்க்கம் பிடித்து ராஜன் அவன்

சதிக ஒருவரால் முடியாதெனில்

கருத்தில் பயமுற்று வணங்கி நின்று

கவலும் மொழியுமே தவறாமலே

விருப்பமுடன் நின்று ஏவல் கேட்டு

வேதர் மொழிப்படி நடந்ததானார்

நடந்து வரும் நாளில் முஹிய்யதீனும்

ராஜன் தனக்குமே மொழிவதானார்

அடைந்து புத்துகள் தன்னையுமே

அடங்கலுமே எடுத்து நீங்களுமே

கடினமாகவே அது தன்னையும்

கால்தலை மாறி கட்டியேதான்

கடலில் கொண்டுபோய் தாழ்த்துமென்று

கடலில் தாழ்த்தினார் அந்நேரமே

தாழ்த்தி எல்லோரும் வந்து கூடி...

ஸெய்யிது முஹிய்யதீன் தாழ் பணிந்து

வாழ்த்தி போற்றியே மகிழ்ந்திருக்க

மாலீன் தன்னையும் வரவழைத்து

பாழான சடை முடியிறக்கி

பாணியும் எடுத்து பன்னீராட்டி

நாளுக்கு நாள் நபி சரஹை

நடக்கும்படியாக திட்டம் செய்தேன்

அருமை புகழாக முஹிய்யதீனும்

அறுபத்தி நாலு தீவுள்ளோரே

ஓர்மை புகழாக தீனிலாக்கி

உகந்து இஸ்லாமில் நடப்பதெல்லாம்

பிரிசை புகழாக நடக்கும்படி

பீர் தஸ்தகீர் வணங்க வைத்து

கருப்பு அகற்றியே தெளிவதாகி

கருதினார் பேர் அவருக்குமேதான்

முஹல்லதீவில் வாழும் ராஜனுக்கு

முபாரக் சுல்தான் என்றே மொழிந்து

சகல பேருக்கும் பேர் கொடுத்து

தளங்காரத்தனான் மந்திரிக்கு

தெளிந்து உரைத்தார் அப்துற் றஹீம்

மஹ்ஸீமே என்று பேர் கொடுத்து

உகப்பாய் சட்டை குப்பாயமும்

உடுப்பு சர்பந்தும் தலைக்கு அணிந்து

நெறியும் ஒழுங்கும் அதபுகளும்

நேரான இபாதத்தும் முயற்சிகளும்

அறிவும் படித்தார்கள் எல்லோருமே

ஐந்து நேரமும் தொழுகை வைத்து

பிரிசை புகழாக இருத்திவைத்து

பீர் தஸ்தகீர் மொழிவதானார்

ஒருவன் பள்ளியும் கட்டுமென்று

உத்த சுல்தானுக்கு உரைக்கலானார்

அறுபத்தி நாலு தெரு அதுக்கும்

அறுபத்தி நாலு பள்ளியும்

விருப்பமுடனேதான் அடித்தளமும்

வேத சரப்புறத்தள வீசுமே

குறிப்பதாகிட சுல்தானுமே

கோரிக்கை செய்தார் அந்நேரமே

பொறுப்பாய் மல்லு தச்சனையும்

பொறுப்பு செய்தனர் குத்துகையாய்

குத்துகை செய்து மாதம் ஆறில்

குத்பா பள்ளி முகித்தவரும்

கத்தன் ஜும்ஆ தொழுகையுமே

காதிர் முஹிய்யதீன் நிலை நிறுத்தி

குத்பா ஓதி கீழிறங்கி

குத்பு முஹிய்யதீன் தொழுதார்கள்

உற்று உணர்ந்து பாத்திஹாவும்

உகப்பாக ஓதி ஆமீன் கூற

ஆமீன் கூறியே அகமகிழ்ந்து

அப்துல் காதிர்;புகழ்ந்து போற்றி

மு:ஃமீன் முர்ஸலீன் அனைவோர்களும்

முஹம்மது மேல் சலவாத்தோதியேதான்

காமிலானதோர் முஹிய்யதீனை

கனகம் பெறவேதான் செவிகை வைத்து

பூமிதனிலுள்ள மு:ஃமீன் சூழ

நேரிசை வல்லையும் செவிகை வைத்து

வரிசை புகழான முஹிய்யதீனும்

முஹல்லதீவினில் பரிசை தோறும்

விருது துலங்கிய கொடை நிழற்ற

வீணை சங்கீதம் முரசதிர

பருதி துலங்கி;ட முகமிலங்க

பாதம் அது தங்கம் தானிலங்க

ஒருவன் மகிழ்ந்து தரஜாத் ஈய

உள்ளம் மகிழ்ந்து முஹிய்யதீனும்

மகிழ்ந்து முஹிய்யதீன் கோட்டை புக்கி

வைரமணி குல்லாவில் சென்று புக்கி

உகந்து சிங்காசனத்திலிருந்து

உடையோன் தனைப்போற்றி மொழிவதாகி

அகமும் மகிழ்ந்து பசியுமாறி

அப்துல் காதிர் முஹிய்யதீனும்

சகல அறிவும் பொன் மடவாள்

தனித்து அவளவள் படித்தனரே

படித்தாள் மடவாள் பர்ளு சுன்னத்தும்

பர்ளென முழுக்கும் நெறி ஒழுங்கும்

நடப்பும் சரஹு வழி நான்கும்

நாதர் படித்து வருத்தி வைத்து

திடமதாகிய இஸ்லாமாகி

தீனோர் துயின்று எழுந்தவரும்

முடுகி பஜ்ரு வக்திலேதான்

வரிசை புகழாரும் பாங்கு கூற

மண்ணும் விண்ணுமே அதறிடவே

தெருவிலுனள்ளதோர் மு:ஃமீனெல்லாம்

திடுக்கிட்டெழுந்து ஓடிவந்து

பிரதி கொண்டவர் ஒழுவு கொண்டு

பின்னே நின்றிட தொழுவியே தான்

அருமை புகழாக சலாம் கொடுத்து

உகந்து பாத்திஹா ஓதிடவே

பாத்திஹா ஓதி முஹிய்யதீனும்

பண்பாய் இருந்தோர்கள் ஆமீன் கூற

நற்திசை புகழும் முஹிய்யதீனும்

நயந்து போற்றியே ஹதீது கேட்க

வாழ்த்தி எடுத்துதான் மகிழ்ந்துரைத்து

வல்லோன் குர்ஆனும் முடித்து வைத்து

உத்து மகிழ்ந்து எல்லோருமே

பிரிசை தனை சென்று அவரவரே

வரிசை ஐந்தும் அங்கிருந்து

வள்ள நபிதீனில் வழிபடுத்திட

சரிஅத்தும் தரீகத்தும் ஹகீகத்தும்

தானன் மஃரிபத்தும் முஹப்பத்துமே

விரித்து உரைத்து தரிபடுத்தி

மேலோன் முஹிய்யதீன் முரீதும் ஈந்தும்

தர்த்திபாக எதிர்படுத்தி

சகல அறிவும் பொருந்தியே தான்

வல்லோன் பேரிலே கந்தூரியும்

மாடு ஆடு ஒட்டகம் ஐந்நூறுமே

அல்லா பேரிலே குர்பான் செய்து

ஐயாயிரம் கல அரிசி விருந்தாக்கி

ஸல்லல்லாஹு பேரிலே மௌலிது ஓதி

சகல பேருக்கும் அமுதளித்து

வல்லோன் பேரிலே தீன் கூறியே

மகிழ்ந்து அவரவர் மாளிகை சென்றார்

சென்று மனை புக்கி செய்கு அப்துல் காதிறு

செம்மல் மனை புக்கி துயின்றெழுந்து

என்றுமுள்ளவன் தனை புகழ்ந்து

இலங்கும் பாலகர் பள்ளி வந்து

நின்று பஜ்ருமே தொழுதவரும்

நீதர் ஜமாஅத்தை பார்த்துரைப்பார்

கொண்டீர் ஈமானும் குறையில்லாமல்

ஹுதாயன் அருளால் சொர்க்கம் சேர்வீர்

வந்து நானுமே வருசம் ஐந்து

முஹல்ல தீவினில் இருந்துவிட்டேன்

சிந்தை கலங்குவார் தாய் தம்பியும்

சிறந்தோர் தோழமார் தயங்குவார்கள்

வந்து நாளை பயணம் சென்று

ராஜன் மனவாட்டங் கொண்டுரைப்பார்

எந்தன் குருவே என்ன சொன்னீர்

இப்போ நாங்களும் கூட வருவோம்

வருவோம் என சொல்லி அவர் மகிழ்ந்து

வள்ளல் நபி தீனை மனதிறுத்தி

ஓர்மையாகியே இருந்தீரானால்

உகந்து நினைக்குமுன் என்னை காண்பீர்

அறிய பெரியோனும் மஹ்சரிலே

அதாபு கொள்ளும் நான் என்னையுமே

ஓர்மையாகவே என்னை நினைத்தால்

உகந்து மார்தழுவி கொடுவே நான்

மயக்கமது வேண்டாம் சொல்ல கேளீர்

வல்லோன் கியாமத்து அடையாளமும்

இயம்புறேன் கேளும் தீனோர்களே

ஈமான் நிகழுவார் இறையை மீறார்

கையில் கூலிக்கு மனம் உகப்பார்

ஹைர் ஜகாத்தை மறுதளிப்பார்

மெய்யை இகழ்ந்து பொய் கவலுவார்

மேலோன் கியாமம் அதுவாகுமே

கொலையும் களவும் மிகுதி செய்வார்

கோமான் அவனும் நீதி தீரான்

கவலையும் பிடிப்பார்கள் அவதரிப்பார்

கன்னம் இடுவார் சதிகள் செய்வார்

அலைவார் ஈமான் இல்லாததாலே

ஆசை உகப்பார்கள் அழிவு செய்வார்

மலையேறி பெண்கள் செட்டு செய்வார்

வல்லோன் கியாமத்து அடையாளமே

மாரி மழைகாலம் கோடையாகும்

மாறி பரக்கத்து கோடை காலம்

ஏறிப்பேருக்கும் கன்னிப் பாலம்

ஏகன் மஜ்லிஸினில் நித்திரையாம்

வீரியம் பேசி வெகுளியாவார்

வேதம் நிகழ்வார்கள் விலக்கல் தின்பார்

காரியம் கேட்பார் காரமுகப்பார்

கியாமத் அடையாளம் இதுவே என்றார்

மஃரிபத்தை கேட்பார் மனம் துணியார்

வணக்கம் முறை பேசி வஞ்சனிப்பார்

பகரும் நாவது சுல்தான் போலும்

பாவி கல்பது சைத்தான் போலும்

முகமும் நகைப்பெல்லாம் கிருபை வைப்பார்

முன்விட்டு பின்னே புறம் பேசுவார்

வகை இது பண்ணுவார் தாய்தந்தைமேல்

வல்லோன் கியாமத் அடையாளமே

வைத்த அமானிதம் தன்னை அழிப்பார்

வாயில் அதப்பியம் புறம் பேசுவார்

கற்ற வித்தையை பெரிதே என்பார்

ஹலாலை இகழ்வார் வரிசை வையார்

உற்ற மனைவியும் புருசரையும்

உகப்பு வையார்கள் இகழ்ந்திருப்பார்

பெற்ற பிள்ளையை அதபு கேடாய்

பிதாவும் வளர்ப்பார்கள் அடையாளமிதே

வல்லோன் கியாமமும் எடுத்துரைக்க

மனது உருகியே எல்லோர்களும்தான்

அல்லா அருள் பெற்ற ஆண்டவரே

ஆனால் எவ்விதம் நடக்கப் போறோம்

சொல்ல அவர்களும் இவருரைப்பார்

துலங்கும் கலிமாவை மனதிலிருத்தி

அல்லா ஏவலை கொண்டு வந்தோர்க்கு

ஆகிரத்து வாழ்வும் தப்பில்லையே

அருள கேளும் நபி உம்மத்தோரே

அவர் ஈமான் அச்சம் இச்சத்துக்கு

இருபதியிலும் நலமதாகும்

இன்பம் துன்பமும் பொதுவென்றென்னும்

பெருத்த வாழ்விலும் எளிமையாலும்

பெரியோன் பேரிலே ஜகாத்தும் ஈயும்

தர்மம் தருவான் ஜன்னத்துமே

தப்பில்லை சொன்னேன் நபி உம்மத்தாரே

கலக்கம் அது வேண்டாம் தயக்கம் வேண்டாம்

அல்ஹன்னாஸுக்கு அல்லா காவலாகும்

www.sufimanzil.org

மலக்கல் மௌத்துக்கு சௌதாரியும்

மௌத் வருமுன்னே தேடிக் கொள்ளும்

இல்லக்கரை தனில் குடியிருந்து

ஏழு மூச்சி லோட்டும் கலிமாவையும்

துலக்கமாகியே தீனோர்களே

சுழிமுனை நாடி வணங்கிடுங்கள்

கலக்கமது இல்லை கரைசேரலாம்

கல்பால் அறிந்து வணங்குவீரே

வரிசை புகழாரும் மனதை தேற்றி

மஜ்லீஸ் தனை விட்டு மாளிகை புக்கி

பிரிசை புகழாக அமுதருந்தி

பீர் தஸ்தகீர் முஹிய்யதீனும்

பருதி துலங்கிய மெத்தையின் மேல்

பாலர் துயில் கொண்டு எழும்பி வந்து

ஒருவன் மஸ்ஜிதில் பஜ்ரு தொழுது

உகந்து முஹிய்யதீன் இருக்கும் போது

சடவதாகிய மகள் விசலம்

சாற்ற மனம் கூசி இருக்கும்போது

திடவார் முஹிய்யதீன் அதையறிந்து

செங்கோல் சுல்தானை பார்த்துரைப்பார்

சடவுமது வேது முகம் வாட்டம் ஏது

சாற்றும் என கேட்க அவர் மொழிவார்

கடவுள் சித்துக்கு தெரிய வரும்

கருதக் கூடாது என் சலிப்பை



www.sufimanzil.org

தரித்த சலிப்பு தெரியுமிப்போ

தாய்தந்தை இல்லா சோபனமும்

விரும்பி செய்வது உலகிலுண்டோ

வேத நெறிக்குமே சரியதாமோ

சரியுமாகாது என் குருவே

தங்கை இறப்பது திண்ணமது

உரிய மகளை உகவாதனால்

உயிரும் இழந்தால் உத்தமரே

உயிரும் இழக்கவா இங்கே வந்தேன்

உள்ளம் உருகியே தன்னை மறக்க

கை சேதபட இறை மொழிவான்

கடிய சலிப்பேது கவலையேது

நயமதானதோர் பலகை தன்னை

நாதரே பாரும் என கூறிட

பயமும் தெளிந்து பலகை பார்க்க

பாலர் தனக்கும் சரியதாக

நயமதாகிய பகுதாதிலே

நான்கு பெண்கள் ஹலாலாகவே

பிறக்க எழுபது வருடத்துக்கு முன்

பீர் தஸ்தகீருக்கு ஜோடியாக

இறையோன் பலகையில் எழுதியிருக்க

இறையோன் இடத்திலே கேட்பதானார்

பிறந்த தங்கையும் தம்பிமாரும்

பெற்ற தாய் இல்லா சோபனமும்

உறவு செய்வது உலகுக்கு ஆகுமோ

உகந்து கேட்கவும் அவன் மொழிவான்

உத்த தாய்தந்தை நானல்லவோ

உமக்கு பயமென்ன செய்யுமென்றான்

உத்த ராஜாவுக்கு எடுத்துரைக்க

உள்ளம் மகிழ்ந்து சுல்தானுமே

பெற்ற பேரது நம் குழந்தை

பெரியோன் தரஜாத்து பெற்றது என்றும்

சுத்தம் பொருந்தியே முஹிய்யதீனை

சேர்ப்பான் பாக செவிகை வைத்தே

வரிசை புகழான அபுசாலிஹாரும்

மைந்தனர் முஹிய்யதீனும் கோட்டை புக்கி

பிருசை புகழான சிம்மாசனம்

பீர்தஸ்தகீர் மகிழ்ந்திருக்க

ஓர்மை புகழான மந்திரிக்கு

உத்த விசலமும் வென்றுரைக்க

திருவீசு பண்ணி சிங்காரமும்

ஜனத்தில் சோடியும் என்றுரைக்க

அந்த மொழிகேட்டு மந்திரியும்

அரண்மனை கோட்டை அலங்கரித்து

வந்து விஸ்தாரம் பூப்பந்தலிட்டு

வைரமணி பச்சை மரகதத்தால்

விந்தை விந்தையாய் தூண்கள் கட்டி

மேலே கடவரை வச்சரத்தால்

ஜெகந்த திரையாக திரை வளைத்து

சிம்மாசன மேடை பொன் ஊஞ்சலே

பொன் ஊஞ்சலிட்டு பிரத்திலே

பொன்னு பவளக்கால் தூண் நிறுத்தி

மின்னின் ஒளிபோல வளைபரப்பி

மேகம் மழையாக மதூரிட்டு

உண்ணாமல் எங்கும் குத்தலத்தில்

குத்து விளக்கு நிலை நிறுத்தி

ஜன்னல் தோறுமே கண்ணாடியும்

சாத்திசர விளக்கு இட்டனரே

சரவிளக்கு நூறு ஆயிரமாம்

ஜன்னல் கண்ணாடி நூறு ஆயிரமாம்

புருசை தோறும் நிலைவிளக்கும்

பொன்னின் கிந்தி சரவிளக்கும்

நெருங்க அடிக்கடி பளிங்கி;ல் ஆண்டார்

நீலமணிபச்சை நிலை விளக்கும்

சிரக்க சந்தன குங்குமம்

தெருவீதி எங்கும் வாடை வீச

இந்தப்படியாக சோடித்தவரும்

விளங்கும் கண்ணீருக்கு சோபனமும்

பந்தோபஸ்தாக விருந்துமாக்கி

வாரி அழித்தனர் கணக்கில்லாது

சிந்தை மகிழவே சந்தனமும்

தெகட்;ட அளித்தனன் பாக்கிலையும்

வந்தபேருக்கும் பணகாசுமே

வாரி அளித்தனன் பொன்புடவை

சிறுத்த இடைமின்னார் நூரரசி

செல்வர் தமக்குமே சோபனமும்

நிரப்பமாகவே நிகாஹ் செய்து

நெடியோன் ஜிப்ராயிலுக்கு உரைக்கலானார்

சிறப்பதாகவே முஹிய்யதீனுக்கு

சீதனம் கொண்டு போவெனவே

அருக்கை செய்தான் ஐந்நூறு முழ

அள்ளி பெய்திடும் பற்பட்டுடனே

நல்ல கோர்வ தாலி யொன்றும்

சருவிக் கடயமும் தங்கவளை

முன்கை மோதரி தோள் கடயமும்

முத்து பல்லாக்கு ரத்தின மாலை

வங்காள பச்சை மரகதமும்

வைரம் பதித்த கொலுசுடனே

எங்கும் பிரசங்கமாகவே தான்

இலங்கும் பாடகம் மணிமாலையே

மாணிக்க முத்து மணிமாலையும்

வைர மரகதம் பொன்னி குடம்

ஆணிப் பொன்தட்டில் வைத்த உடனே

அம்பர் கஸ்தூரி பன்னீர் பூவும்

வானில் ஒளிபோலும் பரம தாணி

வகைக்கு வகையாய் எடுத்தவரும்

பூணித்தவருமே இறைதிருமுன்

புகழ்ந்து முன்வைத்து நின்றனரே

நிகழ்ச்சி இருக்கையில் இறை மொழிவான்

நீளவெளி மடவார் பத்து பேரும்

மிக்கடம் மானம் எடுத்து நீரும்

மீரா முஹிய்யத்தீன் இடத்தில் சென்று

தக்க சோபனம் முடித்து வைதது

தான் இங்கு வாரும் என்றுரைக்க

ஹக்கன் உரைப்படி இவரும் கூடி

அரசன் மனை வைத்து இறங்கினரே

இறங்கி ஜிப்ராயில் சலாமுரைத்து

இலங்கும் ஹுறானி புகழ்ந்து போற்றி

வைத்து பரமதானியின் மேல்

மேலோர் நுடவரை பரப்பிவைத்து

சிறக்க டம்மானம் அடித்திடவும்

திடுக்கிட்டதிரும் விண்ணும் மண்ணும்

முரசதிர்ந்திட திடுக்கமுற்று

முபாரக் சுல்தான் எழும்பி வந்தான்

ஜன்னல் திறந்து பார்த்தவனும்

ஸெய்யிது முஹிய்யதீன் இருக்கிறது

மின்னின் ஒளிபோல நகை நாணயம்

மெல்லியர் சூழ்ந்து இருக்கிறதும்

வண்ணடமானம் அடிக்கிறதும்

வைர ஆபரணம் மின்னுகிறதும்

தன்னுள் மகிழ்ந்து கண்மருண்டு

தன்மனைவிக்கு உரைத்து மகிழ்ந்தனரே

இந்த புதுமை எங்கும் காணோம்

ஏகன் அனுப்பினான் சீதனமும்

வந்து நகை ஒருக்கால் விலைவானும்

புவி முதலுக்கு ஒப்பல்லவே

சிந்தை மகிழ்ந்து நூரரசி

செம்மலும் கூட்டியே வந்த புக்கி

சந்திரனொளி மின்னும் குர்ஸு தனில்

ஸெய்யிது அருகாமையில் வைத்தனரே

வைத்து நிற்கவும் ஹுறானிகள்

மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கோர்வைகளும்

கத்தன் அனுப்பினான் நகை வகையும்

மகட பன்னீர் பூ சூட்டினார்கள்

பத்தரை மாற்று தாலி ஒன்றும்

பைங்கொடி கழுத்தில் எடுத்தணிந்து

பெற்று பெருகி வாழ்ந்திருங்களென்று

பீர் தஸ்தகீர் கை கொடுத்தனரே

கொடுத்து ஹுரானி சோபனமும்

கோமான் திருதூதர் நபி பேரிலும்

படித்து புகழ்ந்தனர் மங்களமும்

பரலோகம் அதிரிட டம்மானமும்

இடித்த இடிபோல் முழங்கினார்கள்

ஏழுபூமியும் திடுக்கிடவே

திடுக்கிட்டெல்லோரும் ஓடிவந்து

தீனோர் அதைப் பார்த்து புகழ்ந்துரைப்பார்

இந்த புதுமை எங்கும் காணோம்

இப்போ நூரரசி தவத்தினாலே

முன்னோன் அனுப்பினான் சீதனமும்

உலகில் இருப்போர் அவ்வலுமையுண்டோ

வந்தார் முஹிய்யதீன் பொருட்டினாலே

மடிந்த உயிர் மீண்டு எழுப்பிவைத்து

கந்த மணவாளை மணமுடித்தார்

கத்தன் கிருபையால் முஹிய்யதீனே

அங்குள்ள பேர்கள் புகழ்ந்துரைக்க

யானைதனை சோடித்து அந்நேரமே

தங்க அபூதாவில் இருபேரையும்

தரிப்பாய் வைத்தவர் ஹுரானியும்

பொங்கமுடன் சூழ ஜிப்ராயிலும்

அடித்தார் டம்மானம் கிடுகிடென்றே

எங்கும் முரசு நின்றதிர

எட்டுதிக்குமே விட்டதிர

கட்டியம் கூற கவரிபோட

காலாஞ்சி ஏந்தி கன்னியர்கள்

எட்டு திசையிலும் வானம் விட

ஏழுகோடி சந்திரனோசையும் போல்

சட்டமதாக முகமிலங்க

ஸெய்யிது முஹிய்யதீன் பவனிவர

பட்டாபகல் போல மத்தாப்பிட்டு

பட்டணம் சுற்றி மணவறையை

இந்தபடியாக ஏழுநாளும்

இறையோன் முஹிய்யதீன் பவனிவந்து

சிந்தை மகிழ்ந்து மடமின்னாரும்

செம்பொன்னால் ஆளாத்தி ஏந்தி நிற்க

வந்து சுல்தானும் வரிசை செய்ய

வள்ளல் முஹிய்யதீன் மகிழ்ந்திருக்க

சந்திர பிறவை நூரரசி

ஸெய்யிது முஹிய்யதீன் பவனி வந்து

மங்களமாக பொன்னூஞ்சலில்

வைத்து ஆட்டியே ஹூரானிகளும்

சங்கை அழகுள்ள முஹிய்யதீனை

தஸ்லீம் செய்து அவர் வானம்புக்கி

பொங்கமுடனேதான் இருபேருமே

பூரித்து மகிழ்ந்து இருந்தவரும்

தொங்கர் சடங்க சாத்திரமும்

தொடர்ந்து பதினைந்தாம் நாள்தனிலே

பயணமென சொல்லி சுல்தானுமே

படகுதனில் சாமானெல்லாம் ஏற்றி

பைங்கொடி தனக்கு திரவியமும்

பனிரண்டு வீட்டில் சுமையும் போட்டு

தையல் தாதிமார் நாற்பதும் ஏற்றி

தனக்கு சரக்கு கறி வகையும்

நயமதாகவே செவி கைதனில்

நாதர் பொன்னும் இரு பேருமே

சென்றார் படகில் ஹலாலுடனே

சீர் கொடையும் மிக துலங்க

வென்றார் சலாமும் முஹிய்யதீனும்

வேந்தன் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

நின்ற ஹலாசென்று பாயும் தூக்கி

நிறுத்தி சுக்கானை தனைத்திருப்ப

குன்றாமல் காத்து விரைந்தோடவும்

கோமான் அருளாலே மூன்றாம் நாள்

கரையும் கண்டிட முஹிய்யதீனும்

கரையும் இறங்கியே படங்கடித்து

விரைந்து சாமானும் இறக்கி வைத்து

விரகமுடன் கத்து எழுதியேதான்

வந்த கத்தையும் வாங்கி அவர்

வந்த நகுதாவும் விரைந்து செல்ல

இறையோன் அருளாலே இவரிருந்து

எழும்பி ஆலமரம் தன்னில் வந்து

வர்ண கூடாரம் மிக அடித்து

வைரமணி திண்டில் சாய்ந்திருந்து

கருணை கைமார்க்கும் காலாலுக்கும்

கொடிய பசிக்கு அமுதளித்து

இறையோன் அஸ்ரு மஃரிபையும்

இசாவும் தொழுது இருக்கும்போது

ஒருவன் உரைத்திட்டான் மறியமுக்கு

ஒடுக்கு கொடுத்து நீர் முஹிய்யதீனுக்கே

வயிறு பசியாற்றி வாருமெனில்

மறியம் பீவியும் ஒடுக்கெடுத்து

ஸெய்யிது முஹிய்யதீன் முன்வைத்து

தையல் சலாமும் எடுத்துரைக்க

அயலார் சலாத்துக்கு பிறத்தி சொல்லி

அருமை மடவாரே நீர் யார் சொல்லுமெனில்

பயகாம்பர் நபி மஹ்சரிலே

பாங்காய் மணம் கூ10ட்டும் மறியம் நாமே

வரிசை குமாரர் உமக்கு பாட்டியாகும்

வல்லோன் தனதாலிருப்பதாலே

சிறுத்த இடைமின்னார் நூரரசி

திருடி கொண்டு நீர் வந்தீர்களோ

பருவமிது வல்லோன் சிறுபாலரே

பாலர்க்கேற்ற பசுங்கொடியோ

கருத்தில் கூச்சமும் உமக்கில்லையோ

கல்பு கூசாமல் இருப்பதுண்டோ

கூச்சம் நமக்கென்ன தாதியரே

குழந்தை சிறுபிள்ளை நாங்களிருவரும்

பேச்சில் சூதுமே நாமறியோம்

பெண்ணின் இன்பமும் நாமறியோம்

சூழ்ச்சியமறியாமல் தோகை தன்னை

சூது பண்ணியே கொண்டு வந்தீர்கள்

காட்சி அருந்தினால் பாலரசே

காரணர்களே இப்போ தெரியவரும்

விண்ணும் முறைபேசி பரிகாசம் பேசி

வேதர் பசியாரும் என உரைக்க

உண்டு மகிழ்ந்து அவரெழும்பி

அவ்வல் பஜ்ருமே தான் தொழுது

வணங்கி முசல்லாதனிலிருக்க

வந்து ஒருவேங்கை சலாம் சொல்லவும்

நின்று நமக்கென்ன செய்வார்களோ

தெரியாதென சொல்லி நடுநடுங்கி

கொண்டு போட்டாலும் நமக்கு பலன்

குறித்த அமானிதம் தீர வேணும்

என்று மிக சொல்லி ஆசாரமாக

இறையோன் முஹிய்யதீன் பாதம் தோய்ந்து

நன்றியுடன் சொல்லி எழுந்தீரென்றார்

நாதர் முஹிய்யதீன் சொன்ன போது

வெற்றியுடன் வேங்கை தலையுயர்த்தி

வேந்தர் முஹிய்யதீன் முகத்தைப் பார்த்து

ஆண்டோன் புகழ்ந்திடும் அபுசாலிஹு

அருமை குமாரரே சொல்ல கேளும்

ஆலநபி தோழர் அஸ்ஹாபிகள்

அன்பாய் அனைவோர்கள் இருக்கும்நாளில்

பேரால் மிக சொல்ல ஒருவருக்கு

பிள்ளையில்லாமல் புகழ்ந்து மன கவலையாகி

நேராய் மரக்குட்டி ஒன்றெடுத்து

நிகழ்த்தி அவிழ்த்தவர் விடும் போது

கருத்தில் முஹிய்யதீன் அமானிதமென்று

கடுகி விடுத்திடும் நாளையிலே

பொருத்தமுடனெங்கள் கூட்டத்தார்கள்

புகழ்ந்து பசியாக இருக்கும்போது

வெடித்த வரிபுலி பசிகளுக்கு

மெனவும் புல்லைதான் புசிப்பதுண்டோ

துடித்து பதைத்தி;ட மரக்குட்டியை

துணிந்து பசியாறி திண்டோமென்று

கருத்தில் முஹிய்யதீன் ஆண்டவரே

கடுக அமானிதம் உங்கள் பேரில்

பொருத்து மிக கொண்டு இருப்பதினால்

புகழ்ந்து வழிப்பார்த்து காத்திருயும்

தரித்து மகிழந்தவர் முஹிய்யதீனையும்

செப்பமுடன் நாயன் இடத்தில் கேட்டார்

கருத்தில் மகிழ்ந்து அவன் ஏது சொல்வான்

கருணை முஹிய்யதீனே சொல்லக் கேளும்

பொறுத்தல் மிக நானும் எங்கும் பார்த்தேன்

போதிய இரை ஒன்றும் இல்லாமலே

கருத்தில் விசாரமாய் இருக்கும் போது

கடுகு மரக்குட்டி லுயிதம் கொண்டு

திருத்தமுடன் கொண்டு முன்னே வைத்தேன்

தின்று பசியாறி களைகள் தீர்ந்து

கருத்தில் பெரியவன் சொன்ன போது

கருணை முஹிய்யதீன் ஏது சொல்வார்

புகழ்ந்து பொதுவாகும் எல்லோருக்கும்

திருத்தமுடன் எந்தன் அமானிதம்தான்

பொருத்த உனது அமானிதம்தான்

செப்பி ஒருவருக்கும் பொதுவில்லையே

கருத்தில் முஹிய்யதீன் சொல்லியபின்

கடுக மிக பொண்ணோ ஆணோ என்றார்

புறத்தால் சொல்லியே அவன் ஏது சொல்வான்

புகழும் மரக்குட்டி பின்னாகுமென்று

நிகழ்த்தி பெரியவன் சொன்னபோது

நீதியுடன்தான் இதுவரைக்கும்

காணும் பலனது எவ்வளவோ

கருணை முஹிய்யதீன் கணக்கு போட்டார்

கருத்தால் கணக்குமே நாலு லட்சம்

கூட்டிதனை உண்டும் தாரேனென்றார்

பருதி முஹிய்யதீன் கேட்டபோது

புகழும் பெரிய நாயன் ஏது சொல்வான்

வருந்தி மிக கேட்டபடியினாலே

வாகாய் தருவேன் நான் ஒரு லட்சம்தான்

பொருந்தும் மிக மூன்று லட்சத்துக்கு

போத கணக்குகள் சொல்ல கேளும்

கருத்தால் ஒரு பங்கு காற்றிலேதான்

கடுக ஒரு பங்கு நெருப்பிலேதான்

பொருத சிறுநீரிலே ஒரு பங்குதான்

போத அழிந்திடும் மூன்று பங்கும்

வருந்தி கேட்டதால் ஒரு கூறுதான்

வாகாய் தருவேன் என்று சொன்னான்

கருத்தில் பெரியவன் சொன்னபோது

கருணை முஹிய்யதீன் தாவென்றார்கள்

திடத்தில் ஜிப்ராயில் வானம் விட்டு

சென்று குதித்தங்கே போகலுற்றார்

போனபிறகாலே வனவாசத்தில்

புகழும் ஜிப்ராயில் ஓட்டிவந்து

திடத்தில் முஹிய்யதீன் கிருபையாக

சிறந்த பெரியவன் மரக்குட்டியை

கருத்தில் முஹிய்யதீன் முன்னேவிட

கருணையுடன் பார்த்து ஏது சொல்வார்

மனது மகிழ்ந்தங்கே மதீனத்துக்கு

வாகாய் மிகப்போய் சேர வேணும்

இலங்கும் பெரியோன் தனை கூவியே

இலங்கும் முஹிய்யதீன் ஏது சொல்வார்

எனது அமானிதம் உனது பேரிலே

இலங்கும் பொறுப்பான படியினாலே

துலங்கும் பெரியோன் நீ போக வேணும்

தூரவழி மெத்த சொல்லுண்ணாது

எனது திருநபிமக்கள் பாலகரே

இறங்கி பூமியில் நடந்தது இல்லை

கருத்தால் பெரியோனே நான் போகவேணும்

கடுக முஹிய்யதீன் கேட்ட போது

பொறுத்தால் நீயுமே போக வேண்டாம்

புகழும் பெரியோன் சப்தம் போட்டான்

கருத்தில் புகழ் சேரும் பாத்திமாவே

கடுக போவென்று சொல்லலாமோ

திருந்தும் புகழ் கொண்ட நபி மகளே

செப்பமுடன் சொல்ல கூடாதென்றார்

சிறந்த மூன்று பேரும் போகாவிட்டால்

செப்பமுடனேதான் யார் போவார்

கருத்தால் பெரியோனும் மனமகிழ்ந்து

கருணை முஹிய்யதீன் சொல்ல கேளும்

பெருத்தால் நானுமே போறேனென்றும்

புகழும் ஜிப்ராயில் கீழிறங்கி

தரத்தால் தலையிலே கூடெடுத்து

காணும் கம்பளி தோளில் போட்டு

துரத்தும் தடியுமே கைபிடித்து

தோறும் அவர் வசம் சொல்லுற்றார்

கருத்தில் மகிழ்ந்துதான் பீவி பாத்திமாவே

கருணை பெரியோன் ஏது சொல்வான்

பொறுத்த மதீனம் போய் வருமளவும்

புகழ்ந்து மகனி;டம் இருங்களென்றே

திருத்தமுடன் சொல்லி பயணமாக

செல்ல ஜிப்ராயில் ஏகமுன் போக

கருத்தில் முஹிய்யதீன் ஏது சொல்வார்

காணும் ஜிப்ராயிலே நீர் கள்ளனாகும்

பொருந்தும் காட்டிலே விட்டு போட்டு

புகழ்ந்து கொண்டு போய் விட்டேனென்பார்

திருந்தும் மறை லட்சம் வந்ததென்று

சீர ஒரு ஹத்து அவர் கையினாலே

பொறுந்தும் புகழ்சேரும் எங்கள் பேரனார்தாம்

புகழும் மிக தோப்பில் மூன்று கனி

மகிழ்ந்து பழமான மாதுளை பழம்

வாகாய் கனி மூன்றும் வாங்கிக் கொண்டு

அருந்தும் நபியுல்லா ஒளுச் செய்திடும்

ஆன தண்ணீர் ஒரு கலையம்

வருந்தி மிகமூன்று கொண்டு வந்தால்

வாகாய் நானுமே உறுதி கொள்வேன்

என்று முஹிய்யதீன் சொன்ன பின்பு

ஏகி ஜிப்ராயில் பயணமானார்

நன்றி ஜிப்ராயில் மதீனத்துக்கு

நாடி மிகலட்சம் மரையும் ஓட்டிக் கொண்டு

கொண்டு மதீனத்து கோட்டையிலும்

திறந்து அடையவே சாய விட்டு

என்று மிக நானா நாளலவு

ஏகி தெருதோறும் பறைகளிட்டார்

ஒன்றும் ஒருவரும் கேளாமலே

ஓடித் தெருவெல்லாம் தேடித் தேடி

சென்று மறுதெரு செல்லும்போது

தீனோர் விளங்கிய பள்ளிதனில்

நன்றியுடனேதான் அஸ்ஹாபிகள்

நயந்து அழைத்தவர் கேட்கலுற்றார்

இன்னும் பகுதாதிலே அபுசாலிஹ்

இலங்கும் குமாரர் முஹிய்யதீன் தான்

அன்று அவர்விட்ட இடையன் தானும்

ஆதி அருள் படி முஹல்லதீவை

சென்று இஸ்லாத்தில் ஆக்கபோக

சிறப்பாய் புறப்படும் வேளையிலே

கண்ட ஜனமெல்லாம் கூட போக

கருத்தில் மகிழ்ந்தங்கே சொன்ன போது

நன்றி இஸ்லாத்தில் ஆக்கி போட்டு

நாயன் கிருபையால் வருகும் போது

வருகும்போது வனாந்திரத்தில்

விம்மி முகம் சூம்பி இருக்கும் போது

நன்றி ஒருவரும் வேண்டாம் என்று

நயந்து தகப்பனார் என்னை கூவிசென்று

தாயிரகட்டி அனுப்பி வைத்தார்

திரும்பி வரும்போது வனாந்திரத்தில்

கண்டு மிகலட்சம் மரையும் ஓட்டி

கருத்தில் முஹிய்யதீன் அனுப்பி வைத்தார்

சென்று நபியுள்ள தன் கிளையில்

தீரான் அஸ்ஹாபி நூறு தீனாம்

சென்று மிகவிட்டு ஹத்து வாங்கி

குறித்த பழம் மூன்றும் அவர் பேரனார்தான்

சிறந்த ரவ்ழாவில் ஒளுச் செய்திடும்

சென்று மிக தண்ணீர் தரவே சொன்னார்

இந்த மிக மூன்று அடையாளமும்

ஏகன் முஹிய்யதீன் கேட்டாரென்றார்

அந்த மொழிகேட்டு அஸ்ஹாபியே

ஆளை மிகவிட்டு அழைக்கச் சொன்னார்

சென்று மிகபோய் அவர் கிளையில்

தினமும் இருந்தங்கே ஒரு மனிதன்

பெண்டு மிகபிள்ளை இல்லாமலே

பித்தர் போலவே திரிந்தலைவார்

என்று மிக சொல்ல ஆளை விட்டு

இழுத்து கொண்டு வந்து அவரிடத்தில்

கருத்தில் மகிழ்ந்தங்கே ஹத்து வாங்க

கடுக பழம் தானும் பறிக்க போனார்

சிறந்த மிகவழி பார்க்கும்போது

செப்பும் பழம் ஒன்றும் காணாமலே

கருத்தில் அஸ்ஹாபிமார்கள் போய்

கவிழந்து பூமியை பார்க்கும்போது

திடத்தில் மறு தோப்பில் பழமதாக

சீராய் உறங்கியே சலிப்பதனார்

கருத்தில் சலிப்பாகி முஅத்தினாரே

கடுக ரெவ்லாவை திறவுமென்று

இருந்த ஜனமெல்லாம் சொன்னபோது

இலங்கும் முஅத்தினும் எழும்பிருந்து

துடித்து பயந்தஞ்சி மோதினாரும்

துய்ய ஒளுவது செய்து கொண்டு

தடுத்த கதவைத்தான் திறக்க சொல்லி

தங்க கதவுமே திறக்கவில்லை

உரைத்த ஜனமெல்லாம் சலிப்பதாகி

உருகிமிக நொந்து இருக்கும் போது

கனத்த ரவ்லாவில் ஒரு சப்தம் தான்

கடுக இடையனை வரச் சொல்லியே

இருந்த ஜனமெல்லாம் இடையினைத்தான்

ஏகமிகக் கூறி ஏது சொல்வார்

உரைத்த மொழி சொல்லி வர சொல்லி

உண்மை ஒரு சப்தம் உண்டாச்சுது

கருத்தால் மகிழ்ந்தங்கே இடையனுமே

கதவை மிக தள்ளி போகவும்தான்

உரைத்த இடையனும் உள்ளே சென்று

உண்மையுடன் நாலு நாளிகைதான்

அடுத்து மிகப் பேசி இருந்த பின்னும்

அழகாய் மிக மூன்று பழமும் கொண்டு

கருத்தால் மதீனத்தார் பார்த்திருக்க

தண்ணீரை கொண்டுமே வெளியில் வந்தார்

உரைத்தது மதீனத்தார் எல்லோர்களும்

உள்ளம் மகிழ்ந்துமே உடல் பூரித்து

சிரித்து மகிழ்ந்தனர் சந்தோசமாய்

செப்பும் பழம் மூன்றும் ஏது என்றார்

கதித்த ரவ்லாவில் ஒரு மூளையில்

கடுக மரவில் இருக்கக் கண்டு

எடுத்து மிகக் கொண்டு போகச் சொல்லி

இலங்கும் ஒரு சப்தம் நானும் கேட்டு

மனது மகிழ்ந்தங்கே சந்தோசமாக

வாகாய் பழம் மூன்றும் எடுத்து வந்தேன்

உரைத்த ஜனமெல்லாம் முஹிய்யதீனை

உண்மையுடன் காண வருவோமென்று

தடுத்து இடையனும் ஏது சொல்வார்

தானும் மிஸ்ருக்கு  போய் பின்னும்

அடுத்து வருவது நிசமெனவே

அண்ணல் முஹிய்யதீன் என்று சொன்னார்

என்று மிக சொல்லி தடுத்தவாரும்

எழுந்து இடையனும் பயணமாக

நன்றியுடனேதான் ஜனங்களெல்லாம்

நாயகர் முஹிய்யதீன் பாதம் இரண்டும்

கண்டோம் தலைமேலே என்று சொல்லி

குறித்து சலாம் சொல்லி அனுப்பினதே

ஆதி ஜிப்ராயில் வானம் இதில்

அன்பாய் முஹிய்யதீன் முன்னே வந்தார்

வாகாய் மிக மூன்று அடையாளமும்

வள்ளல் முஹம்மது நபி பேரரானார்

எடுத்து மிக வைத்து சந்தோஷமாகி

இலங்கும் முஹிய்யதீன் இருக்கும்போது
பெருதும் புகழ் கொண்ட திருமங்கலம்
புகழ்ந்து குடிவாழும் மௌலாவென்னும்
சிறந்த அபுபக்கர் மனமகிழ்ந்து
செப்பமுடன்தான் அதை படித்தால் போல
கருத்தில் புகழ் சேரும் முஹிய்யதீனும்
கருணை மனதுதான் மகிழ்ந்திருந்தார்
மனது மகிழ்ந்தங்கே இருக்கும் போது
வாகாய் எழுபது பேருடனே
துலங்கும் உடைமையும் பூணரமும்
சூழும் ஜனமெல்லாம் பிறத்தே வருவார்
அழகு புகழ்சேரும் இளமையான
அளவான மடவாளை கண்ட மாற்றம்
பேரால் புகழ் கொண்ட அபுசாலிஹ்
பிள்ளை முஹிய்யதீன் எழும்பினார்கள்
கருத்தால் எழும்பவே பீவி பாத்திமாவும்
தானும் மிக தாயார் முஹிய்யதீனை
சிறந்து மிகவந்து சலாமும் சொல்லி
சிறந்த ஒடுக்கதை முன்னே வைத்தார்
எங்கள் முஹம்மது நபி கிளையில்
இலங்கும் புகழ் கொண்டு அபுசாலிஹ்
சொந்தமுடன் வந்த கண்மணியே

துலங்கும் எனதுட பேரனாரே

வந்த ஒடுக்கதை அருந்துமென்று

வாகாய் மிக சொல்லி அருகே நின்றார்

நின்ற நேரிலே தன்னைப் பார்த்து

நீதி முஹிய்யத்தீனும் ஏது சொல்வார்

வந்த மடமாது கிளி மொழியே

வாகாய் நீர் தானும் யாரெனவே

எந்தன் மதீனத்துக்கு அரசாய் வந்த

எங்கள் முஹம்மது மனைவியார் தாம்

சொந்த உங்களுக்கு பாட்டியார்தான்

சொல்வார் என்பேர் மறியம் என்று

நல்லதென சொல்லி பசியாறியே

நாதர் முஹிய்யதீன் எது சொல்வார்கள்

சகல ஆயுதம் எடுத்தணிந்து

தம்பிரான் பக்கல் துஆவும் கேட்டு

புதுமை புகழ்சேரும் வனவாசத்தில்

பாதை வழிமீதில் நடக்கலானார்

கொடிய வனாந்தரம் நடக்கும்போது

கோலமுடனேதான் ஆலமரம் வந்து

சென்று மரத்தில் சன்னாசியை

செல்வர் எடுத்து வெளிப்படுத்த

பந்து போலவே உருவதாக்கி

பருத்த மலைதேவை அவன்தலையில் வைத்து

கொண்டுவா வென்று அவருரைத்து

கூடாரம் பிடுங்கி சுமை எடுத்து

சென்றார் பெருவனம் தன்னை நாடி

செல்வர் நடந்திடும் மயில் இனமும்

கண்டுதனை தேடும் கத்தாப் போல

கடுகி மான் மிருகம் வந்ததுவே

வந்தது யானை கரடிபுலி

வணங்கி அது முன்னும் பாதை கூட்ட

சிந்தை மகிழ்ந்து நூரரசி

செல்வரே இது என்ன அதிசயமே

முன்னோன் உத்திரவு வந்ததிப்போ

முகிலார் உரைத்திட இவர் மகிழ்ந்து

உகந்து மகிழ்கின்ற காரணரும்

கானகம் தாண்டி பத்தாம் நாளே

வந்து புக்கிட மிஸ்ருதன்னில்

வள்ளல் தனை கண்டு ஆலிமானோர்

சிந்தை மகிழ்ந்து தஸ்லீம் செய்து

செல்வர் அழைத்து மாளிகை புக்கி

சொந்த மனமாக இவர் தமக்கு

துண்டதாகவே விடுதி விட்டு

வந்து பந்தோபஸ்தாக திரை வளைத்து

மகிழ்ந்து இருந்தார்கள் முஹிய்யதீனும்

அன்று பொழுதுபோய் மற்றநாளில்

அழகான வெள்ளிக்கிழமை நாளில்

சென்று மஸ்ஜிதில் முஹிய்யதீனும்

ஜீம்ஆ தொழுது அவர் மகிழ்ந்து

திண்டுதனில் சாய்ந்து முஹிய்யதீனும்

தீனோர் அனைவருக்கும் ஹதீது சொல்லி

வண்டுமது பூவை சூழ்ந்தது போல்

வள்ளல்தனை கூ10ழ்ந்து இருக்கும்போதே

அந்த நேரத்தில் செம்பிராந்து

அருவை உகந்து கேட்டு நிற்க

வந்து மஜ்லிஸில் முகப்பிருந்து

மனிதன் குனிந்து அங்கே பார்த்திடவும்

கந்த மகிழ்கின்ற காரணரும்

கண்டு எழும்பிட பரரந்து அதுவும்

பந்து விழுந்து மௌத்தாக

வந்து இருந்தோரும் மனம் பயந்தே

இருந்து மு∴மீன்கள் தனைமறந்து

இந்த பாவமும் நமக்கும் ஆச்சு

கருத்து கலங்கியே மு∴மீனோரும்

கதமும் பிடித்து மொழிவாரப்போ

விரும்பி அதுவந்து ஹதீது கேட்டு

விருப்பமுற்றது நிலை பெறாமல்

பருதி துலங்கிய ஆண்டவரே

பார்த்ததினால் குற்றம் எங்கள் பேரில்

வந்து அதுமேலே குற்றமில்லை

வல்லோன் தனக்காக மனம் பொறுத்து

சிந்தை மகிழவே எழுப்புமெனில்

சீமான் முஹிய்யதீன் எடுத்துரைப்பார்

எந்தன் ஹதீதையும் மறைத்ததினால்

இறந்து போச்சுது முஃமினாரே

அந்த மொழிகேட்டு இவர் மொழிவார்

ஆனால் எங்களை அடித்துக் கொல்லுங்கள்

அடித்துக் கொல்லுவீர் எங்களையும்

அல்லாஹ் அருள்பெற்ற ஆண்டவரே

துடித்து பதறியே இவர் மொழிய

துலங்கும் பாலரும் மனதிளகி...

மடிந்த பராந்தை எழுப்புமென்று

வள்ளல் ஆசாவை கண்காட்டவும்

கடுகி எழுந்து ஆசாவுமே

கத்தன் கிருபையால் தட்டிடவே

சுருண்டு கிடந்ததோர் செம்பிராந்து

திடுக்கிட்டு எழுந்து கதம் பணிந்து

விருப்பமுற்றது எழுந்து செல்ல

மேலோன் கிருபை என்றே மொழிந்து

இருந்த முஃமீன்கள் புகழ்ந்து போற்றி

இன்பமுற்று ஹதீது கேட்டிடவே

கருங்கடல் மீண்டு வந்தவனும்

காரணர் விசனம் கேட்டிடவும்

மனது மகிழ்ந்தவன் ஓடி வந்து

வள்ளல் கதம் பிடித்து உருகி நிற்க

கனகம் பொருந்திய முஹிய்யதீனும்

கல்பு மகிழ்ந்து இருத்தி வைத்து

உனது தாயாரும் சுகமதாக

உகப்பாய் இருக்கிறாரா என கேட்கவும்

மனமும் தளர்ந்து உருகியேதான்

வள்ளல் கிருபையால் இருக்கிறார்கள்

கடல் மீண்டவன் சொல்ல இவர் மகிழ்ந்து

கத்தன் அருளென்று மனதிலுண்ணி

நடவுமென சொல்லி இவர் மகிழ்ந்து

நரைத்த கிழவியை பார்ப்போமென்று

திடவார் நடந்திட பிரியம் கொண்டு

திரை கடல் மீண்டோம் மனையில் புக்கி

ஜடலம் பூரித்து கிழவியரும்

சீக்கிரம் வந்து கதம் பிடித்தே

உருகி அழுகிட முஹிய்யதீனும்

உகந்து இறையோனிடம் துஆ கேட்கவும்

பெருத்த வயதுமே இளமையாக்கி

பெண்குடி பதினாறு வயதாகினாள்

கருத்தில் மகிழ்ந்து இவரிருக்க

களாஞ்சி ஏந்த கைகருமம்

பருதி துலங்கவே முஹிய்யதீனுக்கு

பால்பழம் சர்க்கரை ரசவர்க்கமே

விருப்பமுற்றவன் அமுதளிக்க

வேதர் பசியாறி எழுந்தவரும்

கருத்தில் மகிழ்ந்து விடுதி சென்று

கன்னியருக்கு உரைத்து மகிழ்ந்தவாரும்

ஒருவன் மஸ்ஜிதில் சென்றுபுக்கி

உகந்திருக்கவும் வசப தாதி

கருணை மலர்பாதம் தனில் விழுந்து

கதமும் பிடித்தவர் உருகினரே

உருகி மகிழ்ந்து அவரிருந்து

உடையோன் முஹிய்யதீன்தனை புகழ்ந்து

விரும்பி அவருமே அழைத்துக் கொண்டு

விளங்கும் மனைபுக்கி முஹிய்யதீனும்

பெருதி கொண்டவர் அண்ணாந்து பார்க்க

பெரியோன் கிருபையால் ஏழுகொடி

ஒருவன் அருளாலே பறக்க கண்டு

உள்ளம் மகிழ்ந்து துஆ இரைந்தார்

கருதும் மொழியுமே தவறாமலும்

கத்தன் கொடுத்தான் ஏழு கொடி

பெருத்த முதலுமே மிகுதியீந்து

பெரியோன் அளவிலே தவக்கல் செய்து

ஓர்மையாகவே அவரிருக்க

உகப்பாய் அளித்தான் அவர்க்கமுதம்

அருந்தி அவருமே பிரியமுற்று

அவர்கள் மணிமாடம் புக்கினரே

மணிமாடம் புக்கி அகம் மகிழ்ந்து

வள்ளல் துயில் கொண்டு எழுந்தவரும்

கனிந்து உறவாடி மகிழ்ந்தவரும்

காரணர் துயில் கொள்ள இறையவனும்

இனிய பாலரே மிஸ்ருமிப்போ

இன்ப சுகமும் மிகவும் ஆச்சோ

தனித்து நீருமே வந்திருக்கில்

தண்ணீர் கொடுவாத சோலைச்சோ

வருந்தி உருகுகிறார் மாதாவுமே

வாடி மெலிகிகிறர் அனு தினமும்

பிரதி கலங்குகிறார் எந்நேரமும்

பீர்தஸ்தகீர் இச்சனமும்

இருக்கக் கூடாது இனிமேலாக

எழும்பி நடவுமெனில் இவர் விழித்து

கருதும் வகையெல்லாம் மனைவியருக்கு

கருதி அவருமெ மஸ்ஜிதில் வந்து

இறையோன் பஜ்ருமே தொழுதவரும்

இருந்த மு.ஃமீனுக்கு எடுத்துரைத்தார்

ஒருவன் உரைத்திட்டான் பகுதாதுக்கு

உகந்து பயணம் நாளை என்று

இருந்த பேரெல்லாம் மனதுருகி

எப்போ காண்போம் என்று நாங்களுமே...

ஒருவன் அருளாவே நீங்களுமே

உகந்து வந்தீர்கள் எங்களளவில்

பிறக சன்னாசி இவன் யார் இப்போ

பொன்னும் கூசாவில் இருக்கிறதால்

விருப்பமுற்றவர் அவர் கேட்கவும்

விளம்புவாரப்போ முஹிய்யதீனும்

ஒருவன் ஏவலாய் முஹல்ல தீவை

உகந்து செல்லுகையில் ஆலமரம்

விருப்பமுற்று நான் துயி; கொள்ளயில்

விண்ணில் பறந்தார் சன்னாசி அவன்

எந்தன் பேரிலே நிழல்படவும்

எழும்பி வந்தவன் விண்ணிலேதான்

வந்து நானுமே துயில்வதாகி

மகிழ்ந்து புரளவும் இவனைக் கண்டேன்

முன்னோன் சோட்டாவும் கேடாரியும்

முடுகி கொண்டுவா என்றுரைத்தேன்

அந்த மொழிகேட்டு ஒரு நொடியில்

அடித்துக் கொண்டு வந்து விட்டதுவே

விட்டு என்முன்னும் அடிமேல் அடி

விரும சன்னாசை அடிக்கும்போது

சப்தம் பதறியே கெஞ்சிடவும்

தடுத்தேன் அடியையும் விட்டிடவும்

வென்று நின்றிட கதம் பணிந்து

மெலிந்து உருகியே உரைப்பதானான்

மட்டி இவன் தன்னை விடலாமென்று

மனதில் குறித்திட இறை மொழிவான்

துஷ்டன் நஸ்ரானி பொல்லாதவன்

துலங்கும் கூசாவில் அடையுமென்றான்

சத்த மனதாக அடைத்தவனை

துருவில் வைத்தேகி வருகும் போது

கெட்ட நஸ்ரானி முஹல்லதீவை

கெடுதி பண்ணின் தேவதையும்

நட்டப் படுத்தியே கொண்டு வந்தேன்

நஸ்ரானி முன்னாக இருப்பதுவும்

இருப்பதென சொல்ல அவர் மகிழ்ந்து

இப்போ தேவதை பார்க்கலாமா

கருத்தில் மகிழ்ந்துமே அவர் கேட்கவும்

கருணை கூசாவை கொண்டு வாவென்று

பெருத்த சன்னாசை முன்வைக்கவும்

பெரியோன் முஹிய்யதீன் திறந்து மெல்ல

சிரசு தன்னையும் நீட்டுமென்று

சிறந்த புற்றிலே பாம்பது போல்

கருத்த மலைதேவு சிரசு நீட்ட

கண்ணு இரண்டுமே நெருப்பு எழும்ப

உரைத்த மூச்சது விட்டிடவும்

உள்ளம் தளர்ந்து மெய்மறந்து

விருமத்தி மயங்கி இருந்திடவும்

மேவி கண்டதை அடைத்து வைக்க

இருந்த மு஁மீன்கள் அனைவோருமே

எழும்பி முஹிய்யதீன் கதம் பணிந்தே

புகழ்ந்து போற்றியே அகமகிழ்ந்து

பெரியோன் முஹிய்யதீன் தனை மகிழ்ந்து

அகத்தில் நினைத்தான் கிழவிமகன்

ஆண்டோன் அருள் பெற்ற முஹிய்யதீனுக்கு

உகந்து கொடுப்பது ஏதோவென்று

உருகி அவனுமே இருக்கும் போது

அஹதோன் ஜிப்ராயிலுக்கு உரைக்கலானான்

அகத்தில் நினைக்கிறான் முஹிய்யதீனுக்கே

சோங்கு கொடுப்பதில் என சொல்லியே

சோம்புறார் நீரும் சுவர்க்கபதி

காங்கு நீல பரியும் ஒன்று

கடுகி அவன் வீதி செல்லுமென்று

பாங்குடன் பரி ஜிப்ராயில் அலங்கரித்து

பசும்பொன் போர்வை கைகுத்துரா

பூங்கமுள்ள வாசம் பரியும் ஒன்று

பெரியோர் ஜிப்ராயில் தெரு வீதியே

சௌதாரி வேஷம் கொண்டவரும்

சலங்கை கொலுசும் போட்டிடவே

பவிகமாகவே பரி நடத்தி

பார கிழவிமகன் தெருவில் வர

புவன மதிராமல் அன்ன நடை

பெரியோர் ஜிப்ராயில் கொண்டு செல்ல

கவனமிகவுள்ள கிழவி மகன்

கண்டதுடனே அவன் ஓடிவந்து

பரியும் விலையது ஏதோவெனில்

பதினாயிரம் தங்க காசதுவும்

பிரியமுற்றவன் மனையில் புக்கி

பெருதி கொண்டு தங்ககாசெடுத்து

ஒருமையாகவே அவருக்கும் ஈந்து

உயர்ந்த பரியையும் வாங்கிக் கொண்டு

அருமை புகழான முஹிய்யதீன் இடம்

அவர்கள் முன்விட்டு பணிந்து நின்றே

பணிந்து அவனுமே மகிழ்ந்து நிற்க

பரியும் கொடுத்தான் இறையோன் என்றே

மனதில் நினைத்த அவர் கேட்பாரப்போ

வானம் பரியேது உமக்கும் எனில்

சலித்து இருந்தேன் நான் சௌதாரியும்

தானவன் கிருபையால் நம் தெருவில்

தனித்து கொண்டு வந்தான் சௌதாரியும்

நானும் விலைகேட்டேன் அவர் மகிழ்ந்தார்

தங்ககாசுமே பதினாயிரம்

தந்தால் கொடுப்பேன் என மொழிந்தார்

அங்கம் பூரித்து நானும் ஈந்தேன்

அவரும் கொடுத்து அகலப் போனார்

இங்கே கொண்டு வந்தேன் என்றுரைக்க

இறையோன் கொடுத்தான் என்றே நினைத்து

சங்கை அழகுள்ள முஹிய்யதீனும்

சாற்றுவாரப்போ இவன்தனைப் பார்த்து

பதினாயிரம் காசு கொலுசு விலை

பரியும் மனம் சொர்க்க பரியமாகும்

பெரியோன் கொடுத்தான் நமக்குமிப்போ

புத்திதனில் நீயும் நினைத்தாலே

மதியும் துலங்கிய முஹிய்யதீனும்

பகுதாது தனக்கு பயணமாக

நீதியும் எடுத்து ஒட்டகத்தின் மேல்

நீதர் புறப்பட்டார் அந்நேரமே

பொன்னின் மடவாரும் செவிகை வைத்து

பிறவி தனிலேறி முஹிய்யதீனும்

மின்னினொளி போல தூர விளங்க

மேகம் குடையிட பரி நடத்த

அன்னநடையாய் கொலுசதிர

ஐம்பொன் பரியும் நடனம் செய்ய

விண் நிலவை மீன் சூழ்ந்ததுபோல்

மிஸ்ரு தனிலுள்ள முஃமீன்களே

வினி கனல் சர்ப்ப தாதியுடன்

வாரி கடல் மீண்ட முந்நூறு பேரும்

கனிவதாகியே திரண்டு செல்ல

காதிர் முஹிய்யதீன் நடந்து செல்ல

இருந்து போற்றியே முஃமீன்களெல்லாம்

இறையோன் சலாம் சொல்லி திரும்பிடவும்

பணிவிடையாக கடல் மீன்டோனும்

பார வயதுள்ள வசபதாதி

இவருடன் முன்னூறு ஜனங்கள் சூழ

இறையோன் முஹிய்யதீன் பாதை கூட்டி

சாவதனமாக தங்கி வழி

செய்யிது முஹிய்யதீன் அரபாத்துக்கு

கவனமாகவே வருகும் போது

கத்தன் ஜிப்ராயிலுக்கு உரைக்கலானார்

தௌவ்ஸில் முஹிய்யதீன் வாராரிப்போ

சாற்ற அவருமே முடுகலானார்

**விருத்தம்**

ஒருவன் ஜிப்ராயிலுக்கு உரைத்தனன் அரபாத்துள்ளோர் இருந்திட அவ்லியாமார்கள் இயம்பு நீ என்னமானால் திருநபி பேரர் முஹிய்யதீனும் ஜெயமதா வருவதாலே. கருதியே அவர்களுக்கு நீர் கடுகியே வாருமென்றான் இறையோன் உரைப்பு கேட்டு எழுந்துடன் அரபா புக்கி மறை நெறியுள்ள முஹிய்யதீனும் வருகிறார் எதிரே சென்று முறையது செய்வீர் என்று துய்யோன் உரைத்தானிப்போ. விரைந்து நீர் செல்லும் என்று விரைந்தனர் ஜிப்ரயிலே.

**தொங்கல்**

விரைந்து அவர் சொல்ல அரபாத்திலே

வேந்தர் இறங்கியே கூடாரமும்

மறையும் நெறியுள்ளார் படங்கடித்து

மகிழ்ந்து இருந்திட அவ்லியாமாரும்

விரைந்து வந்தவர் தஸ்லீம் செய்து

மீரா முஹிய்யதீன் தழுவி கட்டி

நிறைந்து இருந்தவர் புகழ்ந்து போற்றி

நீங்கள் போய் வாரும் தன்னை

சொல்லும் என கேட்க இவர் மகிழ்ந்து

சோபமாக எடுத்துரைப்பார்

அல்லா கிருபை என்றே நினைத்து

மகிழ்ந்து பசியாறி அங்கிருந்து

அல்லா அருள் பெற்ற முஹிய்யதீனும்

அவ்விடம் தனைவிட்டு எழுந்தருளி

நல்லார் புகழுள்ள நபி பேரரும்

நாடி பகுதாதில் தோட்டம் வந்தே

வருண மணி கூடாரம் மிக அடித்து

மகிழ்ந்திருந்தவர் விருந்துமாக்கி

அன்னம் பருகியே துயின்றெழுந்து

ஆளும் விட்டனர் தம்பியருக்கு

சொன்ன மொழி கேட்டு தூதவரும்

துர்சா நடந்து மாளிகை புக்கி

மன்னர் விசகலம் எடுத்துரைக்க

மாண்ட உயிர் மீண்டும் வந்தவரே

காய்ந்த பயிர் முளை கண்டது போல்

கல்பு மகிழ்ந்த தம்பியரும்

தாயாருக்கு உரைத்து அக மகிழ்ந்து

தங்கைமார்களுக்கு உரைப்பதானார்

நாயன் அருள் என்று மனதில் எண்ணி

தங்கைமார்களும் துஆ இரைந்து

ஆயாசம் போக்கி அவர் மகிழ்ந்து

அலங்கிர்தம் செய்தார் அந்நேரமே

**விருத்தம்**

வர்ண நவரத்தின மணி புருசை தோறும் உண்ணிதமாய் பவழக்கால் பொருந்தியே. நானிலம் புகழும் பகுதாதில் பூவினால் பந்தலிட்டு மதி துலங்கும் செய்து அஹ்மது என்போர் மனமகிழ்ந்து ஜகம் அறிய ஆணையின் மேல் அபுதாவை சோடித்து ஜகமதாய் இருந்தோர்களும் ஜேஜே என்று தீனோர்கள் சென்றுரைத்துமத சேர்ந்தேன். பொழிந்திருக்கும் நன்றலகில் முஹிய்யதீனை தான் கண்டு உண்டக பொன் பாதத்தை தீனோர்கள் தஸ்லீம் இட சிறந்த செய்து அஹ்மதை மார்தழுவி அகமகிழ்ந்து அருகில் இருக்க ஜெகம் புகழும் முஹிய்யதீனை செங்கமல தாதிமார்களும் மார்தழுவி சிரக்கவே போதரவாய் ஏதுரைப்பார்கள். கொடிய முஹல்லதீவை கோர்க்கவே இஸ்லாமாக்கி வடிவுடையோர்கள் இங்கே வந்து வல்லபம்தான் நெடியவன் தன் ஆதரவே அல்லாது யாராலும் கூடாதென்று ஓடி ஏன் கைசேதப்பட்டு உருகி நீதர் தம்மை தந்தம்மேல் ஏற்றி சகல ஜனங்களும் தீன் கூற திருமின்னார்கள் நடனம் செய்யவே சந்திரன் போல் ஒத்த பகுதாது ஊரிலுள்ள மாதர்களும் முத்துமணி ஆலாத்தி முன் சுற்ற சித்திரமணி பேரிகை முரசதிர பெரித வண்டை குடியக்காலம் புரிகை கனகன் என்ன பொடைக்கவே வர்ணத்தில் நாலு திக்கும் வீதிநகர் அலங்கீதம் சுற்றியே இயல்புடனே மஸ்ஜிதுக்கு ஏகிய கோணங்களில் முத்திலுதித்த முஹம்மது ரஸூல் பேரில் உத்து உணர்ந்து பாத்திஹா ஓதியே சித்த மகிழ ரத்தின மணிமாடம் துலங்க ஆணி பொன் அரண்மனையில் அகமகிழ்ந்து பூணிப்பாய் வந்ததுவும் அன்னை தந்தை மனமகிழ போதரவாய் நற்தின குழுவில் சந்திரன் போல் முஹிய்யதீன் தாமிருக்க அந்தமுள்ள ஆலிம்கள், உலமாக்கள் ஆதி அருள் பெருந்துணைவருமே சீழமுள்ள தோழர்களும் சிறந்திருக்க ஆழமதில் எறும்பு கடையானை முதல் எண்பத்து நான்கு உயிரும் வர்ண சேர் முஹிய்யதீனை வாழ்த்தவே திறம் பெருகும் உத்த செய்து அஹ்மதுவும் உத்த அன்னை மற்றோர்களும் சித்தம் மகிழ்ந்து சிறக்க மத்தியிலே சேக் முஹம்மதுவும் சிறந்த கதம் பணிய சிந்தை மகிழ முஹிய்யதீன் ஜன்னத்தில் போதரவாய் ஏகாந்தமாய் விளங்கும் மணிகுழுவில் மாதர் நடனம் புரிய வருசை செய்ய கோதானும் ஆக அடைக்காய் வெள்ளி இலையும் அநேக பண காசும் கணக்கில்லாது அளித்து கண்மணி மெத்தையின் மேல் பிணக்கம் இல்லாமல் சாந்திருக்க பிரியமுற்றான்.

**தொங்கல்**

பொன்னின் ரத்தின மெத்தையின் மேல்

பெரியோன் முஹிய்யதீன் மகிழ்ந்திருக்க

மின்னின் ஒளி போல முகம் இலங்க

விண்ணிலவைப் போல் சூழ்ந்த மீன்கள் போல

தன்னுள் மகிழ்ந்து அருகிலிருக்க

வள்ளல் தோழமார் தம்யிரும்

மன்னர் மன்னரை மற்றுள்ளோரும்

ஸெய்யிது முஹிய்யதீன் மகிழ்ந்திருந்தார்

மகிழ்ந்து முஹிய்யதீன் எல்லோருக்கும்

வல்லோன் கிருபையால் விருந்துமாக்கி

அகமும் மகிழவே அமுதளித்து

அடைக்கா வெள்ளியிலே சந்தனமும்

உகந்து அள்ளீர்கள் முஹிய்யதீனும்

உடையோன் பேரிலே பாத்திஹாவும்

புகழ்ந்து போற்றியே துஆ இரைந்து

பூரித்து ஆமீன் கூறினார்கள்

ஆமீன் கூறியே அக மகிழ்ந்து

அருகாசனத்தில் மகிழ்ந்திருக்க

முஃமீன் அனைவோரும் என்ன சொல்வார்

முஹல்ல தீவை இஸ்லாமாக்கி

தானிங்கு வந்தவாரு தன்னை

சாற்றுவீர் எங்கள் தவப் பொருளே

நாம் இந்த பூமிதன்னை விட்டு

நஸ்ராவை இஸ்லாமாக்குவாரே

எந்தன் உயிருக்கு உயிரானவரே

எந்தன் தோழரே சொல்ல கேளும்

வந்து நான் பட்டபாடு தன்னை

வாழுத்த கூடாது கொஞ்சம் கேளீர்

முன்னோன் முஹிய்யதீன் படிப் படியே

உகந்து சொல்லியே கடவேற்றமும்

சிந்தை கலங்கியே எடுத்துரைக்க

சிறந்த பேரெல்லாம் தனை மறந்தார்

தன்னை மறந்து இருந்தோரெல்லாம்

தயங்கி மனதேகி நீர் சொரிய

அன்னையுடன் தங்கை தம்பியரும்

அங்குள்ளோர் அதிசயம் இதனை கேட்டு

புத்தியாகிய மனம் உருகி

புலம்பி அழுகின்ற தோழர்களும்

மன்னர் தம்மையும் பார்த்து பார்த்து

வெளியில் அகப்பட்ட மலர் சொரிந்தது போல்

**விருத்தம்**

சந்திரன் இருந்தோரெல்லாம் சோம்பியே முகமும் வாடி காய்ந்தகம் எழும்பி மாந்தர் கல்பது தரியா வண்ணம் சாந்தகமான வார்த்தை செய்யிது உரைப்பதனார். உரைத்தார் முஹிய்யதீனும் உடையோன் வித்தவாரே குறையது ஒன்றுமில்லை. ஹுதாயின் மேல் நோவதுண்டோ இறையவன் விதித்தவாறே எவராலம் விலகுன்றாதே சலிக்க வேண்டாம். கண்டீர் சந்தோசம் சலிப்பதாகும். புலியென்னும் மௌத்து உண்மை பின் அது ஒன்றுமில்லை. வலியவன் அமைத்தவாறு வயதினில் பட்டோம் நாமும். சலிப்பது வேண்டாம் கண்டீர் கருதவும் சிறுதே கேளீர்.

**தொங்கல்**

அங்கே நடந்த காரணமும்

அணுவும் குறையாமல் எடுத்துரைத்து

இங்கே வரும்போது நடந்ததெல்லாம்

எடுத்துரைத்திட இவர் மகிழ்ந்து

சங்கை அழகுள்ள முஹிய்யதீனை

தஸ்லீம் செய்தவர் அகன்றிடவும்

தொங்கருடன் வந்து மிஸ்ரு நாட்டார்

துய்யோன் சலாமுரைத்து அகன்றவரை

கண்டவரை காவலர் மகிழ்ந்து

அன்னம் அருந்தி துயின்றெழுந்து

உகந்து பஜ்ருமே தொழுது எழுந்து

உடையோன் இஸ்ராக்குதான் தொழுது

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனும்

ஜின்னும் சன்னாசை தேரில் வைத்து

அகமும் மகிழ்ந்து பரியில் ஏறி

அனைவோரும் சூழ்ந்து நடந்தார்களே

தடதடவென்று முரசதிர

நகர் ஜனங்களும் சூழ்ந்து வர

கடலோரம் வந்து நின்று கொண்டு

கருத்த மலைதேவை ஆசாவாலே

துடினமாகவே தூக்கி வீச

துஷ்மன் நடுக்கடல் விழுந்துடனே

துஷ்மன் அவன்தானும் ஆலமரம்

படைத்தோன் அமைத்தான் அந்நேரமே

மரமும் எழும்பிட முஹிய்யதீனும்

வாழ சன்னாசை எடுத்தெறிந்தார்

விருமசன்னாசை பொன் மலையாய்

விரைந்தனன் நடுக் கடலில்

கிரியும் வளர்ந்திட கண்டெல்லாரும்

கிருபை கிருபை என்றென உகந்தார்

இறையோன் அருள் பெற்ற முஹிய்யதீனை

எல்லோரும் போற்றி மகிழ்ந்தார்களே

மகிழ்ந்து புகழ்ந்திட முஹிய்யதீனும்

வைர மணிமாடம் வந்து புக்கி

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனும்

செல்வர் பகுதாதில் மகிழ்ந்திருக்கில்

உகந்து வருவாரும் போவோருமாய்

உடையோரவர்களை வந்து கண்டார்

அகமும் மகிழ்ந்தர் இருக்கும் நாளில்

அவர்கள் வயதும் இருபத்தி நாலே

இருபத்தி நாலு வயதும் ஆகி

எழுந்து வனம் புக்கி ஒத்த கால்மேல்

ஒருகால் மேல் ஒரு காலும் வைத்து

ஒருவன் தனை நாடி தௌவ்ஸில் முங்கி

கிருபையுற்றுமே நிற்கும்போது

ஹிழ்று நபியும் ஈந்தார் ரொட்டி கறி

அருந்தி அவருமே நாட்;டம் கொண்டு

அவர்கள் பணிரண்டு வருடம் நிற்க

பனிரண்டு வருடம் சென்றதன்பின்

இறையோன் பாலரே உமக்கு விலாயத்திருந்தேன்

இனிய பாலரே காலை எடு

எல்லா வரமுமே உமக்கு ஈந்தேன்

கனில் இனியோரே காரணரே

ஹலாலும் நாலுமே வகுத்து வைத்தேன்

இனிய மடவாரே மனம் செய் எனில்

இனமும் தெரியாது இறையவனே

இனமும் உரைத்திட அவர் மகிழ்ந்து

இலங்கும் முஹிய்யதீன் மாளிகை புக்கி

தனது தம்பியும் தாயாருமே

தஸ்லீம் செய்தவர் அகமகிழ்ந்து

எனது மகனாரே கண்மணியே

இப்போ பனிரண்டு வருடம் மட்டும்

வனவாசம் போனீர் என் மகவே

வல்லோன் கொடுக்கானோ இங்கிருந்தால்

பகர மொழிகேட்டு இவர் மொழிவார்

படைத்தோன் தீதாரும் காண்பதற்கு

அகத்தில் வணங்கினால் கிட்டாதிங்கு

ஆனதால் ஒத்த காலதின் மேல்

உகந்து பனிரண்டு வருடம் நின்றேன்

ஊணுறக்கம் இல்லாமலேதான்

அஹதோன் ஏவலாய் ஹிழ்று நபியும்

அவர்கள் எனது பசியாற்றினார்கள்

பசியும் ஆறினேன் ரொட்டி கறி

பனிரண்டு வருடம் உறவு செய்தேன்

நஸீஹத்து எனக்குமே மிகுதி தந்தான்

நாலு ஹலாலுமே உத்திரவு

குசியாய் மனமது முடிக்க சொன்னான்

கோதை அவர் பேர் மொழிந்தான் கேளீர்

வசமதானதோர் செய்யிது மஹ்ஸூமின்

மகளார் சாரா பீவியரும்

செய்யிதுல் மஹ்தூம் ஈன்ற

செய்யிது பீவி தன்னுடனே

துய்யோன் அருள் பெற்ற அப்துர் ரஹீம்

துலங்கும் பீவியர் ரஹிமான் ஈஸா

செய்யிது இபுறாகிம் ஈன்றதொரு

தையல் ஹவ்வா பீவியரும்

மேலோன் உரைத்திட்டான் என் மாதாவே

மெல்லியர் அரண்மனை சென்று விளங்கினரே

விளங்கி வரவும் அகமகிழ்ந்து

பீவி நஸூஹா சாலிஹாவும்

மாளிகைதனை விட்டு அவரெழுந்து

மங்கை மனைபுக்கி எதிரே வந்து

தழுவி மகிழ்ந்து அழைத்து சென்று

தரள மணிமெத்தை தனில் வைத்து

அழகு வடிவு மின்னார் தஸ்லீம் செய்து

அவர்கள் தமக்கு அமுதளித்து

புகழ்ந்து போற்றியே உபசரித்து

கொடுத்தார் பரிசம் காசாயிரம்

இந்தபடியாக நால்வரிடம்

இவர்கள் பரிசம் வாங்கியேதான்

சந்தோசமாகி எழுந்தவரும்

தங்கள் மனை வந்து உரைப்பதானார்

எந்தன் தனக்குமே பரிசம் ஈந்தார்

உகப்பாய் எடுத்தவர் முன்னே வைத்தார்

மாதா முன் வைக்க அவர் மகிழ்ந்து

வள்ளலே மணம் கூ10ட்ட உகப்பதாகி

கோதானமாக மனைகள் தோறும்

குத்து விளக்கும் பூமரமும்

வேதாம்பர் பேரில் விழிகள் தோறும்

நல்ல தூண் நட்டி வலை பரப்பி

சூதானம் செய்து கொடவரையம்

சொர்ணமாய் அலங்கரித்தார் அங்கே

அலங்கீர்தம் செய்து விருந்துமாக்கி

அளித்தார் தீனோர் கணக்கில்லாமல்

துலக்கமாகவே அளித்தவாரும்

தோகைமார் மனை சென்று புக்கி

இலங்கும் முஹிய்யதீன் தரித்திருந்து

இலங்கும் மடவார் மணம் சூட்டியே

துலக்கமாகவே பதினொருநாள்

துலங்க பவனி வந்தார்களே

வந்தார் பவனி முரசதிரவும்

வடிவு சந்திர பிறவை தோண

முன்னோன் அருளாலே பவனி வந்து

முகிலார் மனைபுக்கி மகிழ்ந்திருந்து

வந்தார் தனது மாளிகைக்கு

வள்ளல் மணிமாடம் புகுந்தவரும்

www.sufimanzil.org

சிந்தா திரையாக வீற்றிருந்து

சீமான் பேரிலே ஜகாத்து ஈய

வரிசை புகழாரும் மிகுந்தளித்து

பகுதாது தனில் மகிழ்ந்திருக்கில்

திருசை புகழாருக்கு முப்பத்தைந்தில்

செம்மல் சோபனம் முடித்தவாரும்

பிருசை புகழாக மனைவி நாலுபேர்

பீர் தஸ்தகீர் சுர்ரிய தொன்னும்

அருசை படைத்தோன் தன்னருளால்

ஆணும் பொன்னும் ஐம்பத்தொன்றும்

ஐம்பத்தொன்றுக்கு நாற்பத்தொன்றும்

ஆண்டோன் இறக்கினான் இப்புவியில்

இன்பமுடனேதான் பிறந்ததிலே

இருபத்தேழு பெண்ணதாகும்

இருப்பது பெண் ஏழதாகும்

உலகில் கவிழ்ந்தது இருபது பெண்

கம்பிரமாக ஆண்பிள்ளையும்

தரணியில் பிறந்த பதினான்கு

இன்பமுள்ளதோர் பிள்ளைகளில்

இறந்தது நான்கு இருப்பது பத்து

சிறப்பாய் இருந்தார்கள் புவி மீதிலே

**விருத்தம்**

அபூ அப்துல்லா, செய்து அப்துல் வஹ்ஹாப், சௌவ்று செய்யது ஹாஸீதின், அபுக்கர், அப்துற் றஜாக், சர்புதின், அபு முஹம்மது ஜமாலுதீன், அபு செய்யது ஜமாலுதீன், அபு முஹம்மது, அப்துல்

ஜப்பார், செய்து சம்சுதீன், அபுபக்கர், அப்துல் அஜீஸும், செய்யது அபு ஈஸா, இபுறாகிம் என்பவர்களும். அபு அப்துற் ரஹ்மான் உடனே அபு அபுல் பசல் முஹம்மது எனும் தன்னையே. ஸெய்யிது சலாகுதீன் அப்து சர்முனா வெனும் தன்னையும் அபு ஜக்ரிய்யா, யஹ்யாவும் தைய்யல்மார்கள் ஏழுடன் ஐந்ததாய் பத்தும் வீஆவன் சுடர் கிரணங்கள் போல் இருந்தார்களே.

**தொங்கல்**

பெண்ணும் ஆணுமே வளர்;ந்துடுவாய்

பெரியோன் அருளாலே மணம் முடித்து

ஒன்று நூறாக கெளித்ததுவும்

உகப்பாய் மணம் சூட்டி இருக்கும் நாளில்

என்றுமுள்ளவன் கிருபை கொண்டு

இவர்கள் பஜ்ரிலே ஒளுவும் கொண்டு

நின்று புகழார்கள் இசாவு மற்றும்...

துய்யர் தொழுதார் நாற்பது நாள்

உண்ணுதல் இந்த படியதாக...

ஒளுவும் முறியாமல் சுஹுதுடனே

தன்னை மறந்து இறைமேல் அன்பு...

சில்லாவில் பன்னிரண்டு வருசம் மற்றும்

ஆன பிரமான இல்லாமலே...

அவர்கள் மனையில் சில்லாவுமே

கண்ணும் மூடியே முஹிய்யதீனும்...

கல்பு கண்ணால் இறைமேல் அன்பு

மின்னும் ஒளிவினை தரிசித்தவரும்...

மேவி சிரமெடுத்து இருந்தனரே

மேலான் முஹிய்யதீன் ஆண்டகையும்...

ராஜன் மகளான நூரரசி

கருத்தில் மகிழ்ந்தவர் பானக்கவும்...

கையில் குழந்தை கைகொடுத்து

பெருதி கொண்டவர் முன்னே விட்டு...

பீர்தஸ்தகீர் முன்னே வைக்க

சிறுபெண் யார் குழந்தையெனில்...

சிறுபெண் உங்கள் குழந்தையல்லோ

முன்னோன் முசாகஹுதாவில் முடுகும் போது...

மொய்குழல் கர்ப்பமானதல்லோ

பெண்ணும் பிறந்து உருவதாச்சு...

பெரியோன் சில்லாவும் பனிரண்டாச்சே

அன்னநடை மின்னால் எடுத்தோதவும்...

ஆச்சரியமாக அகமகிழ்ந்து

பொன்னார் தன்னையும் முத்தியிட்டு...

பீர்தஸ்தகீர் மகிழ்ந்திருந்தார்

அண்ணல் முஹிய்யதீன் ஆண்டவரும்...

அழகுள்ள ராக்கெனும் பரியதுவும்

முன்னோன் அருளாலே வாங்கியவர்...

முஹிய்யதீன் வாய்கட்டி வைத்து

தின்னமுடனேதான் தேப்பம் ஏப்பம்...

சிறப்பாய் கொண்டவரில் ஒரு முஃமீனும்

தன்னில் மகிழ்ந்து திமிஸ்க் விட்டு...

செய்து இடமாக முரீது வாங்கி

முன்னோன் தீதார் பெருவோமென்று...

முடுகி முஃமீனும் மனையில் புக்கி

வண்ணபரி எந்தனில் உலாவி நிற்க...

முஹிய்யதீன் நிற்க கண்டவரும்

கண்டவுடன் முஃமீன் பின்னு வாங்கி...

காமில் இவரென்று நாமும் வந்தோம்

ஆண்டவர் மனதையும் அறியாமலே...

அகத்தில் குபுரோனும் சவுதாரி என்று

வண்ட குபிரோனும் நினைத்துக் கொண்டு...

வழியும் கூட்டியே நடந்தவனும்

சண்டாள பாவியானவனும்...

சரிதை அறியாமல் நஸ்ரா பட்டணம்

வந்து அவனுமே முடுகும்போது...

மஃரிபு ஆகவும் மடத்தில் சென்று

சிந்தை தடுமாறி பித்தாபம் கொண்டு...

செகடதாகியே கிடந்து உருளுவாள்

அந்த நேரத்தில் நஸ்ரா கண்டு...

அவனும் கூப்பிட பேசாதாலே

எந்தஊர் இவர் பெரியோர் ஆகும்...

எண்ணி அவனுமே ஓடி சென்றே

தலைவனிடம் வந்து எடுத்துரைக்க...

தலைவன் அதுகேட்டு எழும்பி வந்து

வலதுபுறமாக இருந்தவனும்...

வழிய சப்தமும் கூவிகேட்க

நலவும் இடரும் பேசாததாலே...

நல்லோர் இவரென்று மனதிலெண்ணி

கலக்கமாகியே மனது நொந்து...

கடுகி வைத்தேன் தனை அழைத்தே

கையை பிடித்து நீர் பாருமென்று...

கையும் பார்த்து அவன் மொழிவதானான்

ஐயம் அசந்து தோத்ததிப்போ...

அது ஊமை ஜனியதாகும்

வையகம் அதில் கிடையாதிப்போ

வங்காளதேசம் ஈராக் தேசம்

துய்ய பரிவுடைய ஈரல் வேணும்...

தோசம் ஜனி பரக்குமென்றான்

அப்போ தலைவன் மொழியலுற்றான்...

அதுவல்லால் வேறொன்றும் செய்யயுன்னாதோ

தப்பில்லை இப்போ மூவாயிரம்...

செய்து இடம் நிற்கும் சொல்லை கேளீர்

இப்போது கேட்டால் கொடுப்பார் அவர்

ஏகும் என்று சொல்ல இவர் எழும்பி

வந்து நஸ்ராவும் முஹிய்யதீன் கதம்...

வாழ்த்தி போற்றியே மகிழ்ந்துரைப்பார்

வல்லோன் முஹிய்யதீன் ஆண்டகையே...

எந்தன் குருவே சுவாமி ஐயா

இப்போ எங்கள் மடந்தனிலே

வந்து பெரியவர் ஜனி பிடித்து

மருண்டு தவிக்கிறார் மருந்ததற்கு....

எந்த விதத்திலும் கிடையாதிங்கே

இலங்கும் பரியது தங்களிடம்...

நிற்குது என சொல்லி வந்தோம் ஐயா

நீதர் ஈந்திட அவர் வாங்கியே...

பக்குவம் செய்து மருந்தும் ஈய

பார வியாதியும் தீர்ந்திடவும்...

சக்கில்லாமல் அவர்கள் கேட்க

செய்யிது முஹிய்யதீன் மூவாயிரம்...

ஹக்கன் பேரிலே ஹதியா செய்ய

அவர்கள் பரியுடைய ஈரல் தனில்...

மக்கு பிடித்ததோர் முஃமீனுக்கு

மருந்தும் ஈந்திட தெளிவு வந்து

எழுந்து அவனுமே இருந்து கொண்டு

எந்தன் வியாதியை எவ்விதமாய்...

பழுது அகன்றது சொல்லுமென்று

பகர்ந்தார் நஸ்ரா அனைவர்களும்...

முழுதும் உடையவன் கிருபையுள்ள

முஹிய்யதீன் மூவாயிரம் பரியும் ஈந்தார்...

கிழித்து ஈரலை எடுத்ததிலே

கனத்த மாத்திரை வைத்ததினால்...

பலத்தது சரீரம் பிழைத்தீர் நீரும்

பீர்தஸ்தகீர் பரக்கத்தாலே...

விளக்கம் அறியாத நெறி மூடனும்

என்றுரைத்திட அவர் பயந்து...

கலக்கமாகிய மனது நொந்து

கருதுவாரப்போ மனம் நொந்து

எல்லைகரை சற்றும் அறியாமலே

ஏதும் கெட்டதோர் நான் மூடன்தான்...

வந்தேன் அவன்பேரில் நாட்டம் கொண்டு

வழிய திமிஸ்கு தனியிலிருந்து...

முன்னோன் விலாயத்தை அறியாமலே

முடுகி ஈமானை சொல்ல முஹிய்யதீனும்...

வந்து அவர்களும் உலாவி நின்றார்

மனதில் குறித்தேன் சவ்தாரி என்று...

சந்தாபம் கொண்டு நானும் வந்தேன்

ஜனியும் பிடித்தது எந்தனக்கே...

இந்த புவியினில் யாருக்காவது

ஏழு கோடி திரவியம் கொடுத்தாலுமே...

வந்து நமக்குமே கிடையாதிப்போ

வள்ளல் ஈந்தார்கள் மூவாயிரம்

இந்த படியாக அவர் ஈயாவிட்டால்

எனக்குமே கிடையாது தங்கமேனி...

முன்னோன் அருளை அறியாமலே

மூதேவியானேன் தலைவன்மாரே

உங்கள் சாத்திரத்தில் உள்ள பேர்கள்

ஒரு பரியாவது ஈவதுண்டோ...

எங்கள் முஹம்மது நபி வேதமும்

எல்லாம் அகற்றி வந்தாரல்லோ...

தங்க மதுக்கு ஒப்பல்லவே

சாத்திரம் குப்பையானதல்லோ…

ஏகன் உரைத்திட்டான் நபி கலிமா

ஈந்தாருக்கும் சுவர்க்கம் ஏற்றாருக்குமே

நரகமது வேண்டாம் இறையவனும்

நாயன் மொழிக்கு பிசகு இல்லையே

விரகமுள்ள சாத்திரமுள்ளவரக்கு

மேதியினில் முத்தி பெற்றமென்று

கிரகம் பிடித்து கிடந்துருண்டு

கீழ் நரகம் ஆழ்வார் தப்பில்லையே…

கருது மொழி கேட்டு எல்லோர்களும்

கலக்கமாகிய மொழிவதானார்…

பெரியோன் வேதம் அறியாமலே

பொய்யை பிடித்து விளையாடினோம்…

பதியில் அருகாமே குருவிருக்க

பாரில் செய்வித்தோ இதுவரையும்…

கஸ்பு கராமத் தெரியாமலே

கடைகெட்ட பிசாசை கொண்டாடினோம்…

மதியில்லாததாலே மறந்து கெட்டோம்

மன்னர் நினைவும் மறந்தோமி;ப்போ

இனிமேல் நமக்கு இவரே குரு

இருக்க கூடாதென்றே நினைத்து…

உகந்து எல்லோரும் ஓர்மை கொண்டு

கற்கண்டு சீனி கனிவர்க்கமும்…

தனித்தனியாகவே தட்டில் ஏந்தி

செய்யிது முஹிய்யதீன் முன்னே வைத்து...

குனிந்து எல்லோரும் நமஸ்கரித்து

குத்பு தன்னையும் புகழ்ந்துரைப்பார்...

வணிகர் என சொல்லி நாமிருந்தோம்

வகையும் அறியாமல் கெட்டோம் நாங்கள்...

தங்கள் பாதமும் நம்பி வந்தோம்

தங்கள் வேதத்தில் அழைத்து கொள்வீர்...

அங்கு அவர்கூற அகமகிழ்ந்து

ஆலநபி கலிமா அவர்களுக்குரைத்து

தொங்கர் முஹம்மது நபிதீனில்

துலக்கமாகினார் எல்லோருமே...

சங்கோசை விட்டு எல்லோருமே

சரகும் படியே வழுவாமலே...

நினைவில் கொண்டு அவர் மகிழ்ந்து நிற்க

நினைவு கெட்டதோர் முஃமினாரும்...

மனது நொந்துமே கரைந்துருகி

வள்ளல் கதம் பிடித்து அழுதிடவும்...

இனமும் தெரியாத முஃமினாரே

எழுந்திருமென்று அவர் எழும்பி...

கனதி சலிப்பையும் அகற்றி வைத்து

காதிர் முஹிய்யதீன் முரீதும் ஈந்து

மனது குசியாக அவருக்குரைத்தார்

முஹம்மது தீனில் வந்தோருக்கு

தனது குருவாக நீர் இருந்து

சரகை வழுத்தி இங்கிருந்தே

சகலபேருக்கும் சற்குருவாய்

செய்யிது நபியுல்லா செங்கோலோங்கி

அகலாதிருந்து அதபு நெறி

அவருக்கு வருத்தி அங்கிருந்து

ஜெகமும் துலங்கியே நபி தீனையும்

தீர்க்க படித்தும் என்றென உரைத்து

உகப்பாய் அவருக்குமே ஒப்பிவைத்து

உங்கள் பதிக்கு நீர் ஏகுமென்றார்

விடையும் பெற்றவர் பதியில் சென்று

வேத நெறியையும் தெரியப் படுத்தி

தடையரை இஸ்லாமாக்கி வைத்து

சைய்தமாகவே மு..மினாரும்

மடையர் நஸ்ராவும் தர்திபாகி

வல்லோன் ஏவலில் முயற்சியாகி

நடைபடி தவறாமல் எல்லோருமே

நாயனே ஐந்தொக்குத்தும் வணங்கினாரே

வணங்கி இவருமே இருக்கும் நாளில்

வள்ளலிடம் வந்து ஓர் மு..மீனும்

தனக்கு மகவும் பிள்ளை இல்லாததாலே

தயக்கம் மிகவாகி அவரெழுந்து

மனதேங்கியே முஹிய்யதீன் கதம்

வணிகர் பிடித்து மொழிவதானார்

எனது உயிருக்கு பீரானவரே

ஏகன் குர்ஸினில் துயிலும் கோவே

எனக்கு வயதுமே அறுபதாச்சு

ஏங்கி மடிகிறேன் மகவில்லாமல்

கணக்கு கருத்தான நாயனையும்

ஹபீபு முஹம்மது தங்களையும்

மணக்கும் பூவாசம் அவ்லியாவையும்

மனதில் குறித்தேன் நான் ஒன்றுமில்லை

எனக்கு மகவு ஒன்றும் தந்து நீங்கள்

என்னை அனுப்பாமல் இனிதிருந்தால்

எந்தன் உயிரையும் உங்கள் கதம்

இறப்பது திண்ணம் என்று மொழிய

முன்னோன் பலகை பார்க்கும்போது

முழுதும் மலடாய் இருக்கக் கண்டு

வந்து இவருமே மொழிவதானார்

வல்லோன் பலகையில் உமக்கிப்போ

உந்தன் தனக்கு மகவி;ல்லைதான்

ஓர்மை செய்யாதே எழுந்திரும்

அந்த மொழிகேட்டு அவன் மொழிவான்

அதற்கு ஜோசியம் கேட்கவில்லை

தந்து அனுப்பினாள் குழவி ஒன்று

தராதிருந்தால் இறப்பது உண்மை

வந்து அவன் சொல்ல மனது பொங்கி

வல்லோன் முஹம்மதுக்கு எடுத்தோதுவான்

சிந்தை கலங்குகிறார் முஹிய்யதீனும்

கவலை அகற்றி நீர் வாருமென்றான்

அந்த மொழி கேட்டு முஹம்மதாரும்

அவர்கள் மனைபுக்கி தீனோருக்கு

எந்த விதத்திலும் சொல்லிலுமாய்

இணங்காததனாலே அவர்கள் சென்று

வந்து முஹிய்யதீன் மேல் குற்றமில்லை

மழலை இல்லாவிட்டால் இறப்பது உண்மை

அந்த மொழிகேட்டு இறை மொழிவான்

ஆனால் ஒரு பிள்ளை உமக்கு பாக்கி ஒன்றும்

வந்து நீருமே மனது ஒப்பியே

வாக்கு கொடுத்தால் என்று சொல்லி

வல்லோன் தன்னையும் புகழ்ந்து போற்றி...

வள்ளல் முஹிய்யதீன் ஏது சொல்வார்

தந்தேன் மகவொன்றும் எழுந்திரும்

ஸெய்யிது உரைத்திர அவர் மகிழ்ந்து

முன்னோன் முஹிய்யதீன் தலைபணிந்து

முடுகி வணிகரும் மனையில் புக்கார்

மனையில் புக்கியே மகிழ்ந்திருக்கையில்

மனைவி அவளுமே கர்ப்பமுற்று

இணையும் துணையில்லான் தன்னருளால்

இலங்கும் மணிமுத்தாய் ஓர் குழவி

மனையால் தனக்குமே பிறந்திடவும்

புகழ்ந்து மாதாவும் தொடக்கு நீக்கி

புனைந்து துயிலுமே எடுத்தவரும்

பெரியோன் முஹிய்யதீன் இடத்தில் வந்தே

கதத்தில் குழவியும் வைத்தவரும்

காரணர் தம்மையும் தஸ்லீம் செய்ய

சுதனை எடுத்தவர் முத்தமிட்டு

துலங்கும் பாலருக்கு பேரும் உமது

முதலோன் பக்கீர் முஹிய்யதீன் என்று

முதலோன் கொடுப்பான் விலாயத்துமே

வதன சந்திரர் தனை புகழ்ந்து வாழ்த்தி

தாயார் கரம் ஈய அவர் வாங்கியே

விடையும் பெற்றவர் மனையில் புக்கி

விளங்க பாலர் வளர்ந்துருவாய்

வடலை சிறுபிள்ளை வயது ஏழில்

வேதரிடம் வந்து கதம் பணிந்து

உடையோன் குர்ஆன் ஓதியே தான்

உள்ளம் மகிழ்ந்து போற்றியே தான்

தடையும் நீக்கியே காமிலாக்கி

தீனோர் பங்கிலே உகந்திருக்க

மணமும் முடித்து ஆணும்பெண்ணும்

மக்கள் பதினாறு பெற்றவரும்

கனகம் பிறக்கவே களித்தவாரும்

காரணம் பெற்று இருக்கும் நாளில்

பணமும் மிகுந்து வாழ்வு தந்து

பக்கீருடன் கூடி வஸ்தேகினார்

மனது குஷியாகி எழும்பி வந்து

வள்ளல் விடை வாங்கி புறப்பட்டாரே

புறப்பிட்டவரே தேசம் சுற்றி

பீர் தஸ்தகீர் ஷாம் வந்து

விருகமுட பட்டணம் சுவால் வாங்கியே

வெள்ளி ஜும்ஆ குழுவில் சென்று

தெரு விசாகவே நின்றிடவும்

தீனோர் நீயார் சொல்லுமெனில்

இறையோன் அருள்பெற்ற பகுதாது நான்

எந்தன் நாமம் முஹிய்யதீன் ஆகும்

எந்தன் நாமமோ உங்கள் பேரோ

ஏன் என்று நினைத்தவன் கேட்கலானார்

உந்தன் பகுதாதில் முஹிய்யதீனென்று

உலகில் பிரசங்கமில்லை என்று

வந்து ராஜனும் மனதிலுற்று

வஸ்தகர் பகீரை அடையுமென்றார்

செங்கோல் சுல்தானும் அடையுமென்று

சேவகர் கொடுபோய் அடைத்து வைக்க

பங்கம் வருவது தெரியாமலே

பகர்ந்தான் மந்திரி தன்னை பார்த்து

அங்கவர் வலுவை அறிய வேணும்

யானை குதிரை மூன்றரை கோடி

சிங்காரமாக நீரும் சென்று

சிரமும் கொய்திங்கு வாருமென்றான்

விடையும் பெற்றவன் அவன் எழுந்து

வேந்தன் மந்திரி மூன்றரை கோடி

குடியும் துலங்கவே அவன் எழும்ப

கோடை இடிபோல முரசதிர

உடையோன் முஹிய்யதீன் ஆண்டவர் மேல்

ஓர்மித்து அவனுமே புறத்திபட்டு

கடல்போல் எழும்பியே சேனையுமே

கடுகி பகுதாது காதமெனில்

வந்து பாளையம் இறங்கியேதான்

வர்ண கூடாரம் மிகஅடித்து

சந்தோஷமாக அமுது அருந்தி

தரள மணிமெத்தையின் மேல் படுத்திருந்து

சிந்தை மகிழ்ந்து அவள் எழும்பி

தெருவீசு பண்ணி முரசதிர

அந்த நேரத்தில் முஹிய்யதீனும்

அவ்வல் பஜ்ருமே தொழுதவரும்

வருசை புகழார் பல் கொம்பிட்டு

வள்ளல் சீன கண்ணாடி பார்க்க

பிருசை புகழ் ஆனவரும்

பிரித்து நாலு பங்கதாக

கருதி புகழோனும் எழும்பி வர

காதிர் முஹிய்யதீன் எழுந்தவரும்

வருசை புகழாரும் மு:ஃமீனிடம்

வருகுது பாளையம் கேட்டு வாவே

**விருத்தம்**

விரைந்தவர் கேட்க வேந்தன் மந்திரியும் உரையும் அது வேந்தன் உங்கள் பகுதாதை சிறையும் அதை பிடித்து தீனோர் சிரம் கொய்து விரைந்து வர சொன்னார் வேந்தன் என்றுரைத்தான். உரைத்திட தூதன் கேட்டு உள்ளமும் தளர்ந்து வந்து உரைத்தான் வள்ளல் தன்பால் உங்கள் தன் சிரமும் கொய்து வாருமென்றான் மறைத்திடா சேனை இப்போ வெள்ளம் போலும் விரைந்திட வள்ளல் தானும் மேலோன் காப்பான் என்றார்.

**தொங்கல்**

காப்பான் என சொல்லி மகிழ்ந்திருக்க

கத்தன் பெருஞ்சேனை முடுகலாக

வருணபானம் எடுத்து அருந்தி

வைரமணி கிண்ணம் ஒன்று அதையும்

ஏற்பாடு செய்ய மூன்றரை கோடி

ஏற்று சேனை இறுத்தி வைத்தே

கூர்ப்பாய்க்கு குடங்க வீழ்ந்தவராய்

கோமான் அடைத்தனர் ஒரு நொடியில்

நொடியில் அடைத்திட அமைச்சனுமே

நொந்து தடுமாறி மனம் சடைந்து

விடியமுன்னமே வந்தசேனை

மேவி புல்லது எடுத்தவராய்

கடுகி பறந்தது மாயமென்ன

காரணம் அறிவோமென்று மனதிலுண்ணி

மடிந்தவாருமே அறியாமலே

வந்து வழிகூட்டி நடந்தவரும்

பெருத்த சுல்தானும் முன்பு சென்று

பெருதி கலங்கியே மொழிவதானான்

வர்த்தகர் மிகுந்த பகுதாதிலே

வர்ணகூடாரம் மிக அடித்து

கருத்தில் மகிழ்ந்து அமுதருந்தி

கங்கில் வடியமுன் தான் எழுந்து

பெருத்த சேனையும் நாலு ச(கு)ப்பாய்

பிரித்து நானுமே நடக்கும்போது

வந்தான் ஒரு தூதன் வளமை கேட்டான்

விளங்கினேன் அவன் கேட்டு ஓடிசென்று

சிந்தை மகிழ்ந்து நான் முடுகும்போது

சேனை போனது தெரியவில்லை

தந்தி பரிசேனையானவரும்

ஜனத்தில் மறைந்தது ஒன்றியானேனே

இந்த வகை மானம் எங்குமில்லை

ஏங்கி நானுமே ஓடி வந்தேன்

வந்தேன் என சொல்ல சுல்தான் சொல்வான்

மயக்கமது வேண்டாம் ஏழரை கோடி

சிந்தை தவறாமல் நீரும் சென்று

சிரமும் அறுத்து நீர் வாருமெனில்

அந்த மொழிகேட்டு அமைச்சனுமே

அவனும் ஏழரை கோடி சேனை

சேனை வந்தப்படி நடத்தியேதான்

பகுதாது எல்கையில் இறங்கினானே

இறங்கி அவனுமே எழும்பி செல்ல

இலங்கும் சர்பத்தும் புனைத்து நின்றார்

பாங்கி சேனையும் ராணுவரும்

பறிகறி முடுக முஹிய்யதீனும்

சுரங்கமதிலேதான் அடைந்தவராய்

துலங்கும் சர்வந்தில் அடைத்தவரும்

உருங்கல் விழுந்ததோர் ஊதாரிப்போ

உள்ளம் உருகியே நடந்தனனே

நடந்து அமைச்சனும் சுல்தானிடம்

நாவு தடுமாறி உரைக்கலானார்

திடவார் அதுகேட்டு தனை மறந்து

சிறகு ஒடிந்ததோர் பறவை போலும்

இடறு வந்தது நமக்கிப்போ

எதிர்த்து பொருந்தாமல் நம்மள் சேனை

அடங்கா பெருஞ்சேனை போனவாரும்

யாரால் முடியாது இந்த மாகை

பச்சத்தி பக்கீரை அழையுமென்றான்

மந்திரி ஓடி அழைத்துவர

பிரித்து புலம்பியே பித்தாபம் கொண்டு

பெருதி கொண்டவன் உரைப்பதானான்

அஸ்தா எடுத்தவர் கொடுக்கமாட்டார்

ஆழில் கவிழ்ந்த வருத்தம்தானே

சிந்தை கூறுவீர் எந்தனக்கு என உரைக்க

நீதர் வழமை எடுத்தோதுவார்

காரணரே செய்விக்கதான் ஆகுமோ

கசடு நினைத்தாயோ இழந்தாய் நீயும்

மரணம் செய்தார் ஆண்டவரே

அவர்பாதம் சென்று உருகினாகால்

காரணர் இங்கு விட்டாலொன்றும்

கத்தோன் அறிவான் நான் அறியேன்

பூரணமாகவே ஒட்டகத்தின்மேல்

போதவே தங்ககாசு எடுத்து

இறையோன் அருள் பெற்ற முஹிய்யதீன் கதம்

ஏகி நீருமே காத்திருங்கள்

உரைத்த மொழிகேட்டு சுல்தானுமே

உள்ளம் தளர்ந்து அவன் எழும்பி

மறையின் நெறியாரும் ஒட்டகையின் மேல்

உயர்ந்த தங்ககாசு எடுத்து

முறையும் தவறாமல் பக்கீருக்கு

மூவாயிரம் தங்ககாசும் ஈந்தே

பின்னும் பக்கீருக்கு வஸ்தீரமும்

பெருப்பமாகவே அவருக்கு ஈந்து

பொன்னும் சால்வை சாதுராவும்

பொன்னால் இழைத்த பாகுமுண்டு

தன்னுள் மகிழவே அவருக்கு ஈந்து

தயவு செய்தருள வேணுமென்று

நன்றி மொழி  சொல்ல பக்கீர்களுமே

நாயன் காப்பான் என்றே மொழிந்தார்

நல்லது என சொல்லி ராஜன் மந்திரி

நாயன் பக்கீர்கள் மூவருமே

அல்லா அருள் பெற்ற முஹிய்யதீனுக்கு

ஐம்பொன் எடுத்து ஈய பகுதாதில் வந்து

நல்லார் புகழார்கள் நபிபேரர்முன்

நஸ்ரு வைத்தவன் தஸ்லீம் செய்ய

வல்ல புயத்தார் மஜ்லிஸில் புக்கி

வல்லோன் ஹதீது மகிழ்ந்துரைக்க

மன்னர் சுல்தானும் ஒரு நிலையாய்

மனதேங்கியே நின்றிடவும்

அண்ணல் முஹிய்யதீன் சீடன் வந்து

அடிமலர் போற்றியே நின்று சொல்வார்

சொன்ன மொழிக்கு எல்லாம் எடுத்து கூறி

துஷ்டன் பிழையும் மனம் பொறுத்து

குணமும் அறிந்தில்லா நோவதனான்

கோபித்த கண்ணால் குளிர பார்ப்பீர்

குத்பே எங்கள் தவப் பொருளே

கோபித்த கண்ணால் குளிர பார்த்து

புத்தி கெட்டதோர் சுல்தானையும்

பொறுத்து பெரியவன் தனக்காகவும்

எத்தினை கேளாமல் ஆண்டவரே

இருக்கும் படியாய் உத்திரவு

சற்றே கண் நோக்குவீர்கள்

தாழ்ந்து கதம் பிடித்து உருகினாரே

உருகி நின்றிட மனது இளகி

உடையோன் முஹிய்யதீன் கையமர்த்தி

விருமம் பிடித்த சுல்தானுமே

வெட்கித்தவனுமே இருந்துருகி

கருமம் தொலைவது இல்லையெனில்

கரைந்து உருகியே புலம்பியிருக்க

ஒருவன் அருள் பெற்ற முஹிய்யதீனும்

உகந்து மணிமாடம் சென்றவரும்

கருணை புகழார் அமுதருந்தி

காரணர் மஜ்லிஸில் வந்தார்களே

**விருத்தம்**

இருந்தனர் இடைந்து வாடி ஈராறு வருடம் மட்டும் குறைந்துயிர் மெழுகதாகி குனிந்தவன் வேலையிட்டு தயங்கியே கருத்து மேனி திகைப்பவத்திருப்பை கண்டு இரக்கமும் மனதிலுற்று எங்கு நீர் வந்தீரென்றார். வந்தனன் உங்கள் பாதம் வள்ளலே சிரசின் மேல் வைத்து முன்னவனறியா மூடன் உங்கள் நீரரறியா வண்ணம் சந்தாபம் நினைத்தாலே தயங்குகிறேன் தவ்ஸில் வேந்தே. எந்தன் குற்றம் தன்னை இறையவன் தனக்குமாக பொறுத்து என்னை மனகறுப்பகற்றி என்னை வள்ளலே அனுப்புவீர்கள் கண்ணமென விழி நீரோட சிந்தை கரைந்து உருகினாரே. நீங்கள் என்மேல் கிருபை வைத்து எனக்குமே முரீதும் ஈந்து மனத்துயர் அகற்றி உருகியே கதம் பிடித்து உள்ளமும் தளர்ந்து கேட்கில் கருதுவார் முஹிய்யதீனும் கலங்கா ஏழும் தெரியுமென்ன வருவதும் போவதும் மனிதரால் ஆவதுண்டோ. ஒருவன் தன் ஏவலாலே உனக்கு பேர் மதார் சாகிப் அவருமே எந்தன் சீடன். அவரிடம் சென்று நீரும் கவலு நீ என மொழிய. தன்னை கருப்பை அகற்றி வைப்பார். தவசுரு முஹிய்யதீனும் சாற்றுமென மொழிய கேட்டு அவருமே எழுந்து சென்று அடிமலர் போற்றி சொல்வோம்;.

**தொங்கல்**

எந்தன் குருவே தவப்பொருளே

ஏகன் முஹிய்யதீன் அனுப்பி வைத்தார்

வந்தே உங்கள் மலரடியில்

மன கருப்பகற்றி முரீது எனக்கு

தந்து அனுப்புவீர் சற்குருவே

சரிதை உரைத்திட அவர் மகிழ்ந்து

துய்யோன் முரீது அவருக்கும் ஈந்து

முஹிய்யதீனிடம் அனுப்பினாரே

அனுப்ப அவருமே முஹிய்யதீனிடம்

ஆன மந்திரி சுல்தானுமே

குனிஸூ பண்ணியே கையும் கட்டி

குத்பே எங்கள் ஆண்டவரே

மனது மகிழ்ந்துமே விடையருள்வீர்

வழிய சுல்தானும் உரைக்க கேட்டு

உனது சீமைக்கு போவென்றும்

உரைக்க இவரும் மொழிவாரப்போ

திருசை புகழாரே ஆண்டவரே

தேசமதில் போய் நான் என்ன செய்வேன்

அருமை புகழாரே சேனைதளம்

அதனை எழுந்துபோய் என்ன பண்ண

அருமை புகழாரே உங்கள் கதம்

உகந்து பணிவிடை செய்வேனென்று

வரிசை புகழாரும் மனதிளகி

வண்ண கொட்டரதனை நீக்கினார்

வர்ண கொட்டரா நீக்கிடவும்

மண் புத்திசால் வந்தவராய்

மன்னன் பரிசேனை வந்திடவும்

வள்ளல் சர்வந்தை நீக்கினார்கள்

திண்ணமுடன் சேனை பத்தரை கோடி

தீனோர்கள் எழும்பிட கண்டு ரரஜன்

அண்ணல் முஹிய்யதீன் ஆண்டவரே

அடிமலர் போற்றி நடந்தனரே

நடந்த சுல்தானும் ஷாமில் வந்து

நவின்றான் மந்திரி தன்னை பார்த்து

உடையோன் முஹிய்யதீன் ஆண்டவரும்

ஒழுக்கம் சர்க்கம் தெரிந்ததிப்போ

திடவார் செப்பிட பெண்ணையுமே

செய்தார் மந்திரி அறியல்லியோ

அடவார் நம்மையும் அகற்றி விட்டார்

அவர்களிடம் போக கணக்கில்லையே

எந்தன் மந்திரி சொல்ல கேளாய்

இப்போ நம்முடைய உஸ்தாதிடம்

அந்தமுடன் சென்று அவர்களிடம்

ஆஸுக் மஃஸுக் இன்னதென்று

சிந்தை மகிழவே கேட்டுவாவென

செப்பு மொழி கேட்டு உஸ்தாதிடம்

வந்து மந்திரி எடுத்துரைக்க

மதார் சாகிப் விளம்பலுற்றார்

உத்தணர் குணத்தினாலே

உங்கள் சுல்தானும் அனுப்பி வைத்தனர்

கத்தன் சிபத்தை அறியவில்லை

கலங்கும் மறுபடி வாங்கிவாவென

உத்திரவு பெற்ற மறுபடியும்

உகப்பாய் வாங்கியே முன்னே வைக்க

பத்தி பத்தியாய் நெருப்பும் பஞ்சும்

பறக்க பொடியுமே நிரப்பி வைத்தே

நிரப்பி ஒட்டியே கொடுத்தவரும்

நீதி இதுவாக்கு கொடுபோவெனில்

உரைப்பை கேட்டவன் எடுத்து சென்று

உத்த சுல்தானும் உரைக்கலானார்

திறப்பும் தெரிந்தவன் பார்க்கும் போது

தீயும் பஞ்சுமாய் எரிந்திடவே

கருத்தை அறியாமல் நிர் மூடனும்

கருது மொழிக்கிது சரியல்லவே

சரியல்ல நீரும் கேட்டு வாவென

சாற்ற அவருமே இவரெழும்பி

பிரியமுடன் கேட்க மதார் சாகிபு

பின்னும் உக்காவில் நெருப்பதனை

உரிய கையிலே நிரப்பி வைத்து

உகந்து வந்த பொருள் இதுதான்

பிரியமுடன் சொல்ல அவன் நடந்து

பீர் கொடுத்ததை பாருமென்றான்

பாருமென சொல்லி முன்னே வைக்க

பார்க்க அவருமே மல்லிகை பூ

பூரிப்பாகி கொடுத்திட பூவும்

பூவாசம் அறியா நெறிமூடனும்

தாரிப் அறியாமல் ஏது சொல்வான்

ஜால வித்தையும் இதுவேயாகும்

கூறி அவனுமே பின்னுரைப்பான்

கூறும் மொழிக்கிது சரியல்லவே

இன்னும் நீர்போய் கேட்டுவாவென

இயம்ப சுல்தானும் எடுத்துரைப்பார்

மன்னரே எங்கள் சிகாமணியே

வள்ளலிடம் சென்று அவர்பின்னும்

அண்ணால் உஸ்தாது கொடுப்பார் கண்டார்

ஆகையால் நாம் இருவரும் போக வேணும்

சொன்ன மொழி கேட்டு அவன் எழும்பி

துலங்கும் உஸ்தாது கதம் பணிந்து

பகுதாது நகர் வாழும் எங்கள் கோவே

வள்ளலே எங்கள் தவப் பொருளே

தகமல்லவே நீங்கள் சொன்னமொழி

சகீதமாகவே உரைக்க வேணும்

பகுமே அறியாமல் கேட்டாய் நீயும்

பழக்கி தெரிந்தாவே தெரியவரும்

எங்கள் சாகிபே என்குருவே

எனக்கு தெரிவித்தால் தெரியவரும்

ஓர்மையுடன் கேட்க மதார் சாகிபு

உயர்ந்த குடாக்கையும் முன்னே வைத்து

துறவுபுற வள்ளல் தம் இழுத்து

சுருள வாங்கிட அக்கினியும்

நெருப்பு எழும்பியே கொழுந்துவிட

நினைவு தடுமாறி நின்றிடவும்

எரிந்த நெருப்புமே சாம்பலாகி

இளகி ஜலமது அலையடிக்க

அலையும் அடித்திட முஹிய்யதீனும்

அதிகவேகமும் கொண்டவரும்

நிலையில் சுல்தான் நிற்கிறதும்

நீதி தவறியே கிடக்கிறதும்

மல்லியும் நெருப்பான் வாரதுவும்

வண்ணி சாம்பலானவரும்

உலகில் மெழுகானவர் கண்டு

உடையோன் ஆசாவால் அடித்ததுவே

அடித்தால் திக்குரு ரூகியதால்

அலையும் ஒடுங்கியே சாம்பலாகி

திடவார் திக்ரு சித்தத்தினால்.

திரும்ப தட்டிட நெருப்பதாக

உடையோன் முஹப்பத் திக்ரு கல்பில்

உகந்தோதிட உருவதாமே

உருவதாகிட மதார் சாகிபு

உடையோன் முஹிய்யதீன் கதம் பணிந்து

கருத்தில் மகிழ்ந்தவர் புகழ்ந்திருக்க

கருதுவாரப்போ முஹிய்யதீனும்

அருமை கெட்டதோர் சுல்தானுக்கு

உடையோன் சிபத்தை காணலாமோ

ஒருவன் தனக்குமே பொருத்தமாமோ

ஒருவருக்கு அதை சொல்லுண்ணாது

மனமும் தெளிந்தோர்க்கு சொல்லலாம்

வல்லோன் தனக்குமே பொறுத்தமாகுமோ

ஒருவருக்கு விலாயத்து காண்பியாதே

கண்கெட்ட குருடர் மிகுதியுண்டும்

குருவில்லா மூடருக்கு சொல்லுண்ணாது

மனமும் தெளிந்தோருக்கு சொல்லலாகும்

வல்லோன் தமக்குமே கோபமாகும்

உனது விலாயத்தை அகற்றி விடுவான்

ஒருவருக்கும் சொல்லாN த இனிமேலாக

கனகம் பெருகின்ற முஹிய்யதீனும்

கருதி நடந்திட இவர் பயந்து

அல்லா தனக்குமே சுக்ரு செய்து

அறிவு கெட்டதோர் சுல்தானுக்கு

வல்லோன் சிபத்தை கண்டாய் நீயும்

மனதில் உருகினால் காண்பாய் நீயும்

சில்லாவில் உகந்து இருந்து பார்த்திருநீ

செப்ப மொழியது அறிவாய் நீயும்

வள்ள புயத்தார் மனது தேற்றி

மதார் சாகிபு அனுப்பினார்களே

**விருத்தம்**

அனுப்பிட மஸ்ததாகி அவனியை எழுந்து ராஜன் அனுதினம் ஹாஹூத்தில் நின்று அமுதப் பாலுண்டு தேறி. இனிதுடன் ஹக்கை நாடி. இரவுபகல் உணர்வதாகி. கனிந்துடல் மதுரம் தூனில் கல்பது வெளிச்சம் கண்டே கண்டுமே ஹபியதாகி. கல்பது கலக்கம் தீர்ந்து அண்டமும் பிண்டம் ஒன்றாய் அனலதாய் கனலைப் பற்றிசான்றனை வென்று மீறி சாரங்கமாய் குர்ஸில் நின்று தோன்றுமே செய்தே நானாம் சூழ்த்திரம் தெளிந்ததென்றே. சூழ்ச்சமதாய்ந்த கண்ணில் சுழிமுனை தன்னை நாடி காட்சியும் மிகவும் பெற்ற கலிமாவில் பரக்கத்தாலே. பேச்சது மூச்சுமொன்றாய் பேணியே காமிலாகி பாச்சிடு திக்ரினாலே பலன் பெற்றிருந்தாரென்றே.

**தொங்கல்**

பலன் பெற்று அவருமே மகிழ்ந்திருக்க

பாதுஷா முஹிய்யதீன் பகுதாதினில்

நினைவு துலங்கிய ஹாஹூத்திலே

நீதியுடன் பேசி மகிழ்ந்திருக்க

கலந்து விளையாடி இருக்கும்போது

கருதினான் இறை முஹிய்யதீனுக்கு

துலங்க நஸ்ரா லாகூர் சென்று

துலக்கப் படுத்துவீர் தீன் நெறியை

அழையும் என்றென கூறிட

நீதர் முஹிய்யதீன் மகிழ்ந்தெழுந்து

பிரிந்து வந்தவர் கலிபாவையும்

பிரியமுடன் கூட்டி லாகூர்  சென்று

தெருவில் வருகையிலே ஒரு மடவாள்

சிந்தை கலங்கியே அழுதிருக்க

சரிதை அறிந்துமே அவர்க்குரைத்து

செய்யயிது முஹிய்யதீன் அவள் மனையை

பெருதி கொடு சென்று நின்று கொண்:டு

பெண்ணின் மயிலாரே அம்மையாரே

பெருத்த சலிப்பேது சொல்லுமென்று

பெண்ணின் மயிலாரும் புலம்பி சொல்வாள்

சரிதை அவளுமே எடுத்து கூறுவாள்

சண்டாள ஜின்னும் வெகு காலமாய்

அரிதி கொண்டது ஆண்பிள்ளையை

அதற்கு காலமெல்லாம் கொடுத்து வந்தார்

பின்னும் முனிக்குமே நமதுகரை

எந்தன் தனக்குமே ஓர் குழந்தை

கொண்டு போகவும் வருவாரிப்போ

கரைந்து உருகிறேன் என மொழிய

ஒன்றுக்கும் நீ பயப்படாதே

உனது குழந்தைக்கு நான் பதிவாய்

சென்று வருகிறேன் மலையாதே நீ

செப்ப முஹிய்யதீன் அவள் மகிழ்ந்தே

நல்லதென சொல்ல ஆதரித்து

நங்கை அவருக்குமே அமுதளித்து

ஸல்லல்லாஹு நபிதன் பேரரும்

சகீதமாகவே அங்கே இருக்க

கொள்ளும் முன் இருந்து கொண்டு சேவகன்

கோதையிடம் வந்து கேட்கும் போது

நல்ல மயிலாலும் இவர்தம்மை

நல்க அவர்கூட்டி நடந்து சென்றே

அரசன் குழுவினில் கொண்டு போய் விட்டு

அழகு வடிவையும் கண்டு மீது

பிறவை துலங்கிய சிறுவன்தன்னை

பிசாசுக்கு ஒப்பு கொடுக்கலாமோ

சிறுவர் தனக்குமே ஜகத்தில் காணோம்

சிந்தைதனில் உன்னி மகிழ்ந்துரைப்பார்

பரிதி துலங்கியே சிறுவர்தன்னை

பன்னீராட்டியே சோடியுமென்றான்

சொன்ன மொழிகேட்டு இவருரைப்பார்

துஷ்டன் எனக்குமே வேண்டாமடா

ஜின்னுக்கு இரையாகி போயிலே

சிங்காரம் வேண்டாம் கொண்டு போவென்று

மன்னன் அதுகேட்டு கோபம் கொண்டு

வண்டனை கொண்டுபோய் வை என்றானே

அரசன் உரைத்திட சேவகனும்

அழைத்து கொண்டு போய் அம்மன் கோயில்

விரகமுடன் வைத்து கதவை பூட்டி

வேந்தன் சேவகர் நடந்திடவும்

இறையோன் அருள்பெற்ற முஹிய்யதீனும்

இருந்து மகிழ பொழுதடைய

சிறந்த கலிபா அருகிருக்க

ஜெகஜோதியாக வெளிச்சம் தோண

கதிரோன் மறைந்து மதி எழும்ப

கனத்த முனியுமே ஏழு பூமிக்குள்

பதியை விட்டது எழும்பிடவும்

பாரும் பூமியும் பிளந்திடவும்

அதிர ஒரு சப்தம் விட்டிடவும்

அண்டபிண்டமும் கிடுகிடு என்று

சதியை ஏழு காதம் இருந்தவனும்

சடையும் விரித்து கையால் பறித்தேன்

**விருத்தம்**

பரும்பனைக் கண்கள்; இரண்டும் பருப்பசும் போல நெஞ்சும் கிரீடமும் சிரசும் பத்தும் கோழிறகுபோல் நாசிபத்தும் விருஷம் போல் சடையும் தூவி விண்ணிலே பறந்து உலாவி மரங்களும் மண்ணில் சாய்ந்து தவிடதாய் நெருங்கி நின்றே கடலது இரைச்சல் போலும் காலதை தூள தாக்கி மடைவாய் திறந்து நாசி மலையது கிடுகிடுத்து தடையற பறந்து விண்ணில் தரையினில் குதித்து ஜின்னும் அடர் பெருந்தண்டாயுதம் ஏற்றி அம்மனுடைய வாசல் வந்தே.

**தொங்கல்**

துஷ்ட முனியுமே மூச்சிடவே

தூளதாகிட கதவதுவும்

சப்தம் பதறியே படியிலேறி

தண்டாயுதம் தோளில் இருந்திடவும்

அற்ற திசை புகழும் முஹிய்யதீனும்

அவனுடைய தோள் தண்டாயுதத்தை

எட்டிப் பிடித்து வளைத்தவரும்

இடும் பொன் கழுத்திலே பூட்டியேதான்

உதிக்க கதிரனும் ராஜனுமே

உற்றசேவகன் தனை அனுப்பி

சதித்த வகை அதை பார்த்து வாவென

தளத்து ராஜனும் விடையருள

கதித்த சேவகர் ஓடிவந்து

காளி சங்கதி பார்க்கும்போது

சதியன் அவனுமே இரு பிளப்பாய்

தளத்தில் கிடந்திட கண்டவரை

கண்டு மகிழ்ந்து சேவகரும்

காரணர் தம்மை கேட்கும் போது

தண்டாயுதம் கொண்டு வந்தவனே

தடுத்தேன் அவனை ஆயுதத்தாலே

என்ற மொழிகேட்டு அவன் மகிழ்ந்து

வேந்தனிடம் வந்து சென்றுரைக்க

இன்று ஒழிந்தது வினைஅதுவும்

இப்போ அவர் பாதம் நமஸ்கரித்து

கொண்டு வரவேண்டும் என நினைத்து

கோமான் சேனையும் எழுந்துடனே

சென்று கோவில் புக்கியேதான்

செவிகை தனில் வைத்து நடந்தனனே

நடந்து பேரிகை நௌவ்பத்துடன்

நகரம் சுற்றியே பவனி வந்தே

குடியும் துலங்க முகம் இலங்க

கோதைமார் ஆளாத்தி ஏந்தி நிற்க

மடமண்டலே கற்பவனி வந்து

வர்ண மணிகுழுவில் வைத்தவனும்

அடிமலர் போற்றியே பணிந்தவனும்

அரசன் கைகட்டி நின்றுரைப்பார்

விரும சன்னாசே என் குருவே

விக்கினம் தீர்த்த எங்களுடைய

கருமம் தொலைத்தீர்கள் சற்குருவே

காசினில் உம்மைபோல் கண்டறியோம்

அருமை அறியாத நெறிமூடன் நான்

அருளும் மொழியும் அகற்றினீர்கள்

தர்மரே உங்கள் அடிமை நாங்கள்

சாமி மொழிப்படி நடப்போம் நாங்கள்

சாமி நானல்ல சன்னாசில்லை

தானோன் அனுப்பினான் என்னையுமே

பாவி மனிதரே சொல்ல கேளீர்

படைத்தோன் அறியாமல் கெட்டீர் நீங்கள்

காமில் முஸ்தபா நபிதீனிலே

கலிமா சொன்னாகால் சொர்க்கம் சேர்வீர்

பூமிதனில் பொல்லா இபுலீசையும்

புத்துஹானையும் நம்பி கெட்டீர் நீங்கள்

கைதிஸ்டமான வீரனையும்

கிட்ட அழைக்கிறேன் பாருமென்றார்

www.sufimanzil.org

சப்தம் பதறி இராஜனுமே

சரிதை அறிவோம் என நினைக்க

அற்றதிசை புகழும் முஹிய்யதீனும்

அடைந்த பிசாசு எல்லாம் வரவழைக்க

கிட்ட வந்துமே நெறிநெறியாய்

கிருபை பதம்போற்றி மொழியுமப்போ

ஆதிஅருள் பெற்ற தவப்பொருளே

ஆண்டோன் குர்ஸினில் துயிலும் கோவே

ஜோதி துலங்கிய மணிவிளக்கே

துலங்கும் பாலரே எங்களையும்

நீதி கெட்டதோர் எங்களையும்

நீதரே இங்கு ஏன் அழைத்தீர்

கூவி அழைத்தது என்னவென்றால்

குடியாளப்பட்டவன் நீயல்லவோ

குடிகள் முழுதுமே முனியும் வந்து

குடிகெடுப்பது பார்த்திருந்தாய்

இடியின் எதிராலே மயில் நிற்குமே

ஏகன் அருள் பெற்ற ஆண்டவரே

குடிகள் காப்பது உங்களல்லால்

குற்றம் அகற்ற மற்றொருவனுண்டோ

அடியில் தூனாமே நாங்களாகும்

ஆண்டோர் சொல்லுக்கு கீழ் பணிவோம்

உருண்ட பிசாசுகள் நின்றிடவும்

அப்துல் காதிர் முஹி;ய்யதீனும்

கருத்தில் மகிழ்ந்து சூழ்ச்சியமும்

கண்கெட்ட ராஜன் பார்த்து நி;ற்க

திருட்டு பிசாசுகள் எல்லாவற்றையும்

திருவுலம் பற்றிட ஒன்றுக்கொன்று

இருக்கி தலைகால் மேலாக

ஏங்கி மயங்கி கிடந்துருண்டு

உருண்டு தவித்தோம் என சொல்லுமாம்

உருகுது நாங்கள் என்ன பாவம் செய்தோம்

கிருபை கடலாரே நாங்களுமே

கெடுதி ஒன்றுமே செய்யவில்லை

தரும புகழாரே நாயகமே

தளத்தை விட்டு நான் அகன்று போறோம்

குருவே உங்கள் பதவிமாச்சு

குடிபோறோம் நாங்கள் தப்பில்லையே

தப்பில்லை ஐயா இனிமேலாக

தளத்தில் நாங்கள் வந்தால் இறந்துபோவோம்

ஒப்பில்லா நாயன் தன் மேல் ஆணை

உடையோன் திருதூதர் நபிமேலாணை

தப்பிதமில்லை உங்கள் பாதத்தானே

தப்பி நான் வந்தால் சிரம் வெடிக்கும்

உகப்பாய் உரைத்திட முஹிய்யதீனும்

கொடிய பிசாசையும் அகற்றினரே

அகற்றும் வகைக கண்டு ராஜன் அவன்

அடிமலர் போற்றி நின்றுரைப்பான்

ஜெகமும் துலங்கிய மணிவிளக்கே

செல்வரே எங்களுக்கென்ன புத்தி

அகமும் மகிழ்ந்தவர் மொழிவாரப்போ

ஆலநபி கலிமா மொழியுமெனில்

உகந்த கலிமா உரைத்து எல்லோரும்

ஓர்மையாகியே இஸ்லாமானார்

இஸ்லாமாகியே எல்லோர்களும்

ஏகன் நபிதீனில் வழிபட்டபின்

ருசியதாகவே நெறிநீதமும்

குத்பு முஹிய்யதீன் வருத்தி வைத்து

கரையா மனதையும் கரைத்தவரும்

கலிமா பூட்டியே தீன் பரப்பி

குசியாய் கோவிலெல்லாம் இடித்து

மஸ்ஜிது கட்டியே தொழுவித்தாரே

தொழுகையுடன் பர்ளு சுன்னத்தையும்

துலங்கும் வாஜிபு முஸ்தஹபும்

அழுக்கும் அகற்றிட முழுக்கு வகை

ஐம்பத்தைந்து பர்ளான வகைகளும்

வாழ்த்தி அவருக்கு துர்ஷ்த்தாகி

வள்ளல் முஹிய்யதீன் புறப்பட்டாரே

வருசை புகழாரும் பகுதாதில் வந்து

மகிழ்ந்திருக்கவும் வயது ஐம்பதுவாம்

பேர் புகழாக இருக்கும் நாளில்

ஆண்டோன் தனை கேட்டு அவுலியாமாரும்

ஓர்மை புகழான முஹிய்யதீனும்

வஹியும்படி வஹியில்லாமலும்

கருதும் வகையேது என்று கேட்க

கருத கேளுமே அவ்லியாமாரே

எந்தன் தஹ்த்திலே எழுதும்போது

எழுத்து மிச்ச மிகுந்ததிப்போ

வந்து முஹிய்யதீன் கிட்டே நின்றார்

வலது புறம் பார்த்தேன் நாக்கை நீட்ட

சிந்தை மகிழ்ந்து எழுதிவி;ட்டேன்

சித்து அதுவல்லால் வேறொன்றில்லை

முன்னோன் உரைத்தி;ட அவ்லியாமாரும்

முடுகுதல் சரியென்றென உகந்தார்

உகந்து அவர்களும் மகிழ்ந்திருக்க

உடையோன் முஹி;ய்யதீன் ஓரிரவில்

மகிழ்ந்து தஹஜ்ஜத் தொழுதிருக்க

மணிமாடம் மேலே சற்குருவே

உகந்து கூவிட சிரம் வெடித்து

உருண்டு கீழ் விழ மதார் சாகிபு

பகரும் மொழி கேட்டு ஓடிவந்து

பார்க்க மௌத்தாகி கிடந்திடவே

மனது தடுமாறி கிலேசமுற்று

முஹிய்யதீன் கதம் பிடித்துருகி நின்றே

கனகம் பொருந்திய தவ்ஸில் வேந்தே

காடை ஏது பாவம் செய்ததிப்போ

இனமும் தெரியாது பறவைக்கு எல்லாம்

ஏகன் ஈரறிவு கொடுத்தானல்லோ

மனது மகிழ்ந்துமே அல்லாவுக்காய்

மௌத்தை ஹயாத்தாக்கி விடுவீரென்றான்

உருகி அவர் கேட்க மனது இளகி

உகந்து ஆசாவால் தட்டிடவும்

ஒருவன் அருளாலே எழுந்ததுவும்

உகந்து சுகித்திட்டு நடந்ததுவும்

பருதி துலங்கிய முஹிய்யதீனும்

பஜ்ரு தொழுது எழுந்துடனே

விருப்பமுடனேதான் மதார் சாகிபே

வேந்தர் கூட்டியே நடந்தனரே

நடந்து வெகுதூரம் ஏகும்போது

நஸ்ரா இரண்டுபேர் வெளிக்கிருந்து

திடவார் முஹிய்யதீன் போரார் என்று

செப்ப அவனிடம் இவருரைத்து

சடவு வந்திட சிரம் வெடிக்க

சரிதை அறிந்துமே மதார் சாகிபு

அடிமலர் போற்றி உருகியேதான்

ஆண்டவரே நஸ்ரா அறிவானோதான்

நலமும் அறியாத காபிர் அவன்

நாயன் தனக்காக மனம் பொறுத்து

துலங்க செய்வீர்கள் அவன் உயிரே

துய்யோன் அருள்பெற்ற சிகாமணியே

கலக்கமாகியே அவர்கள் கேட்க

காபிர் சிரம் பொருந்திடவும்

எழுந்து வந்துமே பதம் பணிந்து

இலங்கும் மலரடி பதம் பணிந்து

ஏகி அவனுமே மொழிவானப்போ

எந்தன் குருவே ஆண்டவரே

ஏகன் நபிதீனில் அழைத்துக் கொள்வீர்

வந்து அவன் சொல்ல மனமகிழ்ந்து

வள்ளல் நபி தீனில் வழிப்படுத்தி

சிந்தை மகிழ்ந்து அவன் நடக்க

தீனின் மணியான மதார் சாகிபு

பின்னும் தொடர்ந்து அவரேகவும்

பெரிய விருட்சம் வந்தடுத்திடவே

சிந்தா ஷாஹ் மதாரே நீருமிப்போ

தெரியாமல் ஒளிக்கிறேன் கண்டு கொள்ளும்

முஹிய்யதீன் மகிழ்ந்துரைக்க

மதார் சாகிபு என்ன சொல்வார்

முன்னோன் அருள்பெற்ற ஆண்டவரே

ஓங்கி புலிக்கு மான் எதிராகுமோ

இந்த மொழிக்கு நான் என்ன செய்வேன்

எருதும் புலியோடு எதிர்ப்பதுண்டோ

சந்தாபம் வேண்டாம் மதாரே நீரும்

சவுதம் பார்க்கவும் வேணும் கண்டாய்

இந்த இடந்தன்னிலிருமென்று

ஏகி முஹிய்யதீன் ஏழு கடலுக்கப்பால்

சிந்தை மகிழ்ந்தவர் சுப்பிக்குள்ளே

தீனோர் முத்துக்குள் இருந்திடவும்

நொந்து உருகியே மதார் சாகிபு

தூணில் பார்த்திட கண்டனரே

கத்தன் கிருபையால் கண்டவரும்

கடுகி கடலோரம் வந்து நின்று

சப்தம் போட்டுமே சலாமுரைக்க

ஸெய்யிது முஹிய்யதீன் வெளியில் வர

உத்த சௌதமும் சரியதாச்சே

உகந்து நீ ஒளி நான் காணுவேன்

தத்துவம் கொண்டு இவருரைக்க

தஸ்லீம் செய்தவர் உரைப்பதானார்

வரிசை புகழாரே நானும் மாட்டேன்

வலிமை எனக்கில்லை நான் எளியேன்

திருசை புகழாரே சௌதம் சரி

தீனோர் உடைய நாமம் சரியதாகுமோ

வருமமது வேண்டாம் ஆண்டவரே

வணங்கி அவருமே கொஞ்சும்போது

ஓர்மை புகழாரே பயமும் வேண்டாம்

ஒளியும் நானுமே காண்பதற்கு

கருதும் மெரி கேட்டு பயந்தவரும்

கத்தன் தன்னையும் மனதிருத்தி

உருக்கில் கல்பதை நெய்யதாக்கி

உடையோன் கிருபையால் அனு போலவும்

புருவம் தனிலொட்டி இருந்திடவும்

பீர் தஸ்தகீர் பஹ்மிருக்க

அர்ஸும் குர்ஸும் அண்டபிண்டம்

அடங்கலும் பார்க்க காணாததாலே

ஒருவன் பஹ்மதை உருக்கிடவும்

உகந்து அனல்தாக்க மதார் சாகிபு

கருகி மெலிந்து தேரையாகி

ஹயாத்து குறைந்தவர் முன்குதிக்க

பருதி துலங்கிய முஹிய்யதீனும்

பார்த்ததுடனே மனதிளகி

வரிசை புகழாரும் வாயமுதம்

மகிழ்ந்து புசித்திட அவரெழுந்து

முன்னோன் அருள் பெற்ற ஆண்டவரே

முஹியித்தீன் எங்கள் தவப்பொருளே

எந்தன் உயிர் மீட்டிய இளவரசே

இனிமேலிருந்தால் இறந்து போவேன்

சிந்தை இறங்கி காப்பாற்றுவீர்

சீமானே நான் உங்கள் கால் தூசியாகும்

கந்த மகிழ்கின்ற காரணரே

கல்பால் புகழ்ந்துமே தஸ்லீம் செய்தார்

சலிப்பது வேண்டாம் மதார் சாகிபே

தானோன் நமக்கொன்றும் வாருமென்று

கலிமா சொன்னதோர் மௌலாவையும்

காரணர் கூடி மாளிகை புக்கி

மகிழ்வாக சீனிபால் பழமும்

விளங்கி அவருக்குமே பசியும் அகற்றி

பளிசமுடனேதான் மஸ்ஜிது புக்கி

பண்பாய் லுஹருமே தொழுதிருந்தே

லுஹரு தொழுமே ஹதீது சொல்லி

உகந்து இருக்கவும் திமஸ்குள்ளிருந்து

உகப்பதாகிய ஆலிமானோர்

உடையோன் முஹிய்யதீன் பார்ப்பதற்கு

அகமும் மகிழ்ந்து ஆலிமானோர்

அவரும் குர்ஆன் ஓதி ஒட்டகத்தின் மேல்

மகிழ்ந்து சுமை போட்டு ஏறிக் கொண்டு

வந்தார்கள் பகுதாது கடலோரமே

வரும்போது அவர் நினைவிலுற்றார்

வையகம் தனில் நமக்கெதிரில்லை என்று

கருத்தில் நினைத்திட இறைவனும்

கருதினாரப்போ ஜிப்ராயிலுக்கு

ஒருவர் ஆலிமும் நமக்கெதிரில்லை என்று

உகந்து போகிறார் விலாயத்தையும்

சருதி கொடு வாங்கி வாருமெனில்

சிட்டு குருவி போல் வந்து இறங்கினாரே

இறங்கி ஜிப்ராயில் கடல் நீரை

இரைத்து கொடுவந்து கரையில் விட

விரைந்து வந்துமே கடலின் நீரை

மோந்து மோந்மே கரையில் விட

திறவு தெரியாத ஆலிமானோர்

சிட்டு குருவியை கண்டவரும்

விரைந்து முடுகியே நின்று கொண்டு

மேய்ப்பாய் அவர் கேட்க அது மொழியும்

மிக்க கடல்நீரை இரைத்து நானும்

மீனும் புசிக்க இரைக்கிறேன்

தக்கமிட்டவர் கேட்டிடவும்

சாற்றும் குருவியும் உரைக்குமப்போ

ஹக்கன் அமைத்தனன் ஆலிமானோர்

உலகம் தனில் உலமாக்கள் அதிகமுண்டோ

மிக்க அறிவுகள் ஒன்றுக்கொன்று

மேலாய் இருப்பதை இல்லை என்று

உந்தன் கல்பிலே நினைத்தீரல்லோ

உம்மை போல் நானும் மதியில்லாமல்

வந்து நானுமே கடையிரைத்து

வயிறு பசியாற அலைகிறேன் நான்

அந்த மொழி கேட்டு ஆலிமானார்

ஆவி தடுமாறி நின்றிடவும்

முன்னோன் ஜிப்ராயில் நானேயாகும்

உந்தன் விலாயத்தை கொண்டு போறேன்

என்றுரைத்து அகன்றிடவும்

வல்லோன் சிபத்தை அறியாமலே

கரைந்து உருகியே கிதாபே எல்லாம்

கடலில் தள்ளியே மனது நொந்து

உரைத்து ஜிப்ராயில் நடந்திடவும்

உள்ளம் தடுமாறி கரைந்துருகி

மறையும் ஓதியே மறைந்து கெட்டோம்

உடையோன் சிபத்தை அறியாமலே

விரைந்து பகுதாது பள்ளி வந்து

மீரான் முஹிய்யதீன் தஸ்லீம் செய்தே

உகந்து ஆலிமும் சலாமுரைக்க

உரைத்த சலாத்துக்கு பிறத்தி சொல்லாததால்

அகமும் தளர்ந்துமே ஆலிம் பின்னும்

மனமும் தெளிந்தே கேட்பதானார்

உகந்து சலாத்துக்கு பிறத்தி நீங்கள்

உகப்பாய் சொல்லாத்தது எதனாலே

இறையோன் முஹிய்யதீன் எடுத்துரைப்பார்

மனது குருடதால் சொல்லவில்லை

உந்தன் கல்புமே குருடதாச்சு

உற்ற அறிவுமே வீணதாச்சு

வந்து உணராருக்கு உணர்த்தீர் நீரும்

வல்லோன் சிபத்தை அறியாமலே

உந்தன் நன்மையும் பறிகொடுத்தீர்

உனது சலாமும் குருடதாச்சு

வந்து நான் பிறத்தி சொல்லவில்லை

பைத்து நாளொன்றுக்கு ஆயிரம்தான்

சுயமாய் கட்டினீர் பலனில்லையே

சுருதி கொடு நாற்பது பிள்ளைகளுக்கு

பயனும் அறியவே ஓதி கொடுத்தீர்

பாவியாகி நீர் நிலை இல்லாததால்

நயமும் பயமுமே அறியவில்லை

நானும் போக்கி நீர் வீணதாக

அயலார் மக்கள் சம்பத்தாலே

ஆக துன்யாவை நம்பி கெட்டீர்

கெட்டு நீருமே நரகுக்கானாய்

கெட்டவர் ஈடேற மாட்டார் கண்டீர்

அற்ற திசை புகழும் முஹிய்யதீனும்

அருளும் மொழி கேட்டு ஆலிமானோர்

பட்டமரமாகி அவன் சடைந்து

பனிரண்டு வருடம் காத்திருந்து

ஏட்டால் வேலையும் ஹிதுமத்துமே

இன்புற்றவருமே நடக்கும்போது

பனிரண்டு வருடம் சென்றபின்பு

பாதுஷா முஹிய்யதீன் மனதிலேகி

கனிவாய் அமுதமும் அவர் வாயினில்

காரணருமே விலாயத்தோங்கி

இனிய அமுதமும் உண்டு தேறி

இலங்கும் முஹிய்யதீன் கதம் பிடித்து

பணிந்து சுகித்திட்டு விடையும்பெற்று

பாவம் அகற்றியே திமிஷ;கு சென்றார்

செல்ல ஆலிமும் முஹிய்யதீனும்

செம்பொன் மணிமாடம் மகிழ்ந்திருக்க

அல்லா அருள் பெற்ற முஹிய்யதீனுக்கு

அறுபத்திரண்டு வயதுமாக

வல்ல புயத்தார் அபுசாலிஹார்

மைந்தர் வந்தார் ம.்ரிபு பட்டணத்தில்

நல்ல புகழுள்ளார் சென்றுபுக்கி

நாயன் மஜ்லிஸில் இருக்கும்போதே

வந்து கண்டார்கள் மு.்மினோரும்

வள்ளல் கதம்போற்றி மகிழ்ந்திருந்து

கந்த மகிழ்கின்ற காரணரே

கருணை பொங்கியே காத்திருந்து

முன்னோன் ஹதீதையும் அவருக்குரைக்க

உகந்து கேட்டவர் இருக்கும்போது

வந்து எஹூதியும் என்னை தேற்று

மழலை இடுக்கியே வரும்போது

இறையோன் முஹிய்யதீனை மொழிந்தாரப்போ

எட்டு செவ்வாய்க்கு எண்ணெய் தேய்த்து

முறையாய் முழுகினால் தலைவெடிக்கும்

மொழிந்தார் ஹதீதுமே இடையன் கேட்டு

மறையின் நெறியுமே அறியா மூடன்

மனதில் குறித்தனன் என்னமானால்

பிறந்தநாள் முதல் இதுவரையும்

பிசகாமல் நாமும் மூழ்கி வாரோம்

என்றும் சக்காக குறித்தவனும்

ஏகி ஆற்றினில் குழந்தைதன்னை

முண்டன் அவனுமே முழு காட்டியே

மூடன் கரை வைத்து அரப்பு தேய்த்து

சென்று நடு ஆற்றில் முழுகும்போது

வந்தான் அவனுமே அப்புறத்தில்

வண்டன் அவனுமே பெண் உருவாய்

வாலிப பிராயம் ஆனதுவே

பெண்ணின் மயிலாரும் எழிலழகாய்

பூரித்து அவளுமே நிற்கும்நேரம்

மன்னன் கரையோரம் செவிகை ஏறி

வரும் போதினில் அவளை கண்டு

பெண்ணார் யார் என்று விசாரியுமென்று

போத அவனோடி கேட்குமபோது

சொன்னாள் சரிதையும் அவனும் கேட்டு

துயிலும் கொடுத்து அழைத்து வந்தே

மன்னனிடம் விட்டார் அவன் மகிழ்ந்து

வள்ளி தன்னையும் செவிகை வைத்து

திண்ணமுடனேதான் மளிகை புக்கி

செல்வி அவள் ஏழு பிள்ளை பெற்று

கன்னி அவளுமே ஆற்றில் வந்து

காரிகை உடன் தலை மூழ்கி

விண்ணும் அகன்று கேணிக்கப்பால்

மெல்ல எழும்பிட ஆணதாகி

மருண்டு குபிரோனும் பிள்ளை தன்னை

வாரி இடுக்கியே மனமகிழ்ந்து

விருமா என்றவன் நினைத்துக் கொண்டு

விடுதி சென்றவர் வர ஹதீது சொல்ல

கருத்தில் மகிழ்;ந்தவர் அங்கிருக்க

காபிர் மனை செல்ல மனைவி அவள்

பருப்பு அடுப்பினில் வைத்திருக்க

பார்த்து இடையனும் நகைத்தனனே

நகைத்து அவனுமே கோபம் கொள்ள

நாரி மொழிந்தனன் அவனைப் பார்த்து

நகைத்து அவளுமே மொழிவாளப்போ

செல்லும் போதினில் சோறு அடுப்பினில்

வேக வைத்தேன் நீர் வரும் போது

வெந்தது பருப்பு வெகு நேரமாச்சோ

நகைத்து அவளுமே சீறி சொல்ல

நடந்த கதை தன்னை எடுத்துரைக்க

சரிதை தனை கேட்டு அவள் மகிழ்ந்து

சாஸ்திரம் பொய்யில்லை இடையன் புத்தி

பிடரியில் அல்லோ நிர்மூடன் நீர்

பெரியோர் சொல்மொழி தப்புமோதான்

ஓர்மையாகியே பசியும் ஆறி

உகந்து அவளிடம் சேர்;ந்த பேரும்

விரும்பி அவர்களும் மஸ்ஜிது புக்கி

வேந்தர் தம்மையும் பணிந்துரைப்பார்

பணிந்து சரிதையும் எடுத்துக் கூறி

பயகாம்பர் தீனில் ஆக்கியேதான்

கனிந்து அவர்களும் கலிமா சொல்ல

கருப்பும் அகற்றியே நிதி வளர்;ந்து

இனிய பொருளையும் இன்புற்றவர்

இஸ்லாம் நடப்பையும் நேர்மையாக்கி

தனியோன் ஏவலை தவறாமலும்

சரஹின் படியேதான் நடந்தனரே

சரஹும் தெளிந்து அவரிருக்க

ஸெய்யிது முஹிய்யதீன் மஜ்லிஸிலிருக்க

விருகமுடன் ஒரு மடவாள் வந்து

மேலடி போற்றியே சீனி வைத்து

கருதுவாளப்போ பெண் மயிலும்

காரணரே எங்கள் சற்குருவே

விரும ஜாதி நாங்களுமே

மெல்லி அவள் நாச்சி என்னை விட்டாள்

பெருத்த வர்த்தகன் மனைவி அவள்

பிள்ளை பதினொன்றும் பெண்ணும்  பெற்றாள்

சிறுத்த மனதாகி வர்த்தகனும்

செவ்வி உடனேதான் போராடியே

விருப்பமுடனேதான் ஆண்பிள்ளை இல்லாததாலே

வேறு கல்யாணம் செய்ய போகிறார்

உறுதி சொன்னாள் எங்கள் நாச்சி

உகந்து கெர்;ப்பம் ஆணில்லாவிட்டால்

தடங்கல் அதுவில்லை செய்து கொள்ளும்

இப்போ தரிப்பு இந்த கர்ப்பம்

மடவாள் ஆணோ என்று சொல்லி

மதிப்பு அறியவே அனுப்பி வைத்தாள்

சடவாய் இருந்தவள் நோக்குகிறாள்

சாஹிபே என்னதென்று உரைக்க வேணும்

மடவாள் கேட்டிட இவருரைப்பார்

மழலை பிறப்பான் என்று மொழிய

உரைத்த மொழி கேட்டு அவள் மகிழ்ந்து

உற்ற நாச்சிக்கு எடுத்துரைக்க

கரைந்த மனதுமே தெளிவதாகி

காதலிருக்க அன்றிரவு

விரைந்து வலியுமே எடுத்தவரும்

மெல்லியவள் நோக்க வர்த்தகனும்

அனைவோர் தன்னையும் வரவழைத்து

வயது கணவிக்கு அறிவிக்கவும்

பிறந்திட பெண்ணும் அவன் கேட்கவும்

பிறந்தது ஆண் என்று அவளுரைத்து

கருத்தில் மகிழ்ந்துமே சர்க்கரையும்

காசு பணமுமே அளித்திருக்க

பெருதி கொடுத்தாதே அனுப்பி வைத்து

பிச காணவாறு கேட்டுவாவென

கருத அவளுமே ஓடி சென்று

கவல அது கேட்டு கோபம் கொண்டே

பிறந்தது ஆண் போவெனவே

பீர்தஸ்தகீர் உரைத்திடவே

விருகமுடன் சொல்ல பனிரண்டுமே

மேலோன் கிருபையால் ஆணாகிடவும்

சிறந்த காரணம் தன்னைக் கண்டு

சீமான் வர்த்தகன் கேட்கும்போது

கருதினாள் அப்போ காரணத்தை

கல்யாண பெண்களும் ஆண் ஆச்சுதே

பெண்கள் பதினொன்றும் ஆண் ஆனதால்

பிரியமுற்றவர் எழுந்து வந்து

மன்னர் முஹிய்யதீன் தனைப் புகழ்ந்து

வைத்தான் சீனி சர்க்கரையும்

பெண்கள் அதுவெல்லாம் ஆணதாச்சே

பிறந்தது ஒன்றும் நமக்கு போதும்

முன்னோன் அருள் பெற்ற ஆண்டவரே

முகிலாரே எங்கள் சற்குருவே

வணிகன் அவனுமே உருகி கேட்க

உன் மனதின் படியேதான் ஆகுமெனில்

கலந்து அவனுமே சேர்ந்தபேரும்

கலிமா மொழிந்தனர் அந்நேரமே

பிணியும் துன்பமும் அகன்றதிப்போ

பெரியோர் தவத்தினால் கரையேறினோம்

தனியோன் ஏவலில் முயற்சியாகி

சரகின் தெளிந்தவன் மகிழ்ந்தனனே

மகிழ்ந்து வணிகனும் குபிர் அகற்றி

வள்ளல் தனக்குமே ஒட்டகத்தின்மேல்

உகந்து தங்க காசு எடுத்து

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனுக்கு

செம்பொன் பரியொன்றும் அவருக்கீந்து

புகழ்ந்து போற்றியே பெண் தொடர்ந்து

பெரியோன் முஹிய்யதீன் பகுதாதில் வந்து

ஓர்மையாகிய வர்த்தகனும்

உத்திரவு பெற்று அவனும் செல்ல

திருசை புகழாரும் மனமகிழ்ந்து

சிறந்த மணிமாடம் வீற்றிருக்க

ஒருவன் உரைத்திட்டான் இவர் தமக்கு

உகந்து திமிஷ்க்குக்கு ஏகுமெனில்

அருமையாகிய முஹிய்யதீனும்

உகப்பாய் திமிஷ்குக்கு பள்ளி சென்றார்

சென்று மஜ்லிஸில் மகிழ்ந்திருக்க

திமிஷ்கிலுள்ளோர் முஸ்லிமெல்லாம்

வண்டு மது பூவை சூழ்ந்தது போல் சலாமுரைத்து

கன்று தனைத் தேடும் கத்தா போல

காத்து இருந்தவர் ஹதீது கேட்க

அந்த சமயத்தில் வணிகனுமே

சென்று வெகுதூரம் அவனுக்கு ஏகியே

திரும்பி வரும்போது கள்ளர் வந்தே

சுற்றி வளைந்திட கள்ளர்களும்

துலங்கும் முஹிய்யதீனை நினைத்திடவும்

உற்ற விசலமும் செவியில் தாள

உகந்து பாதக்குறடு தன்னை

பற்ற அகற்றவே கண் காட்டவும்

பாத குறடுமே விரைந்து சென்று

சுற்றி வளைந்ததோர் கள்ளனையும்

சூரர் அடியே துரத்திவிட்டு

இடுப்பு கைகால் முழங்கால் மண்டை

இலங்கும் பாதகுறடுமது

முடுகி அடித்திட கள்ளனுமே

முறிந்து விரைந்தோட அடித்ததுவும்

அடித்து விலகிட கண்டவரும்

அடிக்க நினைத்ததால் நம்மையும்

ஆண்டவர் பாதகுறடது என்று எண்ணி

ஆபத்து நீக்கி காப்பாற்றினீர்

மகிழ்ந்து வணிகனும் புகழ்ந்து போற்றி

வழியும் கூட்டிட குறடும் அது

உகந்து பாதையும் கூட்டிவர

உடையோன் முஹிய்யதீன் மகிழ்ந்திருக்க

சகல பேரையும் திரட்டிக் கொண்டு

ஸெய்யிது முஹிய்யதீன் இடத்தில் விட

அகமும் மகிழ்ந்து வணிகனுமே

ஆயிரம் தங்ககாசு வைத்தே

தொங்கர் தம்மையும் தஸ்லீம் செய்து

சொல்லுவாரப்போ வணிகரும்தான்

உங்கள் பேர்நாமம் நினைத்ததினால்

உயிர் மீண்டு வந்தோம் இல்லாதிருந்தால்

எங்கள் முதலும் இழந்து நாங்கள்

இறந்து போவோம் அவிடத்திலே

உங்கள் கிருபையால் வந்து சேர்ந்தோம்

உகந்து புகழ்ந்தவர் நடந்து செல்ல

சிந்தை மகிழ்ந்தவர் முஹிய்யதீனும்

திமிஷ்கு தனை விட்டு எழுந்தருள

அந்த நகருள்ள மு.்மினோரும்

ஆயிரம் பேர் பின் தொடர்ந்து வர

வந்து பகுதாதில் மகிழ்ந்திருந்து

வள்ளல் விடைவாங்கி அவர்களுமே

குந்தலமான நபி பேரரும்

குர்ஆன் ஓதி மகிழ்ந்திருக்க

அந்த நேரத்தில் மகுடமதில்

அடைந்து இருந்த ஓர் எலியதுவும்

வந்து செதலதை தள்ளிடவும்

வள்ளல் மனக்கோபமாகிடவும்

சிந்தை கலங்கி உயிர் இழந்து

சீமான் முஹிய்யதீன் முன்னே விழ

நொந்து மனதேங்கி மதார்சாகிபு

நூர் துலங்கிய முஹிய்யதீனை

கதமும் பிடித்து உருகி சொல்வார்

கத்தன் தனக்காக மனம்பொறுத்து

இனமும் தெரியாத எலிதனக்கு

எழுப்பிவிடவேணும் மனதிறங்கி

விதனம் அகற்றுவீர் என உரைக்க

வேதர் ஆசாவால் தட்டிடவும்

பதைத்து துடித்துமே எலியதுவும்

பண்பாய் எழுந்து வலம் சுற்றியே

வருசை புகழ்ந்து எலியது சொல்லும்

வள்ளலே உங்கள் அரண்மனையில்

ஒருபோதும் குடியிருப்பதில்லை

எங்கள் கோத்திரம் அடங்களுமே

விரும்பி நாங்களும் குடி இருப்பதில்லை

வெல்லும் மொழி தப்பி இருந்தோமானால்

சிரமும் வெடிக்கும் தப்பில்லையே

செப்பி அதுவும் நடந்ததுவே

வேலை வலம் பொறி கழனி தோறும்

மேவிவென்றார்கள் மணிகுளிக்க

சுரரும் மலை காவும் சூழும்

கனவாசல் துலங்கும் அப்துற்ரஹ்மானோடும்

நான்கு ஸுஹ்பும் வழுவாமலே

நாயன் அருள் பெற்று இருக்கும் நாளில்

வாழப் பிராயமானதோர் முஹிய்யதீனும்

சீசன் செய்யிது யூசுபுமே

கருணை மிகவுள்ள கப்பல் ஏறி

கரையும் இறங்கி கண்ணூர் தன்னில்

வர்ணபட்டாங்கு தனை இறக்கி

வணக்கம் செய்தவர் இருக்கும் நாளில்

அரணத்து திக்க ஜும்ஆவுமே

அடுக்க இவருமே மஸ்ஜிது சென்று

கருணைக்குடையதோர் செய்யிது யூசுபு

காமில் பின்நின்று தொழுதிருந்தார்

தொங்கரெனும் அப்துர்ரஹ்மானுமே

துய்யோன் விசலத்தை கூறாமலே

தங்கள் விலாயத்தை மகிழ்ந்துரைக்கில்

செய்யிது யூசுபு சுகியாமலே

உங்கள் விசலத்தை கூறாதே நீர்

உடையோன் விசலத்தை கூறுமெனில்

அங்கு அவர்கோபம் கொண்டவரும்

யார் நீ யார் சொல்லுமென கேட்கவும்

வரிசை என்ஊர் பகுதாது நான்

வள்ளல் முஹிய்யதீன் என்பேராகும்

அருமை புகழாக இவருரைக்க

அவ்லியாமார்களில் முஹிய்யதீனென்று

பிருசை புகழாக நீர் உரைத்தாய்

பெரிய அவ்லியாவோ என உரைக்க

திருசை புகழாரும் கருணை பொங்கி

திடுக்கமுற்றவர் நடுங்கலுற்றார்

சரீரம் நடுங்கிட இருந்தபேர்கள்

ஸெய்யிது யூசுப் கதம் பணிந்து

அரிய பெரியோன் தனக்காகவும்

அவர்கள் நடுங்கலை அகற்றுவீர்கள்

அறிய சீசரும் ஆவிகாட்டிடவும்

உடுப்பும் நடுங்கலை அகற்றிடவும்

பிரியமிகவாகி அப்துற்றஹீம்

பெரியோன் முஹிய்யதீன் என உரைத்தார்

உரைத்தது பொய் அல்ல அப்துற் றஹீம்

உலகுக்கு அதிபதி அவரே அல்லால்

இறையோன் புவியில் இறக்கவில்லை

எல்லா அவ்லியாவும் அவருக்கு கீழாகும்

மறையின் நெறியால் விலாயத்தல்லால்

மற்றோருக்கு இறை கொடுக்கவில்லை

குறையொன்றும் அணுகாது புண்ணியர்காண்

புகழும் விசலமும் அவருக்கே ஏற்றுமே

இப்போ ஏவல் சரி முஃமினாரே

இப்போ இறைவாசல் காப்பதுநான்

சைதைமாகவே அந்த வழி

சகல அவ்லியாக்கள் ஏகனின் பால்

முயற்சி பெறவேதான் வருவாரன்றோ

முஹிய்யதீன் பேர் தயவர் வரவில்லையே

என்மீதான வாசல் காப்பதுதான்

மேலோன் விடுத்தனல் இன்னதென்றும்

சொந்த உடுப்புடன் நிறமதில்

சுட்டும் ஆயத்தும் இன்னதென்றும்

முந்து ஜில்லாவில் துள்ளி இன்னதென்று

மொழிந்தால் முஹிய்யதீன் நிசமாகுமே

இந்த விசலம் சொல்லாதிருந்தால்

அருளும் மொழியது பொய்யதாகும்

சந்தாபமாக நினைத்தவரும்

சாற்ற அவருமே இவர் மொழிவார்

வல்லோன் அருளினால் சொல்லுவார்கள்;

விரைந்து ஆளுமே அனுப்புமென

விரைந்து ஆளுமே அனுப்பிடவும்

நல்லார் முஹிய்யதீன் கடுதாசியில்

நல்கும் கத்தது வருக முன்னும்

எல்லா காரியம் கேட்கவில்லை

இதுவெல்லாம் நிசம் இயம்ப கேளும்

அல்லா உனைவாசல் கூறினவும்

அருளும் வினையானேன் அருளினதும்

அருளும் கிழமையும் திங்களாகும்

அருளும் உடுப்பது எந்தன் உடுப்பதுகான்

பொருளும் குல்ஹுவல்லாஹ் எழுதினது

புகழும் நிறமும் வெங்காய தோள்

சிறக்க அருந்திய துள்ளி மூன்று

செப்ப வேணும் தன் விலாயத்தை கேள்

அருளும் பொருந்திய திக்று செய்யில்

ஆழி மீதினில் தந்தது உண்டோ

பறக்கில் நடுகடல் மாரி பொய்கையில்

பாதாளத்தின் கிளை விழுந்தனையே

உறக்கம் பிடித்து நீ கிடக்க

உடையோன் விலாயத்தை அகற்றிடவும்

சிறக்கும் கடல் நடுவே கிடக்க

சிறந்தகை வந்து அடித்ததுண்N;டா

நிக்க ஒரு தீவு சேர்ந்ததுண்டோ

நிற்க மிருகம் கண்N;டாடி நீயே

ஓடி மரமீதில் ஏறிடவும்

உகப்பாக பரி மீதில் ஏறி நிற்க

நின்றும் போர்வை பச்சையுடன்

நின்ற புலி சிங்கம் தனை வெட்டி

சுட்டும் விலாயத்தை உனக்களித்து

சுருக்க அனுப்பினது நானல்லவோ

நாடி உனக்கு இப்படி நான் செய்ய

நன்றி மறந்து ஸெய்யிது யூசுபுமே

ஜாக்கிரதை செய்யும் வகை ஏது என்ன

சிறந்து எழுதியே கப்பலிலே

மகன் கையில் கொடுத்து அறிந்து நீயும்

நடுகடலில் வருவான் அவன் வசமும்

இதனை அளித்து நிகழும்

பரவான் காகிதம் தேவையில்லை

என்று இதனை அளித்து

ஏகிலும் புரவாமல் வாருமென

இசைந்து படிஏந்து வந்தனரே

இந்த காகிதம் கண்மூக்கு

ஏக அப்துற் றஹ்மான் வைத்து

காகிதம் தன்னை உடைத்துப் பார்த்து

சிந்தை கலங்கியே ஏக்கமுற்று

சிறக்கும் ஸெய்யிது யூசுபேதான்

இந்த தோஸ்து நீர் உமக்கென

மொழிந்து மலாய் கத்து ஆகியபின்

புத்தியில் முஹிய்யதீன் தன்னையுமே

புகழ்ந்து போற்றியே இருந்தனரே

இருந்து மகிழவும் முஹிய்யதீனும்

இலங்கும் பகுதாதில் இருக்கும் நாளில்

வந்தனர் முஃமீன் ஊர்தர்ப்பமதாய்

வள்ளல் தமக்காக சாது ராவும்

தெரிந்து செய்தவர் கொண்டுவந்து

தீனோர் முன்வைத்து தஸ்லீம் செய்து

சிறந்த மு:ஃமீனும் உரைப்பதானார்

சிந்தை வைத்து நான் உங்களுக்காய்

கொண்டு வந்தேன் நான் என உரைக்க

குத்பு முஹிய்யதீன் மொழிவாரப்போ

என்று நமக்குமே தேவையில்லை

எளியோராகையால் கொ:டுபோ வெனில்

துண்டு புடவை கிழித்தொன்றாய்

துய்யோன் நமக்கீந்த ஒன்றெடுத்து

என்றுரைத்து அகமகிழ்ந்து

வேந்தன் மஃரிபு பட்டணத்தில்

சென்று அவரேகி துயின்றெழுந்து

கொண்டு போய் சுல்தான் முன்னே வைத்து

குனுசு பண்ணியே அவர் நிற்க

ஒன்று சாதுரா எங்கே எனில்

உடையோன் முஹிய்யதீனுக்கு அளித்தோம் எனில்

முண்டு விளையான சாதுராவை

முஹிய்யதீன் பக்கீர் வாங்கினாரோ

பகரும் மொழி கேட்டு தையல் காரன்

பக்கீர் அவரென்று சொல்லதகுமோ

ஜெகம் துலங்கிய பாதுஷா அல்லோ

திக்றி பேசுகிறீர் என மொழிய

இகழுவானப்போ இவனைப் பார்த்து

எதிர்த்து என்முன்னும் பேசலாச்சோ

அகமும் பேசுகிறான் இவன் தன்னையும்

அகல கொண்டுபோய் தரியுமென்றான்

தரியுமென சொல்ல சேவகரும்

தள்ளி கொண்டு போய் வாள் உருவி

கருவி தன்னையும் ஓங்கும்போது

காதிர் முஹிய்யதீன் கையை நீட்டி

உருவிய வாளதை தட்டிடவும்

ஓங்கும் அவன் தானும் துடித்து விழ

பெரிய புகழாக இவனை தூக்கி

பீர் தஸ்தகீர் முன்வைத்தனரே

முன்னே வைத்துமே முஹிய்யதீனும்

முகிலார் மனதினில் கோபம் கொள்ளவும்

அந்நகர் சேனை படை மன்னரும்

அரசன் முதல் பூமி முங்கிடவும்

தன்தரையாக ஆகிடவும்

தாயார் ஹஜ்ஜுக்கு போய் இருந்தவரும்

பொன்னாள் தன்சீமை வந்தடுக்க

தன்தரையாக இருந்தி;டவும்

எந்தன் மகன் எங்கே சீமை எங்கே

இந்த வாரான வகைகள் ஏது

முன்னோன் ஹஜ்ஜுமே செய்த பலன்

முடிந்தது இவ்வாரென நினைத்து

சிந்தை கலங்கியே தாயானவள்

சீமான் முஹம்மது தங்களிடம்

வந்து நாம் சென்றால் தெரியவரும்

மனதில் குறித்தவர் மதீனத்திலே

வந்து கும்பாவில் சென்றவளும்

வள்ளல் முஹம்மது தம்மை நாடி

சிந்தை உருகியே துஆ கேட்கவும்

செம்மல் விழி வந்து மொழிவாரப்போ

உந்தன் மகன் தானும் இறக்கவில்லை

உடையோன் முஹிய்யதீன் கோபத்தால்

முன்னோன் அகற்றினான் பூமியினுள்ளே

மொய்குழலே ஒன்றுக்கும் பயப்படாதே

வந்து நானுமே முஹிய்யதீனிடம்

வாக்கு வாங்கியே வருமளவும்

இருமென சொல்லி முஹிய்யதீனிடம்

எழுந்து குப்பாவில் சென்றிடவும்

பெரிய புகழாக முஹம்மதரும்

பீர் தஸ்தகீரை மார்தழுவி

உரிய கண்மணியானவரே

உங்களிடம் வரும்முன் நீங்கள் வந்தீர்

விரைந்து கத்தது அனுப்பி வைத்தாள்

வள்ளலிடம் வந்து கொண்டு போவோம்

என்னை நாடி நீங்கள் வர தகுமோ

என்ன விசலம் நினைத்தீர் நீங்கள்

நினைத்து விசலம் என கேட்கவும்

வள்ளல் முஹம்மது எடுத்தோதுவார்

வினையும் தெரியாமல் சுல்தானுமே

விண்ணும் உரைத்தனன் மதிகெட்டதை

இணையில்லா நாயன் தனக்காகவும்

ஈன்ற மாதாவுக்காக வேண்டி

மனது பொருத்து எழுப்பவேணும்

வள்ளல் அருமையும் அறிவானோதான்

தனது பாட்டனார் முஹம்மதரும்

ஸெய்யிது முஹிய்யதீன் முன்னுரைக்க

அந்நேரமே மனதிளகி

எனது கோபமும் அகன்றதிப்போ

எழும்புவான் அவன் ஏதும் போலாய்

மனது குஷியாகி மொழிந்திடவும்

பகுதாதை விட்டு முஹம்மதரும்

சந்தோசமாகி மடவாளுக்கு

சாற்றுவாரப்போ முஹம்மதரும்

உந்தன் மகன் தன்னை காண்பாய் நீயும்

உகந்து நடவெனில் அவள் மகிழ்ந்து

முன்னோன் முஹம்மதை புகழ்ந்து போற்றி

மொய் குழல் வந்து மகனை கண்டு

எந்தன் மகனே கண்மணியே

ஏகன் முஹிய்யதீன் என்றறியோனே

சிந்தைதனில் இப்படி நினைக்கலாமோ

நீதர் வந்தல்லோ கிருபை செய்தார்

பக்கீர் என சொன்னாய் என் மகவே

பாதாளம் சென்றவர் அவரல்லவோ

இக்கணமே சென்று வரவேணும்

ஏழு கோடி பசும்பொன் எடுத்து கட்டு என்றான்

இச்சனமே சென்று எடுத்து கட்டி

ஒட்டகத்தின் மேல் சுமையும் போட்டு

வந்து அவர்களின் கதம் பிடித்து

உருகி அவர்களும் சென்று நிற்க

www.sufimanzil.org

தர்க்கம் அது ஒன்றும் நீ செய்யவில்லை

தானோன் செய்தான் இந்த வேலை

உன்னால் முடியு மோ அவனை வெட்ட

உருகி அழுகாதே நடவுமெனில்

தன்னால் மறந்து மதிகெட்டேன் நான்

தானோன் தனக்காக மனம் பொறுத்து

குன்றாமல் வாக்கு அருளுவீரெங்கள்

குத்பு முஹிய்யதீன் ஆண்டவரே

மன்னா இது புத்தி மறந்துவிட்டு

மனது பொறுத்தேன் நடவுமென்றார்

நடவுமென சொல்ல முஹிய்யதீனும்

நாதர் பகுதாதில் மகிழ்ந்திருக்கில்

திடவார் அபுசாலிஹார் அவர்தமக்கு

செம்பொன் ஈந்த வர்த்தகரும்

மடமண்டலேகர் முஹிய்யதீனிடம்

வருந்தி பட்டையும் தனை வாங்கி பார்க்க

கடனை வாங்கின பதினாயிரம்

கையொப்பமுள்ள தங்க காசுமே

வரைந்திருக்கவும் கண்டு கொண்டு

வணிகர் இருமென்று உரைத்தவரும்

மறையின் நெறியாரே அவன் உஸ்தாதுக்கு

வந்து வந்துமே கேட்கலானார்

உரையும் அது கேட்டு அவன் உஸ்தாதுக்கு

உற்ற சீசனுக்கும் நடக்கும் வாரும்

குறையும் அகற்றியே உஸ்தாதும்தான்

கத்தனவருக்கும் நடக்கும் வாரும்

இறையோன் முஹிய்யதீன் தங்களிடம்

ஏகி வெகு நாளும் கேட்டிருந்தான்

அந்த நேரத்தில் அவனை கூவி

அவனிடம் ஹத்தும் அவர்கள் ஈந்து

இந்த கத்தையும் ராஜனிடம்

ஏகி நீர் கொடுத்து வாருமெனில்

அந்த கத்தையும் வாங்கி அவன்

அரசனிடம் வைத்து தஸ்லீம் செய்ய

உகந்து அவனுமே உடைத்துப் பார்த்து

மகிழ்ந்து அவனுமே மாளிகை புக்கி

பதினாயிரம் தங்க காசெடுத்து

பளிங்கு பெட்டியில் வைத்து பூட்டி

கசபன் இடந்தன்னில் ஒப்பி வைத்து

காசு நூறுமே அவனுக்கு ஈந்து

அவர்கள் சலாமும் அவருக்குரைத்து

அனுப்ப இவனுமே வாங்கியேதான்

விரைந்து வந்தனன் நஸ்ரா தேசம்

வீதி நடுத்தெரு வரும்போது

மறையும் அறியாத மாமயிலாள்

வைரமணி மேடை தனில் நின்று

சிறையில் அதிகமானதோர் சிறுபெண்

மயிலாள் நிற்க கண்டவனும்

கரை காணாத சீசனுமே

காதல் கொண்டவன் விடுதி சென்று

கதவுதட்டி அங்கு ஒருபெண்

கடுகி வந்தவள் கதவும் நீக்க

மதமும் மிகுந்த சீசனுமே

வன்னி தனக்கு பிணையும் எனில்

நிதமும் பதினாயிரம் தங்க காசு

நேரிலே தனக்கு பிணையும் என்றாள்

அதுவும் பிணையும் கேட்டு வாவென

ஓடி அவளுமே கேட்டு வந்தாள்

வந்தவுடனே அவருக்கும் ஈய

மகிழ்ந்து அவள்  சென்று திரும்பிவந்து

சிந்தை மகிழவே மெத்தையிட்டு

தெண்டு தலைகாணி அவருக்கும் ஈந்து

சந்தோஷமாக படுத்திருக்க

சமையல் பண்ணி அவள் அமுதளிக்க

வந்து அவருமே அமுதருந்தி

வைர மணி மெத்தை துயில்வதாக

சென்று மடமின்னார் அமுதருந்தி

சீக்கிரம் வந்து தலை சாய்க்கவும்

தெண்டு தலை சாய் முஹிய்யதீனும்

செங்கரத்தால் ஓர் அடிஅடிக்க

வண்டுரையும் பூங்கால் மடமின்னாரும்

மனது தடுமாறி எழுந்திருந்து

இன்று நம்மையும் அடித்தவர் யார்

என்று நினைத்தவள் யோசனையாய்

மனதில் குறித்தவள் பின்னும் சாய

வள்ளல் பின்னும் ஓர் அடிஅடிக்க

நினைவு தடுமாறி நெஞ்சடைத்து

நேரிலே எழுந்து இருந்துகொண்டு

இனமும் தெரியாமல் இவர்களிடம்

இப்போ பணமும் வாங்கினோம் நாம்

கனகம் பொருந்திய வர்த்தகரை

காலால் தட்டியே எழும்பியேதான்

எந்த ஊர் நீயார் காண்

இயம்பும் நிசமதே பொய் சொல்லாதே

அந்த மொழி கேட்டு அவன் மொழிவான்

ஆண்டவர் சீசர் நானேயாகும்

வந்து சரிதையும் எடுத்துரைக்க

மயிலான் மனதேங்கி உரைப்பதானான்

எந்தன் குடியை கெடுக்க வந்தாய்

இழந்த புத்தியாய் இங்கு வந்தாய்

நிந்துதனை செய்தாய் உஸ்தாதுக்கு

நீதி கெட்டவன் நீயே ஆகும்

நல்ல தீவினை செய்தாயென்று

நல்கினாள் பணம் முழுதையும்

நில்லாதே எழுந்திரு போவோமென்றார்

நினைவு தடுமாறி வந்தவனும்

அல்லா அருள் பெற்ற முஹிய்யதீன் கதம்

அவனும் வைத்துமே தஸ்லீம் செய்ய

நல்லார் புகழுள்ள நபிபேரரும்

நகைத்து அவர்களும் மொழிவதானார்

உஸ்தாது சீசன் நடந்தவாரும்

ஒரு நாடு சத்துருவான வாரும்

மஸ்து கொண்டு நீ அளித்தவாரும்

வள்ளி பயந்து பொருள் ஈந்தவாரும்

தத்துவம் கொண்டு வந்து சேர்ந்தவாரும்

தான் கேட்ட ஹதீதுக்கு ஒப்பதாச்சோ

பெற்றதாய் பிள்ளை நம் புண்ணாது

பெரியோர்கள் கை இதுதான் கண்டாய்

என்றுரைத்தவர் அகம் மகிழ்ந்து

விளக்கம் செய்திட சீசனுமே

இன்றும் தவமுள்ள என்குருவே

ஏதும் கெட்டதோர் நிர்மூடன் நான்

இன்று புத்தியும் கற்பித்தீர்கள்

ஏகன் தனக்காக மனம் பொறுத்து

கண்டுதனை காக்கும் கத்தாப் போல

கடைப்போக காரும் என் குருவே

கரைந்து மனதேகி அழுதிருக்க

கசடா இதுபுத்தி மறந்துவிடும்

வேந்தன் கலிமாவை நினைவிருத்தி

மேலோன் பதியை பார்த்து உணரு

கறையும் அகலும் கரை சேருவாய்

சன்னாசி நடப்பை தள்ளிவிடு

மறையின் நெறியதை வழுவாமலே

வணங்கும் என சொல்லி அனுப்பினாரே

அகல அவனுமே முஹிய்யதீனும்

அருகே இருந்த வர்த்தகருக்கும்

உகப்பாய் பதினாயிரம் காசளித்து

ஊருக்கு போவோமெனில் அவள் நடக்க

ஜெகமும் துலங்கிய முஹிய்யதீனும்

செங்கோலோங்கியே இருக்கும் நாளில்

அகத்தில் தெளிவெல்லாம் ரோமிருந்து

அவ்லியா தம்மையும் நாட்டம் கொண்டு

விரும சன்னாசி பகுதாதில் வந்து

வேதர் தம்மையம் விளக்கம் செய்ய

ஒருமை தன்னையும் அறிவோமென்று

ஊருக்கு ஊர் வழியும் கேட்டவன்

கருத்தில் மகிழ்ந்தவன் ஆறுமாதம்

கவலை மிகவாகி திரிந்து அலைந்து

திரும்பி பகுதாதில் வந்து செல்ல

தீனோர் வெளிவந்து உகந்திருக்க

வந்து அவனுமே விசாரிக்கும் போது

வள்ளல் வெளிவீட்டில் இருக்கிறாரெனில்

அந்த மொழி கேட்டு அவனேகியே

அவ்லியா கதம் போற்றியே தஸ்லீம் செய்ய

எந்த ஊர் நீ சன்னாசி எனில்

எந்தன் பதி ரோம் ஆகுமே என

வந்தேன் உங்கள் கதம் தேடிநான்

முஹம்மது நபி தீனில் அழைத்துக் கொள்வீர்

உள்ள சன்னாசே சொல்ல கேளும்

உனக்கும் நமக்குமொரு சௌதமுண்டும்

தாழி இரண்டிலும் தண்ணீர் விட்டு

தனலாய் கொதித்த பின் நாம் இருவர்

ஆழிதனில் முங்கி எழுந்திடவும்

அதற்கு சம்மதியோ சொல்லுமெனில்

உள்ள சன்னாசி நல்லதெனில்

உகந்து தாழி இரண்டில் தண்ணீர்விட்டு

தனலாய் எரித்து கொதிக்க விட்டு

தனது சீசரிடம் திரி கொடுத்து

மனது மகிழ்ந்து உரைக்கலானார்

விண்ணிதனில் இருவரும் மடிந்த பின்பு

இந்த திரி இரண்டையும் அவரவரே

உகந்து துவைத்திடுங்கோ என உரைத்து

கனலாய் எரிகின்ற தண்ணீரினில்

கதிக்க குதித்திட்டார் இருவருமே

கதித்து வைத்திட திரியதனை

கனவில் முங்கியவர் எழுந்துடனே

பெரியோன் அருளாலே வெளியில் வந்து

பூராயங் கொண்டு இருந்தவரும்

அதிகம் குறைச்சல் பார்க்க லட்சம்

அங்கே இரண்டு புறத்தில் வைத்து

திரியும் இரண்டையும் தனித்தனியே

சீமான் முஹிய்யதீன் வைத்திடவும்

அறிவில் உயர்ந்தவர் அலியார் திரி

அம்பர் கஸ்தூரி மணமதாக

உரிய சன்னாசு திரியதுவும்

உடலே நாற்றம் ஆனதுவே

பிரியம் மிகவாகி சன்னாசியும்

பேரா இதுக்கல்லோ நாடி வந்தேன்

அநேக கோடி காலம் தங்கினாலும்

ஆகா செயலென்று தள்ளி நானும்

அநேக சுரரும் விட்டு நானும்

முஹம்மது நபி தீனில் அருமையாகி

கனகம் பொருந்தியே ஏகி வந்தேன்

கசடாய் அகற்றுவீர் என உரைக்க

சினேகம் மிகவுள்ள சன்னாசிக்கு

செப்பினார் கலிமா அந்நேரமே

அஹ்மது நபியுல்லா தீனிலாக்கி

மு:மீன்தனம் பெற்று அந்நேரமே

அகமும் மகிழ்ந்து அர்ஸுகுர்ஸு

அண்ட பிண்டமும் ஓர் ஒளிவாய்

உகப்பதாகி ஹாஹூத்தினில்

ஒன்றாக கலந்தவன் சீசன் பெற்று

ஜெகமும் துலங்கவே அவ்லியாவாக

தீனோர் பொருட்டினால் அகம் மகிழ்ந்தார்

மகிழ்ந்திருக்கவும் பின்னுமொருவர்

வாழ சன்னாசியும் சொர்க்கம் ஏகி

உகந்து அவனுமே சுற்றிப் பார்க்கில்

ஒருகனி பிறந்தோங்க கண்டு

அகமும் மகிழ்ந்து அதனை கொய்து

அவ்லியாவிடம் வந்து முன்னே வைத்தான்

உகந்து தஸ்லீம் செய்து நிற்க

உரைப்பார் முஹிய்யதீன் அவனைப் பார்த்து

கனியும் கொடுவந்தாய் சுவர்க்கமதில்

கசடாய் இன்னுமோர் கனி கொண்டுவாவென

பணிந்து அவனுமே ஏகியேதான்

கனியும் கிடையாமல் சுற்றிப் பார்த்து

காரணர் முன் வந்து தஸ்லீம் செய்ய

இனிய கனி எங்கே திருடா இப்போ

ஏண்டாய் பொய் சொன்னாய் என்முன்னே

ஏது வித்தைகள் கற்றாலும்தான்

இலங்கும் சுவர்;க்கம் கிட்டுமடா

வாது பிறத்தியில் வந்ததினால்

வண்டா சொர்க்கம் கனி கொண்டு வந்தாய்

கோதுமை கனி இதுவல்லவோ

கொண்டு வந்தாய் நீ புசிக்குண்ணாது

சாத்திரம் சொன்னாய் தெரியாதுபோல்

தகுமோ சுவர்க்கம் புகுவதற்கே

வருசை புகழாரும் உரைத்தி;டவும்

வழிய சன்னாசி மனதுருகி

திருசை புகழாரே நான் அடியேன்

தீனில் நிலையாகி கொள்ளுமெனில்

பிருசை புகழாக நபிதீனிலே

பீர் தஸ்தகீர் கலிமா சொல்ல

ஓர்மை புகழாக கலிமாவுமே

உகந்து தீனில் வழிப்பட்டானே

தீனில் வழிப்பட்டு உற்று உணர்;ந்து

தேன் மாங்கனி உண்டு மகிழ்ச்சி பெற்று

நூனில் கலிமாவை பாய்ச்சி வைத்து

நூலால் பறாலிலே குர்ஸில் சென்று

பேணி ஹயாத்தையும் பலப்படுத்தி

பெரியோன் தன்னையும் முடுகலாக்கி

ஆணி முஷாஹதா வழியே நாடி

ஆலம் பனாவாகி இருந்தனரே

ஹாஹுத்தில் முங்கியே அவன் எழும்பி

அனலில் உருகியே நெய்யதாக்கி

அருந்தி அமுதமும் உண்டு தேறி

ஆண்டோன் சமூகம் முடுகலாகி

பிரிந்த உடலும் ஒன்றாய் கூடி

பெரியோன் தீதாரும் பெற்றவரும்

பொருந்தி அவனுமே போக்கியதில்

புகழ்ந்து ஹயாத்துமே நீடுழியாய்

இருக்க அவனுமே முஹிய்யதீனும்

இந்தப்படியாக நபிதீனிலே

சரகமில்லாமல் எஹூதிகளை

தானோன் விலாயத்தால் இஸ்லாமாக்கி

பெருக நபிதீனை பலப்படுத்தி

பெரியோன் அருளாலே கிருபையுற்று

பரக்கத்தும் வாழ்வும் நிதி வளர்ந்து

வள்ளல் பகுதாதில் இருக்கும் நாளில்

மகிழ்;ந்து மணிமாடம் தனிலிருந்து

வல்லோன் குர்ஆன் ஓதுகையில்

உகந்து தெருவீதி ஓர்மடவாள்

உத்த கணவனை சுமந்து கொண்டு

அகமும் மகிழ்ந்தவள் வரவும் கண்டு

அவளை அழையும் என்று ஆள் விட

பகரும் மொழி கேட்டு அவள் ஓடியே

பைங்கொடி தன்னை அழைத்து வந்தே

மருக அபுமுஹம்மது இடம்

முன்னே விட்டிட அவர் மகிழ்;ந்து

திருவணி கொடு பெண் மயிலே

சுமந்து இருப்பதை இறக்கி வையும்

அறுவை உமக்கு இவர் யார் சொல்லும்

இயம்ப அவளுமே எடுத்துரைப்பார்

புருஷன் இவராகும் ஆண்டவரே

துய்யோன் விதித்திட்டான் என் தலையில்

விரும எழுதினான் என் தலையில்

வெளியில் சுமந்து நான் வயிறு வளர்க்க

கருவில் விதித்திட்டான் எந்தனக்கு

காரணரே சுமந்து நான் ஏகியே

தர்மர் அழைத்ததால் இங்கு வந்தேன்

தயவு செய்வீர்கள் என்குருவே

அருவை மொழி கேட்டு இவர் மகிழ்ந்து

ஆண்டோன் இடத்திலே துஆவிரைந்து

ஓர்மையாகிய ஆண்டோர் கேட்க

உடையோன் துஆ கபூலாக்கினான்

கருணை மணி ஆசாதனை எடுத்து

காரணர் தாண்டி அவன் எழுந்து

பெருதி கொண்டவன் தஸ்லீம் செய்து

பிரியமுற்றவன் நின்றிடவும்

கருதுவாரப்போ முஹிய்யதீனும்

கவ்ப் உடைய மங்கை நீயே என்றார்

பத்தா பத்தினி ஆனதாலே

படைத்தோன் உன் பங்கிலிருந்தான் பெண்ணே

கருதி இவருமே மன மகிழ்ந்து

கலிமா உரைத்தனர் இருபேருமே

விரும்பி இருவருமே கலிமா சொல்லி

விடையும் கொடுத்தனர் மென்மேலுமே

பெருத்த முதலுமே இறைகொடுப்பான்

பெரியோன் ஏவலை மறவாமலே

இருங்களென சொல்லி அவர் மகிழ்ந்து

ஏகிமனை புக்கி மகிழ்ந்திருந்து

ஒருவனருளாளே நிதி வளர்ந்து

உகந்து அவர்களும் வளர்ந்திருக்க

வருசை புகழான பகுதாதினில்

வல்லோன் தபகாத்தி பக்கீர் அவர்

பெண்கள் பதினொன்று பிறந்ததாலே

செப்பினான் அவன் மனைவியருக்கு

அறுவை இதுவரை மனம் பொறுத்தேன்

தானும் இது கெர்ப்பம் இல்லாவிட்டால்

திருவை நான் உன்னை தலாக் சொல்வேன்

செப்பி அவனுமே நடந்திடவும்

கருத அவன் சொல் பெண் மயிலும்

கவலை மனதாகி முஹிய்யதீனிடம்

வந்து அவளுமே உருகிநின்று

புருஷன் சரிதையை எடுத்துக் கூற

வருசை மடவாளே என் தங்கையே

மழலை பிறப்பான் சலியாதே நீ

கருது மொழி கேட்டு விடுதி வந்து

கன்னி மயிலாரும் இருக்கும் நேரம்

ஒருவனருளாலே வயறு நொந்து

உகந்து பெண்ணுமே பிறந்தி;டவும்

அறுவை அவளுமே மனம் சடைந்து

அவளும் துயிதாகி எழுந்தனளே

எழுந்துபின் அவள் முஹிய்யதீனிடம்

இயம்ப அவள் கேட்டு மகிழ்ந்துரைப்பார்

பழுதில்லை எனது மொழி பெண்மயிலே

பாலன் அவனாகும் போய் பார்நீ

வழுத்தும் மொழி கேட்டு அவள் நடந்து

மழலைதனை பார்க்க பெண்ணதாக

முழுதும் உடையவன் கிருபை என்று

மூன்று தரம் ஓடி நாலாந்தரம்

அருக அவள் நின்று உரைத்து நிற்க

ஐய்பை மறையாமல் இங்கு வந்தாய்

கருது மொழியுமே நிஜமாகுமென்று

கருத அவள்கேட்டு மனம் கூசியே

வந்து அவளுமே ஐய்பை மூடி

அரை நாழிகை சென்று பார்க்கும்போது

சொன்ன மொழியுமே தப்பில்லாமல்

சுதனம் இருந்திட மனம் மகிழ்ந்து

பெண்ணின் மயிலாலும் மனது உகந்து

புதல்வன்தனை தூக்கி அமுதமூட்டி

அன்ன நடை மின்னார் மகிழ்ந்திருக்க

அன்று போனதோர் பக்கீரும் வந்து

என்ன புதுமை என நினைத்து

இயம்புமென கேட்க அவள் மொழிவாள்

எந்தன் கணவரே இனியவரே

இயம்பு மொழியதை முஹிய்யதீனிடம்

வந்து நானுமே உரைப்பதானேன்

வள்ளல் உரைத்திட்டார் அதன்படியே

எந்தன் பாக்கியம் உண்டாச்சுது

இல்லாதிருந்தால் நான் உம்மை இழந்தே

கந்த மடவாளும் எடுத்துரைக்க

கல்பு உருகியே அழுதனனே

அழுது புலம்பியே என மொழிவான்

ஆண்டோன் சிபத்தை அறியாமலே

பகரும் மொழியுமே அல்லாஹ்வுக்காய்

பழுதும் மொழியே நான் கூறினேன்

முழுதும் உடையவன் கிருபையினால்

மொய் குழலே மனம் பொறுப்பாய்என்றார்

வாழ்த்தி அவனுமே புலம்பி சொல்ல

மனைவி மனமும் பொறுத்தேனென்றாள்

மனமும் பொறுத்தவள் மகிழ்ந்திருக்கில்

வாழ்த்துகிறேன் இன்னும் ஒரு காரணம்

அனைத்தையும் படைத்தோன் ஆண்டவன்

அருள் பெற்ற அப்துல் காதிருவே

கிணற்றில் பிடித்து தள்ளுகின்ற

கிருபை அறியாத ஷெய்கு முஹம்மது

தனது கையுமே சூகையாக சொத்தையாக

தானவனிடம் கேட்பதானார்

இறப்பும் பிறப்பும் இல்லாதொரு

ஏக பெரியோனே யாரஹீமே

திறவுமது வேண்டி நடக்கவில்லை

தீவினை வந்து மேலிட்டது என்ன

கருதும் மொழி கேட்டு அவன் மொழிவான்

கவலும் மொழிதப்பி நடக்கவில்லை

கிருபை வைத்து நீ முஹிய்யதீனே

கிணற்றில் தள்ளிட பாவம் இது

எந்த பாவங்கள் பொறுத்தாலுமாம்

இந்த பாவம் நான் பொறுக்க மாட்டேன்

உகந்து முஹிய்யதீன் இடத்தில் சென்று

மனது பொருந்தியே வாக்குமீந்தான்

உந்தன் கையுமே சுவாத்தியமாகும்

உடனே சென்று நீர் வாருமெனில்

முன்னோன் உரைத்திட இவர் எழுந்து

முஹிய்யதீன் கதம் போற்றி அழுதனரே

அழுது கிடந்திட முஹிய்யதீனும்

அழுகாதீர் எழுந்திரும் என உரைக்க

எழுந்து அவருமே சரிதை கூற

ஏகன் முஹிய்யதீன் மனதிளகி

அழுது நிற்கின்ற ஹம்மாது கையில்

அமுதம் பூசிட சுகமதாக

பழுது அகன்றிட ஆலிமானோர்

பாதம் சுகித்திட்டு நடந்தனரே

நடந்து சென்றிட முஹிய்யதீனும்

நன்றாய் தோழருக்கு இதுமொழியும்

பழுது செய்கின்ற ஆலிமிடம்

பண்பாய் முரீதுள்ள பேர்கள் கேட்டு

திடவார் சொல்லும் அசாத்தியமாய்

தீனோர் மனை சென்று துயில்வதாக

உடனே ஆலிமும் எழுந்துவந்து

உரைத்தார் முரீதான பேர்களுக்கு

உடையோன் முஹிய்யதீன் சொன்ன மொழி

உண்மை அதுதானும் பிசகில்லையே

பிசகு நினைத்தல்லோ வந்தாய் நீயும்

பிழை வந்து நேரிடும் நீரூம் சென்று

கல்புமிக உள்ளோர் கதம் பிடித்து

காதிர் ஒலியிடம் பொறுப்பித்தேதான்

அசடே நினைத்தால் அகற்றவேண்டும்

ஆண்டோன் இடம் தனில் தவ்பா செய்து

அடிமலர் போற்றி வாருமென்றார்

இந்த விதமாக எடுத்தோதவும்

அவர்கள் மனதினில் பயமுற்று விழித்தெழுந்து

அவ்வல் பஜ்ருமே சென்றவரும்

அவ்லியா முஹிய்யதீன் கதம் பிடித்து

தவ்வல் அதுதானும் நினைத்துக் கொண்டேன்

செவ்வாய் மலர்ந்து எனது பிழை

சுமக்காமல் வாக்கு அருள்வீர்கள்

நீங்கள் செய்யது அப்துல் காதிர்

கள்ள நப்ஸு அகற்றாதினால்

கசடு நினைத்தேன் என மொழிந்தேன்

அல்லா தனக்காக மனம் பொறுத்தேன்

அகலும் என சொல்ல அவர் மகிழ்ந்து

வள்ளார் புயத்தாரே தஸ்லீம்செய்து

மகிழ்ந்து அவ்வல் பஜ்ரு தொழுது

நல்லார் புகழுள்ளார் நபிபேரரும்

நாயன்தனை போற்றி மகிழ்ந்திருக்கையில்

ஸல்லல்லாஹு நபி சுன்னத்துமே

ஸெய்யிது முஹிய்யதீன் இடத்தில்வந்து

எந்தன் குருவே தவ்ஸில் வேந்தே

இந்த நகருள்ள மூசா அபுபக்கரும்

என்பேர் வந்து ஒளுவுடன் சுன்னத்தையும்

மஸாக் கைவிரல் கோதாமலே

முன்னோன் நபியுல்லா சரகுதன்னை

முழுதும் பழாக்குகிறார் என உரைக்க

அந்த மொழிகேட்டு மூஸாஅபுபக்கரே

அழைத்து அவருக்கு பயான் சொல்லி

அனுப்ப அவருமே தவறுதலாய்

அவ்வல் முஹிய்யதீன் மூன்றுதரம்

தருமதாகவே சொல்லிவிட

தகவல் வந்திட நாலாந்தரம்

உனக்கு சுன்னத்து முறை செய்திட

அனலும் எழும்பியே அபூபக்கரே

உனக்கு முனிவு அல்லா இறக்குகின்றான்

முன்னோன் விலாயத்தை அகற்றிவிட்டான்

வந்து நீருமே  இராக் தேசம்

வனத்தில் பனிரண்டு வருடம் மற்றும்

இறையோன் தனை நாடி தன்னை கேட்டால்

முடுகி சுகித்திட்டால் பாவம் தீரும்

கந்த மகிழ்கின்ற காரணரும்

கடிந்து உரைத்திட அவரும் செல்ல

வந்து அவர் தன்னை காணாமலே

மாத உருகியே பரிதவித்தே

வரிசை புகழான முஹிய்யதீன் கதம்

மாதா பணிந்து அவளுமே அழுது நிற்க

திருசை புகழாரே என் மகனும்

திங்கள் இதுவரை காணேன் நானும்

அருமை குமாரரே எங்கே போனார்

ஆண்டவரே பார்த்து சொல்லுமெனில்

திருவாய் உன்மகன் வனாந்தரத்தே

சென்றான் அவனுமே குற்றத்தாலே

வருவான் பனிரண்டு வருசம் சென்று

வள்ளல் உரைத்த மழைமாரிப் போல்

இருகண் தழும்பியே அவள் அழுது நிற்க

உருகி அழுகாதே மாதாவே நீ

உந்தன் மகனை காணவென்றால்

அவனும் வருவான் உங்கள் கூகம்

ஆறு மாதத்துக்கொரு தரம்தாமே

கண்டு அவனிடம் கலந்து கொள்ளும்

கலங்கி மயங்காமல் நடவுமெனில்

என்று உரைத்திட மாதாவுமே

விடுதி அவள்சென்று இறைமேலன்பு

என்றும் உள்ளவன் தன்னை தொழுது

இரைந்து துஆவும் இரந்தவளும்

அன்று அவர் சொன்ன குறிப்பறிந்து

ஆறு மாதம் கூகம் வந்தே

இறையோன் தன்னையும் புகழ்ந்து போற்றி

ஈன்ற தாயாரும் நின்றிடவும்

மறையின் நெறியாரும் கூகம் வந்து

மாதா தன்னையும் கண்டு கொண்டு

உரையும் பேசியே அவரவர்கள்

உற்ற தாயாரும் இந்தப்படி

வரையும் கூகத்தில் இந்தக் காலம்

வருடம் பனிரண்டு தானாகவும்

வந்தார் தோழர் மௌலா ஒலி

வந்து அவர்களும் தாயாரிடம்

எந்தன் தோழரே எங்கே என

கேட்க அவளுமே மொழிவாரப்போ

இறையோன் முஹிய்யதீன் ஆண்டவரும்

மொழிந்து சரிதையும் எடுத்துக் கூற

சிந்தை தளர்ந்து மனம் உருகி

சீமான்தனை நாடி துஆ கேட்கவும்

இறையோன் உரைத்திட்டான் பிலால் ஒலியே

என்னால் முடியாது விலகுவதற்கே

மறையின் நெறியுள்ள முஹம்மதிடம்

வஹ்ஸு பண்ணியே அவர் மூலமாய்

உரையும் அது கேட்க ஏது முஹிய்யதீனிடம்

உகந்து கதம் பிடித்து உருகினாக்கால்

திருகடல் தனை வள்ளலுமே

திருவுளம் பற்றினால் பிலால் ஒலியே

வந்து சேருவான் உன்தேசத்துக்கு

வள்ளல் உருகி மன்றாடியே

முன்னோன் நபியுல்லா வஹி வாங்கியே

முஹிய்யதீனுடம் சென்று வாருமெனில்

அந்த மொழிகேட்டு பிலால் ஒலியும்

ஆல நபியுல்லா வஹி வாங்கியே

வந்து முஹிய்யதீன் இடம் உகந்து

வள்ளல் தம்மையும் புகழ்ந்து போற்றி

சிந்தை உருகி பிலால் ஒலியும்

செம்மல் தம்மையும் வருந்திகேட்க

முன்னோன் தனக்காக மனம் பொறுத்தேன்

உந்தன் தோழரை அழைத்து வாவென

அந்த மொழிகேட்டு அவரும் சென்று

ஜில்லாவில் கண்டு மார் தழுவி

சிந்தை உருகி கரைந்து அழுது

சீசன் தன்னையும் அழைத்து வந்தே

வந்து முஹிய்யதீன் கதம் பணிந்து

வள்ளல் தம்மையும் புகழ்ந்து போற்றி

முன்னோன் முஹிய்யதீன் விலாயத்து ஈந்து

மூஸா அபுபக்கர் தனையும் அனுப்பி வைக்க

வந்து மாதா தம்மையும் கண்டு

மகிழ்ந்து இருந்தனர் அவர்களுமே

கந்த மகிழ்கின்ற காரணரும்

கத்தா தனைப் புகழந்து இருக்கும்காலை

தரள மணிக்கட்டில் முஹிய்யதீனும்

தலைகாணி தனை துயிலும்காலை

துறவு அறியாத நெறிமூடனும்

துஷ்டன் அவனுமே களவு செய்ய

விருகமுடன் வந்து பார்க்கும்போது

மீரா முஹிய்யதீன் துயில்வதாக

திருடன் ஏகவன் வழியில்லாததால்

தீனோர் துயில் கொள்ளும் கட்டிலிலே

குரங்குபோல் கூனி நடந்தனனே தவண்டடுனே

தவழ்ந்து வருகவும் இவர் விழித்து

ஸெய்யிது முஹிய்யதீன் இருந்து கொண்டு

தவழ்ந்து வருவான் யாரடா நீ

எதிராய் வாடா என உரைக்க

அவனும் வந்துமே குர்ஸூ பண்ணி

வந்து அவனப்போ திருடனுமே

தவத்தில் உயர்ந்தோர் என்குருவே

தலையில் எழுதினான் விருமாவுமே

அவனிதனிலே திருடி உண்டு

அருந்த சொல்லியே என்னை வகுத்தான்

கவனமதுவல்லால் வேறொன்றில்லை

கத்தன் நமக்குமே பிள்ளை ஆறு

தயக்கமாகவே எனக்கு ஈந்தான்

தரணி வெளிப் போக மழைவிடாததால்

கவன தடையாக வெளியேறாமல்

தங்கள் ஆசாவுக்கு ஆசை வைத்தேன்

வந்தேன் என சொல்ல அவர் மகிழ்ந்து

வந்து எனைக்கேட்டால்  கொடுக்கேனோதான்

எந்தன் ஆசாவுக்கு ஆசை வைத்து

எழுந்து வந்தாய் நீ என உரைத்து

அவர்கள் ஆசாவை தானெடுத்து

திருடன் கைகொடுத்து போய் நீயும்

எந்தன் ஆசா என உரைநீ

ஈவான் தங்ககாசு அதுவும்

என்றுரைத்து அவர்கள் கொடுக்க

எஹூதி வாங்கியே சுல்தானிடம்

சென்று முன்வைக்க விலைகேட்டிட

திருடி கொண்டு வந்தாய் என உரைத்து

கொண்டுபோய் அவனை விலங்குசாத்தி

குத்புக்கு அனுப்பி வைக்க அவர் மகிழ்ந்து

இன்று அவன் ஆசா களவாங்கவில்லை

ஈந்தேன் அவனுக்கு உள்ள விலை

கொடுங்கள் என சொல்ல ஆசா வாங்கி

கொல்லரிடம் அவர்களும் அனுப்பி வைக்க

கண்டு அவர்களும் கோமானிடம்

கொடுத்து அவர்களும் மொழிவதானார்

கோமான் அது கேட்டு விளக்கங் கூறி

ஜல்தியில் தங்க காசும் ஈய

சந்தோஷமாகி முஹிய்யதீனிடம்

பாதத்தில் தோய்த்தவன் காசும் வைத்து

பகருவானப்போ கள்ளனுமே

எந்தன் குருவே சுவாமி ஐயா

எந்தன் பீடையும் கழிந்ததிப்போ

வந்து என்னையும் உங்கள் தீனில்

அழைத்து கொள்ள வேணுமெனில்

சந்தோஷமாக கலிமாவுமே

சாற்ற அவர்களும் இவனுரைத்து

முன்னோன் நபிதீனில் வழிப்பட்டவன்

முடுகலாகியே தஸ்லீம் செய்து

புகழ்ந்து போற்றியே அவனும் சென்று

பெரியோன் தனை வணங்கி இருந்திடவும்

மகிழ்ந்து சுல்தானும் ஆசாவையும்

வள்ளலிடம் கொடுத்து வாருமென்று

உகந்து சேவகன் கொண்டுவந்து

உகப்பாய் முன்வைத்து தஸ்லீம்செய்து

பகர்ந்தான் சேவகன் எங்கள் கோமான்

பணமும் கொடுத்து ஆசாவையும்

வஹ்சு பண்ணினார் தங்களுக்கு

வாழ்த்தி அவன் கொடுத்து ஏகினானோ

அவனும் ஏகவே முஹிய்யதீனும்

இருந்தார் பகுதாதில் செங்கோலோங்கி

யோகம் வளர்ந்து வயதும் மீறி

உகந்து தொன்னூற்றி ஒன்றதாகிடவும்

பாகமறியா நஸ்ரா கையில்

பறவை இருக்க குழந்தையுமே

வேகம் கொண்டது பிடுங்கிக் கொண்டு

விரைந்து வருகவும் நஸ்ரா அவன்

நாகம் எலியை தொடர்ந்தவராய்

நஸ்ரா பின்வர குழந்தையுமே

விரைந்து வந்திட மணிமாடத்தில்

விருண்டு மதில்தன்னை இடங்கொடுமென்னில்

உரையும் அதுகேட்டு இடம் கொடுக்க

உகந்து நுழையவும் மூடிக்கொள்ள

மறையின் நெறியாருக்கு எடுத்துரைக்க

வள்ளல் அதுகேட்டு இருக்கட்டும்போ

உரையும் செய்திட அவன் அகல

உற்ற பிள்ளையும் அதிலிருக்க

திங்கள் மூன்று சென்றதன்பின்

தீனோர் ஒளுக்கொள்ள தண்ணீர் கேட்க

தொங்கர் மொழி கேட்டு மதில் வெடிக்க

துலங்கும் பாலரும் தண்ணீர் கொடுக்க

அங்கம் பூரித்து அவர் வாங்கியே

அவர்கள் ஒளுக் கொண்டு தொழுதிருக்க

சங்கை அழகுள்ள புத்தியரும்

தானோன் கிருபையால் வெளிப்பட்டதே

அன்று பொழுதுபோய் மற்ற நாளில்

அழகான வெள்ளிக்கிழமை நாளில்

சென்று முஹிய்யதீன் ஜும்ஆவுமே

சீராய் தொழுவித்து ஹதீதுசொல்ல

வண்டு மதுபூவை சூழ்ந்ததுபோல்

மஜ்லீஸ்தனிலிருந்து ஹதீது கேட்க

கொண்டு புயமுள்ள மு:மினாரும்

குளத்துக்கேகவும் மனம் பயந்தே

அடக்கி இருந்திட அதையறிந்து

அவ்வல் முஹிய்யதீன் ஜிப்பா நீக்க

தடமும் பெற்றிட அவரும் சென்று

தானும் துய்தாகி எழுந்தவரும்

தொடர்ந்து நீர் கரை வந்தவரும்

துலங்கும் தஸ்மாவை மரத்தில் தூக்கி

அடவாய் நஜீஸ் அதை துய்வதாக்கி

அவரும் தஸ்மாவை மறந்து சென்றே

வந்து இருந்தவர் ஹதீது கேட்க

வள்ளல் மனை சென்று அவர்நினைத்து

வந்த தடம் புக்கி அவர் பார்க்கவும்

மரத்தில் தஸ்மா கிடந்திடவும்

சந்தோஷமாகி அவர் எடுத்து

ஸெய்யிது முஹிய்யதீன் புகழ்ந்து போற்றி

வந்து அவர்கள் மனை சென்றுபுக்கி

மகிழ்ந்திருந்திட முஹிய்யதீனும்

இறையோன் மஸ்ஜிதில் வந்திருந்து

ஏகன் தக்தீரை பார்த்துரைப்பார்

மறையின் நெறியுள்ள உம்மத்தாரே

மௌத்து வேளையில் நல்ல சுவர்க்கவாதி

முறையும் அறியலாம் என்னமானால்.

மூன்று குணமுண்டும் நரகவாதி

இறையோன் இறக்குவான் அவர்தமக்கு

இரணம் அகலும் வழிய சப்தம்

வழிய சப்தம் மூன்றதாகும்

இரண்டு காரியம் கிடந்துருளுவாள்

கலிமா மறந்து கஷ்டப்பட்டு

ஹயாத் அகல வருத்தமாகும்

பழியாது ஒன்று பால் நரகம்

பங்கு படுவது திண்ணமுமே

ஒய்லன் ஓடையில் விழுவார்கள்

உரையும் நரகவாதி என்று

சுவர்க்கவாதிக்கு நான்கு குணம்

சொல்ல கேளும் உம்மத்தாரே

சக்ராத் ஹாலிலேதான்

சாற்றுவாரப்போ புத்திமதி

ஹக்கன் அருளாலே ஆயாசமில்லை

அகலும் ஹயாத் ஒரு நொடியே

பிக்ரு அவருக்கில்லை சுவர்க்கவாதி

பெரியோன் ஜன்னத்துமே பெறுவார்

ஈமான் நினைவாகும் இஸ்லாமுமே

இரசூல் நடப்பாகும் நெறியுடனே

ஆமான கலிமாவை நினைவிருத்தி

நப்ஸ் ஹம்மாரதனை அகற்றி

ஆமான திக்ரு ஹபீயதாகி

அஸ்ராமல் எந்நாளும் வாசில் தனிலேறி

நேமமாகவே கலிமாவையும்

நினைவில் இருத்தினால் சுவர்க்க வாழ்வீர்

வருசை புகழாரும் எடுத்துரைத்து

வள்ளல் மணிமாடம் புகுந்தவரும்

திருசை புகழாரும் அமுதருந்தி

செம்மல் மக்களுக்கு எடுத்துரைப்பார்

அர்சை படைத்தோன் தன்னருளால்

ஆகிர் ஜமானம் நமக்கேயாச்சு

பிருசை புகழாக நீங்களுமே

பேதரிப்பில்லாமல் இருங்களென்று

பேதரிப்பு வேண்டாம் மௌத்துக்குமே

பிறந்த அன்றைக்கு இறந்த காயம்

நாயன் உத்திரவு தப்பில்லாது

நமக்கு பயணமும் முடுகலாச்சு

வேத முறைப்படி தவறாமலே

மேலோன் ஏவலை கொண்டு வாருங்கள்

காதம் மணக்கும் நபிஇரசூல்

ஹபீபு சரஹை வழுவாமலே

கொண்டு வந்தோர்க்கு தாழ்வுமில்லை

எங்கும் மணக்கும் நபி ஷபாஅத்

என்றும் பெறலாம் தீனோர்களே

இடறு வராது சுவர்க்கம் வாழ்வீர்

இன்று என்னையும் கண்டபேர்கள்

இனிமேல் யாருமே அவரைக் கண்டால்

என்னைக் காண்பார்கள் ஆகிரத்தில்

கத்தன் கிருபையால் தப்பில்லையே

என்று முரீதின்கள் தோழமாரும்

இனிய உம்மத்தில் மற்றெல்லோரும்

பின்னும் கியாமம் தராசில் சென்று

பேதரிப்பு வந்தால் என்னை நாடி

உண்ணி கல்பது உருகினாகால்

உகந்து மார்தழுவி கொள்வேன் நான்

முன்னும் உள்ளவன் எந்தனக்கு

முழுதும் ஆக்கினோன் சொல்லை கேளும்

நன்னபி உம்மத் அனைவர்களும்

நானிலம் தனில் வாழும்நாளில்

விண்ணும் அதுதுன்பம் பலாய் பிணிகள்

விலகாத பிணி சூனியங்கள்

திண்ணமுடன் வந்து நேரிட்டாகால்

தீனோர் என்னை நாடி ஆண்டோனிடம்

சேர்ந்து அவர்களும் கேட்டோராகில்

துய்யோன் உடனே கபூலாக்குவான்

கபூலும் அது செய்வான் தப்பில்லையே

கஷ்டம் அகலும் கரையேற்றுவான்

மௌத் ஹயாத்தும் நமது உடலில்

வகுத்தான் இறையவன் அறிந்தாயில்லையோ

பகுமானதோர் ஷரிஅத் உடன்

பகரும் தரிகத் மௌத்தாகும்

தவ்பா ஹகீகத் மஃரிபத்துதான்

வணங்கி கொண்டால் கரையேறுவான்

சகலபேருக்கும் எடுத்துரைத்து

ஸெய்யிது முஹிய்யதீன் ஆண்டவரும்

பகர்ந்தார் மௌத் இனி மூன்றுநாள்

பலகைதனில் எடுத்து இருக்கலாச்சு

சுகமதாகவே இதுவரையிலும்

துய்யோன் நம்மை வைத்திருந்தான்

வஹ்சு பண்ணினோம் எல்லோருக்கும்

மனஸ்தாபமில்லை இருங்களென்றார்

**விருத்தம்**

பெருதி கொடு எல்லோருக்கும் பீர்தஸ்தகீர் விரகமுடன் தானுரைத்து மெல்லினியில் சிறக்கவே போர்வையிட்டு தீனோர் துயின்றிடவும் நிறப்பமுடன் இறை ஏவல் நீதர் தமக்கே ஜுரமும் கனல் எழும்ப களா வந்து அடுத்த தென்றே பொன்னு திருமேனி பூவையரும் மங்கையவர்களும் பார்த்து உளறியே வெதப்பினால் கண்ணீர் ததும்ப காதலியும் வாய் புலம்பி சொன்னார். முஹிய்யதீனும் தோகையவர் கதம் தமக்கே ஜுரமும் நமக்கில்லை தோகையரே துய்யோன் ஏவலும் இதுவேயாகும். இரணமும் நாளும் புதியதல்லவோ. இந்த துன்யா நிசமல்ல. கிரேகமது வேண்டாம். சொல்ல கேளும். கின்னரமது எங்கே. எடுத்துவா வென சிரகமுடன் கின்னரம் எடுத்து ஈய வேந்தரிடம் வாங்கி உரைப்பதானார். வெள்ளாட்டி கையில் கொடுத்தவரும் விரைந்து வைத்தியரும் விடுதி சென்று கலந்து வாருமென்று கடுகி அவள் சென்று வைத்தியரிடம் வள்ளல் கொடுத்தார் என உரைக்க, வாங்கி வைத்தேன். அதனைப் பார்த்து கள்ளமது வில்லை காஜாவுக்கு காரணர் குறையும் என்றுரைத்தனனே. உரைத்து அவருமே நீரருந்திடவும் ஈரேழுலோகம் அண்ட பிண்ட ஓரொளிவாய் கண்டவரும் வருந்த கிடையாது. வள்ளல் நீரால், வைத்தியனவன் ஏற்றுக் கொண்டான். இறையோன் அருளாலே தெரிந்து அவனும் ஏகி அவனுமே சென்று புக்கி தீனோர் முஹிய்யதீன் கதம் பணிந்து சிறந்து நின்றவர் உரைப்பதானார் ஜன்னத்து பெற்ற நபி பேரரே.

**தொங்கல்**

வண்ணி நெருப்பினில் புழு வேகுமோ

வள்ளல் திருமேனி அழுக்குமுண்N;டா

தன்னிலடங்காத இறை ஏவலன்றி

இலங்கும் திருமேடை செல்லலாமோ

ஆனால் அமுதம் அருந்திவிட்டேன்

அகன்றது கருப்பு எந்தனக்கு

விண்ணம் அகன்றது அடியேனுக்கு

வேதர் கிருபையால் சுவர்க்கம் சேர்ந்தே

சேர்ந்தேன் ஆண்டவர் கிருபையினால்

திருவடி போற்றி மகிழ்ந்திருக்க

காய்ச்சல் எழும்ப கடினமாக

கத்தன் முஹிய்யதீன் எல்லோருக்கும்

சாந்தமாக புத்திமதி

வள்ளல் அவர்களும் எடுத்தோதியேதான்

சாந்தமாக மனைவியருக்கு

ஸெய்யிது முஹிய்யதீன் எடுத்துரைப்பார்

சலிப்புமது வேண்டாம் எள்ளளவும்

சந்தோஷமாக நீங்களுமே

புலியாம் மௌத்துக்கு இரையாகாமல்

பெர்pயோன் தன்னையும் புகழ்ந்து போற்றி

ஆமான கலிமாவை நேமமாக

நினைவில் இருத்தியேதான் நீங்களுமே

கல்பால் மகிழ்;ந்து இருந்து எல்லோரும்

வழிய கியாமம் ஆகிர் வந்து

சேரும்படியாக நடந்து கொள்வீர்

மக்கள் மனைவியர் சபூர் செய்து

வல்லோன் தக்வா மிகுதி செய்து

ஹக்கன் அளவிலே கிருபை வைத்து

அஞ்சி விழித்து துஆவிரைந்து

துக்கம் அகற்றியே துயில்வதாக

துலங்கும் நூரரசி மனாமும் கண்டு

திக்கென்று எழுந்து மனம் பதறி

தீனோரிடம் வந்து மொழிவதானார்

இறையோன் அருள்பெற்ற ஆண்டவரே

இல்லம் இடிய கண்டேன் நானும்

மறையின் நெறியாரும் நாமே ஆகும்

மனதில் கிலேசமும் வேண்டாம் கண்டீர்

குறை நமக்கு ஒன்றுமில்லை எனில்

குடி வாழ்க்கை எல்லாம் என்று போலாம்

ஹுதாயும் கொடுப்பான் குறைச்சலில்லை

இறையோன் நமக் கொண்டு மனைவியரே

இகழாது இரு பெண்ணே சலியாதே நீ

கண்ட கனவும் பின்னொருவர்

கடுமணியும் விழுக கண்N;டன்

கண்டேன் என சொல்ல அவர்மொழிவார்

கடுமணிதானும் நாமே ஆகும்

மன்றாடும் பூங்குழல் மடவார் தானும்

வள்ளலிடம் வந்து மனாம் கூறினார்

தென்றிசை போற்றும் சிகாமணியே

செம்மல் மாங்கிலியும் தெரிக்க கண்டேன்

மங்கிலியும் கண்டது நாமேயாகும்

மனதில் சலிப்பது வேண்டாம் கண்டீர்

மங்கலமாக எல்லோருமே



www.sufimanzil.org

மனதில் கிலேசமில்லாமலே

சங்கை நங்கையாய் இருந்து எல்லோரும்

தானோன் திருத்தூதர் சலவாத்தையும்

பொங்கமுடனேதான் மனது உகந்து

புகழ்ந்து போற்றியே இருங்களென்றார்

அண்ணல் முஹிய்யத்தீன் ஆண்டவரும்

அனைவோர்க்கும் எடுத்துரைக்கலானார்

முன்னோன் நமக்குமே உரைத்தானவன்

மொழிந்தான் நூறு வருடத்துக்கு முன்னேதான்

நன்னபி தமக்கு உரைக்கலானான்

நாயன் உரைப்படி ஆதம் அவ்வலுள்ள மட்டும்

திண்ணமுடனேதான் எட்டுபேரை

சேர்த்து ஓதவும் திட்டம் செய்தான்

அண்ணல் முஹம்மது ஓதி வந்தார்

அந்தபடியேதான் ஓதி வந்தேன்

எனக்குப்பின் செய்யிது ஆலிம் அவ்லியா

இந்தபடி ஓதினால் ஏற்றுக் கொள்வேன்

கணக்கில் அது ஒன்றும் குறைந்ததானால்

கபூல் செய்யேன் ஒருபோதும் நான்

இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள் நீங்கள்

எந்தன் பிதா அபுசாலிஹாவும்

தனது தாயார் பாத்திமாதான்

தங்கை நஸூஹா சாலிஹாவும்

கவலுகிறேன் இன்னும் கேளும்

எந்தன் பேர் காஜா அவ்லியா மகவும்

அபுசயீது முபாரக்கில் மஃஸூம் எனும்

அருமை மகவும் பேர் சொல்ல கேளும்

அபுதல் செய்யிது பகா அவர் தம்பியரும்

அபு செய்யிது தஸ்கனி அவர்களும்

தவறாது என்னுடன் சேர்த்து ஓதினால்

தங்களது துஆ கபூலாக்குவேன்

ஆண்டோன் அறியவே சொன்னேன் உண்மை

அவ்வல் ஆகிர் உள்ளமட்டும்

தூண்டா மணி விளக்கான ஒரு

சுவர்க்க வாதிகள் இவர்களாகும்

காண்டாமணி ரூபம் ஆனதொரு

கண்ணுக்கடங்காத காரணர்கள்

மன்றாடுவார் நானை மஹ்ஷரிலே

விலாயத்துடையவர் இவரே என்றார்

அருள கேளுங்கள் உம்மத்தாரே

அகன்று ஹயாத்து குளிப்பாட்டுகையில்

ஒருவன் அருளாலே எழுந்திருந்து

உகந்து ஜனாஸாவில் வைக்கும் போது

பெருதிகொடு எழுந்து படுத்திருக்கும்

பெருத்த குப்பாவில் வைக்கும் போது

பெருதிகொடு எழுந்து படுத்திடுமே

இந்தப்படி மூன்று குறியதுவும்

இறையோன் அருளாலே கண்டவர்கள்

முன்னோன் அருளாலே அடக்கி வைத்து

முத்துமணி மாடம் வந்து சென்று

வந்து இமாம் ஜமாஅத்தனைவருக்கும்

வல்லோன் கிருபையால் விருந்துமாக்கி

சந்தோஷமாகவே அளித்திடவும்

சகலபேரும் அருந்தி துஆ இரைந்து

சென்றார் அவரவர் விடுதி வந்து

சீமான் முஹிய்யதீன் தேவியரும்

மண்டலம் புகழவே குப்பாவுமே

வள்ளல் செய்யிது அஹ்மதுவும் வென்றார் கோத்திரம்

தமக்கும் அப்போ வெகுமதி ஈந்து

**விருத்தம்**

உரைப்பதானார் நன்றாக நாளை முகிரனும் எடுத்து நல்கினார் பழங்களும் அனைவோர்க்கும். அருதி பண்ணிட. நீலாற்றங்கரை அஸ்திவாரமும். மிகவும் போட்டு உறுதியாகவே. நங்கூரமிட்டு. உயர்ந்த தூண்கள் பவளம் பச்சை நிறுத்தியே. சுற்ற விஸ்தாரமுடன். நீலமாமணி வளைபரப்பி பருத்த கால்கள் பளிங்கு அதால் பாங்காய் நிறுத்தியே. அலங்கரித்தே குத்துவேலை கொடுவரையும். குறித்த நிலைக் கண்ணாடியும் மத்தியிலே தங்க கதவம் நிறுத்தி வரைந்தார். வச்சிரவளைப் பரப்பி சித்திர வேலை சிகரங்களும் ஜீனத்து கண்ணாடி வாசல் தோறும் பத்தி பத்தியாக பல கனியும், பசும்பொன் நிலையும் படித்துறையே, பசும்பொன் வெள்ளி தங்கத்தாலும், பளிங்கு நிலையும் மிக நிறுத்தி விஸ்தாரமாக பச்சையதால் விளங்கும். வாசல்தோறும் பூ உகந்து கஸ்தூரி வாசம் வாடை தூவ கதவு தங்க பொன் வெள்ளியதால் பசும்பொன் கதவு மிக நிறுத்தி பெருதி துலங்கவே குப்பாவுமே பெருப்பமாகவே எடுத்தனரே.

நன்னன்ன நானன்ன நன்னன்ன நானன்ன நானன்ன நீ நன்னா

பத்தரை மாற்று பொன்னால் வளைகள் பரப்பி

நிரப்பமதாய் வெள்ளி தூண்கள் நிறுத்தி

தெள;ளிய சாதிலங்கம் கற்பூரம் வாசம் வர

சித்திர பூ வகுத்து கத்திரி பூவேலை

அதன்மேல் கட்டிய கண்ணாடி

சித்திர மணி தீப சுடர் ஒளிவு

பக்கத்துக்கு பக்கம் தான் நல்ல பலகனி வாசலிட்டு

மிக்கவே சந்தனத்தால் தரை முழுகி அலங்கரித்து

சிங்கார பச்சை நிலை செம்பொன் படித்துரையும்

தங்கம் பொன் வெள்ளி துரா சதுரான கதவுகளும்

அங்கம் பெற வகுத்தது ஐம்பொன்னும் பட்டுகளாம்

எங்கும் ஓரொளிவாய் ஏகன் மணிவிளக்காய்

அங்கம் பெற வகுத்து ஆகிர் ஜமான் உள்ளமட்டும்

மங்காமல் எந்நாளும் வல்லோன் கிருபையினால்

எங்கும் பிரசன்னமதாய் ஈரேழு புவன மட்டும்

அண்ணல் முஹிய்யதீனை ஆலமெல்லாம் கொண்டாட

விண்ணமனுகாமல் மேல்வினைகள் வராமல்

வஞ்சனைகள் சூனியம் பலபிணிகள் தீண்டாமல்

தஞ்சமென்று நம்பினோர்க்கு செய்யிது அப்துல் காதிரொலி

அஞ்சாதென சொல்லி அவர்மேல் பிரியமுற்று

நெஞ்சுதனைத் தடவி நீதரொலி முஹிய்யதீனும்

குற்றம் குறை அகற்றிக் கொண்டு சொல்வார் சுவர்க்கமனத்

ஆமீன் அல்லா ஆமீன் அனைவோருக்கும் இப்படியே

நேமிதில் இருக்கச்சே நெடியோனும் உத்திரவு

காமில் முஹிய்யதீனை கருணை வைத்துக் கேட்டுக் கொண்டால்

தாமதமில்லாமல் தானும் கொடுப்பேன் தரஜாத்தன்றே

ஆனதினால் நீங்கள் அனுபுவியிலுள்ளவர்கள்

காதிரொலி பேரில் கருணை வைத்து உருகினாக்கால்

ஆதரவு செய்வான் ஆண்டவன் தப்பில்லையே.

**தொங்கல்**

வருசை புகழான முஹிய்யதீனும்

பகுதாதுதனில் வபாத்தான பின்பு

ஓர்மையாகிய எஹூதி அவன்

உகந்து எளியோனும் பட்சம் வைத்து

கருத்தில் மகிழ்ந்தவன் காதல் கொண்டு

ஆசையவர் பேரில் நெடுநாளாக

பெருதி கொண்டவன் கொடுத்தவாரில்

பீர்தஸ்தகீர் மனது உகந்தே

இறையோன் அருளாலே துஆ கேட்கவும்

ஏக பெரியவன் கபூல் செய்யவும்

மறையின் நெறிகின்ற எஹூதி அவன்

வள்ளல்  பொருட்டினால் நிதி வளர்ந்து

முறையும் தவறாமல் அவனுள்ள மட்டும்

முஹிய்யதீன் பேரில் சதகா செய்ய

இறையோன் மரணம் வந்தடுத்திடவும்

இறப்பதாகிட அவர்கள் ஜனம்

வந்து கூடியே அவன் தன்னையே

வழக்கப்படியாக எரித்திடவும்

அந்த பிரேதம் வேகாமலே

அதுவும் உருவதாய் இருந்திடவே

இந்த வகைமானம் அறியாமலே

இடம் கெட்ட மூடர் மறுபடியும்

சந்தாபம் குறித்து வைத்திருக்கில்

தகுந்து நீராமல் இருந்திடவும்

பின்னும் மரங்களை வைத்தடுக்கி

பெருக நெருப்பை வைத்து மூட்டிடவும்

மின்னும் முடிபெற்ற சுல்தானிடம்

முஹிய்யதீன் மனாமில் வந்தவர்கள்

தன்னறிவில்லா நெறிமூடரும்

தவாபு தெரியாதால் எஹூதி தன்னை

வன்னிதனை மூட்டி மூன்று நாளாய்

வைத்து எரிக்கிறான் வேகாது கண்டீர்

அவனால் முடியாது எரிப்பதற்கு

ஆனால் நீர்போய் எடுத்துவந்து

அவனை நம்முடைய சரகின் படி

அவனை துய்தாக்கி அடக்குமென்றும்

தவமாம் அபுமுஹம்மதரும்

சாற்றி அகலவே இவர் விழித்து

கவனம் மிகவாக எழுந்தவரும்

கருணை கைமேடை வந்திருந்தே

நஸ்ராதனையும் வரவழைத்து

ராஜன் விளங்கவும் அவன் மொழிய

நிசமதாகவும் சுல்தானுமே

நீதி கெட்டதோர் சண்டாளரே

கஸ்பு அறியாமல் செய்வாறான்றோ

காரணம் இவ்விதமானதல்லோ

நஸ்ரா தன்னையும் எடுத்து வந்து

நல்மணம் செய்து அடக்கினரே

அடக்கி அகலவும் முஹிய்யதீனும்

அந்த நேரம் வந்து அவன் நாவினில்

உடையோன் கலிமாவை எழுதியே தான்

உனக்கு சுவர்க்கம் என உரைத்து

திடவார் அகன்றிட அவர் மகிழ்ந்து

சீமான் பொருட்டினால் சுவர்க்கம் சேர்ந்தார்

அடைக்கலம் என்று அவரே தவறுவிடார்

ஆண்டவன் மேலன்பு பின்னொருவர்

திருசை புகழாரே மனதிலுண்ணி

தீனோர் தனக்கு நான்கு குமர்

வருசை புகழாரே மணம் கூட்டவும்

வகைமானம் இல்லாததால் மனமுடைந்து

வருசை புகழாரும் கல்பு உருகி

காதிர் முஹிய்யதீன் ஆண்டவரே

பிருசை புகழாக நினைத்தவரும்

பிறத்தி பட்டவர் வெளியிலேகி

ஓர்மை கொண்டவர் மரத்தடியில்

உகந்து துஆ செய்து இருக்கும்போது

கருணைக்குடையதோர் மு:ஃமினாரும் முஹிய்யத்தீன்

கண்ணும் மிரண்டது என்று எழும்ப

விருமா இருந்தவர் தலை சாய்க்கவும்

எங்கும் பெருவனமாகிடவும்

வருத்தமாகவே முஹிய்யதீன் மேல்

பேரில் நாட்டம்  கொண்டவரும்

அங்கு மேல்வனத்தில் நடந்தனரே

சித்திரை பாதை நடந்து செல்ல

சிங்கம் கரடி புலி வந்தே கண்டவுடன்

கத்தன் தனை நாடி விரைந்திடவும்

கானகம் ஐந்து நாள்அவர் நடந்து

பித்தாபம் கொண்டு ஏகும்போது

பெரிய பட்டணம் அடுத்தி;டவும்

செத்த உயிரது மீண்டவராய்

செழிப்பு மிகவாகி பதியில் செல்ல

ஜின்னும் தேவும் நின்றவரும்

திடுக்கமுற்றவர் பயந்து செல்ல

நானும் மு஠மீனே எவ்வூர் எனில்

நாதர் முஹிய்யதீன் பகுதாது நகர்

ஜின்னும் அதுகேட்டு பிரியமுற்று

சீக்கிரம் அழைத்து பசியும் ஆற்றி

வன்னிதமான காற்றிலே மகிழ்ந்து

அவரும் துயில் கொண்டு எழுந்தனரே

எழுந்திருக்கவும் பாங்கு கூற

இஸ்லாமானவர் என நினைத்து

குளிர்;ந்த மனதாகி இருந்திடவும்

கொடிய ஜின்களும் ஜும்ஆவுக்கே

தொழுது முடிந்திட இவர் எழுந்து

மகிழ்ந்து நடந்தவர் மஸ்ஜிது புக்கி

முழுதும் உடையவன் கிருபை பெற்று

முஃமீன் பின் நின்று தொழுதனரே

தொழுது முடிந்தபின் துஆவிரைந்து

துலங்கும் ராஜனும் இருந்திடவும்

எழுந்து ஒரு ஜின்னும் ராஜனிடம்

அவன்தன் சரிதையை எடுத்துக்கூற

வாழ்த்தும் மொழிகேட்டு ராஜன் அவன்

உகந்து அழையும் என்று கூறிட

எழுந்து இவர் சென்று சரிதைகூற

இருமெனும் சொல்லி நடந்தனரே

நடந்து ராஜனும் விடுதி சென்று

ராஜன் துய்யின்றிட முஹிய்யதீனும்

ஓர்மையுரைத்தனர் அவர் தமக்கு

தீனோர் தம்மையும் விசாரியாமல்

சடவாய் இருக்கும் காரியம் ஏன்

ஸெய்யிது அவர்தானும் நமது பிள்ளை

மடவாள் நாலு குமர் அவர்க்கு

வல்லோன் கொடுத்தான் அவர் எளியோன்

திடவாய் அவருக்குமே முதலுமீந்து

சீக்கிரம் அனுப்புமென்று மறைந்தார்

மறையின் முஹிய்யதீன் ஆண்டவரும்

சொல்லி பயமுற்று அவரெழுந்து

விரைந்து ஒரு ஜின்னை வரவழைத்து

விலை மதியாத இரத்தினமும்

விரைந்து கொண்டுவாவென உரைக்க

விரைந்து ஜின் சென்று கொண்டுவந்து

மறையோன் கை ஈந்து அவர் மொழிவார்

பகுதாதில் விட்டுவாரும் என்றே

உரைத்த ராஜனும் ஜின் கழுத்தில்

உகப்பாய் வைத்தவர் கொடுபோவெனில்

விரைந்து ஜின்னுமே பகுதாதில் விட்டு

வேந்தன் மொழிப்படி சென்றிடவும்

இறையோன் அருளென்று மனதிலுண்ணி

இவரும் மனை சென்று மகிழ்ந்து எழுந்து

மறையின் நெறியாரை புகழ்ந்து போற்றி

மடவார் நால்வரை மணமுடித்தே

முதலும் வளர்ந்தோங்கி முஹிய்யதீன் பேரில்

மு்மீன் கந்தூரி செய்தனரே

கதமும் தோய்ந்ததால் கற்பகன்று

கணக்கு முதல்பெற்று வாழ்ந்திருந்தார்

நிதமும் உலகுள்ளோர் நீதர் தம்மை

நினைவில் இருத்தியே நிர்ணயமாய்

கதமும் உதிப்பானால் அந்தப்படி

கருதி நாம் கேட்டால் கபூலதாமே

கபூலுமாக்குவான் இறையவனும்

காரணர் தம்மை கருத்தில் உகந்தால்

நவிலுவான் இறை தப்பில்லையே

நசலும் அகலும் நயம் பெறுவீர்

பவ்ஸ் பெறுவார்கள் தப்பில்லையே

பாசம் அகலும் பணிந்தோருக்கு

தவ்ஸில் முங்கியே முஹிய்யதீனை

தனித்து துஆ கேட்டால் கபூலதாமே

ஸெய்யிது அப்துல் காதிர் முஹிய்யதீனை

தாத்தில் ஒருவனால் பேய்பிசாசு

ஐயப்பட்டோரும் ஜின்பூதங்கள்

அகலும் ஏழுகாதம் தப்பில்லையே

மெய்யும் துலங்கும் வினை அகலும்

மீரா முஹிய்யதீனை துதிப்போருக்கெல்லாம்

கைமேல் பலனாம் தப்பில்லையே

கத்தன் அருளோங்கும் இது நிசமே

ஹாஸிம் குலத்திலே வளர்மதி போல்

ஹபீபு முஹம்மது தீன் வளர்த்தார்

பகுதாதினில் இருக்கும் நாளில்

அப்துல் காதிர் முஹிய்யதீனும்

படைத்த பெரியவன் கிருபையாலே

மிகுந்த பரக்கத்துமே மேன்மை ஓங்கி

தீன் பயிர் விளைத்து வளர்ந்தேறியே

உகந்து தொழுகையும் நோன்பதுவும்

உடையோன் சதகாவும் மிக ஓங்கியே

முஹம்மது ரஸூல் பேரரான

முஹிய்யதீன் ஆண்டகை கதம் துலங்க

அனைவோரும் அவர்கள் பொருட்டினால் ஈடேறவும்

அந்தமில் ஹக்கன் கிருபையாலே

ஆதி முஹம்மது நபியும் வாழி

சந்திர வதனத்தில் நான்கு யார்கள்

தவத்தின் அஸ்ஹாபிமார்கள் வாழி

இந்த மணிமாலை படித்தபேரும்

சிந்தையாய் உகந்து கேட்டோர்களும்

அந்தமில் ஹக்கன் கிருபையாலும்

ஆல நபியுல்லா பொருட்டினாலும்

எங்கும் ஜொலித்திடும் கௌதுல் அஃலம்

ஏகன் கிருபையால் அவர்கள் கடாட்சத்தாலும்

எந்த நாளும் தீன் துலங்க

இறையோன் துணையுமே உகந்தோர்கள் வாழி

ஆமீன் ஆமீன் யா அர்ஹமர்ராஹிமீன்

வல் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

*முற்றும்.*